www.tamilarangam.net

# பெரியாரியம்

## நிறப்பிரிகை கட்டுரைகள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

www.tamilarangam.net

சீலன்.

# பெரியாரியம்

நிறப்பிரிகை கட்டுரைகள்

JEELAN BOOKS
NORWAY
SIGNATURE

தொகுப்பு

அ.மார்க்ஸ்
ரவிக்குமார்
பொ.வேல்சாமி

30Kr.

விடியல் பதிப்பகம்
கோவை 641 015

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## நூலைப்பற்றி....

| | |
|---|---|
| தலைப்பு | பெரியாரியம் (நிறப்பிரிகை கட்டுரைகள்) |
| தொகுப்பாசிரியர்கள் | அ.மார்க்ஸ்<br>ரவிக்குமார்<br>பொ.வேல்சாமி |
| முதல் பதிப்பு | டிசம்பர் 1995 |
| விலை | 35.00 - ரூபா |
| வெளியீடு | விடியல் பதிப்பகம்<br>3, மாரியம்மன் கோவில் வீதி<br>உப்பிலிப்பாளையம்<br>கோவை - 641 005 |
| அச்சிட்டோர் | மனோ ஆப் செட்<br>சென்னை - 600 005 |
| வடிவமைப்பு | ரவி (சுவிஸ்) |

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## பதிப்புரை :

கடந்த நான்கைந்து ஆண்டுகளில் தமிழ்ச் சிறு பத்திரிகைகளின் போக்கில் ஒருசில வரவேற்கத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இதுகாறும் சிறுபத்திரிகைகள் நுழையாத களங்களாகிய சோசலிசக் கட்டுமானம், பார்ப்பனீய எதிர்ப்பு, சாதி ஒழிப்பு, தலித்தியம், பெண்ணியம், பெரியாரியம், தேசியம், மாற்றுக் கலாச்சாரம் போன்றவை இன்று விவாதப் பொருளாகியுள்ளன. இந்த மாற்றத்தை முன்னெடுத்த இதழ்களில் முதன்மையானதாக **நிறப்பிரிகை**யைக் குறிப்பிடலாம். மேற்கூறிய தலைப்புகளில் நிறப்பிரிகையில் முன்னெடுக்கப்பட்ட விவாதங்கள் தமிழ்ச் சூழலில் காத்திரமான பல விளைவுகளை ஏற்படுத்தியுள்ளதை யாரும் ஒப்புக்கொள்வர். நிறப்பிரிகையில் முன்னெடுக்கப்பட்ட இவ் விவாதங்களைத் தொகுத்து தமிழ் மக்கள் மத்தியில் வைக்கும் பணியை **விடியல் பதிப்பகம்** மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டுள்ளது. அந்த வரிசையில் மூன்றாவது தொகுப்பாக இந் நூல் உங்கள் கரங்களில் வீற்றிருக்கிறது.

இந்தத் தொகுப்புகளின் ஒரு முக்கியமான சிறப்பு ஒற்றைக் கருத்தாக இவை முன்வைக்கப்படாமல், பன்முக நோக்கில் பன்முகப் பார்வைகள் –சமயங்களில் நேரெதிரான பார்வைகளும்கூட – அருகருகே வைக்கப்பட்டுள்ளன. இதன்மூலம் வாசகனின் சுதந்திரத்தின் எல்லை விரிவாக்கப்படுகிறது ; வாசிப்பில் சோர்வு தவிர்க்கப்படுகிறது.

இந்தத் தொகுப்போடு இந்தத் தலைப்பிலான விவாதங்கள் முற்றுப் பெற்றுவிட்டதாக விடியல் பதிப்பகம் கருதவில்லை. மேலும் விவாதங்கள் வரவேற்கப்படுகின்றன. தேவையாயின் அவற்றையும் நூலாக்க விடியல் எப்போதும் தயாராக உள்ளது.

–விடியல் பதிப்பகம்

SEELAN BOOKS NORWAY SIGNATURE

www.tamilarangam.net

## உள்ளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| பதிப்புரை | | |
| ஒரு புதிய பெரியாரை முன்வைப்போம் | —முன்னுரை | |
| பெரியாரியம் – தத்துவத்தை அடையாளப்படுத்தலும் நடைபெற வேண்டிய விவாதமும் ஆய்விற்கான முன்வரைவுகள் | – ராஜன்குறை | 1 |
| பெரியாரியம் | – கோ.கேசவன் | 35 |
| பெரியார் பார்வையில் மொழி | – பொ.வேல்சாமி<br>– அ.மார்க்ஸ் | 59 |
| பெரியாரியம் – கூட்டுவிவாத அழைப்பு | – 'நிறப்பிரிகை' | 67 |
| பெரியாரியம் | – கூட்டு விவாதம் | 69 |


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தொகுப்புரை

*ஈ.வெ.ராமசாமி என்கிற நான் திராவிட சமுதாயத்தைத் திருத்தி உலகில் உள்ள மற்ற சமுதாயத்தினரைப்போல் மானமும் அறிவும் உள்ள சமுதாயமாக ஆக்கும் தொண்டை மேற்போட்டுக் கொண்டு அதே பணியாய் இருப்பவன்.*

*அந்தத் தொண்டு செய்ய எனக்கு யோக்கியதை இருக்கிறதோ இல்லையோ, இந்த நாட்டில் அந்தப் பணி செய்ய யாரும் வராததினால், நான் அதை மேற்போட்டுக் கொண்டு தொண்டாற்றி வருகின்றேன்.*

*இதைத் தவிர வேறு பற்று ஒன்றும் எனக்கு இல்லாததாலும், பகுத்தறிவையே அடிப்படையாய்க் கொண்ட கொள்கைகளையும், திட்டங்களையும் வகுப்பதாலும், நான் அத்தொண்டுக்குத் தகுதி உடையவன் என்றே கருதுகின்றேன்.*

*சமுதாயத் தொண்டு செய்பவனுக்கு இது போதும் என்றே கருதுகிறேன்.*

V

பெரியார் ஈ.வே.ரா அவர்கள் தன்னையும் தன் பணியையும் குறித்து வெளியிட்ட மேற்கண்ட பிரகடனத்தை நாம் அனைவரும் அறிவோம். பெரியாரைப் புரிந்து கொள்ளவும் விமரிசிக்கவும் முற்படும் யாரும் இக் கூற்றைப் பகுப்பாய்வு செய்தல் அவசியம். தான் பணி செய்ய நேர்ந்த சமுதாயத்தை அவர் உலகிலுள்ள பிற சமுதாயங்களிலிருந்து வேறுபடுத்திக் காட்டும் புள்ளி முக்கியமான ஒன்று. உலகிலுள்ள பிற சமுதாயங்கள் என அவர் குறிப்பிடுவது பெரும்பாலும் மேலைச் சமூகங்களை மனதில் கொண்டுதான் என்பதை அவரது பிற கூற்றுகளுடன் இணைத்து நோக்கும்போது புரிந்துகொள்ள முடியும். பிற சமுதாயங்கள் எந்த வகையில் நம்முடையதிலிருந்து வேறுபட்டு நிற்கின்றன? "மானமும் அறிவும் உள்ள வகையில் என்கிற பெரியாரின் கூற்றை விளங்கிக் கொள்ள நாம் சற்றே பின்னோக்கி மேலை / கீழை சிந்தனை வரலாறுகளை பார்த்தல் அவசியம்.

மேலை தத்துவ வரலாற்றை எழுதுபவர்கள் அதனைப் (1) புராதன காலம் (2) மத்திய காலம் (3) நவீன காலம் எனக் காலப்பாகுபாடு செய்வது வழக்கம். புராதன கால கிரேக்க தத்துவங்களுக்கு இணையாக இந்திய துணைக் கண்டத்தில் கங்கைச் சமவெளியில் உருவான வேத/ லோகாயத/ புத்த சமண தத்துவங்ளையும் பின்னர் தெற்கில் தமிழ் மண்ணில் விளங்கிய லோகாயத/ புத்த தத்துவங்களையும் குறிப்பிடலாம். கருத்து முதன்மைப் போக்குகளுக்கும் பொருள் முதன்மைப் போக்குகளுக்கும் இடையிலான போராட்ட காலமாக இதனை குறிப்பிடுவர். மேலைச் சூழலுக்கு இணையாகச் சொல்லத்தக்க அளவிற்கு வளமான தத்துவ உரையாடல் கீழைச் சூழலிலும் விளங்கியது.

www.tamilarangam.net

கி.பி.5 - லிருந்து 15 - ம் நூற்றாண்டு வரையிலான காலகட்டத்தை மத்திய காலம் என மேலைச் சூழலில் குறிப்பிடுவர். இக் காலகட்டத்தில் உருவான மத்திய கால தத்துவம் என்பது அதற்கு முந்திய பொருள் முதன்மைக் கூறுகளை எல்லாம் வீழ்த்தி முற்றிலும் தத்துவத்தை மதத்தின் எடுபிடியாக்கியது என்கிற கருத்தை மேலை சிந்தனை வரலாற்றை எழுதும் மாறுபட்ட கருத்துடையவர்களும் கூறியுள்ளனர். "PHILOSOPHY WAS A HAND MAID OF RELIGION" எனச் சொல்வது வழக்கம். மடாலயங்களின் ஆளுமையின்கீழ் தத்துவமும் மதவியலும் (THEOLOGY) ஒன்றாக்கப்பட்டன. இந்திய துணைக் கண்டத்திலும் வடக்கிலும் தெற்கிலும் இதற்கு இணையான ஒரு வரலாற்றைச் சுட்டிக்காட்டமுடியும். புத்த, சமண மதங்கள் வீழ்த்தப்பட்டதோடு அத்வைதம், துவைதம், விசிட்டாத்வைதம் என்கிற வேதாந்தங்களும் இவற்றிலிருந்து பெரிதும் வேறுபடாத சைவ சித்தாந்தமும் இங்கே உருவாகி கோலோச்சின. அரசுகளும் மடாலயங்களும் இவற்றிற்கு துணைபுரிந்தன. மாறுபட்ட சிந்தனைகள் வன்முறையாக அழித்தொழிக்கப்பட்டன. மேலைச் சூழலில் கிறிஸ்தவமும் இங்கே வேதங்களும் பிரமாணமாகக் (AUTHORITY) கொள்ளப்பட்டு இவ்வாறு சிந்தனை, தத்துவம், பண்பாடு, மொழி என எல்லாக்கூறுகளும் மதத்தின் வல்லமைக்குள் ஒடுக்கப்பட்டன. கடவுள் மற்றும் பிரமாணங்களின் மீதான விசுவாசமே முதன்மையாக்கப்பட்டு அறிவு, உணர்வு உள்ளிட்ட மனிதாளுமைக் கூறுகள் கீழ்த்தள்ளப்பட்டன



பதினைந்தாம் நூற்றாண்டுகளுக்குப் பின்னர் இப்படி ஒரு ஒற்றுமையை மேலைச் சிந்தனை வரலாற்றிற்கும் கீழைச் சிந்தனை வரலாறாற்றுக்குமிடையே நம்மால் சுட்டிக்காட்ட முடியாது. அறிவியலும் தொழில் நுட்பமும் அதனை ஒட்டிய வணிகம், குடியேற்றம் முதலிய பல்வேறு செயல்பாடுகளும் மேலைச் சூழலில் வியத்தகு மாற்றங்களை ஏற்படுத்தின. இதனை ஒட்டி தத்துவவியல் மேலைச் சூழலில் மிகப் பெரிய அளவில் வளர்ச்சியுற்றது. மறுமலர்ச்சிக்காலம், அறிவொளிக்காலம், பத்தொன்பதாம் நூற்றாண்டு, இருபதாம் நூற்றாண்டு, என்றெல்லாம் நவீன காலத்தைப் பல்வேறு உட்ப்பிரிவுகளாகப் பிரிக்கக்கூடிய அளவிற்கு மேலைத் தத்துவப் பாரம்பரியம் பெருவளர்ச்சி கண்டது. அனுபவ வாதம், அறிவுவாதம், அய்யவாதம், சாராம்சவாதம், இருத்தலியல், மார்க்சியம் (இயங்கியல்) அமைப்பியல், பின்னமைப்பியல், பின் நவீனத்தும் என்றெல்லாம் பல்வேறு தத்துவ, அறிதல்முறைப் போக்குகள் உருவாகின.

பதினைந்தாம் நூற்றாண்டை ஒட்டித் தோன்றிய கார்ட்டீசிய அறிதல் முறை அறிதலில் மனிதனின் பங்கை முதன்மைப் படுத்தியது. பகுத்தறிவின் மேன்மையைப் பறைசாற்றியது. பகுத்தறிவு கோலோச்சிய காலகட்டமாக, தொடர்ந்து வந்த நூற்றாண்டுகளைக் குறிப்பிடுவர். மேற்குறிப்பிட்ட பல்வேறு தத்துவப் போக்குகளையும் நவீனத்துவம் என்கிற ஒரே பிரிவிற்குள் கொண்டுவரத்தக்க

www.tamilarangam.net

பொதுமையான அம்சம் என எதையாவது சொல்லவேண்டுமானால் அது தத்துவத்தை மதவியலின் பிடியிலிருந்து விடுவித்தது என்பதுதான். தமக்குள் பல்வேறு வேறுபாடுகளைக் கொண்டதாயினும் இவை அனைத்தும் கிறிஸ்துவத்தை பிரமாணமாக ஏற்றுக்கொள்வதை மறுத்தன. மொழி, பண்பாடு, கல்வி, அரசியல் எனப் பல துறைகளும் பல்வேறு மட்டங்களில் மத நீக்கம் (SECULARISATION) செய்யப்பட்டன. இவை அனைத்தும் மேலைச்சூழலில் என்பதை நாம் நினைவு கொள்ளவேண்டும்.

பதினைந்தாம் நூற்றாண்டை ஒட்டித் தோன்றிய இந்த மாற்றங்கள் இந்தியத் துணைக்கண்டத்திற்குள் (வடக்கிலும் சரி, தெற்கிலும் சரி) நுழையவேயில்லை. அறிவியலிலும் தொழில்நுட்பத்திலும் அங்கே ஏற்பட்ட புரட்சிகரமான மாற்றங்கள் இங்கே தோன்ற இயலாமல் போனதற்கான அகக்காரணிகள் பற்றிய ஆய்வை நாம் வேறொரு சந்தர்ப்பத்திற்கு ஒத்திவைத்துவிட்டு அதன் விளைவுகளின் மீது இங்கே கவனத்தைக் குவிப்போம். அரசியல் மற்றும் பொருளியல் அடிப்படையிலான முக்கிய விளைவு காலனிய அடிமைத்தனம் என்றால் சிந்தனை, தத்துவ, பண்பாட்டு அடிப்படையிலான விளைவு என்பது இங்கே இந்த துறைகளில் மத நீக்கம் ஏற்படாமல் போனதேயாகும். இங்கு நிலவிய உலகக் கண்ணோட்டத்தின் சகல



அம்சங்களும் வேதங்களை, பார்ப்பனீயத்தைப் பிரமாணமாகக் கொண்டவையாகவே தொடர்ந்தன. இந்த அடிப்படையிலேயே பார்ப்பனன் முதல் பறையர் வரையிலான மனிதத் தன்னிலைகள் உருவாக்கப்பட்டன. ஒவ்வொருவனும் தன்னை ஒரு பார்ப்பனனாக, சூத்திரனாக, பறையராகவே உணரும் சூழலும் அந்த அடிப்படையில் விதிக்கப்பட்ட வாழ்நிலையை சகித்துக்கொள்ளும் உள நிலையும் தொடர்ந்தன. மொழி, வழமைகள், அன்றாட நடவடிக்கைகள், அரசியல், சட்டம் என அனைத்தும் மதக்கறை படிந்ததாகவே அதாவது பார்ப்பனீயக்கறை படிந்ததாகவே விளங்கின. இந்த மொழியின் மூலம் சிந்தித்துக் கொண்டு, இலக்கியமாக்கிக் கொண்டு, இந்தக் குறியீடுகளின் ஊடாக வாழ்க்கையை ஓட்டிக்கொண்டு வாழநேர்ந்த ஒவ்வொருவரும் இந்தச் சூழலுக்குரிய தன்னிலைகளாக (SUBJECTS) மாறுவது தவிர்க இயலாதது ஆகியது.

இங்கே முக்கியமாகக் கருதத்தக்க அம்சம் என்னவெனில் வடமொழிக்கு எதிராக முன்வைக்கப்பட்ட தமிழ் மொழியும், பார்ப்பனீயத்துக்கு எதிராக முன்வைக்கப்பட்ட சைவ-வேளாளப் பண்பாடும், வேதாந்தத்திற்கு மாற்றாக வைக்கப்பட்ட சைவ சித்தாந்தமும், சைவ இலக்கியங்களும் அடிப்படையில் பார்ப்பனீயக் கறை படிந்தவையாகவும் ஏதோ ஒரு வகையில் வருணாசிரமத்தை ஏற்றுக்கொண்டவையாகவும் வேதங்களையும் பார்ப்பனீயத்தையும் பிரமாணமாக கொண்டவையாகவுமே இருந்தன என்பதே. சாதிப் படிநிலையில் மேலே மேலே பேகப்போக இந்ததன்மைகள் கூடிக் கொண்டேவருவது குறிப்பிடத்தக்க ஒன்று. இத்தகைய பிரிவினரே

www.tamilarangam.net

சகல துறைகளிலும் ஆதிக்கம் செலுத்தக் கூடியவாகளாக இருப்பதனால் இத்தகைய பார்ப்பனீயக் கண்ணோட்டமே எல்லாவற்றிலும் ஆதிக்கம் செலுத்தி "பொது ஜன அபிப்ராயமாக" சகல மனிதர்களிடமும் நிலவியது. காலனீயச் செயற்பாடுகளின் ஊடாக இங்கே நுழைந்த அறிவியலும் தொழில்நுட்பமும் மேலைச் சூழலில் மதநீக்கம் செய்யும் கருவிகளாக அமைந்தது போலல்லாமல் இங்கே அவையே மதமயமாக்கலுக்குள்ளாக்கப்பட்டன; அதாவது பார்ப்பனீய மயமாயின. கணிப்பொறி சோதிடக் கருவியாக மாறியது இப்படித்தான்.

இத்தகைய சூழலில், பின்னணியில் பணியாற்றக் களம் புகுந்தவர்தான் தோழர் பெரியார். மதநீக்கம் நிறைவேற்றப்படாத சூழலில் மனிதனுக்குச் சுயமரியாதை-தன்மதிப்பு-இருக்காது. எனவே அவன் மதத்தின் பெ.யரிலான ஆதிக்கங்களுக்கு அடிமையாகிக் கிடப்பான். இந்தியத் துணைக் கண்டத்தில் மிகத்தெளிவாக வருண அடிப்படையில் இந்த ஆதிக்கச் சக்திகளை அடையாளம் காட்டமுடியும். அவர்களே பார்ப்பனர்கள். பார்ப்பனீயத்தின் விளைவாகச் சுயமரியாதை இழந்து கிடக்கும் மக்கள் திரளைப் பெரியார் மூன்று பிரிவினராக அடையாளம் காணுவதை அவரது எழுத்துக்களைப் படிக்கும் யாரும் புரிந்துகெள்ளமுடியும். அவர்கள் (1) சூத்திரர்கள் (2) தீண்டப்படாதவர்கள் (3) பெண்கள். சுமார் அய்ம்பதாண்டு காலம் 'பொதுஜன அபிப்ராயத்திற்கு' எதிராக பகுத்தறிவுப் பிரச்சாரத்தை மேற்கொண்ட பெரியாரின் விளிப்புகள் அனைத்தும் இம்மூன்று பிரிவினரை நோக்கியே அமைந்தன. இம்மூன்று பிரிவினரும் சுயமரியாதை பெறுவதன் மூலமாகவே-அதாவது விடுதலைபெற்ற தன்னிலைகளாக மாறுவதன் மூலமாகவே - இங்கே சாதி ஒழியும் ; தீண்டாமை போகும்; பெண்ணடிமைத்தனம் மாயும். இந்தச் சுயமரியாதை உருவாவதற்குத் - தன்னிலை உருவாக்கத்திற்கு -தடையாக இருப்பது சகல துறைகளிலும் கலந்து கிடக்கும் மத உணர்வே. எனவே இச் சமூகத்தின் சகல அம்சங்ளையும் மதநீக்கம் செய்வதே இந்தச் சமுதாயத்தைத் தன்மானமும் பகுத்தறிவும் உள்ளதாக ஆக்கும் தொண்டை மேற்போட்டுக்கொண்ட ஒருவனின் தலையாய பணியாக இருக்கமுடியும். தமிழ் மொழிபற்றிச் சொல்லவரும்போது,



> *தமிழ் மக்களின் தன்மதிப்பு என்பதல்லாமல் வெறும் பாஷையைப் பற்றியே நான் எவ்வித பிடிவாதமும் கொண்டவனும் அல்லன்...... முதலாவதாக தமிழ் முன்னேற்றமடைந்து உலக பாஷை வரிசையில் அதுவும் ஒரு பாஷையாக இருக்கவேண்டுமானால் தமிழையும் மதத்தையும் பிரித்துவிடவேண்டும். தமிழுக்கும் கடவுளுக்கும் உள்ள சம்பந்தத்தையும் கொஞ்சமாவது தள்ளிவைக்க வேண்டும். மத சம்பந்தமற்ற ஒருவனுக்குத் தமிழில் இலக்கியம் காண்பது மிகமிக அரிதாகவே இருக்கிறது. தமிழ் இலக்கணம் கூட மதத்தோடு பொருத்தப்பட்டே இருக்கிறது.*

www.tamilarangam.net

*உதாரணமாக 'மக்கள், தேவர், நாகர் உயர்திணை' என்றால் என்ன ? நாகர்கள் யார் ? தேவர்கள் யார் ? இலக்கணத்திலேயே மதத்தை போதிக்கும் சூழ்ச்சிதானே இது ? (பக்கம் 976)*

எனப் பெரியார் குறிப்படுவதை நாம் இந்தப் பின்னணியிலேயே விளங்கிக் கொள்ளமுடிகிறது. பெண்ணடிமைத்தனம் பற்றிப் பேச வரும்போதும் எவ்வாறு சொத்துறவு, தனியுடமை முதலியவற்றோடு ஆணாதிக்கம் இணைந்துள்ளது என்பதை விளக்கமாகச் சொன்னபோதும் (பக். 108, 160-170) நமது சூழலில் எவ்வாறு "கற்பு" போன்ற கற்பிதங்கள் பொருளியல் காரணிகளையும் மீறி மதவியற்கூறுகளால் கட்டமைக்கப்பட்டுள்ளன என்பதைக் குறிக்கின்றார். ஆங்கிலத்தில் கற்பு என்பதற்குச் சமமான CHASTITY VIRGINITY போன்ற சொற்கள் உடலுறவுக்கு முற்பட்ட சுத்தத்தன்மையை மட்டுமே குறியீடு செய்கின்றன.

*ஆனால் ஆரிய பாஷையில் பார்க்கும்போது மாத்திரம் 'கற்பு' என்கின்ற பதத்திற்கு பதிவிரதை என்கின்ற பொருள் கொள்ளப்படுகிறது. இந்த இடத்தில் தான் கற்பு என்கின்ற வார்த்தைக்கு அடிமைக் கருத்து நுழைக்கப்படுகின்றது என்பது எனது அபிப்பிராயம். அதாவது, பதியை கடவுளாகக் கொண்டவள், பதிக்கு அடிமையாய் இருப்பதையே விரதமாக கொண்டவள், பதியைத்தவிர வேறு யாரையும் கருதாதவள் என பொருள் கொடுத்திருப்பதுடன் 'பதி' என்கின்ற வார்த்தைக்கு அதிகாரி, யஜமான், தலைவன் என்கின்ற பொருள்கள் இருப்பதால் அடிமைத் தன்மையை இவ்வார்த்தைகள் பலப்படுத்துகின்றன. (பக்கம் 115,116)*

IX

என்பது பெரியார் கூற்று. இத்தகைய பார்ப்பனீயமான மொழியியற் / கலாச்சார/ குறியீட்டுச் செயற்பாடுகள் அடிமைத் தன்னிலை உருவாக்கத்தில் முக்கிய பங்கு வகிக்கின்றன. இவற்றை தகர்ப்பது என்பது இத்தகைய அதிகாரங்களுக்கும் ஆதிக்கங்களுக்கும் எதிரான, இவற்றை ஏற்றுக்கொள்ளாத தன்னிலை உருவாக்கத்தின் முதற்தேவையாகிறது. "(முதலில்) மானத்தைக் கவனித்துக்கொண்டு (பிறகு) உடைமை பற்றிக் கவனிக்கலாம்" (பக்கம் 94) என்று அவர் கூறுவது அடிமைத் தன்னிலை உருவாக்கம் குறித்த அவரது கரிசனத்தையேக் காட்டுகிறது. உலகிலுள்ள கொடுமைகளிலேயே பெருங்கொடுமை இந்தியாவில் கடைபிடிக்கப்படும் தீண்டாமைதான் எனச் சொன்ன பெரியார் (பக்கம் 61) பெண்ணடிமை ஒழிப்பை போலவே தீண்டாமை ஒழிப்பிலும் பாதிக்கப்பட்டவர்களே அதற்காக மனப்பூர்வமாகப் போராட முடியும் என்பதை வலியுறுத்தியதோடு (பக்கம் 84) அதற்குத் தடையாக இருப்பது நமது அடிமைத் தன்னிலையே எனச் சுட்டிக்காட்டுகிறார்

*ஆகவே, கீழ்ச்சாதித்தன்மை ஒழியவேண்டும் என்று கருதுகிற ஒருவன் - அன்னியருக்காக நாம் உழைக்கப் பிறந்தோமென்ற எண்ணத்தை விட்டு விட்டு நமது உழைப்பின் பயனைச் சோம்பேறிகள், பாடுபடாத மக்கள் அனுபவிக்கக் கூடாது என்கிற உறுதி கொண்டு - பிறவியில் நமக்கும் மற்றவருக்கும் எவ்வித*

www.tamilarangam.net

*வித்தியாசமுமில்லை என்கிற உறுதியோடு ,சோம்பேறிக்கூட்டத்திற்கு எதிராக எவன் போர் தொடுக்க முனைந்து நிற்கிறானோ அவனே இவ்வித இழிவுகளை நீக்கிக் கொள்ள அருகதை உள்ளவனாக ஆகிறான். அதை விட்டு விட்டு மதக்கட்டளையும் கடவுள் நம்பிக்கையையும் கொண்ட ஒரு அடிமை - ஒரு தாழ்ந்த சாதிக்காரன் - ஒரு நாளும் விடுதலை அடையவோ முன்னேற்றமடையவோ முடியாது. (பக்கம்72)*

என தாழ்த்தப்பட்டோர் மாநாடொன்றில் பேசும் போது குறிப்பிட்ட பெரியார் பெண்களை நோக்கிப் பேசும் போது,

*அனேக வருடப் பழக்கவழக்கங்களால் தாழ்ந்த சாதியார் எனப்படுவோர் எப்படித் தங்கள் தாழ்ந்த வகுப்பார் என்பதை ஒப்புக் கொண்டு, தாமாகவே கீழ்ப்படியவும் நடுங்கவும் விலகவும் முந்துகிறார்களோ, அதுபோலவே பெண்மக்களும் தாங்கள் ஆண்மக்களின் சொத்துகள் என்றும், ஆண்களுக்குக் கட்டுப்பட்டவர்கள் என்றும் அவர்களது கோபத்திற்கு ஆளாகக் கூடாதவர்களென்றும் நினைத்துக் கொண்டு, சுதந்திரத்தில் கவலையற்று இருக்கின்றார்கள். உண்மையாகப் பெண்கள் விடுதலை வேண்டுமானால், 'ஒரு பிறப்புக் கொரு நீதி' வழங்கும் நிர்ப்பந்தக் கற்புமுறையொழிந்து , 'இருபிறப்பிற்கும் சமமான - சுயேச்சைக் கற்புமுறை' ஏற்பட வேண்டும். கற்புக்காக பிரியமற்ற இடத்தைக் கட்டி அழுதுகொண்டிருக்க செய்யும்படியான நிர்ப்பந்தக் கலியாணங்கள் ஒழியவேண்டும். கற்புக்காக புருஷனின் மிருகச் செயலைப் பொறுத்துக்கொண்டிருக்க வேண்டுமென்கிற கொடுமையான மதங்கள், சட்டங்கள் மாயவேண்டும். கற்புக்காக மனத்துள் தோன்றும் உண்மையன்பை , காதலை மறைத்துக்கொண்டு -காதலும் அன்புமில்லாதவனுடன் இருக்கவேண்டுமென்கின்ற சமுகக்கொடுமையும் அழியவேண்டும். (பக்கம் 117)*

எனக்கூறியது குறிப்பிடத்தக்கது. சூத்திரர்களையே தனது பிரதான விளிப்புக்குரியவர்களாக நிறுத்திச் செயல்பட்ட பெரியாரின் சொல்லாடல்கள் கிட்டத்தட்ட முழுமையுமே சூத்திரத் தன்னிலையை உடைக்கும் நோக்கிலேயே அமைந்தன. சூத்திரன் என்றால் 'தாசிமகன்' என்கிற பொருளைத் திருப்பித் திருப்பிச் சுட்டிக் காட்டிய அவர் சூத்திரர்களையும், தாழ்த்தப்பட்டவர்களையும், பெண்களையும் தங்களுக்கு விதிக்கப்பட்ட அத்துக்களை மீறவேண்டியதன் அவசியத்தை வற்புறுத்தி வந்தார். சாதி, கோயில், திருமணம் என்கின்ற மூன்று நிறுவனங்களையும் அவர் தொடர்ந்து எதிர்த்து வந்தார்; தாக்கிவந்தார்; இவை குறித்த புனைவுகளைக் கடுமையான பிரச்சாரங்கள் மற்றும் செயற்பாடுகள் மூலமாகக் கட்டுடைத்து வந்தார். நமது சூழலில் விடுதலைக்கான தன்னிலைகள் உருவாவதற்கான மூன்று பெரும் தடைகளாக இவற்றை முன்னிலைப்படுத்தி துணைத் தடைகளாக நமது அரசியற் சட்டம், உச்சநீதி மன்றம், இந்திய ஒற்றுமை இணைநிலைப்படுத்தித் தாக்கிவந்தார். இந்த நிறுவனங்களுக்குப் பிரமாணங்களாக வேதங்களும், பார்ப்பனீயமும்

www.tamilarangam.net

விளங்குவதையும் இந்த நிறுவனங்களுக்குப் பக்கத் துணைகளாக நமது மொழி, இனம், நாடு, பண்பாடு ஆகியவை குறித்தப் புனைவுகளும் விளங்குவதையும் சரியாக அடையாளம் கண்டு அவற்றை தகர்க்க வேண்டியதன் அவசியத்தை வற்புறுத்திவந்தார். "பாஷாபிமானம், தேசாபிமானம், மதாபிமானம், குலாபிமானம்" ஆகிய எல்லாவிதமான அபிமானங்களிலிருந்தும் தாழ்த்தப்பட்டவர்கள் விடுபடுவது அவர்களது விடுதலைக்கு அவசியம் என்றார் (பக்கம் 75). வேறென்ன அபிமானம் விடுதலைக்கு வழிவகுக்கும்?

> *தேசாபிமானம் என்ற யோக்கியமற்ற சூழ்ச்சிக்கு நீங்கள் ஆளாகக்கூடாது. அது சோம்பேறிகள், காவிகள் ஆகியவர்கள் பிழைப்புக்கு ஏற்படுத்தப்பட்ட மோட்சம், நரகம் என்பது போன்ற முடநம்பிக்கையாகும். உங்களுக்கு இன்று சுயமியாதை அபிமானம்தான் உண்மையாய்வேண்டும் (பக்கம் 68)*

என்றவர் கூறியுள்ளதைக் கவனிக்கும் போது மொழிப்பற்று, நாட்டுப்பற்று என்பதொல்லாம் இயற்கையான ஒன்றல்ல, வெறும் கட்டமைப்பே என்கிற புரிதலை அவர் கொண்டுள்ளது விளங்கிவிடுகிறது.

1907 லிருந்து அவரது அரசியல் வாழ்க தொடங்கியதெனினும் காங்கிரஸ் கட்சியிலிருந்து விலகிய 1925ம் ஆண்டை அவரது இரண்டாவது கட்ட அரசியல் வாழ்வின் தொடக்கப்புள்ளி எனலாம்.1927ம் ஆண்டில் முற்றிலும் அவர் காந்தியச் சிந்தனைகளிலிருந்து விடுபடுகிறார் . அவர் இறக்கும் வரையிலான அடுத்த சுமார் நாற்பத்தெட்டாண்டு கால அரசியல் வாழ்வில் வியக்கத்தக்க அளவிற்கு கருத்து, செயல்பாடுகளில் மாற்றமின்றி விளங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது. சுயமரியாதை பிரச்சாரம், இந்தி எதிர்ப்பு, நாட்டுப் பிரிவினை, வகுப்புவாரி ஒதுக்கீடு, புத்தமத ஆதரவு, பெண்கள் பிள்ளைப் பேற்றை விடவேண்டும் என வற்புறுத்தல் ஆகிய கருத்துக்களை அவர் தொடர்ந்து பேசிவந்துள்ளார். மனுநீதி எரிப்பு, அரசியல் சட்ட எரிப்பு, இந்திய தேசப்பட எரிப்பு, பிள்ளையார் சிலை உடைப்பு, ராமன் சிலை அவமதிப்பு, தீண்டாமை மற்றும் பார்ப்பனீயத்தின் பேரால் ஒதுக்கப்பட்ட வெளிகளுக்குள் அத்துமீறி நுழைதல் என்பன 1923 தொடங்கி 1973 வரை அவரது செயற்பாடுகளாக இருந்துவந்துள்ளன. சமூகப்புரட்சி என்பதைக் காட்டிலும் அத்தகைய புரட்சியை உருவாக்குவதற்கான தன்னிலைகளாகச் சூத்திரர்கள், தாழ்த்தப்பட்டவர்கள், பெண்கள் ஆகியோரை உருவாக்குவதே தலையாய பணி என்கிற நோக்கில் செயற்பட்ட அவரது செயற்பாடுகளில் முரண்களைக் காட்டிலும் தொடர்ச்சியே அதிகம்.

பெரியாரை விமர்சிக்க முனைபவர்கள் சற்று அவசரப்பட்டு அவரிடம் கோட்பாட்டுத் தெளிவில்லை என்றும், முன்னுக்குப்பின் முரண்கள் இருந்தனவென்றும், கொச்சைப் பொருள்முதல் நோக்குடன் அணுகினார் என்றும் சொல்வது வழக்கம். இந்தத் தொகுப்பிலேயே

www.tamilarangam.net

கூட ஒருசில நண்பர்கள் அத்தகைய குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ளனர். பெரியார் மீதான பல்வேறு வாசிப்புகளில் இவையும் ஒன்று, இவையும் சாத்தியம் என்பதில் நமக்குக் கருத்துமாறுபாடு இல்லை. எனினும் நவீன சிந்தனைகளின் வெளிச்சத்தில் பார்க்கும்போது இந்த விமர்சனங்களில் பல பொருளற்றுப் போவதையும் சுட்டிக்காட்ட வேண்டியதாகிறது. எடுத்துக்காட்டாக பகுத்தறிவு குறித்த பெரியாரின் கருத்துக்களைத் தொகுத்துப் பார்த்தல் ஒன்றுக்கொன்று மாறுபட்ட இருவேறு பார்வைகள் ஊடாடுவது விளங்கும்.

> *பகுத்தறிவு என்பது மனிதனுக்கு ஜீவநாடி உயிர்நாடி ஆகும். ஜீவராசிகளில் மனிதனுக்குத்தான் பகுத்தறிவு உண்டு. இதில் எவ்வளவுக்கெவ்வளவு தாழ்ந்த நிலையில் இருக்கிறானோ அவ்வளவுக்கவ்வளவு காட்டுமிராண்டி என்பது பொருள். (பக்கம் 1129)*

என பகுத்தறிவின் புகழ் பாடியவர் பெரியார். இதனையொத்த ஏராளமான மேற்கோள்களைப் பெரியாரில் நாம் சுட்டமுடியும். பகுத்தறிவாளர் கழகங்களை உருவாக்குவது அவரது நடைமுறைகளில் ஒன்றாகவும் இருந்து வந்திருக்கின்றது.

இதே பெரியார் இன்னொரு பக்கம் மனிதன் மற்ற உயிர்களைக் காட்டிலும் எந்த வகையிலும் உயர்வான உயிரல்ல என வற்புறுத்திப் பேசுவதோடு,



> *தன் பிள்ளைக் குட்டி, பேத்து, பிதிர் ஆகிய பின் சந்ததிகளைப் பற்றிய முட்டாள் தனமான கவலை பகுத்தறிவுள்ள மனிதனுக்குத்தான் இருக்கிறதேயொழிய பகுத்திறிவில்லாதவைகளுக்கு இல்லை.......... பகுத்தறிவில்லாத எந்த ஜீவராசியும் தன் இனத்தை வருத்தி வாழ்வதில்லை. தன் இனத்தை கீழ்மைப் படுத்துவதில்லை; தன் இனத்தின் உழைப்பிலேயே வாழ்வதில்லை; தன் இனத்தின் மீது சவாரி செய்வதில்லை.*
>
> *பகுத்தறிவுள்ள மனிதன் தன் இனத்தைக் கீழ்மைப்படுத்துகிறான். வாகனமாய் உபயோகப் படுத்துகிறான். சோம்பேறியாயிருந்து தன் குலத்தின் உழைப்பிலேயே வாழ்கிறான். பாடுபட ஒரு கூட்டமாகவும் பயன் அனுபவிக்க இன்னொரு கூட்டமாகவும் பிரிந்து கொள்கிறான்.*
>
> *உதாரணமாக நாய், கழுதை, பன்றி என்கின்ற 'இழிவான' மிருகக் கூட்டத்தில் பார்ப்பன சாதி, பறை சாதி, நாயுடு சாதி, முதலி சாதி என்கின்ற பிரிவுகள் கிடையாது. ஆனால் மனித வர்க்கத்தில் தன் இனத்தையே பிரித்து இழிவுபடுத்தப் படுகின்றது.*
>
> *மனிதன் மீது மனிதன் சவாரி செய்கின்றான். மனிதன் உழைப்பை மனிதன் கொள்ளை கொள்கின்றான். மனிதனை மனிதன் வஞ்சிக்கின்றான்.*
>
> *பகுத்தறிவின் பயன் இதுவாயிருக்கும்போது, பகுத்தறிவு இருப்பதாலேயே மனிதன் மேன்னையானவன் என்று எப்படிச் சொல்லமுடியும் ? ( பக் 1115)*

www.tamilarangam.net

என்று மனிதனின் பகுத்தறிவைக் கேலி செய்யவும் செய்கிறார். இதனை விளங்கிக் கொள்ள நவீன மேலைத் தத்துவ வளர்ச்சியின் சில கூறுகள் நமக்கு உதவி செய்யலாம்.

மேலை மரபில் மதத்தின் பிடி தளர்த்தப்பட்டு பகுத்தறிவு கோலோச்சத் தொடங்கியதைப் பற்றி முன்பு குறிப்பிட்டோம். பகுத்தறிவின் ஆட்சி உச்சத்தில் இருந்த அக் காலகட்டத்திலேயே பகுத்தறிவின் சாத்தியப் பாடுகளையும் எல்லைகளையும் கான்ட் போன்ற தத்துவவியலாளர்கள் கேள்விக்குள்ளாக்கினர். தர்க்க வயப்பட்ட சிந்தனை முறை, பகுத்தறிவு சார்ந்த அறிதல் முறை, காட்டிசிய அணுகல் முறை என்பன தொடர்ந்து மேலை மரபில் கேள்விக்குள்ளாக்கப்பட்டு வந்தன. இருத்தலியல், நிகழ்வியல் பின் அமைப்பியல் சார்ந்த சிந்தனைக்கும் இவற்றில் முன் நின்றன. நீட்ஷே போன்றோரை உள்ளடக்கி ஒரு அதர்க்க வகைப்பட்ட (Non Rational Philosophers) சிந்தனையாளர் பாரம்பரியம் ஒன்றும் அங்கே சுட்டிக்காட்டப்படுகிறது. அறிவு என்பது எவ்வாறு அதிகாரத்திற்கு வழிவகுக்கும் என்பதை ஃபூக்கோ போன்றோர் விளக்கியதோடு அறிவாளிக்கால உருவாக்கங்களான சிறைச்சால, மருத்துவமனை, மனநோய் விடுதி போன்ற நிறுவனங்தன் அதிகார உள்ளடக்கங்களைத் தோலுரித்தனர். இவற்றையொட்டி பின் நவீனத்துவச் சிந்தனையாளர்கள் "அறிவின் வன்முறை", "பகுத்தறிவின் பயங்கரம்" போன்ற கருத்தாக்கங்களை முன் வைக்கின்றனர். பகுத்தறிவிற்கு மாற்றாக ஆசை (desire), உடல், முரண், பன்மைத் தன்மை போன்றவற்றை இவர்கள் முன் வைக்கின்றனர்.



எனவே பகுத்தறிவு, தர்க்கம் ஆகியவை வருணாசிரமம் உள்ளிட்ட அதிகாரங்களை நியாயப்படுத்தவும் பயன்படுத்தக் கூடிய சாத்தியத்தை நாம் மறந்துவிடக் கூடாது. பெரியார் இது குறித்த உணர்வுடையவராக இருந்தார் என்பதையே பகுத்தறிவு பற்றின அவரது மாற்றுக் கருத்துக்கள் சுட்டுகின்றன. எல்லாப் பிரச்சினைகளுக்கும் எல்லா மக்களுக்கும் எல்லாக் காலத்திற்குமான முரணற்ற தீர்வாக (Meta Narrative) அவர் பகுத்தறிவு உட்பட எதையும் முன்வைக்க விரும்பாததையே இது காட்டுகிறது. முற்றுண்மையான (Absoluts) வரையறைகளை உருவாக்குதல், முழுமையான கோட்பாட்டுருவாக்கங்களைச் செய்தல் என்பதற்கு அவர் தொடர்ச்சியாக எதிராகவே இருந்தார் என்பதும் இங்கே குறிப்பிடத்தக்கது. ஒழுக்கம் பற்றிய அவரது சொல்லாடலிலும் இதனைக் காண முடியும்.

கடவுளரின் ஒழுக்கக் கேடுகளை அவர் கண்டித்துள்ள விவரங்களை நாம் அறிவோம். "நம்மிடத்தில் ஒழுக்கம் இருக்க வேண்டும்" (பக். 1085). "ஒழுக்கக் கேட்டை களைந்தே ஆக வேண்டும்" (பக். 1087) எனவும் குறிப்பிடும் அவரே இன்னொரு பக்கம் பெண்களை நோக்கி ஆசை நாயகர்களை வைத்துக்

www.tamilarangam.net

கொள்ளுங்கள் (பக். 108) என்கிறார். மேலும்,

*உலகில் கற்பு, காதல் என்பன போன்ற வார்த்தைகள் எப்படிப் பெண்களை அடிமைப்படுத்தி அடக்கி ஆளவென்று ஏற்படுத்திப் பயன்படுத்தப்பட்டு வருகின்றனவோ, அது போலவேதான் ஒழுக்கம் என்னும் வார்த்தையும் - எளியோரையும் பாமர மக்களையும் ஏமாற்றி மற்றவர்கள் வாழப் பயன்படுத்தி வரும் ஒரு சூழ்ச்சி ஆயுதமேயல்லாமல், அதில் உண்மையோ சத்தோ ஒன்றுமே கிடையாது. கற்பு, காதல், சத்தியம், நீதி, ஒழுக்கம் என்பன எல்லாம் ஒரே தாயின் பிள்ளைகள். அதாவது, குழந்தைகளைப் பயமுறுத்தப் பெரியவர்கள், பூச்சாண்டி, பூச்சாண்டி என்பதுபோல் இவை எளியோரையும் பாமர மக்களையும் வலுத்தவர்களும் தந்திரக்காரர்களும் ஏமாற்றச் செய்த ஒரு பெரும் சூழ்ச்சியே ஆகும். (பக். 1081, 1082)*

என ஒழுக்கம் என்பதை ஒரு சூழ்ச்சியான கற்பிதமாகக் கண்டிக்கிறார். ஒழுக்கம் என்பது எவ்வாறு வெவ்வேறு மனிதர்களுக்கு வெவ்வேறு விதமாய்க் கட்டமைக்கப்படுகிறது என்பதை விரிவாக விளக்குகிறார்.

*தாசிக்கு ஒழுக்கம் - ஒரு புருஷனையே நம்பி ஒருவனிடத்திலேயே காதலாய் இருக்கக் கூடாது என்பதாகும். குல ஸ்திரி என்பவளுக்கு ஒழுக்கம் அயோக்கியனானாலும் குஷ்டரோகியானாலும் அவனைத் தவிர வேறு ஒருவனை மனத்தில் கூடச் சிந்திக்கக் கூடாது என்பதாகும். இது போலவே முதலாளிக்கு ஒழுக்கம் எப்படி வேண்டுமானாலும் யாரையும் ஏமாற்றலாம் என்பதாகும். தொழிலாளிக்கு ஒழுக்கம் ஒரு வினாடி நேரம் கூட வேலை செய்யாமல் முதலாளிக்குத் துரோகம் செய்யலாகாது என்பதாகும். இந்துவுக்கு ஒழுக்கம் பசுவை இரட்சிக்க வேண்டியதாகும். முஸ்லிமுக்கு ஒழுக்கம் பசுவைப் புசிக்கலாம் என்பதாகும். (பக். 1081)*

எனச் சொல்லும் பெரியார்,

*இதனால் சுயநலத்தையே பிரதானமாகக் கருதி கற்பித்துக் கொண்ட ஒழுக்கங்களை உடைத்தெறிவது சுயமரியாதைக்காரர்கள் கடமை என்பது விளங்கும். (பக். 1081)*

என ஒழுக்கத்தைக் கற்பிதமாகச் சொல்வது கவனிக்கத் தக்கது. எனில் "மனிதனுக்கு ஒழுக்கத்தைப் பரப்ப வேண்டும்" (பக். 1084) என அவர் கூறுவதன் பொருளென்ன ?

ஒழுக்கம் x பக்தி என்றொரு இருமையைச் சுட்டிக்காட்டி "ஒழுக்கம் பக்தியைவிட முதன்மையானது" (பக். 1085) என்று சொல்லும் பெரியார், அதனை கற்பு முதலியவற்றுடன் இணைத்துப் பேசவில்லை. உடல் சார்ந்த இச்சைகளை அவர் ஒழுக்கக் கேடு எனச் சொல்லவில்லை. மாறாக "உணர்ச்சியும் இந்திரியச் செயலும் ஆசையும் ஜீவ சுவாபம்" என்பதோடு "பசி, நித்திரை, புணர்ச்சி மூன்றும் முக்கிய இயற்கை அனுபவம்" (பக். 173) என்கிறார்.

xiv

www.tamilarangam.net

*ஒருவன், மற்றவன் தன்னிடம் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று விரும்புகிறானோ அதைப்போன்றே அவனும் மற்றவனிடம் நடந்து கொள்வதுதான் ஒழுக்கமாகும். (பக். 1084)*

என்பதே அவரது ஒழுக்கம் பற்றிய வரையறையாகும். ஏதொன்றையும் சுட்டிக்காட்டி அல்லது அதைச் செய்யாதே, இதைச்செய்யாதே என எதிர்மறையாகச் சொல்லாமல் பல்வேறு விதமான தூலமான சாத்தியங்களுக்கும் இடமளிப்பதாக இவ்வரையறை அமைந்திருப்பது கவனிக்கத்தக்கது. வேறு வார்த்தைகளில் சொல்வதானால் வரையறை குறித்த வரையறைகளை அவர் மீறுகிறார்.

இப்படிப் பல்வேறு அம்சங்களில் பெரியார் நவீன சிந்தனைகளுக்கு இணையாக நிற்பது குறிப்பிடத்தக்கது. பிள்ளைப் பேற்றிலிருந்து தப்பித்துக்கொள்வதே பெணவிடுதலைக்கான வழி என்பதையெல்லாம் (பக். 106) 1928 வாக்கிலேயே முன்மொழிந்திருப்பது வியப்பிற்குரிய ஒன்று. 1960களுக்குப் பின் அலதுஸ்ஸர் போன்ற சிந்தனையாளர்கள், மாக்சிய இயங்கியலாக உலகெங்கிலும் அறியப்பட்டிருந்த சிந்தனைத் தொகுப்பிலுள்ள சாராம்சவாதம், மொத்தத்துவம் முதலிய ஹெகலியக் கூறுகளை, கறைகளைத் துடைத்தெறிய வேண்டுமெனக்கூறி மார்க்சியத்தை மறுவாசிப்பிற்குள்ளாக்கியுள்ளார். தத்துவார்த்தரீதியான மொத்தத்துவப் போக்குகள் அரசியல் ரீதியான எதேச்சாதிகாரங்களுக்கே வழி வகுக்கும் என்பதை வரலாறும் நமக்கு நிறுவிவிட்டது. இந்தச் சூழலில் ஹெகலியத் தாக்கமுடைய சாராம்சவாத, மொத்தத்துவக் கோட்பாடுகளையும் அளவுகோல்களையும் கொண்டு பெரியாரின் பார்வைகளை கொச்சைப் பொருள்முதல்வாதம் என்றெல்லாம் சொல்வதன் பொருத்தமின்மையையும் ஆபத்தையும் தோழர்கள் யோசிக்க வேண்டும். தவிரவும் பெரியார் ரொம்பவும் நாசூக்கான தத்துவவாதி (Sophisticated Philosopher) அல்ல. படிப்பாளிகளை நோக்கி அவர் எழுதிக் கொண்டிருந்தவரல்ல. தினந்தோறும் அதிகக் கல்வியறிவற்ற பல்லாயிரக்கணக்கான ஒடுக்கப்பட்ட பிரிவினரை நோக்கி பேசிக் கொண்டிருந்த கச்சாவான சிந்தனையாளர். அவர் எழுதியவை ஆய்வேடுகள் (Theatre) அல்ல. பிரச்சார வெளியீடுகள். ஒரு மிக நீண்ட காலகட்டத்தில் (சுமார் அரை நூற்றாண்டு) பல்வேறு சூழல்களில் பல்வேறு மக்கள் திரள்களை நோக்கி உரையாடியவர் அவர். அவர் பேச்சனைத்தையும் உரையாடல்களின் அங்கமாகவே நாம் பார்க்க வேண்டும். அவருக்கு எதிராக எழுப்பப்பட்ட கேள்விகள், அவருடைய பேச்சுகளுக்கு வந்த எதிர்வினைகள், அரசியல் களங்களில் ஏற்பட்ட விளைவுகள் எல்லாவற்றையும் சகபிரதிகளாகக் கொண்டுதான் அவரது பிரதிகளை மதிப்பிட வேண்டியிருக்கிறது.

வாழ்ந்த காலத்தில் மட்டுமல்ல இறந்த பின்னும் பல்வேறு விதமான அவதூறுகளுக்கும் தாக்குதல்களுக்கும் ஆளாகி வருபவர் பெரியார். பார்ப்பனியமும் இந்துத்துவமும் உயிர் பெற்று வரும் சூழல்

www.tamilarangam.net

இது. சமீபத்தில் பெரியாரின் மீது கடுமையான அவதூறுகளைப் பொழிந்துள்ள வெளியீடு குணாவால் எழுதப்பட்டுள்ள திராவிடத்தால் வீழ்ந்தோம் என்பது. தனித் தமிழநாட்டு இயக்கங்கள் பலவும் இந்நூற கருத்துக்களை நேரடியாகவோ மறைமுகமாகவோ வரவேற்பது குறிப்பிடத் தக்கது. கன்னடத்தைத் தாய்மொழியாகக் கொண்ட பெரியார் திட்டமிட்டு தமிழுணர்வை மழுங்கடிக்கும் சதி நோக்குடன் திராவிடக் கருத்தாக்கத்தை முன்மொழிந்து அரை நூற்றாண்டு தமிழ் எழுச்சியைத் தடுத்தார் என இந்நூலில் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. பெரியார் எதிரிகளிடம் கையூட்டுப் பெற்றார் என்பன போன்ற ஆதாரமற்ற குற்றச்சாட்டுகள், இடங்கை - வலங்கை போராட்டங்கள், களப்பிரர் ஆட்சி போனறவை குறித்த திட்டமிட்ட வரலாற்றுத் திரித்தங்கள் போன்றவற்றுடன் வெளிவந்துள்ள குணாவின் அபத்தங்களை விரிவாக மறுத்துரைக்க இது ஏற்ற சந்தர்ப்பமன்று. ஒன்றைமட்டும் இங்கே சுட்டிக்காட்டுவது உசிதம். திராவிடர் என்கிற கற்பிதத்தை ஏன் தேர்வு செய்ய வேண்டிவந்தது என்பதைப் பெரியாரே பல சந்தர்ப்பங்களில் விளக்கியுள்ளார். சாதி ஒழிப்பே தன்னுடைய பணி எனச் சொல்லிக் கொண்ட பெரியார் (பக். 1012) அதற்குரிய சுயமரியாதை உணர்விற்குத் தடையாக உள்ள பார்ப்பனீயத்தை எதிர்த்து நிற்றலை முதன்மையாகக் கொள்ள வேண்டியதாயிற்று. பார்ப்பனீயத்தைத் தவிர்த்த தன்னிலைத் திரளொன்றை உருவாக்குவதற்கு அவர் திராவிடக் கற்பிதத்தைச் சார்ந்து நிற்றல் அவசியமாயிற்று. தமிழன் என்று சொன்னால் பார்ப்பானும் வந்து சேர்ந்து கொள்வானே என அவர் குறிப்பிட்டார். பார்ப்பான் தன்னை திராவிடன் எனச் சொல்லிக் கொள்ள மாட்டானல்லவா என வினவினார். (பக். 245) பார்ப்பனர்கள் ஆரிய சமாஜம், பிராமண மகாசபை என்றெல்லாம் இணைகிறார்கள். அதற்காக நாம் "சூத்திரர் கழகம்" என அவன் வைத்த இழிவுப் பெயரையே சூட்டிக் கொள்ள முடியுமா, அதனால்தான் 'திராவிடர் கழகம்' ஆனோம் என விளக்கமளித்தார் (பக். 85). மற்றபடி அவர் 'திராவிடர்' என்ற சொல்லின் மூலம் பார்ப்பனரல்லாத தமிழரையே மனங்கொண்டார் என்பதற்கு அவரது பிரதிகளில் ஏராளமான ஆதாரங்களைச் சுட்டமுடியும். 'நாம் தமிழர்கள்' (பக். 206) 'நம் நாடு தமிழ்நாடு' (பக். 679) என்றெல்லாம் கூறியுள்ளார். 'சாதி ஒழிப்புக்கு ஒரே வழி நாட்டுப் பிரிவினைதான்' என்று கூறிய அவர் அந்த நோக்கில் வைத்த முழக்கம் முதலில் (1938) "தமிழ்நாடு தமிழருக்கே" என்பதுதான். அதற்குப் பின்னரே (1939) அவர் நாம் மேற்குறிப்பிட்ட காரணங்களை முன்னிட்டு "திராவிடநாடு திராவிடருக்கே" என முழக்கத்தை மாற்றினார். சுயமரியாதை (கட்சி), குடியரசு(இதழ்) போன்ற பெயர்களையே பயன்படுத்தி வந்தார். 1944ல் "பச்சைத் தமிழரான" அண்ணாவின் முயற்சியிலேயே கட்சிக்குத் 'திராவிடர் கழகம்' எனப் பெயர் மாற்றப்பட்டது. அதற்கான தீர்மானத்தின் பெயரே அண்ணாத்துரை தீர்மானம் என்பது தான.

www.tamilarangam.net

திராவிடப் பகுதிகளை ஒன்றிணைத்து 'தட்சிணப் பிரதேசம்' என நேரு அரசு அமைக்க முற்பட்ட போது 'தமிழராகிய நமக்குத்தான் அது ஆபத்து' (பக். 729, 730) என அதனை எதிர்த்து நிறுத்தினார். ஆந்திரப் பிரிவினைக்குப் பிறகு "கர்நாடகமும் கேரளமும் சீக்கிரம் ஒழியட்டும்" என்றார் (பக். 730). அவை எல்லாம் பிரிந்த பின்னர் மீண்டும் "தமிழ்நாடு தமிழருக்கே" (1957) என்கிற கோரிக்கையை முன்வைக்கத் தொடங்கினார்.

பெரியார் மீது வைக்கப்டும் விமர்சனங்களில் இன்னொன்று தலித் பிரச்சனையில் பெரியார் போதிய அக்கறை காட்டவில்லை என்பது. இது குறித்து இத்தொகுப்பிலுள்ள கூட்டு விவாதத்தில் பலரும் கருத்துத் தெரிவித்துள்ளதை வாசகர்கள் காணலாம். ஒன்றை நாம் தெளிவாக்கிக் கொள்வது அவசியம். தலித் விடுதலைக்கான திட்டங்களை முன்மொழிந்தவர் என்றோ அதனைச் செயலாக்கியவர் என்றோ அவரை நாம் கருத வேண்டியதில்லை. அவரும் அத்தகைய தகுதியை எந்நாளும் கோரியதில்லை. தன்னை ஒரு சூத்திரனாகவே அடையாளப்படுத்திக் கொண்டார். (பக்.1030). தாழ்த்தப்பட்டோர்களையும் பெண்களையும் நோக்கி விளிக்கம் போதெல்லாம் 'நீங்கள்' என்றே விளித்தார். எனினும் டாக்டர் அம்பேத்கர் உள்ளிட்ட தலித் விடுதலைப் போராளிகளின் சகல

XVII

முயற்சிகளுக்கும் முழுமையான ஆதரவாளராகவே எந்நாளும் விளங்கினார். அம்பேத்கரின் மத மாற்றத்தை ஆதரித்து, பூனா ஒப்பந்தத்தை எதிர்த்தது என எண்ணற்ற எடுத்துக்காட்டுக்களைச் சொல்ல முடியும்.

பறையர் பட்டம் போகாமல் சூத்திரர் பட்டம் போகாது என்பதை எடுத்துரைத்த பெரியார் (பக். 57), பிற்படுத்தப்பட்டவர்கள் இழிவாக நடத்தும்போது அதைத் தாழ்த்தப்பட்டவர்கள் எதிர்த்து நிற்கவேண்டும், சாத்தியமில்லாவிட்டால் ஊரைப் புறக்கணித்து வெளியேற வேண்டும் என்றார் (பக். 58) நீதிக்கட்சி மாநாட்டில் தலைமையேற்றுப் பேசும்போது (1940)

*எப்படி ஆரிய மக்களுக்குத் திராவிட மக்கள் தீண்டப்படாதவர்களாக இருக்கிறார்களோ, அப்படி திராவிடர்களுக்கு ஆதி திராவிடர்கள் - அதைவிட மேம்பட்ட தீண்டப்படாதவர்களாய் - இருக்கிறார்கள். இந்த நிலைமை திராவிட சமுதாயத்துக்கே ஒரு பெரும் மானக் கேடான நிலைமையாகும். என்பதோடு திராவிடர்களை ஆரியர்கள் தீண்டப்படாத மக்களென்று வகுத்திருப்பதையும் நடத்துவதையும் அரண் செய்கிறது. ஆகையால் 'ஆதிதிராவிடர்' என்கிற பெயரே மாற்றப்பட்டு, இருவரும் திராவிடர்கள் அல்லது தமிழர்கள் என்கிற பெயராலேயே வழங்கப்பட வேண்டும் என்பதும், திராவிடருக்கும் ஆதி திராவிடருக்கும் சமுதாயத் துறையிலுள்ள எல்லா வித்தியாசங்களும் பேதங்களும் ஒழிந்து, ஒரே சமூகமாக ஆகவேண்டும் என்பதும் எனது ஆசை. இந்த இரு நோக்கங்களையும் ஜஸ்டிஸ் கட்சியின் நோக்கங்களில் பட்டதென்பது எனது அபிப்பிராயமாதலால் கட்சியின் பேரால் இவைகளைச் சொல்லுகிறேன் (பக். 74).*

www.tamilarangam.net

என்றார். இந்த நோக்கம் ஜஸ்டிஸ் கட்சி, திராவிடர் கழகம், திராவிட முன்னேற்றக்கழகம் என்கிற பாரம்பரியத்தில் திரண்ட பிற்படுத்தப்பட்ட மக்கள் திரளின் அபிப்ராயங்களுடன் எந்த அளவிற்கு இணைந்தது என்பது வேறு கதை. பார்ப்பனீயத்திற்கெதிராக சூத்திரமக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதும் ஒரு மிக முக்கியமான சனநாயகப் பணி என்கிற வகையில் பெரியாரின் பங்களிப்பை நாம் மதிப்பீடு செய்ய வேண்டியவர்களாக இருக்கிறோம். தவிரவும் அம்பேத்கர் அவர்கள் சாதி ஒழிப்பின்றி தீண்டாமை ஒழிப்பு சாத்தியமில்லை எனச் சொல்லியுள்ளதுடன் பெரியாரின் சாதி ஒழிப்புப் பணியை இணைத்துப் பார்க்க வேண்டுவதும் அவசியம். முதுகுளத்தூர் கலவரத்தின்போது முத்துராமலிங்கத் தேவர் கைது செய்யப்பட்டதை ஆதரித்த ஒரே அரசியல் தலைவராக பெரியார் மட்டுமே இருந்தார் என்பதும் இங்கே கருதத் தக்கது.

பெரியார் ஒரு வெறும் இட ஒதுக்கீட்டுப் போராளியாகவும் மேலோட்டமான பார்ப்பன எதிர்ப்பாளராகவும் மட்டுமே அவரை ஆதரிப்பவர்களாலும்எதிர்ப்பவர்களாலும் முன்னிலைப் படுத்தப்பட்டுக் கொண்டிருந்த ஒரு சூழலில் அவரை நமது கலாச்சாரத்தின் சகல கூறுகளிலும் புரையோடியிருந்த பார்ப்பனீயக் கூறுகளைக் களைய முற்பட்ட எதிர்கலாச்சார வாதியாக முன்னிலைப்படுத்திய பணியை நிறப்பிரிகை கடந்த நான்கைந்து ஆண்டுகளாகச் செய்து வந்துள்ளமைக்குச் சான்றாக இத்தொகுப்பு விளங்குகிறது. அந்த வகையில் இந்தத் தொகுப்பிலுள்ள நண்பர் ராஜன் குறையின் கட்டுரை முக்கியத்துவன் வாய்ந்தது. பெரியார் குறித்து தமிழில் வந்துள்ள மிகச் சிறந்த கட்டுரைகளில் இதுவும் ஒன்று. பலராலும் கடுமையாக விமர்சிக்கப்படுகிற பெரியாரின் மொழி பற்றிய கருத்துக்கள் எவ்வாறு நவீன சிந்தனைகளுடன் பொருந்தி வருகிறது என்பதையும் தமிழின் காட்டுமிராண்டித் தனத்தைக் கண்டிக்கும் அவர் குரல் எவ்வாறு பார்ப்பனீயக் கறை நீக்கல் முயற்சியின் வெளிப்பாடாக விளங்குகிறது என்பதையும் இத்தொகுப்பிலுள்ள மொழி பற்றிய கட்டுரைஆய்வுக்கு எடுத்துக்கொள்கிறது. வழக்கம்போல் கூட்டுக் கட்டுரை பல்வேறு எதிர் எதிரான கருத்துக்களும் மோதும் விரிவான களமாக அமைகின்றது. தமிழ்க் கருத்தியற் களத்தில் செயல்படும் பலரும் இதில் கலந்து கொண்டு பங்களிப்புச் செய்திருப்பது குறிப்பிடத்தக்கது. பெரியாரைத் தொடர்ந்து விமர்சித்து வரும் முனைவர் கேசவனின் கட்டுரை பெரியார் குறித்த ஒரு மாற்றுக் கருத்தாக இத்தொகுப்பினுள் விளங்குகிறது.

தமிழ்ச் சூழலில் செயற்பட்ட எதிர்க் கலாச்சாரச் சிந்தனையாளர் பெரியார். தேசீயம், மொழிப்பற்று, ஒழுக்கம் முதலியனவெல்லாம் வெறும் கற்பிதங்களே என்பன போன்ற நவீன கருத்துக்களையும், பெண்ணியம் தொடர்பான புரட்சிகரமான சிந்தனைகளையும் முன்

www.tamilarangam.net

மொழிந்தவர். சூத்திரர்கள், தாழ்த்தப்பட்டவர்கள் பெண்கள் ஆகிய தமிழகத்தின் ஒடுக்கப்பட்ட பிரிவினரின் அடிமைத் தன்னிலைகளைத் தகர்க்கும் நோக்கில் சிந்தனைத் தளத்திலும் செயற் தளத்திலும் நீண்ட காலம் பணியாற்றியவர் அவர். அவரது சிந்தனைகளை விமர்சனங்களுக்கு அப்பாற்பட்ட ஒன்றாகவோ எல்லாக் காலங்களுக்கும் எல்லா மக்களுக்குமான விடிவைச் சொல்லும் பெருங்கதையாடலாகவோ முன் வைப்பது எங்கள் நோக்கமல்ல. "பெரியாரியம்" என்கிற தலைப்பு அத்தகைய பொருளைச் சுட்ட வல்லது என்பதை உணர்கிறோம். வேறு பெயரில் இந்தத் தொகுப்பைக் கொண்டு வந்திருக்கலாம் என்பதையும் ஏற்றுக் கொள்கிறோம். இதே பெயரில் கூட்டுவிவாதம் முதலியன நேரிட்டு விட்டது. பெரியார் பிரதிகள் மீதான இத்தகைய ஆய்விற்கு இதனை ஒரு தொடக்கப் புள்ளியாகவே கருத வேண்டும்.

பெரியார் மீதான இந்தக் கருத்துத் தொகுப்பில் கலந்து கொண்டு பங்களித்துள்ள எல்லோருக்கும் எங்கள் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம். இதனை அழுகுற கணிப்பொறியில் அச்சமைத்துக் கொடுத்த நண்பர் கவிஞர் 'ரவிபாலமோகன்' அவர்களுக்கும் நிறப்பிரிகை கட்டுரைத் தொகுப்பின் நான்காவது தொகுதியாக இதனை வெளியிடும் விடியல் சிவா அவர்களுக்கும் எங்கள் நன்றிகள் உரித்தாகின்றன.



தஞ்சாவூர்

டிசம்பர் 1995

அ. மார்க்ஸ்

பொ. வேல்சாமி

ரவிக்குமார்

*குறிப்பு : தொகுப்புரையில் காணப்படும் மேற்கோள்கள் யாவும் திரு. வே. ஆனைமுத்து அவர்களின் பெரியார் சிந்தனைகள் தொகுப்பிலிருந்து எடுக்கப்பட்டுள்ளன. பக்க எண்கள் அதனையே சுட்டுகின்றன.*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பெரியாரியம்

நான் ஒரு சுதந்திர மனிதன்; எனக்கு சுதந்திர நினைப்பு, சுதந்திர அனுபவம், சுதந்திர உணர்ச்சி உண்டு. அதை உங்கள்முன் சமர்ப்பிக்கிறேன். நீங்கள் என்னைப் போலவே உங்களது சுதந்திர நினைப்பு, அனுபவம், உணர்ச்சி ஆகியவைகளால் பரிசீலனை செய்து, ஒப்பக்கூடியவைகளை ஒப்பி, தள்ளக்கூடியவைகளைத் தள்ளிவிடுங்கள் என்கின்ற நிபந்தனையின் பேரிலேதான் எதையும் தெரிவிக்கிறேன். எப்படிப்பட்ட பழமை விரும்பிகளானாலும் இதற்கு இடம் கொடுக்கவில்லையென்றால் அது நியாயமும் ஒழுங்குமாகாது.

– பெரியார்

(திருப்பூரில் சொற்பொழிவு, "புரட்சி" –17.12.1933)

www.tamilarangam.net

# பெரியாரியம்

# - தத்துவத்தை அடையாளப்படுத்தலும், நடைபெற வேண்டிய விவாதமும்

# - *ஆய்விற்கான முன்வரைவுகள்*

*முன்னுரையாகச் சில முக்கியமான குறிப்புகள் :*

இக் கட்டுரை ஆய்வு நடந்தபின் எழுதப்படுவதல்ல –ஆய்விற்கான தயாரிப்பாக எழுதப்படுவது. இதில் கூறப்படும் கருத்துக்கள் ஆய்வின் முடிவுகள் (Findings) அல்ல –ஆய்விற்கான முன் அனுமானங்கள் (Hypothesis.

பெரியாரின் ஐம்பதாண்டுகால இயக்கத்தின் களம் மிக விரிவானது. அவருடைய உச்சரிப்புக்கள் அன்றாடம் தலையங்கங்களாக, கூட்டங்களில் அவர் ஆற்றிய உரையின் பதிவுகளாக, சிறு பிரசுரங்களாக வெளியானவை. இவற்றிற்கான எதிர்வினைகளும் பல்வேறு தரப்புகளிலிருந்தும் ஏராளமாகப் பதிவாகியுள்ளவை. இவைமட்டுமன்றி அக் காலகட்டத்தின் பதிவுகள் அனைத்தையும் நுட்பமாகவும்,

## *ராஜன்குறை*



விரிவாகவும் ஆய்வு செய்வதன் மூலமாகவே பெரியாரியம் என நாம் செய்யக்கூடிய வரையறை முற்றிலும் சரியானதா? பெரியாரின் இயக்கம் அவ் வரையறைக்குப் பொருந்துமாறு முற்றிலும் இருந்ததா? பெரியாரியம் அனைத்து மக்களின் விடுதலைக்கு அன்று எவ்வளவு தூரம் உதவக்கூடியதாக இருந்தது? இன்று எவ்வளவு பயனுள்ளதாக இருக்கும்? போன்ற கேள்விகளுக்கு உறுதியான விடைகளைப் பெறமுடியும். ஆயின் அத்தகைய விரிவான ஆய்வை உடனடியாக மேற்கொள்ளும் சாத்தியம் இல்லாததால் பெரியாரின் உச்சரிப்புகளையும், இயக்கத்தையும் ஓரளவு பரிசீலித்து சிந்தித்துப் பார்த்ததில் உருவாகிய சில முன் அனுமானங்களை மிதக்க விடுவதன்மூலம் ஆய்வினை ஒரு கூட்டுச் செயல்பாடாக மாற்ற இக் கட்டுரை விழைகிறது. பல்வேறு இயக்கங்களைச் சார்ந்த, இயக்கம் சாராத சிந்தனையாளர்கள் பெரியார் பற்றிய அவர்களது சேகரிப்புகளையும், கணிப்புகளையும் வெளியிட இக் கட்டுரை தூண்டுதலாக அமைய முனைகிறது.

இக் கட்டுரையில் தரப்படும் பெரியாரின் மேற்கோள்கள் எதையும் நிரூபிப்பதற்காகத் தரப்படுவதல்ல. முன் அனுமானங்களுக்கான தூண்டுதல்களே அவை. எனவே அந்த அனுமானங்களை மறுக்க விரும்புபவர்கள் பதட்டமின்றி, நிதானமாக ஆய்வு நோக்கிலும், விவாதபூர்வமாகவும் கருத்துக்கள் வைக்கலாம். ஆய்வின் போக்கிலும் விவாதங்களினூடாகவும் அனுமானங்கள் உறுதிப்படலாம், மாற்றமடையலாம் அல்லது கைவிடப்படலாம்.

www.tamilarangam.net

## பெரியாரியம் – வரையறையும் விளக்கமும் :

**வரையறை :**

1. சாதிப் படிநிலை அமைப்பை தகர்ப்பதே, சாதி ஒழிப்பே இந்திய சமூகத்தின் உடனடியாக மேற்கொள்ளவேண்டிய பிரதான அரசியல் நடவடிக்கை.

2. சாதிப் படிநிலை அமைப்பை கருத்தியல் ரீதியாகப் பல முனைகளிலும் தாக்குவதும், பொதுக் கருத்தியலாக நிலைநிற்கும்



சாதீயக் கருத்தியலை வெகுஜனச் சொல்லாடல் களத்திலேயே முறியடிப்பதும் சாதி ஒழிப்பிற்கான செயல்முறை. இதற்கு முனைப்புத் தரும்படியாக அமையக்கூடியவை குறியீட்டழிப்புப் போராட்டங்கள்.

3. சாதீயப் படிநிலை அமைப்பின் மேலடுக்கு மட்டுமல்ல பார்ப்பன சாதி என்பது. அதற்கான சட்டகம் (Frame), பார்ப்பனனின் இருப்பே, பார்ப்பனியத்தின் இருப்பிற்கான பொருளியல் அடிப்படை.

4. பார்ப்பனனைத் தனிமைப்படுத்துவது, பார்ப்பன விலக்கம் ஆகிய முதற்கட்ட நடவடிக்கையில் வெகுஜன ஈடுபாட்டின் மூலமே சாதீய சட்டகத்தைக் குலைப்பது மட்டுமன்றி, சாதீயத்தை வெகுஜன சொல்லாடல் களத்தில் சுலபமாக ஒழிக்க முடியும்.

*(இங்கு பயன்படுத்தப்படும் சொற்றொடர்கள் பெரியாரால் பயன்படுத்தப்படாதவையாக இருக்கலாம். ஆனால் சமகால அரசியல் சிந்தனைகளுடன் பரிச்சயம் கொண்ட நாம் இச் சொற்றொடர்கள் மூலமாகவே அவர் சிந்தனைகளை அடையாளப்படுத்த இயலும். இதற்கான அடிப்படை அவருடைய சொற்களிலேயே இருப்பது அவரை வாசிப்பவர்களுக்குப் புலப்படும்.)*

www.tamilarangam.net

**விளக்கம் :**

**1. சாதிப் படிநிலை தகர்ப்பே, சாதி ஒழிப்பே உடனடி அரசியல் நடவடிக்கை :**

சாதிப் படிநிலையைத் தகர்க்க சாதிச் சமத்துவத்தை ஏற்படுத்தும் வகையில் வகுப்புவாரி உரிமைகள், இட ஒதுக்கீடு ஆகியவற்றைக் கோருவது, சாதி ஒழிப்பிற்காக கடுமையான பிரச்சாரத்தை மேற்கொள்வது ஆகியவை பெரியார் தொடர்ந்து வலியுறுத்திய நடைமுறைகள். இந்திய சமூகத்தை இவ் வகையில் ஜனநாயகப் படுத்திய பிறகே பிற வேலைகளை மேற்கொள்வது பொருத்தம் என்பதைத் தெளிவாக உணர்ந்தும், வெளிப்படுத்தியுமிருக்கிறார். டாக்டர் அம்பேத்கர் அவர்க்ளும் இதே கருத்தினை அவருக்கேயுரிய வழிகளில் வெளிப்படுத்தியுள்ளார். டாக்டர் அம்பேத்கரின் கூற்றுக் களை முன்வைத்து சாதி ஒழிப்பை ஜனநாயகப் புரட்சி என்ற கோணத்தில் விளக்கி அ.மார்க்ஸ் சமீபத்தில் மக்கள் கல்வி இயக்கம் வெளியிட்ட டாக்டர் அம்பேத்கரின் போர்க்குரல் என்ற பிரசுரத்தில் எழுதியுள்ளது இவ் விசயத்தில் தெளிவைத் தரும்.

3

## *'நிறப்பிரிகை'*

இந்தியத் தன்னிலை என்பது, சாதீயத் தன்னிலையாகவே உள்ளது. அதாவது ஒரு மனித உயிரியின் கல்வி, தொழில், உணவு, உடை, மணமுறை – இன்னும் சொன்னால் அதன் அசைவுக்ள், நடவடிக்கைகள் – அனைத்துமே சாதியால் நிர்ணயிக்கப்பட்டதாகவே இருக்கின்றன.

இவ்வாறாக தேர்வுகளற்ற, நிர்ணயிக்கப்பட்ட வாழ்வில், சமூகத் தளத்தில் இயக்கம் முற்றிலும் குறுக்கப்பட்டுள்ள நிலையில் சுதந்திரம், ஜனநாயகம் போன்ற விசயங்கள் சாதி உயிரிக்கு முற்றிலும் அந்நியமானவையே. சமத்துவம் என்ற பேச்சிற்கே இடமில்லை. மிகக் கொடூரமான கட்டுறுதியுடைய சமூக ஒழுங்கமைப்பு சாதீயத்தால் நிலைபெற்றிருப்பதை பல்வேறு சிந்தனையாளர்களும், ஆய்வாளர்களும் சுட்டிக்காட்டியுள்ளனர். அதிகாரம் என்பது அரசிடம் மட்டும் குவிந்திருப்பதல்ல; பல்வேறு மட்டங்களில் சமூக, மனித உறவுகளில் விரவியிருப்பது என்பன போன்ற சிந்தனைகளைப் பார்க்கும்போது ஒரு குறிப்பிட்ட சாதிச் சமூகமென்பது அதி–நிர்வாக, அதி–அரசாங்க (Super-bueracratic, Super-Governmental Structures) அமைப்பாக செயல்படுவதாக வும் கணிக்க முடியும். இந்நிலையே சாதீயத்தை நமது பிரதான எதிரியாக்குகிறது.

www.tamilarangam.net

அழிந்து போகட்டும். மதத்தைப் பொசுக்கும்போது வேதமும் பொசுங்கிப் போவதாயிருந்தால் அந்த வேதம் என்பது இப்போதே வெந்துபோகட்டும். வேதத்தை ஓட்டும்போது கடவுளும் ஓடிவிடுவாரென்றால் அந்தக் கடவுள் என்பது இந்த நிமிஷத்திலேயே ஓடிவிடட்டும். அப்பேர்ப்பட்ட கடவுள் நமக்கு வேண்டவே வேண்டாம்.

(திருச்சியில், 29.9.1929 இல் சொற்பொழிவு - ''திராவிடன்'' தினசரி, 5.10.1929)

**2.** சுதந்திரம் அடைந்த நாட்டிலே பார்ப்பனர்கள் ஏன் இருக்கவேண்டும்? சூத்திரர்கள் ஏன் இருக்க வேண்டும்? பஞ்சமர் ஏன்? என்று கேட்டிருக்கிறீர்களா? அப்படிக் கேட்டால் வகுப்புத் துவேஷமா? கூறுகிறார்களே வகுப்புத் துவேஷமென்று!

ஜனவரி 26ம் தேதி முதற்கொண்டு பார்ப்பான் இருக்கக்கூடாது; இருந்தால் ஆறு மாதம் கடுங்காவல் என்று சட்டம் எழுதவேண்டுமா? இன்றும் பார்ப்பான் தன்னைப் பார்ப்பான் என்று பூணூால் போட்டுக் கொண்டிருக்கிறான்!

சாதியை ஒழிக்கத் திட்டம் எழுதுகிறார்களே, சர்க்கார்! இனிமேல் சாதியைக் குறிக்கும் சின்னத்தை ஒழிக்க வேண்டும் என்று கூறவேண்டாமா? அதற்கு ஒரு சட்டம் செய்ய வேண்டுமா? இன்னமும் ஏன் பூணூல் இருக்கிறது?



ஏன் இன்னமும் பூணூலை ஒப்புக்கொள்ள வேண்டும், இந்த சர்க்கார்?

(செங்கற்பட்டில், 5.11.1950 இல் சொற்பொழிவு - ''விடுதலை'', 12.11.1950)

**3.** ஆகவே இந்த ஆட்சி சமத்துவ ஆட்சியல்ல; சுதந்திர ஆட்சியல்ல; ஒரு சுரண்டல் ஆட்சி என்றுதான் நாங்கள் சொல்கிறோம். எங்கள் நாடு எங்களுக்கு வந்துவிடுமேயானால் கட்டாயம் இன்றைய தினம் நாங்கள் சொல்லுகின்ற இந்த உத்தரவைப் போடுவோம். இந்த நாட்டிலே எவனாவது பிராமணன், சூத்திரன், பஞ்சமன் இருந்தால் ஒரு வருடம் ஜெயில் என்று சட்டம் செய்வோம்.

(செங்கற்பட்டில், 5.11.1950 இல் சொற்பொழிவு - ''விடுதலை'', 12.11.1950)

**4.** மார்க்ஸ் நினைத்திருப்பாரா, இந்த நாட்டில் பார்ப்பனர்கள் என்ற சதிகாரர்கள் செய்துவருகிற கொடுமைகளையும், புரிந்து வருகிற ஆதிக்கத்தையும், நடத்துகிற சதித்திட்டங்களையும், மற்றும் இந்த நாட்டின் சொந்த மக்கள் பிறவிச் சூத்திரர்களாக்கப்பட்டு, வேசிமக்களாய்க் கருதப்படுகிற நிலைமையையும் பற்றி? இதற்கு ஏற்ற மதம், சாஸ்திரம், கடவுள் பற்றி? ஆதலாலேயே, அவர் அந்த நாட்டிற்குத் தகுந்த மாதிரி நிலவிவந்த முதலாளித்துவம், அதன் ஆதிக்க முறைகள், அவைகளுக்கு மதம் அளிக்கும் ஆதரவு பற்றிச் சொல்லிப் போனாரே தவிர, இந்த நாட்டைப் பற்றி -பாவம், அவர் என்ன கண்டார் ?

www.tamilarangam.net

ரஷியாவில் என்னை அதிசயமாகக் கேட்டார்களே! ரஷியாவில் ஒரு மாணவன் என்னைப் பார்த்து, ''என்ன, உங்கள் நாட்டிலே மகாராஜாக்கள் இருக்கிறார்களாமே! அதுபோலவே பறையர் இருக்கிறார்களாமே! அவர்களெல்லாம் எப்படி இருப்பார்கள்? '' என்று அதிசயமாகக் கேட்டான். (அதாவது 'மகாராஜா', 'பறையர்' இருக்கிறார்களாமே! என்று) நான் சொன்னேன் - ''அதோடுமட்டுமல்ல பார்ப்பனனும் அதாவது பிராமணன் என்பவனும் எங்கள் நாட்டில் இருக்கிறான்'' என்றேன்.

அவனைப் பற்றியும் சொன்னேன். அதற்கு அவன் ஆச்சரியப்பட்டுப்போய்விட்டான். எதற்கு இதைச் சொல்கிறேன் என்றால், அந்த நாட்டிலே இதைப் பற்றித் தெரியாது. அப்படி இருக்கும்போது அதுதான் 'வேதவாக்கு' 'ஞானசூத்திரம்' என்று சொன்னால், என்ன அர்த்தம்?

(பொன்மலையில், 10.9.1952 இல் சொற்பொழிவு - ''விடுதலை'', 20.9.1952)

**5.** நமது நாடு இன்றைக்கும் சாதி அமைப்பின்கீழ் இருந்துவருகிறது. அதுபோலவே, நமது நாடு இன்றும் மத அமைப்பின் கீழ் இருந்துவருகிறது. அதுபோலவே, நமது நாடு இன்றும் பொருளாதார பேத அமைப்பிலேயே இருந்துவருகிறது.

## 'நிரப்பிரிகை'



இவற்றையெல்லாம்விட மோசம், மிகமிகக் கீழ்த்தரமான மூடநம்பிக்கை அமைப்பிலேயே நம்நாடு இருந்துவருகிறது. இந்த நிலையில், மக்களுக்குப் போதிய கல்வி இல்லாத அமைப்பில், கல்வியிலும் பேத நிலை உள்ள கல்வி அமைப்பில், நமது நாடு இருந்துவருகிறது.

இவ்வளவு பேத நிலை அமைப்பு உள்ள நாட்டில் - ஜனநாயகம் என்றால் இதன் பொருள் என்ன? நாட்டில் ஒரு பெரும் சூதாட்டம் நடந்துவருகிறது. சூதில் வலுத்தவன் ஆட்சியாக நடந்துவருகிறது என்றுதானே கொள்ள வேண்டும்.

(''விடுதலை'' தலையங்கம், 11.3.1957)

**6.** இந்திய நாட்டில், பெரும்பாலும் உலகத்தில் வேறு எங்கும் இல்லாததும், மனிதத் தன்மைக்கும் நியாயத்துக்கும் பகுத்தறிவுக்கும் ஒவ்வாததுமான கொடுமைகள் பல இருந்துவந்தாலும் -அவற்றுள் அவசரமாய்த் தீர்க்கப்பட வேண்டியதும், இந்தியர்கள் காட்டுமிராண்டிகள் அல்லர் என்பதையும் மனிதத் தன்மையும் நாகரிகமும் உடையவுமான சமூகம் எனவும் உலகத்தாரால் மதிக்கப்பட வேண்டியதற்குச் செய்ய வேண்டியதும் மற்றும் உலகத்திலுள்ள பெரும்பான்மையான நாட்டார்களைப் போலவே அன்னிய நாட்டினர்களின்

www.tamilarangam.net

*உதவியின்றித் தங்கள் நாட்டைத் தாங்களே பாதுகாத்துக் கொள்ளவும், ஆட்சி நிர்வாகம் செய்யவும் தகுதியுடையவர்கள் என்று சொல்லிக் கொள்ள வேண்டுமானாலும்– முதலாவதாய்ச் செய்யப்பட -வேண்டிய காரியம் இரண்டு உண்டு என்று உறுதியாய்க் கூறுவோம்.*

*அவைகளில் முதலாவது எதுவென்றால், இந்திய மக்களிலேயே பலகோடி ஜனசங்கியை உள்ள பல சமூகங்களைப் பிறவியிலேயே தீண்டாதவர்கள் என்று கற்பித்து, அவர்களைப் பகுத்தறிவற்ற மிருகங்களிலும் கேவலமாகவும், உணர்ச்சியற்ற பூச்சி புழுக்களிலும் இழிவாகவும் நடத்துவதை ஒழிக்க வேண்டியதாகும். இரண்டாவதானது எதுவென்றால், பொதுவாக இந்தியப் பெண்கள் சமூகத்தையே –அடியோடு, பிறவியில் சுதந்திரத்திற்கு அருகதை யற்றவர்கள் என்றும், ஆண்களுக்கு அடிமையாக இருக்கக் கடவுளாலேயே சிருஷ்டிக்கப்பட்டவர்கள் என்றும் கற்பித்து, அவர்களை– நகரும் பிணங்களாக நடத்துவதை ஒழிக்க வேண்டியதாகும். ஆகவே, மேற்கண்ட இந்த இரண்டு காரியங்களும், எந்தக் காரணத்தை முன்னிட்டும், இந்தியாவில் இனி அரை நிமிடம்கூட இருக்கவிடக் கூடாதவைகளாகும்.*

*("பகுத்தறிவு" - கட்டுரை -1938, இதழ்10, மலர்3)*

பெரியாரின் கூற்றுக்கள் / மேற்கோள்கள்

8

# பெரியாரியம்

## நினைவு கொள்ளப்படும் பெரியார் :

பொதுவாக மக்கள் பரப்பில் பெரியார் குறித்த உடனடி நினைவுகளாக உள்ளவை எவையென்று பார்த்தால் நாத்திகமும், பார்ப்பன, புராண எதிர்ப்பாகவுமே இருக்கின்றன. இவற்றை இங்கு சிறிதளவு பரிசீலிக்க வேண்டும்.

### 1. நாத்திகம் :

தீவிரமாக நாத்திகப் பிரச்சாரம் மேற்கொண்டதில் உலக சரித்திரத்தில் குறிப்பிடத்தக்க இடம் பெரியாருக்கு உண்டு என்று கூறப்படுவது உண்மையே. ஆனால் அவருடைய நாத்திகம், சாதி ஒழிப்பை முன்னிட்டே வலியுறுத்தப்பட்டது என்பதை பலமுறை கூறியுள்ளார். இதன் பொருள் அவர் நாத்திகம் போலித்தனமாது என்பதில்லை. அவர் வாழ்வின் இறுதிநாட்களில் தீவிர நாத்திகப் பிரச்சாரத்துடன் 'அனைத்துச் சாதியினர் அர்ச்சகராதல்' , 'கர்ப்பக்கிரகப் பிரவேசம்' போன்றவற்றிற்கான போராட்டத்தை நடத்தியதை சிந்திக்க வேண்டும். நாத்திகத்தை மட்டும் வலியுறுத்துவதானால் ஆலயம் குறித்த போராட்டம் எதற்கு? சாதீயக் கருத்தியலை, சுரண்டலை கடவுள் நம்பிக்கை காத்து நிற்பதாலேயே அவர் தீவிர நாத்திகப் பிரச்சாரம் மேற்கொண்டதை (இக் கட்டுரையின் மேற்கோள்-1 இல்) காணலாம். இதேபோன்று பல்வேறு சமயங்களில் அவர் தெளிவுபடுத்தியிருப்பதை அவர் உச்சரிப்புக்களைப்

www.tamilarangam.net

படிப்பவர்கள் கவனிக்கலாம். இங்கு பிரச்சினை என்னவெனில், ஒரு சாதி ஒழிப்புப் போராளியை வெறும் நாத்திகப் பிரச்சாரகராகச் சுருக்கிப் பார்க்கும் வரலாற்றுத் தவறைச் செய்யக்கூடாது என்பதுதான். மற்றபடி நவீன மேற்கத்தைய சிந்தனைகளை ஒத்த சிந்தனைப் போக்குகள் அவரிடமிருந்ததற்கான தடயங்கள் அவர் உச்சரிப்புகளிலுள்ளன.

உதாரணமாக அவரது இறுதிச் சொற்பொழிவில் ஆத்திகத்துடனான ஒரு உரையாடல் தன்மையினை அங்கீகரித்துப் பேசுகின்ற பாங்கினை கவனிப்பவர்கள் அவர் முரட்டுத்தனமாகவும், வரட்டுத்தனமாகவும் நாத்திகம் பேசியதாகக் கூறுவது பிழையானது என்பதை உணரலாம். (மேற்கோள்-7)

பெரியாரின் கூற்றுக்கள்/மேற்கோள்கள்

*7. கடவுள் சங்கதியை எடுத்தால் ஒருவனுக்கு ஒருவன் நம்பிக்கைக்காரனும், நம்பிக்கை இல்லாதவனும் - அவனை இவன் முட்டாள் என்றுதான் சொல்லியாகணும்; இவனை அவன் முட்டாள் என்று சொல்லித்தானாகணும். ஆனாலும், நாங்கள் பகுத்தறிவை அடிப்படையாய் வைத்து கடவுள் சங்கதியைப் பேசுகிறதினாலே கொஞ்சம் மரியாதையாகப் பேசுவோம்; மானத்தோடு பேசுவோம். பகுத்தறிவு இல்லாதவர்கள் கொஞ்சம் கடுமையாகத்தான் பேசுவார்கள் - நம்மைவிட மோசமாக.*





*உதாரணமாகச் சொல்லுவேன் : நாலாயிரப் பிரபந்தம் பாடின ஆழ்வார்கள்.... தேவாரம், திருவாசகம் பாடின நாயன்மார்கள்.... இந்தப் பயல்கள் சொன்னதைவிட நாங்கள் அதிகமாய்ச் சொல்லுகிறதில்லை. அதை மனதிலே வைத்துக் கொள்ளுங்கள். நாம் இவனைத்தான் திட்டுகிறோமே தவிர, அந்தப் பயல்கள் சொன்னாற்போல, அவர்கள் பெண்டாட்டி பிள்ளைகளை நாம் ஒன்றும் குறைசொல்லவில்லை. நீங்கள் நினைக்கணும்! "என்னடா, இப்படிச் சொல்லுகிறானே" என்று சிலபேருக்குக் கோபமிருக்கும்.*

*ஆனால் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் பாடியிருக்கிறவன், "கடவுள் இல்லை என்கிறவனை எல்லாம் கொல்ல வேணும்; அதுதான் கடவுள் பக்தனுக்கு அடையாளம்" -அப்படியென்று பாடியிருக்கின்றான். தேவாரம் பாடியவன் "கடவுள் இல்லை என்கிறவன் பெண்டாட்டிக்கிட்டேயெல்லாம் நான் படுக்கணும்; கடவுளே எனக்கு அந்த வசதி பண்ணிக்கொடு!" என்று கேட்டிருக்கிறான். யார் என்று கேட்பீர்கள்; பேர்கூடச் சொல்லுவேன். சம்பந்தர் என்கிற ஒரு பக்தன்! பக்தனாம் அந்த அயோக்கியப் பயல்! அவன் சொல்லியிருக்கிறான், "கடவுள் இல்லை என்கிறவன் பெண்டாட்டிக்கிட்டே யெல்லாம் நான் படுக்கணும்" என்று. கடவுளைக் கேட்கிறான், "இசைத்துவை" என்று!*

*நாலாயிரப் பிரபந்தத்திலே, ஓர் ஆழ்வார் -தொண்டரடிப்பொடி என்கிறவன்- "கடவுள் இல்லை என்கிறவனையெல்லாம் வெட்டு, வெட்டு!" என்கிறான். இது பாட்டிலே நடந்தது. காரியத்திலே எவ்வளவு நடந்திருக்கிறது தெரியுமா?*

*(சென்னை தியாகராய நகர் - 19.12.1973)*

www.tamilarangam.net

**8.** ஆத்திக, நாத்திகத்தைப் பற்றிக் குறிப்பிடுகையில் இது ஒரு பயனற்ற விஷயம் என்றே தெரிகிறது. ஏனெனில் ஆத்திகமும், நாத்திகமும் 100 க்கு 90 பேர்களின் அபிப்பிராயங்கள் பழக்கவழக்கங்களால், பிறர் சொல்லிக் கொடுப்பதால், சேர்க்கையால் ஏற்படுவதே ஒழிய, ஒரு இயற்கை உணர்ச்சி அல்ல. அன்றியும் பசி, தூக்கம், பஞ்சேந்திரிய உணர்ச்சி ஆகியவைகளைப்போல இயற்கையால் ஏற்படும் எண்ணமல்ல. இதைப்பற்றி மனிதன் கவலைப்பட வேண்டியதில்லை. அது இன்று ஒரு ஆராய்ச்சி விஷயமாகி நாகரீக விஷயமாகவும் பேசப்பட்டு வருகிறது. மனிதனுக்கு கட்டும் காவலும் சட்டமும், போலீசுமாகத்தான் இருக்கின்றனவே ஒழிய கடவுளோ, நரகமோ, சாஸ்திரமோ, ஒழுக்கமோ கட்டிக் காப்பாற்றிவிடவில்லை. அனுபவத்தில் எவனும் அவற்றின் மீது எந்த பொறுப்பையும் சுமத்துவதுமில்லை.

ஆதலால், ஆத்திக -நாத்திகம் என்பது ஒரு பயனற்ற பிரச்சினையாகும். மற்றும், அது அவனுடைய சொந்தப் புத்தி, யோசனையைப் பொறுத்ததாகும். ஆதலால் நமது வாழ்வில் ஏற்படவேண்டிய இன்ப துன்பங்களுக்கும், முற்போக்குக்கும், மாறுதலுக்கும் ஆத்திக -நாத்திகத்தைக் கொண்டுவந்து குறுக்கே போட்டுக் கொண்டு யாரும் கஷ்டப்படவேண்டியதில்லை.

நம்மைப் பொறுத்தவரை எந்த அளவில் ஆத்திகத்தில் பிரவேசிக்கின்றோம் என்று நினைப்பீர்களானால் வாழ்க்கையின் நலன்களை கடவுளின் மீது



பொறுப்பேற்றுவதும், கடவுளுக்காகச் செல்வங்களை, மக்களின் வாழ்க்கைக்குரிய பொருள்களை பாழாக்குவதையும் பொறுத்த அளவில்தான் பிரவேசிக்கின்றோம்.

மற்றபடி, எவன் எத்தனை கடவுளை எந்த விதமாக நினைத்துக் கொண்டாலும், வணங்கினாலும், அவற்றோடு பேசினாலும், அதுவாகவே ஆகிவிட்டாலும் நமக்கு அக்கறை இல்லை. உலகத்தைப் பொது என்றும், உலகப்பொருள்கள் போக போக்கியங்கள் யாவருக்கும் சமம் என்றும் மனிதன் எண்ண வேண்டும். இதற்குக் கடவுள் குறுக்கிடாமல் இருந்தால் கடவுளைப் பற்றிய வேலை நமக்கு இல்லை ; அதைப்பற்றிய கவலையும் நமக்கில்லை. ஆகையால், அதை ஒரு பெரிய பிரச்சினையாக வைத்துக் கொண்டு எவரும் கஷ்டப்பட வேண்டியதில்லை.

(புதுக்கோட்டையில், 7. 10.1934 இல் சொற்பொழிவு -''பகுத்தறிவு'' , 14.10.1934)

**9.** ஆனால், பயமும் சந்தேகமும் பேராசையும் பழக்கவழக்களும் மற்றவர்களின் படிப்பினைகளும் சுற்றுப்புறமும் மனிதனுக்குக் கடவுள், மத உணர்ச்சிகளை உண்டாக்கிவிடுகின்றன. அவை எப்படி இருந்தபோதிலும் எங்களுக்குக் கவலை இல்லை. அந்த ஆராய்ச்சியில் நாங்கள் சிறிதும் காலத்தையோ, புத்தியையோ செலவழிப்பதில்லை. ஆனால், மனித சமூகத்திற்குத் தேவையான தொண்டு என்று நாங்கள் கருதி வரும் தொண்டுகளைச் செய்து வரும்போது, மனித சுதந்திர சுகவாழ்வுக்கு பிறவியிலேயே எதிரிகளாகவுள்ள புரோகிதக் கூட்டத்தார்,

www.tamilarangam.net

மதத்தின் பேரால் கடவுள் பேரால் தங்கள் வாழ்க்கையை நிச்சயித்துக் கொண்ட சோம்பேறி மக்கள், எங்கள் தொண்டிற்கு கொள்கைகளுக்குச் சமாதானம் சொல்லி எதிர்த்து நிற்கச் சக்தியற்ற கோழைகள் கடவுளையும் மதத்தையும் பற்றிக் குழப்பமாய்ப் பேசி, அவைகளை குறுக்கே கொண்டுவந்து போட்டு விடுகிறார்கள்.

மனித சமூகத்தில் பிறவியில் உயர்வு தாழ்வு, சாதிபேதம் ஒழிந்து, ஆண்டான் அடிமைத் தன்மை மாறி, ஆணும் பெண்ணும் சகல துறைகளிலும் சம சுதந்திரத்துடன் வாழவேண்டுமென்று நாங்கள் சொன்னால், தீண்டாமையும் சாதிபேதமும் ஒழிந்தால் தமது உயர்வும் தம் பிழைப்பும் கெடும் என்று எண்ணி 'பாடுபடாது வாழ்ந்து' வரும் பார்ப்பனர்கள் மதம், சாஸ்திரம், புராணம் ஆகியவைகளைக் கொண்டு வந்து குறுக்கே போட்டு எங்களை தடைப்படுத்தும்போது அவை எவையாயினும் மனித சமூக ஒற்றுமைக்கும், சமத்துவத்திற்கும், சுதந்திர வாழ்விற்கும் கேடு செய்வதாயிருந்தால் அவற்றைக் கொளுத்தி ஒழிக்க வேண்டுமெனக் கூறுகிறோம்.

*(ஆய்வுக்கவுண்டன் பட்டியில், 23.1.1938 இல் சொற்பொழிவு - ''குடி அரசு'' , 30.1.38)*





**2. பார்ப்பன, புராண எதிர்ப்பு :**

பார்ப்பன எதிர்ப்பையே அவர் சாதி எதிர்ப்பின் முதற்கட்டமாக வைத்தார் என்பது சரிதான். ஆனால் அவர் சாதி எதிர்ப்பை பார்ப்பனர் எதிர்ப்பாகக் குறுக்கினார் என்று சொல்வது மிகத் தவறான கணிப்பாகும். அவர் பேச்சுக்களைப் படிப்பவர்கள் 'பறையன்' என்பது இருக்கலாமா? 'தீண்டத்தகாதவன்' என்பது இருக்கலாமா? என்ற கேள்விகளை அவர் ஓயாமல் ஒலித்திருப்பதை சுலபமாகக் காணமுடியும். அவர் செட்டியார், முதலியார், வேளாள சாதிகளைப் பெயர் சொல்லித் தாக்கவில்லையே என்பது அவரது செயல் தந்திரத்தைப் (Tactics) புரிந்து கொள்ளாத கேள்வியாகும்.

பெரியார் அரசியலில் ஈடுபடத் தொடங்கிய காலத்தை 100-3-97 காலமென அழைக்கலாம். நூற்றுக்கு மூன்று பேரான பார்ப்பனர்கள் நூற்றுக்கு 97 பேரை கருத்தியல் ஒடுக்குமுறைக்கு ஆளாக்கி, கல்வித் தகுதிகளையும் அனைத்துப் பதவிகளையும் அரசியல் அதிகாரத்தையும் ஆக்கிரமித்த காலம். அக் காலத்தைப் பேசும் எவரும் 100-3-97 இலிருந்து தொடங்குவதைப் பார்க்க முடிகிறது. இதன் மற்றொரு புறரீதியான அடையாளம் இரயில் நிலைய உணவு விடுதிகளில் பார்ப்பனருக்கான இடம், மற்றவருக்கான இடம் எனப் பிரிந்திருந்தது.

www.tamilarangam.net

பார்ப்பனரை எதிர்க்க வசதி படைத்த பிற மேல் சாதியினர் திரண்டிருந்தனர். நீதிக்கட்சி இருந்தது. பார்ப்பன மதத்தை எதிர்க்க சைவமதம் இருந்தது. 'இந்துமத ஆபாசதர்சினி' இருந்தது. 'திராவிடன்' என்ற சொல் இருந்தது. சுயமரியாதை சங்கம் கூட இருந்தது. இந்த நிலையில் சாதி ஒழிப்பைச் செயல்படுத்த நினைத்த பெரியார் யாருடன் கூட்டுச் சேர்ந்து எந்த சொல்லாடலைப் பயன்படுத்திச் செயல்படுவது பயனுள்ளதாக இருந்திருக்கும் என்பதை பாரபட்சமன்றி சிந்தித்துப் பார்க்கவேண்டும். அவரது போர் முறையோ கடுமையான, மிகப் பரவலான நேரடிப் பிரசாரம் என்பதாகும். தக்க ஆதரவின்றி இது ஒருநாளும் செய்ய முடியாதது. **''பார்ப்பன மதம் ஒழிந்தால் சைவமதம் மட்டும் இருக்க முடியுமா? ''** என்றும், **''1000 முத்தையாச் செட்டியார்களுக்கு ஒரு சங்கராச்சாரி சமம்''** என்றும் சொல்வதிலிருந்து பார்ப்பனரின் கருத்தியல் மற்றும் குறியீட்டு முக்கியத்துவத்தை அவர் தெளிவாக உணர்ந்திருப்பதைப் பார்க்க முடிகிறது. சாதீய ஏற்றத் தாழ்வுகளையும் தீண்டாமையையும் சாதீயத்தையும் முற்றாக ஒழிக்க வேண்டுமென்றும், முழுமையான சமத்துவம் நிலவ வேண்டுமென்றும் கடும் பிரச்சாரம் மேற்கொண்ட அவரை ''சாதி எதிர்ப்பை, பார்ப்பன எதிர்ப்பாகக் குறுக்கியவர்'' என்பது வரலாற்றுக்குச் செய்யும் துரோகமாகும்.

## 12 பெரியாரியம்

**புராண, கடவுளர் எதிர்ப்பு :**

புராணங்களை அவர் அணுகிய விதம் மலினமானது என்றும் அவற்றை இலக்கியங்களாகவும், மானுடவியல் பிரதிகளாகவும் பார்க்கவில்லை என்றெல்லாம் கூறப்படுகிறது. அன்று சமூகத்தில் செயல்படும் பிரதிகளாக இருந்த கதாகாலாட்சேபம், தெருக்கூத்து, வில்லுப்பாட்டு, நாடகம், சினிமா என்று அனைத்திலும் ஆக்கிரமித்திருந்த புராணங்களைக் கவிழ்த்துப் போட்டு கேலிசெய்த அவருடைய செயல் முற்றிலும் கலகபூர்வமானது மட்டுமின்றி, பிரச்சார ரீதியாக மிகச் சிறந்த உத்தியுமாகும். அவரது செயல் கரடுமுரடானது என்றால், பக்குவமற்ற-கரடுமுரடான மதத்தை, பக்குவமற்ற கரடுமுரடான சமுதாயத்தில் எப்படி எதிர்கொள்ளது? இன்றுவரை தமிழில் பல அறிவுஜீவிகளுக்குப் பெரியாரைக் கண்டால் இதனால்தான் அருவெறுப்பாக இருக்கிறது. இவர்களால் Crudity ஐ சகித்துக் கொள்ளவே முடியாது. ரொம்பவும் Sophisticated ஆனவர்கள். ஆனால் தீண்டாமையை சகித்துக்கொள்ள முடியும். உண்மையில் புராணங்களை நவீனப்படுத்தி, சமகாலத்திற்கு ஏற்ற வகையில் தயாரிப்படுத்திவந்த முயற்சியை எதிர்த்து அவற்றின் மூலவடிவங்களின் (Rawness ஐ) கச்சாத் தன்மையை மீட்டவர் என்று வேண்டுமானால் சொல்லலாம். சாதீயமான ஜனநாயகமற்ற இறந்த காலத்திலிருந்து துண்டித்துக் கொள்வதற்கு இறந்த காலத்தின் அடையாளங்களாக, தொடர்ச்சிகளாக உள்ளவற்றை சகட்டு மேனிக்கும்,

www.tamilarangam.net

வசதிப்பட்டபடியும் தாக்குவதென்பது மரபு குறித்த விசாரணையை சமூகப் பரப்பில் தூண்டமுடியும் என்பதை பாரபட்சமின்றி சிந்திப்பவர்கள் புரிந்துகொள்வார்கள். அதேசமயம் பார்ப்பன ஒழுக்கவியல் கோட்பாடுகளுக்கும், பார்ப்பன புராணிகங்களுக்கும் உள்ள முரண்களில் அக் கோட்பாடுகளை முன்வைத்து புராணிகங்களைக் கேலிசெய்து நிராகரிப்பதன் தேவை குறியீடுகள், புனைவுகள், மதிப்பீடுகள் இவற்றிற் கிடையேயான சிக்கலான இணைப்பில் உருவாகிறது.

பெரியாரின் கூற்றுக்கள் / மேற்கோள்கள்

**10.** *கொஞ்சக் காலமாக சைவசமயத்தின் பேரால் சிலர் போடும் கூச்சல் அளவுக்குமேல் போகின்றது.*

*சுயமரியாதை இயக்கத்தை ஒழித்தாக வேண்டுமென்று அவர்கள் கட்சி சேர்க்கிறார்களாம். அரசியல் பிழைப்புக்காரர்கள் சிலர் அப்படித்தான் - அதாவது ''சுயமரியாதை இயக்கத்தை ஒழித்தாக வேண்டும்; அதை ஒழிக்காவிட்டால் சுயராஜ்யம் தடைபட்டுப் போகும்! என்று கூச்சல் போட்டார்கள்; கூலி கொடுத்தும் கூச்சல் போடச் சொன்னார்கள். அவ்வளவு கூச்சல்களையும் அடக்கிக் கொண்டு இப்போதும் நமது இயக்கம் தலைநிமிர்ந்து நிற்கிறதையும் அரசியல்காரர்களில் பெரும்பாலோரும் இதை ஆதரிப்பதையும் பார்த்து ஒருவாறு*



*அடங்கிவிட்டார்கள். இப்போது சைவசமயத்தார்கள் என்று சொல்லிக் கொள்பவர்களில் சிலர் கிளம்பி சுயமரியாதை இயக்கத்தை ஒழிக்க வேண்டுமென்று பிரச்சாரம் செய்துவருகின்றார்கள். இந்த சைவசமயத்தார்கள் என்பவர்கள் சுயமரியாதை இயக்கம் பார்ப்பனீயத்தையும், பார்ப்பனர்களையும் கண்டிக்கும் பொழுதும் வைணவ சமயத்தையும் வைணவர்களையும் கண்டிக்கும் பொழுதும் ஆனந்தக் கூத்தாடிக் கொண்டு, நம்மீதும் சுயமரியாதை இயக்கத்தின் மீதும் புகழ் புராணமும், கவியும் பாடிக்கொண்டிருந்தார்கள்.*

*அதாவது, பார்ப்பன ஆதிக்கத்தைக் கண்டித்து சங்கராச்சாரியாரைத் தாக்கிவரும்போது நமக்கு உதவியும் செய்தார்கள். பிறகு வைணவப் புராணங்களின் வண்டவாளங்களை வெளியாக்கும்போதும் நமக்கு உதவிசெய்து வந்தார்கள். இது மாத்திரமல்லாமல், இந்துமதம் என்பதாக ஒரு மதம் இல்லை என்றும், இந்துமதம் என்று சொல்லப்படுவது பார்ப்பன ஆதிக்கக் கொள்கைகள் கொண்டது என்றும் சொல்லும்பொழுது அதை ஆதரித்து அதற்கு வேண்டிய ஆதாரங்கள் உதவிவந்தார்கள்.*

*கடைசியாக, சைவமதப் புராணங்கள் என்பவைகளின் முறையில் அவற்றின் யோக்கியதைகளை வெளியாக்க நேரிட்டபோது மாத்திரம், ''சுயமரியாதை இயக்கம் சமயங்களுக்கு ஆபத்து விளைவிக்கின்றது, மோட்சத்திற்கு தடையாய் நிற்கின்றது'' என்று சொல்ல வந்துவிட்டார்கள். எனவே, சைவ மதம் என்றால்*

www.tamilarangam.net

என்ன? அது பார்ப்பன மதம் அல்லாது வேறு தனி மதம் என்றோ, தமிழ் மக்கள் மதம் என்றோ யாராவது சொல்லமுடியுமா என்பதை முதலில் கவனிக்க விரும்புகின்றோம்.

(''குடி அரசு'' - தலையங்கம், 7.10.1928)

11. சமர சன்மார்க்கம் என்பது வாயால் சொல்லக்கூடியதே தவிர காரியத்தில் நடக்க முடியாததாகும். ஏனெனில் எதுஎது சமரச சன்மார்க்கம் என்கிறோமோ அவற்றிற்கு நேர்விரோதமாகவே மனித வாழ்க்கை அமைக்கப்பட்டிருக்கிறது. இது நம்நாட்டில் மட்டுமல்ல, உலகம் முழுவதிலுமே இவ்வாறே அமைக்கப்பட்டிருக்கிறது.

முதலாவது கடவுள், மதம், விதி, சாதி, பணம், தொழில் முதலியவைகள் இயற்கைக்கு மாத்திரமான சமரச சன்மார்க்கமில்லாமல், நியாயபூர்வமான சமரச சன்மார்க்கத்திற்கும் விரோதமாய் அமைக்கப்பட்டிருக்கின்றது. இந்த நிலையில் ஒருவன் சமரச சன்மார்க்கத்தைப் பற்றிப் பேசவேண்டுமானால் மேற்கண்ட கட்டுப்பாடுகளை வைத்துக்கொண்டு சமரச சன்மார்க்கம் ஏற்பட வேண்டும் என்கிற முறையில் யோக்கியர்களாலோ, அறிவாளிகளாலோ பேச முடியாது. ஏனெனில், அவை ஒன்றுக்கொன்று முரண்பட்ட தத்துவத்தில் அமைக்கப் பட்டிருப்பவைகளாகும்; அதோடு மாத்திரமல்லாமல், சமரசமும் சன்மார்க்கமும் கூடாது என்னும் தத்துவத்தின்மீதே அமைக்கப்பட்டுள்ளவைகளாகும்.



மேற்கண்டவை சம்பந்தமான கட்டுப்பாடுகளையெல்லாம் அடியோடு அழிப்பதுதான் சமரச சன்மார்க்கம் என்று சொல்வேன். இது உங்களில் பலருக்கும் உங்கள் பாதிரிமார்கள், எஜமானர்கள், அக்கம்பக்கச் சாமியார்கள், சாமிகள், மதக்காரர்கள் ஆகியவர்களுக்கு வருத்தமாயும் விரோதமானவைகளாகவும் இருக்கும். நான் உண்மையான சமரச சன்மார்க்கம் அடைந்த தேசத்தார், அடைந்த சமூகத்தார், அடைந்த தனிமனிதர்கள் யார்யாரைக் கருதுகிறேனோ அவர்கள் எல்லாம் மேற்கண்ட இடையூறானவைகளைத் தகர்த்தெறிந்துதான் சமரச சன்மார்க்கம் அடைந்தார்கள்; இவைகளில் சிறிது தாட்சண்யப் பட்டவர்கள் கூட தோல்வியடைந்து விட்டார்கள்.

(பெருந்துறை சமீபம் கிரே நகரில், 26.1.1931 இல் சொற்பொழிவு
-''குடி அரசு'', 19.2.1931)

www.tamilarangam.net

**பெரியாரின் அரசியல் இயக்கம் - தகவல்கள் :**

இக் கட்டுரையைப் படிப்பவர்கள் பெரியாரின் அரசியல் வாழ்க்கை குறித்த தகவல்களை நினைவுபடுத்திக் கொள்ளவும், இளைஞர்கள் அறிந்துகொள்ளவும், தெளிவுபடுத்திக் கொள்ளவும் இப் பகுதி. லோட்டமானதாகவும், துல்லியமின்றியும் அமையும் இப் பகுதி, அடுத்துவரும் விவாதப் பகுதியினை படிக்க உதவும் பொருட்டுத்தான்.

*17.9.1879 :* ஈரோட்டில் பிறந்தார்.

*1919-1925 :* காங்கிரஸ் கட்சியில் பணிபுரிந்தார். கள்ளுக்கடை மறியல், ஒத்துழையாமை இயக்கம், கதர் பிரச்சாரம், நிர்மாணத் திட்டம் முதலியவற்றில் தீவிர பங்கேற்பு. வகுப்புரிமைத் தீர்மானம் கொண்டுவர தொடர்ந்து முயற்சி. 1924 இல் வைக்கம் போராட்டம். 1925 இல் வகுப்புரிமைத் தீர்மானத்தை ஏற்காததால் காங்கிரசிலிருந்து வெளியேற்றம். (25.11.1925)

*1926-1930 :* சுயமரியாதை இயக்கம் உருவாக்கம். குடி அரசு, திராவிடன், REVOLT பத்திரிகைகள் வாயிலாகவும், நேரடியாகவும், பரவலான கடும் பிரச்சாரம். சாதி ஒழிப்பே உடனடி இலட்சியம் எனத் தெளிவு.



*1931-1937 :* சமதர்மப் பிரச்சாரம், பொதுவுடமைக் கொள்கையின்பால் ஈர்ப்பு. 1932 ம் ஆண்டு 11 மாதங்கள் உலகச் சுற்றுப் பயணம் (13.2.32 முதல் 19.5.32 வரையான 3 மாத காலம் ரஷ்யாவில்). 1933-34 தீவிர சமதர்மப் பிரச்சாரம். 30.12.33 இல் கைது செய்யப்பட்டார். 34 இல் அரசின் ஒடுக்குமுறை அதிகரிக்க சமதர்மப் பிரச்சாரம் தீவிரம் குறைக்கப்படுகிறது. 1936 இல் ஜீவா முதலானோர் இதைக் கண்டித்து வெளியேறுகிறார்கள். 1935 முதல் நீதிக்கட்சியை அதிகம் ஆதரிக்கத் தொடங்குகிறார். 1937 தேர்தலில் நீதிக்கட்சி படுதோல்வி அடைகிறது.

*1938-1954 :* 1938 இல் ராஜாஜி தலைமையில் நடந்த காங்கிரசு அரசு இந்தியை கட்டாய பாடமாக்க, அதை எதிர்த்து பெரியதொரு கிளர்ச்சியினை நடத்துகிறார். கிளர்ச்சியின் இறுதியில் தனிநாடு கோரிக்கையும் எழுகிறது. இரண்டாண்டு சிறைத் தண்டனையும் பெறுகிறார். (டிசம்பர் 39 விடுதலை) நீதிக்கட்சியின் தலைவராகிறார். தொடர்ந்து திராவிட நாடு கோரிக்கையை வலியுறுத்துகிறார். 1944 இல் நீதிக்கட்சி திராவிடர் கழகமாக பெயர் மாற்றம் பெறுகிறது. அரசியல் நிர்ணயசபை அமைக்கப்பட்ட விதத்தைக் கண்டிக்கிறார். 1947 -சுதந்திர தினத்தை துக்க நாளாக அனுசரிக்கும்படி கோருகிறார். இதில் அண்ணா கருத்து மாறுபாடு கொள்கிறார். 1949 இல் தி.மு.க.

www.tamilarangam.net

பிரிகிறது. பெரியார்-மணியம்மை திருமணத்தைத் தொடர்ந்து (17.9.49) 1950 இல் வகுப்புரிமையை வலியுறுத்தி இயக்கம். 1952 காங்கிரசு சிறுபான்மை மந்திரிசபை அமைத்தது. மீண்டும் ராஜாஜி முதல்வர். அவர் அறிமுகப்படுத்திய குலக்கல்வித் திட்டத்தை எதிர்த்து கடுமையான கிளர்ச்சி நடத்துகிறார். 1954 இல் ராஜாஜி பதவி விலகுகிறார்.

*1954-1967 :* 1954 இல் காமராசர் முதல்வராகிறார். பெரியார் காமராசருக்கும் காங்கிரசுக்கும் ஆதரவு தருகிறார். 1956 –மொழிவாரி மாநிலம் உருவாக்கம். தமிழ்நாடே திராவிட நாடு என்கிறார். 1957 – அரசியல் நிர்ணய சட்டத்தை எரிக்கும் போராட்டம் நடத்தி சிறைசெல்கிறார். 1960 – ''தமிழ்நாடு தமிழருக்கே'' – அறிவிப்பு . இந்திய தேசப்படம் எரிக்கும் கிளர்ச்சி நடத்தி கைதாகிறார். இடையே '56 இல் இராமர் பட எரிப்பை நிகழ்த்துகிறார். 66 இல் இராமாயண எரிப்பு. 1967 இல் காங்கிரஸ் தோல்வி. தி.மு.க. பெரும்பான்மை இடங்களை கைப்பற்றுகிறது.

*1968-1973 :* தி.மு.க. ஆதரவு. கர்ப்பக்கிரக் கிளர்ச்சி – ''அனைத்து சாதியினரும் அர்ச்சகராகலாம்'' கோரிக்கை.

**24.12.73 :** வேலூரில் C.M.C மருத்துவமனையில் மரணமடைகிறார்.

16

# பெரியாரியம்

அவருடைய அரசியல் வாழ்க்கையில் அரசுப் பதவியேற்பது அவருக்குப் பிடிக்காத செயலாகவே இருந்திருக்கிறது. இத்துணைக்கும் மக்கள் போராட முழுவதும் தயாராகாதபோது, அரசச் சட்டங்களால் மாற்றங்களைக் கொண்டு வருவது எளிது என்று நம்புகின்றவர். ஆனால் அரசியலதிகாரத்தை தான் கைப்பற்றுவதை விரும்பாமல், எப்படியாவது ஏதோவொரு அரசாங்கத்தை ıரிரட்டி சட்டங்களைப் போட வைக்கலாம் என்றே கருதுகிறார். அதேசமயம் தலைமறைவு இயக்கம், வன்முறை போன்றவற்றையும் அவர் வெறுப்பவராகவே இருக்கிறார். தொடர்ந்த பிரச்சாரம் என்பதே அவர் தேர்ந்தெடுத்த அரசியல்பணி.

பெரியாரின் கூற்றுக்கள் /மேற்கோள்கள்

**12.** *நான் அடிக்கடி கொள்கையில் மாற்றமடைபவன் என்று சொல்லப்படுகிறது. உண்மையாக இருக்கலாம். நீங்கள் அதை ஏன் கவனிக்கிறீர்கள்? ஒரு மனிதன் அவன் பிறந்தது முதல் இன்று வரை திருடிக்கொண்டே இருக்கிற ஒரே நிலைக்காரன் என்று சொல்லப்பட்டால், அவன் மகாயோக்கியனா? எந்த மனிதனும் ஒரேநிலையில் இருக்கவேண்டும் என்று நீங்கள் ஏன் ஆசைப் படுகிறீர்கள்? அதனால் உங்களுக்கு என்ன லாபம்? மாறுதல் முற்போக்குள்ளதா? பிற்போக்குள்ளதா? அதனால் மக்களுக்கு நன்மையா? தீமையா? என்பன போன்றவற்றைக் கவனிக்க வேண்டியது தான் அறிவாளிகளின் கடமையாகும்.*

www.tamilarangam.net

மற்றும், பொது நன்மையை உத்தேசித்து -கஸ்டப்படுகிற மக்கள் நன்மையை உத்தேசித்து- மாறினானா? அல்லது சுயநலத்திற்கு -அக்கிரமமான இலாபமடைவதற்கு- மாறினானா? என்று பார்க்க வேண்டும். யோக்கியன், அறிவாளி, ஆராய்ச்சியாளி, பொறுப்பாளி, கவலையாளி ஆகியவர் மாறவேண்டியது அவசியமாகலாம். அதைப் பற்றிக் கவலை ஏன்? யார் எப்படி மாறினாலும் பார்க்கிறவர்களுக்கு புத்தியும் கண்ணும் சரியாய் இருந்தால், மாற்றத்தைப் பற்றி ஒன்றும் ஆபத்து வந்துவிடாது.

நான் பல தடவை மாறியிருக்கலாம்; பல குட்டிக் கரணங்கள் போட்டிருக்கலாம்; சுயநலத்திற்காகவும் போட்டிருக்கலாம்; பச்சோந்தியாகவும் இருக்கலாம். அதனால் உங்களுக்கு என்ன கெடுதி? நாடகக் கொட்டகையில் நாடகம் பார்க்கிறபோது ஒரு மனிதன் எத்தனை வேடம் மாறி மாறிப் போட்டு நடிப்பதை நீங்கள் காசு கொடுத்துப் பார்த்துவிட்டு, நடித்தவனையும் புகழ்ந்துகொண்டு போகின்றீர்களா, இல்லையா?

கோயில் கட்டிய மக்கள், கோயிலை இடிக்க வேண்டியவர்களாகி விடுவார்கள். அசிம்சை பேசுபவர்கள் பலாத்காரத்தைப் பேசவேண்டியவர்களாகி விடுவார்கள். இராஜ விசுவாசிகள் இராஜத் துரோகிகள் ஆகிவிடுவார்கள். திருடக்கூடாது என்பவர்கள் கொள்ளையடிக்கச் சொல்வார்கள். இப்படியாக, அபிப்பிராயங்கள் மாறிக்கொண்டு போகலாம். இவற்றையெல்லாம், அபிப்பிராயங்கள் மாறியதாலேயே



குற்றம் என்று சொல்லிவிட முடியாது. தங்களை 'நல்ல சூத்திரர்கள்' என்று சொல்லிக்கொண்டு பார்ப்பனர் கால்களைக் கழுவிய தண்ணீருக்குப் பவுண் கொடுத்துச் சாப்பிட்டவர்கள் இன்று ''சூத்திரன் என்றால் ஆத்திரம் கொண்டு அடி'' என்றும் ''பார்ப்பனர்கள் ஜாக்கிரதை'' என்றும் ஏன் சொல்லுகிறார்கள்? இந்த மாற்றத்தால் இப்படிச் சொன்னவர்கள் அயோக்கியர்கள் ஆகிவிட முடியுமா?

தவிர, ''சூத்திரன் பணம் வைத்திருந்தால், பிராமணர்கள் அதைப் பலாத்காரத்தால் பறித்துக் கொள்ளலாம்'' என்று மனுதர்ம சாத்திரத்தில் இருந்தது மாறி, இப்போது வெள்ளையர் தர்மத்தில் ''தந்திரங்களாலும், சூழ்ச்சிகளாலும் மாத்திரம்தான் பறித்துக் கொள்ளலாம்'' என்கிறதான மாறுதல் ஏற்பட்டுவிட்டது. நாளை ஒரு சமயம் சமதர்ம காலத்தில், ''பிராமணர்கள் (சரீரத்தால் பாடுபடாதவன்) சொத்து வைத்திருந்தால், மற்றவர்கள் பலாத்கரத்தில் பிடுங்கிக் கொள்ளலாம்'' என்று ஏற்பட்டாலும் ஏற்படலாம். இம்மாதிரி மாறுதல்கள் காலத்திற்கும் பகுத்தறிவிற்கும், நாட்டின் முற்போக்கிற்கு ஏற்றாற்போல நடந்துதான் தீரும். எனவே, நான் மாறுதலடைந்துவிட்டேன் என்று சொல்லப்படுவதில் வெட்கப்படுவதில்லை. நாளை நான் எப்படி மாறப்போகிறேன் என்பது எனக்கே தெரியாது. ஆகையால், நான் சொல்வதை கண்மூடித்தனமாய் நம்பாதீர்கள்.

*(நாகையில், 3.10.1931 இல் சொற்பொழிவு -''குடியரசு'', 11.10.1931)*

www.tamilarangam.net

*13. ஆம்! பரிகாசம் செய்வார்கள் ; நமக்கும் அது கொஞ்சம் மானக்கேடாகத்தான் தோன்றும். உண்மையாகவே அது மானக்கேடாகவும் இருக்கலாம். அந்த மானக்கேடு நடத்தை நானோ, நீங்களோ நமது தனிப்பட்ட சுயநலத்துக்காக அல்ல, சமுதாயப் பொதுநலத்தக்காகவே அடைகிறோம். நாம் நமது சமுதாய நலத்துக்காக உயிரைத் தியாகம் செய்வது என்பது எப்படியோ, அப்படித்தான் உயிரிலும் சிறந்தது என்று சொல்லும்படியான மானத்தைத் தியாகம் செய்வதாகும்.*

*(''விடுதலை'' - அறிக்கை , 20.11.1956)*



## பெரியார் -அரசியல் இயக்கத்தின் மீதான விமர்சனங்கள் :

### 1. பொது உடைமைப் பாதையை அரசுக்குப் பயந்து கைவிட்டவர் :

சுயமரியாதை இயக்கத்திற்கும்-சமதர்மத்திற்கும் நிகழ்ந்த 'மணமுறிவு' ஏற்படுத்திய கசப்பு இன்றுவரை நீங்காததைக் கவனிக்க முடிகிறது. பெரியாரின் சிந்தனைகளை ஊன்றிப் பார்த்தால் இதில் பிரச்சினை எதுவும் இல்லை என்பது எளிதில் விளங்கும். பெரியார் ஒரு ஜனநாயகப் புரட்சியாளர். இந்திய சமூகங்கள்





போன்றவற்றில் ஜனநாயகப் புரட்சி நடைபெறுமுன்பே, சமதர்மப் புரட்சியும் பொது உடைமையும் சாத்தியம் என நினைப்பதோ, அல்லது முதலில் எவ்வகையான இயக்கத்தை உருவாக்க வேண்டும் என்பதில் குழம்புவதோ அரசியல் தெளிவின்மையாகும். பாராளுமன்ற ஜனநாயகம் வந்ததை உண்மையான ஜனநாயகம் என்றோ ஜனநாயகப் புரட்சி என்றோ சொல்ல முடியாது என்பது பரவலாக ஒப்புக் கொள்ளப்படுவதே. அப்படியென்றால் உண்மையான ஜனநாயகப் புரட்சி என்றால் என்ன என்று மாக்சிய-லெனினிய பரிசோதனைக் கூடங்களில் இன்றும் தீவிரமான ஆய்வுகள் நடக்கின்றன. டாக்டர் அம்பேத்கரும், பெரியாரும் தெளிவாக அசலான ஜனநாயகப் புரட்சிக் களங்களில் நின்றவர்கள். பல்வேறு பாதைகளில் இன்று பலரும் அவர்களிடம் வந்து சேர்வதைப் பார்க்க முடிகிறது. வராமலே போவதற்கு, காலதாமதமாக வந்து சேர்வது நல்லதுதான் - அடையாளப் பிரச்சினைகளை விட்டுவிட்டால்!

பெரியார் சமதர்மப் பிரச்சாரத்தை மட்டுப்படுத்திக் கொள்வதையும், அதற்கான காரணங்களையும் பகிரங்கமாக அறிவிக்கிறார். அரசின் நிர்ப்பந்தத்தின் பேரில்தான் இதைச் செய்வதைச் சொல்கிறார். எந்தவித தயக்கமும், ஒளிவுமறைவுமின்றி அப்படி அறிவிக்க முடிந்ததிற்குக் காரணம் அவருக்கிருந்த தெளிவுதான். வகுப்புரிமையை ஏற்காத காங்கிரஸ்தான் பிரதான எதிரி. கடும் பிரச்சாரத்தின் மூலமாகவே அதை எதிர்க்க முடியும். அரசைப் பகைத்துக் கொண்டால் அது சாத்தியமில்லை. பெரியார் அரசியல் வாழ்வின் தொடக்கமுதலே அவரது

www.tamilarangam.net

உடனடிக் குறிக்கோள்கள் வகுப்புவாரி உரிமைகள், இட ஒதுக்கீடு போன்றவைதான். இடையில் பொதுவுடைமைச் சிந்தனைகளால் கவரப்பட்டு அவற்றையும் பிரச்சாரம் செய்ய முடிவுசெய்கிறார். ஆனால் அவை மிகத் தொலைதூர இலட்சியங்கள் என்பது அவருக்குத் தெரியும். பிரச்சினை வந்ததும் அதைக் கொஞ்சம் ஒதுக்கி வைத்துவிட்டு தன்னுடைய பிரதான, உடனடி இலட்சியமான வகுப்புவாரி' உரிமைகளுக்கு வருகிறார். ஆனால் வாழ்நாளின் இறுதிவரை பொதுவுடைமைச் சிந்தனைகளுக்கு எதிராகவோ, முதலாளியம், காந்தீயம் போன்றவற்றை ஆதரித்தோ அவர் பேசியதில்லை. அவரைப் பிடிக்காதவர்கள் அவர் 1934-36 இல் எடுத்த நிலைகளை சந்தர்ப்பவாதம், பிழைப்புவாதம் எனலாம்; பிடித்தவர்கள் அதை யுத்த தந்திரம், செயல் தந்திரம் என்று புகழலாம் என்பது தவிர இந்த விவாதத்தில் எந்த ஒரு சத்துமில்லை என்று பெரியார் பாணியிலேயே கூறிவிட்டு மேலே நகர வேண்டியதுதான்.

பெரியாரின் கூற்றுக்கள் / மேற்கோள்கள்

**14.** *ஆங்கிலத்தில் 'கேஸ்ட்', 'கிளாஸ்' (caste/class) என்ற இரண்டு வார்த்தைகள் உள்ளன. அதாவது தமிழில் 'சாதி', 'வகுப்பு' என்று சொல்லப்படுவனவாகும். சாதி - பிறப்பினால் உள்ளது; வகுப்பு - தொழில் அல்லது தன்மையினால் ஏற்படுவது. தொழிலும் தன்மையும் யாருக்கும் ஏற்படலாம். சாதி நிலை, அந்தந்தச் சாதியில் பிறந்தவனுக்குத்தான் உண்டு;*



*பிறக்காதவனுக்குக் கிடையவே கிடையாது. மேல் நாட்டில் சாதி இல்லாததால், இங்கு பொதுவுடைமைக்கு முதலில் வகுப்புச் சண்டை துவங்க வேண்டியதாயிற்று. இங்கு சாதி இருப்பதால் பொதுவுடைமைக்கு முதலில் சாதிச் சண்டை துவக்க வேண்டியதாகும்.*

*பார்ப்பானும், பார்ப்பனீய உணர்ச்சியும் உள்ள மக்கள் பொதுவுடைமை வேஷம் போடுவதால், சாதிச் சங்கதியை மூடிவிட்டு, ஆகாத காரியமான-ஆனாலும் தங்களுக்குக் கேடில்லாத- வகுப்பு (class) உணர்ச்சியைப் பற்றிப் பேசி, சாதியை ஒழிக்கப் பாடுபடும் கட்சிகளோடு ஏழைகளை மோதவிடுகிறார்கள்; சாதியை ஒழிக்கச் செய்யப்படும் முயற்சியையும் அழிக்கப் பார்க்கிறார்கள். பார்ப்பனர்களுக்கும் மற்றும் மேல்சாதிக்காரர்களுக்கும் இருக்கும் உயர்வை முதலில் ஒழித்தாக வேண்டும். இதிலேயே அரைப்பாகம் பொதுவுடைமை ஏற்பட்டுவிடும். அதாவது, சாதியினால் அனுபவிக்கும் ஏழ்மைத் தன்மையும், சாதியினால் சுரண்டப்படுபவர்களாக இருக்கும் கொடுமையும் நம் பெரும்பான்மை மக்களிடமிருந்து மறைந்துவிடும்.*

*பொது உரிமை இல்லாத நாட்டில் ஏற்படும் பொதுவுடைமை மறுபடியும் அதிக உரிமை இருக்கிறவனிடம்தான் போய்ச் சேர்ந்து கொண்டே இருக்கும் என்பது பொதுவுடைமைத் தத்துவத்திற்குப் பாலபாடம் என்பதை மக்கள் உணரவேண்டும்.*

*("குடி அரசு" -தலையங்கம், 25.3.1944)*

www.tamilarangam.net

**15.** ஆகவே கம்யூனிஸ்ட் கட்சி பணக்காரர்களை ஒழிப்பதில் முதல் படியில் நிற்கிறது. திராவிடர் கழகம் பார்ப்பனீயத்தை ஒழிப்பதில் முதல் படியில் நிற்கிறது. என்றாலும் பணக்காரர்களை ஒழிப்பதில் திராவிடர் கழகத்திற்குக் கவலை இல்லை என்று சொல்ல முடியாது. பணக்காரர்களை ஒழிக்க வேண்டியது அவசியந்தான். ஆனால் பார்ப்பனீயத்தை, மூடநம்பிக்கையை ஒழிக்க வேண்டியது மிக மிக அவசியம் என்று திராவிடர் கழகம் கருதுகிறது. பணக்காரத் தன்மைக்கு பாப்பனீயமும், மேல்சாதி-கீழ்சாதித் தன்மையும், கடவுள் தன்மையும்தான் காரணம். இவற்றை ஒழிக்காமல் பணக்காரர்களை ஒழித்தால் மறுபடியும் பணக்காரர்கள் முளைத்துக் கொண்டே இருப்பர். சாக்கடையையும் கொசுக்களையும் ஒழித்தால்தான் அழுக்குத் தண்ணீரையும் மலேரியாக் காய்ச்சலையும் ஒழிக்க முடியும். ஆகையால்தான் திராவிடர் கழகம் "பணக்காரத் தன்மையை ஒழிக்க அஸ்திவார வேலை" என்று கருதி, இதைச் செய்கிறது.

பணக்காரத் தன்மைக்கு எளிதில் எதிர்ப்புக் கிடைக்கும்; பார்ப்பனீயத்திற்கு எதிர்ப்புக் கிடையாது. இந்த நாட்டில் இது ஒரு பெரிய கஸ்டம். ஆதலால் முதலில் சுலபமானதைச் செய்துகொண்டு பிறகு கஸ்டமானதைச் செய்துகொள்ளலாம் என்று கருதுகிறார்கள்.

ஆகையால் நாம் இந்த கம்யூனிசத்தை ஏற்பதில் தவறு இல்லை. இதுதான் மக்களின் நல்வாழ்விற்கு வழி. என்றைக்காவது உலகம், அங்கு சென்றுதான் நிற்கும்; அதுவும் சீக்கிரம் சென்று நிற்கும்.

*(சொற்பொழிவு – "விடுதலை", -4.10.1951)*



## பெரியாரியம்

**16.** பொதுவாக சுயமரியாதை என்கின்ற ஒரு இஞ்சினைப் பலப்படுத்தி, சரியாக ஓடத் தகுந்த சக்தியை உண்டாக்கி வைத்துவிட்டால், பிறகு எந்த எந்திரத்தைக் கொண்டுவந்து அதோடு இணைத்துத் தோல் பட்டையை மாட்டிவிட்டாலும் அது தானாகவே ஓடும். அது இன்னவிதமான இயந்திரமாகத்தான் இருக்க வேண்டும் என்கின்ற கவலை யாருக்கும் வேண்டியதில்லை என்றே சொல்லுகின்றோம். மற்றபடி எல்லா உணர்ச்சிகளையும் விட சுயமரியாதை உணர்ச்சியே மேலானதும் மதிக்கத்தக்கதுமாகும் என்பதின் தத்துவத்தை உணர்ந்தவர்களுக்கு இந்த இயக்கத்தில் உண்மையான சந்தேகமே தோன்ற இடமிருக்காது. அது இன்றைய தினம் வேண்டுமானால் ஏதோ ஒரு சிறு வகுப்பாருடன் போராடத் தோன்றியதாகத் தோன்றலாம். இதுவே அல்ல அதன் இலட்சியம். ஒரு இயந்திரத்தைச் சுழற்றும்போது முதலில் சுற்றும் சிறு வேகம்போல், இன்று ஒரு சிறு வகுப்பார் உணர்ச்சியோடு போராடுவதாகக் காணப்படுவது; மற்றபடி பின்னால் அது உலகத்தையே ஒன்றுபடுத்த –உலக மக்களையே ஒரு குடும்ப சகோதரர்களாக்க– செய்யும் முயற்சியின் போதுதான் அதன் உண்மை சக்தியும் பெருமையும் வெளியாகும்.

*("குடி அரசு" – தலையங்கம், 17.2.1929)*

**17.** நம் இயக்கம் (சுயமரியாதை இயக்கம்) சமூகத் துறையிலுள்ள குறைகளை நிவர்த்திப்பதற்கென்றே ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வந்ததும், சர்க்கார் அதிகாரிகள் முதல் அனேக செல்வான்களும் இயக்கத்தில் கலந்து

www.tamilarangam.net

வேலைசெய்து வந்ததும் எவரும் அறியாததல்ல. ஆனால் சிறிதுகாலம் சென்றபின் மக்களுக்குள்ள சமுதாயக் கொடுமைகள் தீரவேண்டியது எவ்வளவு அவசியமோ அதுபோலவே மக்களுக்குள்ள பொருளாதாரக் கொடுமையும் தீரவேண்டியது அவசியமென்று கருதியதால் பொருளாதார சம்பந்தமாக நாம் சிறிது பிரச்சாரம் செய்ய ஆரம்பித்தோம். என்றாலும் அரசாங்கத்தார் தப்பபிப்பிராயத்தைக் கொண்டு இயக்கத்தை அடக்க அடக்குமுறைப் பிரயோகம் ஆரம்பித்துவிட்டார்கள் என்று உணருகிறேன். இதையேதான் அதிகாரிகள் முன்பும் தெரிவித்துக் கொண்டேன். ஆனால் ஒரு அளவுக்கு சர்க்காருடன் ராஜி ஏற்படுத்திக் கொள்ளலாம் என்ற ஆசையின்மீதே பொருளாதார விசயத்தில் சமதர்மக் கொள்கையைப் பிரச்சாரம் செய்வதில் சர்க்காருக்கு ஆட்சேபனை இல்லை என்றும், சாதி மத சம்பந்தமான விசயங்களில் வேறு சாதி, மதக் காரர்கள் மனம் புண்படும்படியோ அவமானம் ஏற்படும்படியோ என்று இல்லாமல் சாதி மதக் கண்டனங்கள் செய்து கொள்ளலாம் என்னும் முடிவுக்கு வந்தோம். சர்க்காரோடு இந்த மாதிரியான ஒரு சமாதான முடிவுக்கு வராத பட்சம் சர்க்காருக்கும் நமக்கும் வீண் தொந்தரவும் மனக்கசப்பும் ஏற்பட்டுத் தீரும் என்கின்ற நிலையில் மற்ற ஆதாரங்களும் முயற்சிகளும் நிலைமைகளும் இருந்ததால், நான் இந்த சமாதானத்திற்கு வர வேண்டியதாயிற்று. ஆகவே இதன் பலன் என்னவானாலும் அதற்கு நானே பொறுப்பாளி என்றுதான் சொல்ல வேண்டும்.



சில இளைஞர்களுக்கு இது கேவலமாகத் தோன்றலாம். என்றாலும், நம் இயக்க சம்பந்தமாக நமது கொள்கைகளிலோ, திட்டங்களிலோ எதையும் விட்டுக்கொடுத்துச் சமாதானம் செய்துகொண்டதாக எனக்குப் படவில்லை. ஆதலால் யார் எப்படி நினைத்தாலும் நமக்கு ஒன்றும் முழுகிப் போய்விடாது என்று தைரியமாகச் சொல்கிறேன்.

*(''குடி அரசு'' - அறிக்கை, 31.3.1935)*



**2. தேசிய இன விடுதலை என்பதில் உறுதியான நிலை எடுக்கத் தவறிவிட்டவர் :**

தேசிய இனத்தைத் தமிழ்மொழி என்ற மொழி அடிப்படையில் தீர்மானிப்பதா? அல்லது திராவிட இன அடிப்படையில் தீர்மானிப்பதா? ''தமிழ்நாடு தமிழர்க்கே'' என்பதும், ''திராவிட நாடு திராவிடர்க்கே'' என்ற கோஷமும் மாறி மாறியே தொடக்கத்தில் ஒலிக்கின்றன. பின்னர் பெரியார் இன அடிப்படையில் கேட்பதே சரியானது என்று உறுதிசெய்துவிடுகிறார். அதற்கு அவர் சொல்லும் காரணம் - மொழி அடிப்படையில் ''பார்ப்பான் நானும் தமிழ்தான் பேசுகிறேன்'' என்று வந்து விடுவானே என்பதுதான். பிற மூன்று மாநிலங்களில் யாரும் கோரவில்லையே என்று கேட்டதற்கு ''அவர்களுக்காகவும் நான்தான் பேசவேண்டும்'' என்று

www.tamilarangam.net

கூறிவிடுகிறார். பின்னர் மொழிவாரி மாநிலங்கள் 1956 இல் பிரிந்தவுடன், இனி திராவிட நாடு தமிழ்நாடுதான் எனத் தெளிவுபடுத்தி விடுகிறார்.

இதைக் காட்டிலும் மத அடிப்படையில் நாடு கோருவது ஜின்னாவுக்கு எளிதாக இருந்தது. இருவருமே பிரிவினைக் கோரிக்கையை வைத்தது 1940 இல் என்றாலும், ஜின்னாவைப் போல் உள்நாட்டுப் போர் நடத்தியாவது தனிநாடு பெறும் தீவிரமும் அதற்கான ஆதரவும் பெரியாருக்கில்லை. அதுதவிர பெரியார் பாணியில் தொடர்ந்து பிரச்சாரம் செய்து, மக்களாதரவை உண்டாக்கி அதன்பின் வன்முறையின்றி நாடு பிரிவினையைப் பெறுவதற்கு நீண்டகால அவகாசம் வேண்டும். காங்கிரஸ் பிரச்சாரம், காந்தியின் வெகுஜன செல்வாக்கு மிக்க 'மகாத்மா பிம்பம்' ஆகியவற்றையும் கணக்கிலெடுத்துக் கொள்ள வேண்டும்.

ஆனால் பெரியார் அன்றிலிருந்து இறுதிவரை 'தனித் தமிழ்நாடு' கோரிக்கையை எழுப்பிக் கொண்டுதானிருந்தார். இவை அனைத்தையும் விட இங்கு முக்கியமாக கவனிக்கப்படவேண்டிய விஷயம் தனிநாடு கேட்பதற்கு அவர் காட்டிய ஒரே காரணம் பார்ப்பன ஆதிக்க ஒழிப்புத்தான். வடநாட்டுடன் இணைந்துள்ள வரையில் பார்ப்பன ஆதிக்கத்தை ஒழிக்க முடியாது என்பதையே அவர் ஒவ்வொரு சொற்பொழிவிலும் வலியுறுத்துகிறார். இந்தித் திணிப்பும்/எதிர்ப்பும் அவரது கோரிக்கைக்கு வலிவு ஏற்படுத்தினாலும், தேசிய இனப் போராட்டத்தை உருவாக்க இந்தச் சொல்லாடல் போதுமா என்பது சந்தேகமே. பெரியார்



சுயமரியாதை இயக்க காலத்தில் தேசம், தேசியம், தேசாபிமானம் போன்றவைகளைக் கற்பிதங்களாக வர்ணித்திருக்கிறார். தேசியம் பேசுவதில் அவருக்கொரு உள்ளார்ந்த சிக்கல் இருந்திருக்கலாம் என ஊகிக்க முடிகிறது. எனவே அவரது பார்ப்பன எதிர்ப்பே தனிநாடு கோரிக்கையாக உருப்பெற்றது என்பதை மேற்கண்ட விவரங்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

### பெரியாரின் கூற்றுக்கள்/மேற்கோள்கள்

*18. தமிழும் தமிழ்நாடும் தமிழ் மக்களும் இப்படிப் பிரிந்து கிடக்கிற காரணத்தினால்தான் ஒற்றுமைக்குப் பாடுபடும் நாங்கள் திராவிட நாடு என்றும், திராவிட மக்கள் என்றும், திராவிடக் கலாச்சாரம் என்றும் எடுத்துக் காட்டி புத்துணர்ச்சி ஏற்படுத்தப் பாடுபட்டு வருகிறோம். 'தமிழ்' என்பதும் 'தமிழர் கழகம்' என்பதும் மொழிப் போராட்டத்திற்குத் தான் பயன்படுமேயொழிய இனப் போராட்டத்திற்கோ கலாச்சாரப் போராட்டத்திற்கோ சிறிதும் பயன்படாது. சரி, ஆரியர்கள் முதலில் தம் கலாச்சாரத்தைப் புகுத்தித்தான் நம்மை வெற்றி கொண்டார்கள்; நம் கலாச்சாரத்தைத் தடுத்துத்தான் நம்மீது ஆதிக்கம் செலுத்த ஆரம்பித்தார்கள். நாமும் நம் கலாச்சாரத்தை மறந்து ஆரிய கலாச்சாரத்தை ஏற்றுக் கொண்டதால் தான் அவர்களுக்குக் கீழான மக்களாக -அவர்களுடைய வைப்பாட்டி மக்களாக, சூத்திரர்களாக, பஞ்சமர்களாக-*

www.tamilarangam.net

ஆக்கப்பட்டோம். எனவே அக் கலாச்சாரத்திலிருந்து விடுபட வேண்டுமென்றால், மொழிப் போராட்டம் ஒன்றினால் மட்டும் வெற்றி பெற்றுவிட முடியாது. கலாச்சாரத்தின் பேரால், இனத்தின் பேரால் போராட்டம் நடத்தவேண்டும். அதில் வெற்றிபெற வேண்டும். அப்போதுதான் நாம் விடுதலை பெற்றவர்களாவோம்.

மொழிப் போராட்டம், கலாச்சாரப் போராட்டத்தின் ஒரு பகுதிதானே யொழிய முழுப் போராட்டமாகவே ஆகிவிடாது. சட்டம், சாஸ்திரம், சமுதாயம், சம்பிரதாயப் பழக்க வழக்கங்கள், புராணங்கள், இதிகாசங்கள்... இவை எல்லாவற்றிலிருந்துமே நம் இழிவு நிலைநிறுத்தப் பட்டிருக்கிறது. எனவே, இவை எல்லாவற்றிலிருந்துமே நம் இழிவு நீக்கமடைந்தாக வேண்டும். மொழியால் மேம்பாடும் வெற்றியும் பெற்று விடுவதாலேயே நமது இழிவும், இழிவுக்கு ஆதாரமான கலாச்சாரமும் ஒழிந்து விடமாட்டா. மேலும் இந்த இழிவால் அவதிப்படுபவர்கள் தமிழ் மொழி பேசுகிறவர்கள் –தமிழர்கள் என்பவர்கள் மாத்திரமல்லாமல்– சென்னை மாகாணத்தில் மட்டுமில்லாமல், இந்தியாவின் மற்ற மாகாணங்களிலும் – அதாவது வேறு பல மொழிகள் பேசும் மக்கள் உள்ள வங்காளம், பீகார், பம்பாய், மாகாராஷ்டிரம் முதலிய மாகாணங்களிலும்– இருக்கிறார்கள். அங்குள்ள தாழ்த்தப்பட்ட தோழர்களும் தம்மை திராவிடர்கள் என்றுதான் கூறிக் கொள்கிறார்கள். உண்மையில் அவர்களும் திராவிடர்கள் தாம்.

*(சென்னை ராபின்சன் பார்க்கில், 24.1.1950 இல் சொற்பொழிவு –''விடுதலை'', 27.1.50 )*

## 'நிறப்பிரிகை'

23

**19.** நிற்க, இந்த பிரிவினை அமைப்பு ஏற்பாட்டில் எனக்கிருக்கும் சகிக்க முடியாத குறை என்ன இருக்கிறது என்றால், நாட்டினுடையவும் மொழியினுடையவும் இனத்தினுடையவும் பெயர் அடியோடு மறைக்கப்பட்டுப் போய் விடுகிறதே என்கிற குறைபாட்டு ஆத்திரந்தான். நம் நாட்டுக்கு சமுதாயத்திற்கு இனத்திற்கு திராவிடம் என்று இருந்த பெயர், அது தமிழல்ல என்பதானாலும், நமக்கு அது ஒரு பொதுக் குறிப்புச் சொல்லும் ஆரிய எதிர்ப்பு உணர்ச்சிச் சொல்லுமாக இருக்கிறதே என்று வலியுறுத்தி வந்தேன். அதை ஆந்திர, கர்நாடக, கேரள நாட்டு மக்களல்லாமல் தமிழ் மக்களில் சிலரும் எதிர்த்தார்கள். பின்னவர்கள் என்ன எண்ணம் கொண்டு எதிர்த்தாலும், அவர்களுக்கு மற்ற மூன்று நாட்டார் ஆதரவு இருந்ததால் அதை வலியுறுத்துவதில் எனக்குச் சிறிது சங்கடம் இருந்தது. அவர்கள் மூவரும் ஒழிந்த பிறகு அவர்களையும் சேர்த்துக் குறிப்பிடத்தக்க ஒரு சொல் நமக்குத் தேவையில்லை என்றாலும், 'திராவிடன்' என்ற சொல்லை விட்டுவிட்டு 'தமிழன்' என்று சொல்லியாவது தமிழ் இனத்தைப் பிரிக்கலாமென்றால், அது வெற்றிகரமாக முடிவதற்கு இல்லாமல் பார்ப்பான் (ஆரியன்) வந்து, ''நானும் தமிழன்தான்'' என்று கூறிக்கொண்டு உள்ளே புகுந்துவிடுகிறான்.

*(''விடுதலை'' – அறிக்கை, 11.10.1955)*

**20.** திராவிட நாடு எது? இதற்கு முன் – 1956 க்கு முன் இருந்த சென்னை மாகாணத்தை நான் 'திராவிட நாடு' என்று சொன்னேன். அப்பொழுது

www.tamilarangam.net

மலையாளம், கன்னடம், ஆந்திரம் பிரிந்திருக்கவில்லை. வெள்ளையன் இந்த நாட்டை விட்டுப் போய்விட்ட பிறகு வடநாட்டானும் இந்த நாட்டுப் பார்ப்பானும் சேர்ந்துகொண்டு இனிமேல் நமக்கு ஆபத்து என்று கருதி, நான்கு பிரிவுகளாக வெட்டிவிட்டார்கள். இப்பொழுது நம்மோடு ஒட்டிக் கொண்டிருந்த கன்னிக் கோட்டை மங்களூர் மாவட்டங்களும் மலையாளம் கன்னட நாடுகளுடன் சேரப் போகின்றன. இப்பொழுது நம்முடன் மலையாள, கன்னட நாடுகளின் சம்பந்த மில்லாமல் தனித் தமிழ்நாடாக ஆகிவிட்டோம். ஆகவே இதை இப்பொழுது 'தமிழ்நாடு' என்று சொல்லலாம். முன்பு அவர்களையும் சேர்த்துக் கொள்ளலாம் என்று சொன்னோம். ஆனால் அவர்கள் பிரிந்து தனியாகப் போவதிலேயே கவனத்தைச் செலுத்திப் பிரிந்து போய்விட்டார்கள். நாம் நிபந்தனையற்ற அடிமை களாய் உள்ளோம்.

*(திருவண்ணாமலையில், 19.8.56 இல் சொற்பொழிவு - ''விடுதலை'' , 29.8.56)*

**21.** நாம் இந்த நாட்டில் உரிமை உடைய மக்களாயிருந்தும், சமுதாயத்தில் இழிந்தவர்களாகவும் பொருளாதாரத்தில் தாழ்த்தப்பட்டவர்களாகவும் இருந்து வருகிறோம். இதை மாற்ற வேண்டிய முயற்சிகள் பல நடந்தும், நம் நிலையிலே சிறிதும் மாற்றம் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. காரணம் என்னவென்று யோசித்தோம். முன்னேற்றம் அடைந்துள்ள நாட்டாரைப் பார்த்தோம். அதன்படி ஒரு நாட்டு மக்களோ அல்லது சமுதாயமோ முன்னேற வேண்டுமானால், அந்த



மக்களுக்கு அல்லது அந்த சமுதாயத்தவருக்கு பொது உணர்ச்சியையும் ஒற்றுமை மனப்பான்மையையும் உண்டாக்கக்கூடிய இலட்சியச் சொல் அல்லது குறிச்சொல் ஒன்று தேவை என்பது விளங்கியது. அதே சமயத்தில் நம் நிலையைச் சிந்தித்துப் பார்த்தபோது 'இந்து', 'இந்தியா' என்று நமக்குப் புரியாத சொற்களை –நமக்கு சம்பந்தமில்லாத மொழிகளை– சொல்லிக்கொண்டு வந்தோமே தவிர, உண்மையான ஒற்றுமை ஏற்படத்தக்க முறையைக் கையாள வேண்டுமே என்ற சிந்தனை நம் தலைவர்களுக்குள் ஏற்படவே இல்லை.

*(லால்குடியில், 23.5.1944 இல் சொற்பொழிவு - ''குடி அரசு'', 3.6.1944)*

**22.** தமிழர் என்பது மொழிப் பெயர், திராவிடர் என்பது இனப் பெயர். தமிழ் பேசும் மக்கள் யாவரும் தமிழர் என்ற தலைப்பில் கூற முடியும். ஆனால் தமிழ் பேசும் அத்தனை பேரும் திராவிடர் ஆகிவிட முடியாது. இனத்தால் திராவிடனான ஒருவன் எந்தச் சமயத்தைச் சார்ந்தவனாக இருந்தாலும், எந்த மொழி பேசுபவனாக இருந்தாலும் அவன் திராவிடர் என்ற தலைப்பில்தான் சேருவான். ஆகையால் திராவிட மொழி தமிழ் என்ற காரணத்திற்காக தமிழ் பேசும் திராவிடன் அல்லாத ஒருவன் மொழி காரணமாக மட்டுமே தன்னைத் திராவிடனென்று கூறிக்கொள்ள முடியாது. 'தமிழர்' என்றால் பார்ப்பானும் தன்னைத் தமிழனென்று கூறிக்கொண்டு நம்முடன் கலந்துகொண்டு மேலும் நம்மைக் கெடுக்கப் பார்ப்பான். திராவிடர் என்றால் எந்தப் பார்ப்பானும் தன்னைத் திராவிடன் என்று

www.tamilarangam.net

கூறிக்கொண்டு நம்முடன் சேர முற்பட மாட்டான். அப்படி முன்வந்தாலும் அவனுடைய ஆசார அனுஸ்டானங்களையும் பேத உணர்ச்சியையும் விட்டுத் திராவிடப் பண்பை ஒப்புக் கொண்டு அதன்படி நடந்தாலொழிய நாம் அவனைத் திராவிடன் என்று ஒப்புக் கொள்ள மாட்டோம்.

(நூல் : "மொழியாராய்ச்சி" - வள்ளுவர் பதிப்பகம், பவானி -1948)

பெரியாரின் கூற்றுக்கள் / மேற்கோள்கள்

**3. தாழ்த்தப்பட்டவர்களை இயக்கமாக்குவதிலும், போராடச் செய்வதிலும் போதிய முனைப்புக் காட்டவில்லை.**

பெரியார்மீது வைக்கப்படும் விமர்சனங்களில் ஓரளவு நியாயமானது இதுவே எனத் தோன்றுகிறது. குறைந்தபட்சம் 1954 க்குப் பிறகாவது அவர் தாழ்த்தப்பட்டவர் எழுச்சியில் கவனத்தைக் குவித்திருக்கலாமே என்று தோன்றுவது இயல்பு. ஆனால் இதிலும் அவரது அக் காலத்திய நடவடிக்கை களை முழுமையாக ஆய்வுசெய்துவிட்டுத்தான் எதையும் கூறமுடியும். இருந்தபோதும் ஒன்றைத் தெளிவாகக் காணமுடிகிறது. பார்ப்பன கருத்தியல் மேலாதிக்கம் அவர் விரும்பிய அளவு 1973 வரை தகர்க்கப்படவில்லை என்பது. (இன்றைய நிலை குறித்து யோசிப்பது வாசகர் பொறுப்பு). எனவே பிரதான எதிரியை அவர் இறுதிவரை வெல்லவில்லை.





தாழ்த்தப்பட்டவரிடம் பேசும்போது அவர் உங்களைக் கொடுமைப்படுத்தும் பிற மேல் ஜாதியினர் என்றுதான் கூறுகிறார். தான் அத்தகையதொரு மேல் சாதியினன் என்பதையும், தனது இயக்கம் பெரும்பான்மை அத்தகைய மேல் சாதியினர் இயக்கம் என்பதையும் உணர்ந்திருப்பதற்கான தடயங்கள் அவர் பேச்சில் உள்ளன. வேளாளர், செட்டியார், முதலியார் எனப் பெயர்சொல்லித் தாக்காததைத் தவிர வேறு எந்தச் சமரசமும் அவர் செய்துகொள்ளாததுடன், உண்மை நிலைகளைத் திரித்துக் கூறுவது போன்றவற்றைச் செய்ததாகக் காணமுடியவில்லை. இன்றும் SC-BC ஒற்றுமை குறித்து பேசப்பட்டாலும் நடப்புலகில் அதற்கான அடிப்படைகளை உருவாக்குவது எப்படி என்பது சிக்கலான கேள்வியாகவே இருக்கும்போது பெரியாரிடம் மட்டும் ரொம்பவும் அதிகமாக எதிர்பார்ப்பதற்கில்லை. எப்போதுமே தாழ்த்தப்பட்டவர்களுக்கான பிரச்சாரம் அவரது பிரச்சாரத்தின் இன்றியமையாத பகுதியாக இருந்து வந்தது என்பதை மட்டும் இங்கு மீண்டும் சுட்டிக் காட்டமுடியும்.

பெரியாரின் கூற்றுக்கள் / மேற்கோள்கள்

**23.** நாங்கள் ஆதித் திராவிடர்களைப் பற்றிப் பேசும்போது, பார்ப்பனர்கள் மனவருத்தம் அடைவதில் அர்த்தம் உண்டு. ஆனால் பார்ப்பனரல்லாதார் மனவருத்தம் அடைவதில் சிறிதும் அர்த்தமில்லை. அது வெறும் முட்டாள்தனமும் மானமற்ற தன்மையுமே ஆகும். ஏனெனில் தமது சமூகத்தில்

www.tamilarangam.net

பார்ப்பனர் என்கின்ற கூட்டத்தாராகிய 100 க்கு 3 வீதமுள்ள ஜனத்தொகை நீங்கி, மற்ற ஜனங்களுக்கு இந்த நாட்டில் சூத்திரன் (அடிமை), ஆதித் திராவிடன் என்கின்ற பட்டமில்லாமல் வேறு எந்தப் பட்டத்தோடாவது யாராவது இருக்க முடியுமா? இருக்கிறார்களா? என்று கருதியும், அனுபவத்தையும் கொண்டு பாருங்கள்! சூத்திரன் என்கின்ற 'காலத்தில்' நீங்கள் பதியப்பட்டிருப்பதில் உங்களுக்கு சிறிதளவாவது மானம் இருந்தால், பறையன் என்கிற பட்டம் போகவேண்டும் என்பதில் கடுகளவாவது வருத்தம் இருக்குமா?

'பறையன்' பட்டம் போகாமல், உங்களுடைய சூத்திரப் பட்டம் போய்விடும் என்று கருதுகின்றீர்களேயானால், நீங்கள் வடிகட்டின முட்டாள்களே ஆவீர்கள்.

(நாகையில், 3.10.1931 இல் சொற்பொழிவு -''குடி அரசு'', 11.10.1931)

**24.** நம் நாட்டில் திராவிட மக்களுக்குள்ளாகவே திராவிடர் ஆதித் திராவிடர் என்கின்ற ஒரு பிரிவு இருக்கிறது என்பதோடு, ஆதித் திராவிட சமூகம் மிகப் பெரிய எண்ணிக்கை கொண்ட சமூகமாக இருந்துவருகிறது. திராவிட நாட்டில் எப்படி வெளியிலிருந்து வந்த ஆரியர்களுக்கு திராவிட மக்கள் தீண்டப்படாத வர்களாக இருக்கிறார்களோ, அப்படி திராவிடர்களுக்கு ஆதித் திராவிடர்கள் அதைவிட மேம்பட்ட தீண்டப்படாதவர்களாக இருக்கிறார்கள். இந் நிலைமை திராவிட சமுதாயத்திற்கே ஒரு பெரும் மானக்கேடான நிலைமையாகும் என்பதோடு, திராவிடர்களை ஆரியர்கள் தீண்டப்படாத மக்களென்று



வகுத்திருப்பதையும் நடத்துவதையும் அரண் செய்கிறது. ஆகையால் ஆதித் திராவிடர் என்கின்ற பெயரே மாற்றப்பட்டு, இருவரும் திராவிடர்கள் அல்லது தமிழர்கள் என்கின்ற பெயராலேயே வழங்கப்பட வேண்டும் என்பதும், திராவிடர்களுக்கும் ஆதித் திராவிடர்களுக்கும் சமுதாயத் துறையிலுள்ள எல்லா வித்தியாசங்களும் பேதங்களும் ஒழிந்து ஒரே சமூகமாக ஆகவேண்டும் என்பதும் எனது ஆசை.

(திருவாரூரில், 24,25.8.1940 இல் ஜஸ்டிஸ் கட்சி மாநாட்டில் தலைமைச் சொற்பொழிவு - ''குடி அரசு'')

**25.** தவிர, இங்கு செய்யும் பிரச்சாரத்தை பார்ப்பனர்களுக்கும், அல்லாதவர்களுக்கும் போய்ச் செய்யட்டும் என்று அவர் சொல்லுகின்றார். பார்ப்பனர்கள் நமது பிரச்சாரத்தினால் புத்தி திருந்தி விடுவார்கள் என்பது சுத்தப் பைத்தியக்காரத்தனமாகும். அவர்கள் தெரியாதவர்காயிருந்தால் நியாயம் சொல்லலாம். நன்றாய்த் தெரிந்தே, எங்கு தங்கள் ஆதிக்கமும் சோம்பேறிப் பிழைப்பும் போய்விடுகின்றனவோ என்று சயநலம் கருதி, குரங்குப் பிடிவாதமாய் இருப்பவர்களை நாம் எந்தப் பிரச்சாரத்தால் எப்படி மாற்றக்கூடும். பார்ப்பனர் அல்லாதவர்களோ (முக்கால்வாசிப்பேர்) பார்ப்பனர்களைப் பின்பற்றுபவர் களாகவும், 'பார்ப்பானுக்கு தாசிமகனாய் இருந்தாலும்சரி, பறையனுக்கு மேலே இருந்தால் போதும்' என்று முட்டாள்தனமாய்க் கருதிக் கொண்டு இருக்கிறவர்கள் என்றாலும், நம்மால் கூடியதைச் செய்துதான் வருகிறோம்.

www.tamilarangam.net

எதற்கும் உங்கள் முயற்சியும் சுயமரியாதை உணர்ச்சியும் இல்லாவிட்டால் ஒரு காரியமும் நடவாது.

*(சென்னை நேப்பியர் பார்க் இல், 22.10.1929 இல் சொற்பொழிவு - "குடி அரசு", 27.10.1929)*

**26.** தாழ்த்தப்பட்ட மக்கள் விஷயமாய் என்னுடைய அபிப்பிராயம் நீங்கள் தெரிந்ததேயாகும். தாழ்த்தப்பட்ட மக்களை அவர்களுக்கு, மற்றவர்கள் இழைத்துவரும் கொடுமையிலிருந்து விடுதலை செய்ய வேண்டும் என்பதை உண்மையான கருத்துடன் பார்த்தால் அது புரட்சி வேலையேயாகும். ஏனெனில் தாழ்த்தப்பட்ட மக்களின் நிலை பெரிய அஸ்திவாரத்தின் மீதே கட்டப்பட்டிருக்கின்றது. எப்படியென்றால், தாழ்த்தப்பட்ட மக்கள் கீழ்ச்சாதி மக்கள், தீண்டப்படாதவர்கள் என்பவர்கள் எல்லாம் பிறவியிலேயே கீழ்மைத் தன்மை அடைந்தவர்கள் என்றும், அவர்கள் கடவுளாலேயே அந்தப்படி பிறப்புவிக்கப் பட்டவர்கள் என்றும், அதற்கு மதங்களும் மத சாஸ்திரங்களுமே ஆதாரங்கள் என்றும், கடவுள் செயலையோ மத விதிகளையோ யாரும் மாற்றக்கூடாது என்றும், அவை மாற்றுதலுக்குக் கட்டுப்பட்டவை அல்ல என்றும் சொல்லப் படக்கூடிய ஒரு பலமான அஸ்திவாரத்தின்மீது கட்டப்பட்டிருக்கிறது

*(சீர்காழியில், 10.7.1935 இல் சொற்பொழிவு - "குடி அரசு", 28.7.1935)*





## பெரியாரும் எதிர்க் கலாச்சாரமும் :

அரசியல் கிளர்ச்சிகளை மக்கள் தயாராக உள்ள அளவு நடத்த வேண்டும் என்று கருதிய பெரியார், மக்கள் ஏற்றுக் கொண்ட கருத்துக்களை மிகக் கடுமையாகத் தாக்கியே பிரச்சாரம் செய்கிறார். "கடவுள் என்பது பித்தலாட்டம்; கடவுளை நம்புவன் முட்டாள்; அன்பே சிவம், சிவமே வெங்காயம்.... என்றெல்லாம் தொடங்கி ஏராளமான விஷயங்களில் அன்று பிரபலமாகும் சிந்தனை யோட்டத்திற்கு எதிராக நின்று குரல் கொடுத்தும், இந்திய மரபு, கலாச்சாரம் போன்றவற்றை காட்டுமிராண்டித்தனம், முட்டாள்தனம் என்று இழித்துரைத்தும், விநாயகர் சிலை உடைத்தும், இராமர் படம் எரித்தும் இயக்கம் நடத்திய அவரை மக்களுக்கு வால் பிடிப்பவர் என்றெல்லாம் சொல்வதற்கு முன் எச்சரிக்கையுணர்வுடன் சிந்திக்க வேண்டும். இதிலெல்லாம் ஒரு கவர்ச்சி உண்டாகும்; பரபரப்பூட்டி புகழ் பெறலாம் என்றால் இது அரசியல் புகழ் பெற மிகமிகக் கடினமான வழியென்பதையும், இல்லாவிட்டால் எல்லோருமே இதைச் செய்யலாமே என்றும் சிந்தித்துப் பார்க்க வேண்டும். என்றுமே கலகபூர்வமாக பேசுபவர்களும், நடப்பவர்களும் தங்கள் சுய அகந்தையின் பொருட்டும் அதிகப் புகழ் பெறவுமே அவ்விதம் நடந்து கொள்கிறார்கள் என்றே ஆதிக்கம் சார்ந்த சக்திகள் வர்ணித்துக் கொண்டு வந்துள்ளன. இன்றைய நிலையில் மீட்புவாதம், மத புனர் நிர்ணயிப்புவாதம், ஏகாதிபத்திய/முதலாளிய மனிதாபினவாதம், நுகர்பொருள் கலாச்சாரம், உயர்தொழில் நுட்ப ஆதிக்கம், நவசாதீயம்,

www.tamilarangam.net

ஆணாதிக்கம், பழைய புதிய தீண்டாமை வடிவங்கள், ஆதிக்கப் போட்டியில் உருவாக்கப்படும் சொல்லாடல்கள் ஆகிய அனைத்தையும் சமாளிக்க எதிர்க் கலாச்சார நடவடிக்கைகள் எதிர்நோக்கியிருக்க வேண்டிய நிலையில், பெரியாரிடமிருந்த இதற்கான கூறுகளைக் கவனமாகப் பரிசீலிக்க வேண்டி யுள்ளது. நிலைபெற்றிருந்த நம்பிக்கைகள் மதிப்பீடுகள் போன்றவற்றை அவர் கடுமையாக மறுத்துப் பேசியதை பட்டியலிட்டால் அது நீண்டுகொண்டே போகும். வெகுஜன சொல்லாடல் களத்தில் அவருடைய பல உச்சரிப்புகளுக்கு முன்னோடிகள் யாருமிருந்தார்களென்றும் தோன்றவில்லை. (தமிழைப் பொறுத்தவரையில்) சிலவற்றைப் பார்ப்போம்.

| நிலவிய பேச்சு | பெரியார் கூற்று |
|---|---|
| மனிதப் பிறவி உயர்வானது | மனிதப் பிறவி மிருகங்களை விட இழிவானது. |
| பகுத்தறிவு மனிதனின் உயர்குணம் | பகுத்தறிவுள்ள மனிதனின் பலவீனம் அல்லது இழிகுணம். (அதாவது மனிதனை மிருகங்க ளிடமிருந்து வேறுபடுத்தும் அறிவுப் பண்புகள் என்ற அர்த்தத்தில்) |
| பாவ புண்ணியங்களுண்டு | பாவ புண்ணியங்களில்லை. |
| மனிதவாழ்க்கை இலட்சியமுள்ளது | மனித வாழ்க்கை இலட்சியமற்றது. |
| ஆன்மா, மறுபிறவி உண்டு | ஆன்மா கிடையாது. மனித உடல் பொருண் மைத் தன்மையுடையதே. |
| மனிதனுக்குக் கட்டுப்பாடுகள் தேவை | மனிதனுக்குக் கட்டுப்பாடுகள் தேவை யில்லை. |
| அந்நியராட்சி இழிவு | அந்நியராட்சி இழிவில்லை. இந்தியப் பார்ப்பன கலாச்சாரமே இழிவு. |
| தொழிற்சங்கம் தொழிலாளர் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்ற வழிவகுப்பது | தொழிற்சங்கம் தொழிலாளர் பிரச்சினையை கூலிப் பிரச்சினையாக மாற்றக்கூடியது. தொழிற்சங்கத் தலைமை துரோகத்தனமாவ தற்கு வாய்ப்புகள் அதிகம். |
| கற்பு உயர் ஒழுக்கம் | கற்பு தேவைக்கேற்றபடி, சமூகங்களால் உருவாக்கிக் கொள்ளப்படுவது. பெண்ணுக்கு கற்பை நிர்ப்பந்திப்பது மோசடி. |
| பிள்ளை பெற்று வளர்ப்பது வாழ்வின் இன்றியமையாத பகுதி | பிள்ளை பெற்று வளர்ப்பது அவசியமில்லை (பெண் விடுதலைக்கு எதிரானது) |

இவை மேலோட்டமாகக் கொடுக்கப்படுபவை. பல விசயங்களில் அவர் கூற்றுக்கள் இடத்திற்கிடம் முரண்பட்டிருக்கும். அவருடைய பேச்சுக்களை ஆழமாக வாசிப்பதின்மூலம் பொதுவாக அவரிடம் வெளிப்படும் எதிர்க்கலாச்சாரத் தொனியை வெளிக் கொணரலாம். அவ்வாறு செய்வது இக் கட்டுரையை மிக நீண்டதாக்கிவிடும் என்பதுடன், அது வாசகர்களுடன் இணைத்துச் செய்யும் கூட்டுச் செயற்பாடாக மாறுவதே பொருத்தம்.

இக் கட்டுரையில் கூறப்பட்டதைவிட அவருடைய மேற்கோள்கள் அதிகம் உணர்த்த முடியும். ''பூணூல் போடுவதை சட்டப்படி குற்றமானதாக்க வேண்டும்!'', ''நாற்று நடும் பாப்பாத்தியைக் கண்டதுண்டா'' போன்றவற்றில் கலாச்சாரப் புரட்சிக்கான அடித்தளத்தையும், ''திருமணத்தை சட்டவிரோதமானதாக்க வேண்டும்'' என்பதில் தீவிர கலகக் குரலையும் அடையாளம் காணுவதாயிருந்தால்.... பெண்கள், தாழ்த்தப்பட்டோர் பற்றிய அவர் கருத்துக்களின் முக்கியத்துவத்துவம் வலியுறுத்தப்பட வேண்டியிருப்பதல்ல.

பெரியாரின் கூற்றுக்கள்/மேற்கோள்கள்

**27.** உலகில் கற்பு, காதல் என்பன போன்ற வார்த்தைகள் எப்படி பெண்மக்களை அடிமைப்படுத்தி அடக்கி ஆளவென்று ஏற்படுத்திப் பயன்படுத்தப்பட்டு வருகின்றனவோ, அதுபோலவேதான் ஒழுக்கம் எனும் வார்த்தையும் எளியோரையும் பாமர மக்களையும் ஏமாற்றி மற்றவர்கள் வாழ பயன்படுத்திவரும் ஒரு சூழ்ச்சி ஆயுதமேயல்லாமல், இதில் உண்மையோ சத்தோ ஒன்றுமே கிடையாது. கற்பு, காதல், சத்தியம், நீதி, ஒழுக்கம் என்பனவெல்லாம் ஒரே தாயின் பிள்ளைகள். அதாவது குழந்தைகளைப் பயமுறுத்த பெரியவர்கள் ''பூச்சாண்டி! பூச்சாண்டி!'' என்பதுபோல இவை எளியோரையும் பாமர மக்களையும், வலுத்தவர்களும் தந்திரக்காரர்களும் ஏமாற்றச் செய்யும் ஒரு பெரும் சூழ்ச்சியாகும்.

எப்படி குழந்தைப் பருவம் உள்ளவரை பூச்சாண்டிக்கு மக்கள் பயப்பட வேண்டியிருக்கின்றதோ, அதுபோலவேதான் அறிவும், சக்தியும் மக்களுக்கு ஏற்படும்வரை மேற்கண்ட ஒழுக்கம் முதலிய பூச்சாண்டிகளுக்கு அவர்கள் பயப்பட்டுத் தீரவேண்டியிருக்கிறது.

**28.** உண்மையிலேயே ஒழுக்க ஈனம் என்பது ஒன்று உண்டென்றும், அது திருட்டு, பொய், ஏமாற்றம் பொன்றதாகியதென்றும் சொல்வதனால் அந்தக் குணங்கள் பெரிதும் நிலையாய் குடிகொண்டிருக்கும் இடங்கள், அரசர்கள், குருமார்கள், வியாபாரிகள், வக்கீல்கள், தேசியவாதிகள் போன்ற கூட்டத்தார்களிடமே ஆகும்.

*(மேற்கோள் 27–28, பக்கம் 15–17, பகுத்தறிவுமலர்–3, இதழ்–9, 1.1.1938)*

**29. மாறன் :** இன்னொரு கேள்வி. இப்போ காலத்திலே ஒழுக்கம் குறைஞ்சு வருது. அப்படீன்னு எல்லோரும் சொல்றாங்க. அரசாங்கத்தின் தண்டனைக்குப் பயமிருக்கணும் அல்லது ஒருவிதமான ஆண்டவன் நம்பிக்கையிலிருந்து பயப்படணும். இந்த ரெண்டும் இல்லாமல் போயிட்டதே இப்போ. இந்த ஒழுக்கம் நல்லா இருக்கிறதுக்கு என்ன வழி ?

www.tamilarangam.net

**பெரியார் :** மன்னிக்கணும், அய்யா. இதை ஒன்றும் கட்டுப்படுத்த முடியாது. இனிமேல் எந்தக் காரணம் சொல்லியும் மக்களைக் கட்டுப்படுத்தவே முடியாது. ஒரு மட்டம் தாராளமாகப் போயி, மறுபடியும் அவங்க ஏதாவது இதுக்கு என்ன பண்றதுன்னு திரும்பினா உண்டே தவிர, இப்ப ஒழுக்கமா, நாணயமா, நேர்மையா மனுசன் யாராவது சிந்திக்க இப்ப வாய்ப்பு இல்லை. எல்லோருக்குந்தான். அரசியலில் ஒழுக்கமா இருக்க முடியலே. எவனாயிருந்தாலும் மதத்திற்குக்கூட, காட்டிக்க முடியுதே தவிர, தத்துவப்படி நடக்க எவனாலும் முடியலே. ஒழுக்கம்னு இன்னொருவனுக்குச் சொல்றமே தவிர, அந்த வாய்ப்புக் கிடைச்சா நாமும் அந்தத் தவறுபண்ணத் தயாரா இருக்கோம். அனுபத்திலே சொல்றேன். நான் அப்படி இருக்கும்போது சும்மா ஒழுக்கம்னு சொல்லி இன்னொருத்தனை ஏமாத்திறதிலே என்ன இலாபம் சொல்லுங்க.

**மாறன் :** ஒரு சமுதாய நல்வாழ்வுக்கு.

**பெரியார் :** என்ன நல்வாழ்வு? சமுதாயத்துக்கு என்ன நல்வாழ்வு வரும்? நீங்க பணக்காரன்! நான் ஏழை. இவங்களுக்கு நல்வாழ்வு எங்கே வரும்? இதையெல்லாம் காப்பாத்துறதா இருந்தா அதைத்தான் ஒழுக்கம்னு நினைக்கிறோம். உங்ககிட்டே பணம் திருடக்கூடாது நான், நீங்க வியாபாரி, என்னை மோசம் பண்ணி பணம் சேர்த்துடலாம்னு நினைக்கிறீங்க. அப்ப எப்படி ஒழுக்கம் வரும்?

*(5.1.1970 இல் திருச்சி வானொலி ஒலிபரப்பு)*

30

## பெரியாரியம்

**30.** ஒரு பூச்சியின் செய்கைக்கு பாவம், புண்ணியம் உண்டானால்தான் ஒரு மனிதனின் செய்கைக்கு பாவம், புண்ணியம் உண்டாக முடியும். மனிதனுக்குள்ள பகுத்தறிவு என்பது கடவுளால் ஒரு தனிப்பட்ட காரியத்திற்குக் கொடுக்கப்பட்டது என்றால், ஒரு யானைக்குள்ள தும்பிக்கை, ஒரு நாரைக்குள்ள நீண்ட மூக்கு, ஒரு முள்ளம்பன்றிக்குள்ள செதில் முட்கள், தேளுக்குள்ள கொடுக்கு, பாம்புக்குள்ள விஷம் போன்றவைகளெல்லாம் கடவுளால் தனிப்பட்ட காரியங்களுக்காகக் கொடுக்கப்பட்டவை என்றுதானே சொல்ல வேண்டும்? ஆதலால் ஒரு யானைக்கு தும்பிக்கை விசேச உறுப்பாகவும் நீண்ட அவயமாகவும் இருப்பதுபோலவே, மனிதனுக்கு பகுத்தறிவுக்குள்ள நரம்புக் கூட்டும் மூளையின் பரிணாம –அதாவது அதிக சிந்தனா சக்திக்குள்ள– உறுப்புக்கள் என்பவை விஷேச உறுப்பாகவோ விஷேச சக்தியாகவோ இருக்கின்றதென்பதேயல்லாமல், அதற்கு மாத்திரம் ஒரு தனி விஷேசத்துவம் இல்லை என்பதே எனது அபிப்பிராயம்.

**31.** இதுபோன்ற எத்தனையோ 'கெட்ட' குணங்கள் மனித ஜீவன் தனது பகுத்தறிவின் பயனாகவே உடையதாயிருக்கிறது. ஆகையால் பகுத்தறிவின் 'மேன்மையால்' மனித ஜீவன் சிறந்தது என்று எப்படிச் சொல்லிக் கொள்ள முடியும் என்பதே நமது கேள்வியாகும். மேலும் மேற்கண்ட காரணங்களாலும் மற்றும் பல காரணங்களாலும் மனித ஜீவன்களில் பெரும்பான்மையானவை, மற்ற ஜீவராசிகளைவிட இழிவுத் தன்மையுடையவை என்பதும் நமது அபிப்பிராயமாகும். சாதியின் பேரால் உயர்வு-தாழ்வு, மதத்தின் பேரால் வேற்றுமை

www.tamilarangam.net

உணர்ச்சி, தேசத்தின் பேரால் குரோதத் தன்மை முதலான இழிகுணங்கள் மனிதனிடமே அதிகமாகக் காண்கிறோம். மற்றும் கடவுளின் பேரால் மேல்-கீழ் நிலை முதலாகிய அயோக்கியத் தன்மைகள் மனித ஜீவனிடம் உண்டு. பகுத்தறிவின் காரணமாக மனித ஜீவன் உயர்ந்தது என்று சொல்லவேண்டுமானால் மேற்கண்ட கெட்ட/தீய/ இழிவான/ அயோக்கியத்தனமான குணங்கள் என்பவைகள் எல்லாம் மனிதனிடம் இல்லாமல் இருக்க வேண்டும். அப்பொழுது தான் மற்ற 'பகுத்தறிவில்லா' ஜீவராசிகளைவிட மனிதஜீவன் மூளை வீசேஷம் முதலிய அவயவத்தை நன்மைக்காகப் பிரயோகித்துக் கொண்ட ஜீவன் என்று சொல்லப்படும். அதில்லாத நிலையில், எவ்விதத்திலும் மனித ஜீவன் மற்ற ஜீவ பிராணிகளைவிட உயர்ந்ததல்ல என்பதோடு பலவிதத்திலும் தாழ்ந்தது என்று சொல்ல வேண்டும்.

*(30,31 ''குடி அரசு'' கட்டுரை-3.9.1933)*

**32.** தந்திரத்திலும் வஞ்சகத்திலும் மக்களின் அறியாமையினாலும், ஆட்சிசெய்யும் அரசாங்கத்தைவிட துப்பாக்கியாலும் பீரங்கியாலும் ஆட்சி செய்யும் அரசாங்கம் மேலானது.

*(பகுத்தறிவு-மலர் 4, இதழ் 3 , 1.7.1938 இதழின் உள் அட்டையில் ஈ.வெ.ரா மேற்கோள்)*

**33.** நம் கடவுள் - சாதி காப்பாற்றும் கடவுள்
நம் மதம் - சாதி காப்பாற்றும் மதம்



நம் அரசாங்கம் - சாதி காப்பாற்றும் அரசாங்கம்
நம் இலக்கியம் - சாதி காப்பாற்றும் இலக்கியம்
நம் மொழி - சாதி காப்பாற்றும் மொழி

*(நூல் : ''சாதி ஒழிப்பு'' -1961-சென்னையில், 16.9.1961 இல் சொற்பொழிவு)*

**34.** ஏனெனில் சமுதாய சீர்திருத்தம் என்றால் ஏதோ இங்கும் அங்கும் ஆடிப்போன, துவண்டுபோன, இடிந்துபோன பாகங்களை சுரண்டி, சூறுகுத்தி, மண்ணைக் குழைத்து சந்துபொந்துகளை அடைத்துப் பூசி மெழுகுவது என்றுதான் அநேகர் கருதியிருக்கிறார்கள்.

ஆனால் நம்மைப் பொறுத்தவரை, நாம் அம்மாதிரித் துறையில் உழைக்கும் ஒரு சமுதாய சீர்திருத்தக்காரனல்ல என்பதை முதலில் தெரிவித்துக் கொள்கிறோம். மற்றபடி நாம் யார் என்றால் என்ன காரணத்தினால் மக்கள் சமுதாயம் ஏன் சீர்திருத்தப்பட வேண்டிய நிலைக்கு வந்தது என்பதை உணர்ந்து, உணர்ந்தபடி மறுபடி அந்நிலை ஏற்படாமல் இருப்பதற்கு நம்மால் இயன்றதைச் செய்யும் முறையில், அடியோடு பேர்த்து அஸ்திவாரத்தையே புதுப்பிப்பது என்கின்றதான தொண்டை மேற்கொண்டிருக்கின்றபடியால், சமுதாய சீர்திருத்தம் என்பதைப் பற்றி மற்ற மக்கள் அனேகர் நினைத்திருந்ததற்கு நாம் மாறுபட்ட கொள்கையையும் திட்டத்தையும் செய்கையையும் உடையவராய்க் காணப்பட வேண்டிய நிலைமையில் இருக்கின்றோம்.

www.tamilarangam.net

இதனாலேதான் பலவற்றில் உலக மக்கள் உண்டு என்பதை இல்லை என்றும், சரி என்பதை தப்பு என்றும், தேவை என்பதை தேவையில்லை என்றும், கெட்டது என்பதை நல்லது என்றும், நல்லது என்பதை கெட்டது என்றும், காப்பாற்றப்பட வேண்டும் என்பதை ஒழிக்க வேண்டும் என்றும், மற்றும் பலவாறாக மாறுபட்ட அபிப்பிராயங்களைக் கூறுவோராக, செய்வோராகக் காணப்படவேண்டிய நிலையில் இருக்கின்றோம். ஆனால் நம்போன்ற இப்படிப்பட்டவர்கள் உலகில் நல்ல பெயர் சம்பாதிப்பதும், மதிக்கப்படுவதும் பழிக்கப்படாமல்/குற்றம் சொல்லப்படாமல் இருப்பதும் அருமை என்பது மாத்திரம் நமக்கு நன்றாய்த் தெரியும்.

**35.** என்னைப் பொறுத்தவரை நான் கூறுவேனாகில், மனிதப் பிறவியானது ஒரு இலட்சியமற்ற பிறவி என்றே கூறுவேன். மனிதன் பிறக்கிறான்; பற்பல எண்ணங்களை எண்ணுகிறான்; பலவகைகளை இச்சிக்கிறான்; எவ்வளவோ காரியங்களில் விருப்பம் கொண்டு அவைகளை நிறைவேற்ற முற்படுகிறான். ஒருசிலவற்றில் ஆசை நிறைவேறுகிறது; மற்றவைகளில் ஏமாற்றம் அடைகிறான்; இறுதியில் செத்துப் போகிறான். மனிதன் பிறந்தது முதல் செத்துப்போகும்வரை இடையில் நடைபெறுபவைகள் எல்லாம் அவனின் சுற்றுச் சார்பு, பழக்க வழக்கம் இவைகளைப் பொறுத்து நடக்கின்றன. எனவே மனித வாழ்வு இலட்சியமற்ற வாழ்வு என்பது என் கருத்து. இதை அனேக அறிஞர்களும் ஒப்புக் கொண்டிருப்பதைப் பார்க்கிறேன். மேலும் இக் கருத்து யாராலும் மறுக்க முடியாததுமாகும்.



பிறப்பும் இறப்பும் இயற்கையே. மனிதன் ஏன் பிறக்கிறான் என்று யாராவது கூற முடியுமா? பிறந்து எதற்காக வாழ்கிறான், எதற்காக இறந்து போகிறான் என்று யார் கூற முடியும்? இதைக் கேட்டால் ''அது கடவுள் செயல்; கடவுள் பிறப்பிக்கிறார்; காப்பாற்றுகிறார்; சாகடிக்கிறார்'' என்றுதான் கூறமுடியுமே தவிர, வேறு சரியான காரணம் கூற முடியுமா? அவன் எந்தக் குறிப்பிட்ட இலட்சியத்தின்மீது பிள்ளை வேண்டுமென்று பிள்ளையைப் பெறுகிறான் என்றால் –எதற்காகப் பிள்ளை வேண்டும் என்று கூற முடியுமா? அவன் எந்தக் குறிப்பிட்ட இலட்சியத்தின்மீது தனக்குப் பிள்ளை வேண்டும் என்று முயற்சிக்கிறான் என்று அவனைக் கேட்டால்கூடத் தெரியாது.

*(திருச்சி பெரியார் ஆசிரிய பயிற்சிப் பள்ளியில், 17.3.1956 இல் சொற்பொழிவு*
*– ''விடுதலை'' , 21.3.1956)*

**36.** பெண்கள் விடுதலை பெறுவதற்கு இப்போது ஆண்களைவிடப் பெண்களே பெரிதும் தடையாக இருக்கிறார்கள். ஏனெனில் இன்னமும் பெண்களுக்கு தாங்கள் முழு விடுதலைக்குரியவர்கள் என்கின்ற எண்ணமே தோன்றவில்லை. தங்களுடைய இயற்கைத் தத்துவங்களின் தன்மையையே தாங்கள் ஆண்களுக்கு அடிமையாகக் கடவுள் படைத்திருப்பதன் அறிகுறிகளாய்க் கருதிக் கொண்டிருக்கிறார்கள். எப்படியெனில், பெண் இல்லாமல் ஆண் வாழ்ந்தாலும் வாழலாம்; ஆனால் ஆண் இல்லாமல் பெண் வாழமுடியாதென்று ஒவ்வொரு

www.tamilarangam.net

பெண்ணும் கருதிக்கொண்டிருக்கிறாள்.

அப்படி அவர்கள் கருதுவதற்கு என்ன காரணம் என்று பார்ப்போமானால், பெண்களுக்கு பிள்ளைகள் பெறும் தொல்லை ஒன்று இருப்பதனால் தாங்கள் ஆண்கள் இல்லாமலேயே வாழ முடியும் என்பதை ருசுப்படுத்திக்கொள்ள முடியாதவர்களாக இருக்கிறார்கள். ஆண்களுக்கு அந்தத் தொந்தரவு இல்லாததால் தாங்கள் பெண்கள் இல்லாமல் வாழ முடியுமென்று சொல்ல இடமுள்ளவர்களாய் இருக்கிறார்கள். அன்றியும், அப் பிள்ளைபெறும் தொல்லையால் தங்களுக்கு பிறர் உதவவேண்டி இருப்பதால் அங்கு ஆண்கள் ஆதிக்கம் ஏற்பட இடமுண்டாகிவிடுகிறது. எனவே உண்மையான பெண்கள் விடுதலைக்கு பிள்ளை எனும் தொல்லை அடியோடு ஒழிந்துபோக வேண்டும். அது ஒழியாமல் சம்பளம் கொடுத்து புருஷனை நியமித்துக் கொள்வதாயிருந்தாலும் பெண்கள் பொதுவாக உண்மை விடுதலை அடைந்துவிட முடியாது என்றே சொல்லுவோம்.

இம்மாதிரி இதுவரை வேறுயாரும் சொன்னதாகக் காணப்படாவிட்டாலும், நாம் இதைச் சொல்வது பெரிதும் முட்டாள்தனம் என்பதாகப் பொதுமக்கள் கருதுவார்கள் என்று இருந்தாலும், இந்த மார்க்கத்தைத் தவிர -அதாவது பெண்கள் பிள்ளைபெறும் தொல்லையிலிருந்து விடுதலையாக வேண்டும் என்கிற மார்க்கத்தைத் தவிர- வேறு எந்த வகையிலும் அவர்களுக்கு விடுதலை இல்லை என்கின்ற முடிவு நமக்கு கல்லுப் போன்ற உறுதியுடையதாக இருக்கின்றது. சிலர் இதை இயற்கைக்கு விரோதம் என்றும் சொல்லலாம்.



உலகத்தில் மற்றெல்லாத் தாவரங்கள், ஜீவப்பிராணிகள் முதலியவை இயற்கை வாழ்வு நடத்தும்போது, மானிட வாழ்க்கையில் மாத்திரம் இயற்கைக்கு விரோதமாகவே -அதாவது பெரும்பாலும் செயற்கைத் தன்மையாகவே- வாழ்வு நடத்தி வருகின்றபோது, இந்த விஷயத்தில் இயற்கைக்கு விரோதமாய் நடைபெறுவதில் ஒன்றும் முழுகிப் போய்விடாது.

தவிர, "பெண்கள் பிள்ளை பெறுவதை நிறுத்திவிட்டால் உலகம் விருத்தியாகாது ; மானிட வர்க்கம் விருத்தியாகாது" என்று தர்ம நியாயம் பேச சிலர் வருவார்கள். உலகம் விருத்தியாகாவிட்டால் பெண்களுக்கு என்ன நஷ்டம்? மானிட வர்க்கம் பெருகாவிட்டால் பெண்களுக்கு என்ன ஆபத்து ஏற்பட்டுவிடக்கூடும்? அல்லது இந்தத் தர்ம நியாயம் பேசுபவர்களுக்குத்தான் என்ன நஷ்டம் உண்டாகிவிடும்? என்பது நமக்குப் புரியவில்லை. இதுவரை பெருகிவந்த மானிட வர்க்கத்தால் மானிட வர்க்கத்திற்கு ஏற்பட்ட நன்மைதான் என்ன என்பதும் நமக்குப் புரியவில்லை.

*("குடி அரசு" தலையங்கம் , 12.8.1928)*

www.tamilarangam.net

*இறுதியில் சில வார்த்தைகள் :*

**1.** இக் கட்டுரையில் கொடுக்கப்பட்டுள்ள மேற்கோள்கள் 27, 28, 32 தவிர அனைத்தும் திரு. ஆனைமுத்து அவர்களை பதிப்பாசிரியராகக் கொண்டு *''சிந்தனையாளர் கழகம், திருச்சிராப்பள்ளி''* வெளியிட்ட **"பெரியார் ஈ.வெ.ரா சிந்தனைகள்"** என்ற நூலின் மூன்று தொகுப்புகளிலிருந்து எடுக்கப்பட்டவையே. அதுமட்டுமின்றி அவை கூற்றிடத்திலிருந்து (Context) பிய்த்தெடுக்கப் பட்டுள்ளன என்பதும் கவனிக்கப்பட வேண்டும். முன்னமே சொன்னபடி எதையும் வலிந்து நிரூபிப்பது இதன் நோக்கமன்று. ஆர்வமுள்ள தோழர்கள் அத் தொகுப்புகளை ஆழமாகப் படிக்க வேண்டும். மேற்கோள்கள் இருக்கும் பக்க எண்களும் தரப்படவில்லை. முழுத் தொகுப்பையுமே படிப்பதுதான் பொருத்தம்.

**2.** இக் கட்டுரையின் முன் அனுமானங்களை ஏற்றுக்கொண்டாலும் கொள்ளாவிட்டாலும் தமிழகத்தில் அறிவார்த்தமாகவும், சமூக ரீதியாகவும் செயல்படுபவர்கள் பெரியாருக்கு உரிய கவனத்தை அளிக்காமல் இருந்தால் அது குருட்டுத்தனமென்பதையும், மாற்றத்துக்காகச் செயற்படுபவர்கள் பொதுக் கருத்தியலில் அவர் ஏற்படுத்திய உடைப்பை பயன்படுத்திக் கொள்ளாமலிருப்பது கைகளை வெட்டிக்கொண்டு வேலை செய்வதென்பதையும் துணிச்சலாகக் கூறலாமென்றே தோன்றுகிறது.

□□

www.tamilarangam.net

இக் கட்டுரையை இயம் (ism) குறித்த வரையறையோடு தொடங்குதலே இங்கு பொருத்தம். இயம் குறித்த புரிதல்களைப் பருண்மையாகப் பொருத்தும் பொழுதே பெரியாரியத்தை விளங்க இயலும். இது எந்த இயத்துக்கும் பொருந்தும்.

ஒரு குறிப்பிட்ட போக்கின் அல்லது மனிதரின் சில தனித்த பண்புகளைக் கொண்ட அல்லது அவ்வாறு கொண்டதாக உரிமை பூண்ட ஒரு கோட்பாடு நடைமுறை இயம் என்று பொதுவாகக் குறிக்கப்படுகிறது. சமயம், தத்துவம், அரசியல் சமூகம், கலாச்சாரம், பொருளாதாரம் என்பன போன்ற பல வாழ்வியல் துறைகளில் அமைந்த கோட்பாடு நடைமுறை என இது விரியும். இது ஒரு குறிப்பிட்ட போக்கை அல்லது மனிதரை முதன்மைப்படுத்திப் பெயரிடப்படுகிறது.

இயம் என்பது இயற்கை நிகழ்வுகளையும் சமூக நிகழ்வுகளையும் விளங்கவும் விளக்கவும் மற்றும் அவற்றின் மீதான குறுக்கீடுகளை நிகழ்த்தவும் ஆவதற்கென்பதால் இதற்குள் உலகக் கண்ணோட்டம் ஒன்று உள்ளார்ந்து இயங்கிக் கொண்டிருக்கிறது.

*கோ.கேசவன்*



இயத்துக்குள் இயங்கும் உலகக் கண்ணோட்டத்தை விளக்குவதே இயத்தை விவரிப்பது என்பதாகிவிடாது. இயம், ஒரு குறிப்பான காலத்திய சமூக நிலையை எங்ஙனம் விளங்குவது என்பதிலிருந்து தோன்றுகின்றது. இத்தகைய விளங்குதலுக்கான புறநிலைத் தேவை இல்லையெனில் ஓர் இயம் உருவாகித் திடப்பட இயலாது என்று குறிப்பிடலாம். இத்தகைய சமூக அவசியத்தின் தேவைக்கும் தன்மைக்கும் ஏற்ப அல்லது அவற்றில் ஏற்படும் மாறுதல்களுக்கு ஏற்ப இயத்தின் அம்சங்கள் பலவற்றில் மாற்றங்கள் ஏற்படும் சாத்தியம் உண்டு. இத்தகைய மாற்றங்கள், இயத்தின் தனித்த பண்புகளில் அடிப்படையான மாற்றங்களைக் கோருமானால் அங்கு வேறோர் இயம் சூல் கொள்ளத் தொடங்கி விட்டது என்று பொருளாகும். எனவே குறிப்பான சமூக நிலைமைகளை ஓர் உலகக் கண்ணோட்டத்தின் வழி விளங்கிக் கொள்ளத் துணைசெய்யும் இயம், ஒருகால ஒழுங்குக்கும் வரம்புக்கும் உட்பட்டதாக அமைதல் தவிர்க்க இயலாததாகும்.

ஒரு குறிப்பான காலத்திய சமூகத்தின் புறவயத் தேவைகளை நிறைவு செய்வதோடு தொடர்புகொண்ட இயம், அந்த சமூகத்தின் ஒட்டு மொத்தத் தேவைகளையும் நிறைவு செய்ய முனையும் எனக் குறிப்பிட முடியாது. எந்தவொரு கால சமூகத்திலும் தத்தமக்குள் இயைந்தும் முரண்பட்டும் இயங்கிக் கொண்டிருக்கும் சமூக வர்க்கங்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன என்பதை நாம் ஒப்புக் கொண்டால் சமூக வாழ்வியல் துறைகளின் மீதான் தம் நிலைபாடுகளை வெளிப்படுத்தும் இயங்களின் அம்சங்களில் இத்தகைய

www.tamilarangam.net

வர்க்கங்கள் தம் விருப்பங்களை, உணர்வுகளை எதிர்பார்ப்புகளை, நம்பிக்கைகளை, நலன்களை அடையாளம் கண்டு கொள்கின்றன என்பதை மறுக்க இயலாது. இத்தகைய சமூக வர்க்கங்கள் அல்லது ஏதேனும் ஒரு வர்க்கம் அல்லது ஒரு வர்க்கத்தில் உள்ள ஏதேனும் ஒரு குழு தமக்குரிய இயங்களைத் தாமே முன்னின்று தோற்றுவிக்கின்றன அல்லது முன்னிலைப்படுத்துகின்றன என ஒரு நேர்கோட்டு வீதத்தில் எப்பொழுதுமே கணிப்பதற்குரிய தடயங்கள் நமக்குக் கிடைக்காவிடினும், சூல்கொள்ளும் இயங்களில் தமக்குரிய கோட்பாடும் நடைமுறையும் வெளிப்படுமானால் அத்தகைய இயங்களை திடப்படுத்தவும் செழுமைப்படுத்தவும் உரிய பணிகளைத் தம் ஆற்றலுக்கும் சமூகக் கட்டமைப்பில் தம் நிலைமைக்கு ஏற்பவும் ஆற்றுவதில் இவை தவறுவதில்லை என்பதைக் குறிப்பிடலாம். இந்தவிதத்தில் இயங்கள் சமூகவர்க்க ஒழுங்கமைப்புக்கு உட்பட்டவை ஆகும் -அதாவது வர்க்கக் கண்ணோட்டம் கொண்டதாகும்.

பன்முகச் சமூக அமைப்பில் ஓர் இயம் பல்வேறு வர்க்கங்களோடு கொண்டுள்ள உறவினூடாகத் திடப்பட்டு, ஒரு குறிப்பிட்ட காலப் பரப்பில் விரிவடைகிறது. ஓர் இயத்துக்குள் இயங்கும் பல்வேறு கருத்தாக்கங்கள் அனைத்தும் சமகனமுடையனவாக இருப்பதில்லை. மேலும் அவை சம தளங்களில் ஒன்றுக்கொன்று இணையாகவும் ஒன்றோடொன்று தொடர்பின்றியும் பல அடுக்குகளில் இயங்குபவையாகவும் இருப்பதில்லை. ஓர் இயத்துக்குள்



இயங்கும் பல கருத்தாக்கங்கள் பரஸ்பரம் தொடர்பும் பாதிப்பும் கொண்டனவாக இயங்குகின்றன. இவற்றுள் அடிப்படையானவற்றை சாராம்சமாகக் காணவும் பொதுவானவற்றை தோற்ற எல்லையில் காணவும் வேண்டியுள்ளது. இன்னொரு விதத்தில் சொன்னால் மையக் கருத்தாக்கமாகவும் சுற்றெல்லைக் கருத்தாக்கங்களாகவும் காணவேண்டியுள்ளது. சுற்றெல்லையில் அல்லது மேல் தோற்றத்தில் இயங்கும் கருத்தாக்கங்களை ஊடுருவி மைய அல்லது சாராம்சமாக இயங்கும் கருத்தாக்கங்களைக் கண்டறிய வேண்டும். ஓர் இயத்தின் முழு அம்சங்களையும் மற்றும் அதன் செல் நெறியையும் தீர்மானிக்கக் கூடிய உள்ளார்ந்த அம்சங்கள், அவற்றுக்கு இடையிலான இணைப்புகள், அவற்றுள் செயல்படும் விதிகள் ஆகியவற்றைக் கண்டறிவதன் மூலம் மையக் கருத்தாக்கத்தை அடையாளம் காண இயலும்.

மையக் கருத்தாக்கமும் சுற்றெல்லையில் இயங்கும் கருத்தாக்கங்களும் பொதுவாக முரணின்றி செயல்படுமெனினும் எப்பொழுதுமே அப்படி இருக்கும் எனச் சொல்ல இயலாத வகையில் மையக் கருத்தாக்கத்துக்கும் சுற்றெல்லைக் கருத்தாக்கங்களுக்கும் இடையில் முரணிய நிலையும் அமைவதுண்டு. இந்த முரண் தற்காலிக இயல்புடையது, நிபந்தனைக்கு உட்பட்டது. இத்தகு முரண்கள் இருப்பதனால் ஓர் இயத்தில் பல குரல்கள் ஒரே நேரத்தில் ஒலிப்பதைப்போல் தோன்றுகின்றன. இத்தகைய குரல்களில் பல மாறுபட்டும் தொடர்பின்றியும் காலப்போக்கில் சிதைந்தும் போகிற இயக்கப் போக்கில் ஏதேனும் அடிப்படையில்

www.tamilarangam.net

தொடர்ந்து ஒலித்துக் கொண்டிருப்பதைக் காணலாம். ஒரு சமூக நிகழ்வுப் போக்கில் தோன்றி, அதில் குறுக்கீடு நிகழ்த்தும் இயக்கத்திலுள்ள ஓர் இயம் தொடர்ந்து அந்த இயமாகவே இயங்கிக் கொண்டிருக்கிறதா இல்லையா என்பதற்கு இதுவே ஆதாரம். இது ஓர் இயத்தின் இருத்தலுக்கான சாராம்சமாகும்.

இவ்வாறு ஓர் இயத்தின் மையத்தை அல்லது சாராம்சத்தை அழுத்தமாகக் குறிப்பிடுவதனாலே சுற்றெல்லையில் அல்லது மேல் தோற்றத்தில் வினையாற்றும் கருத்தாக்கங்களுக்கு உரிய மதிப்பை நாம் அளிக்க மறுப்பதாகாது. ஓர் இயம் இயங்கக்கூடிய குறிப்பான காலம் என்பது பல துணைக் கட்டங்களை உள்ளடக் கியதாகும். இந்த துணைக் கட்டத்திற்கு ஏற்ப சுற்றெல்லையில் உள்ள கருத்தாக்கங்கள் விசேட கவனத்தை ஈர்க்கக் கூடிய விதத்தில் செயல்படு கின்றன. இயத்துக்குள் ஈர்க்கப்பட்ட வர்க்கங்களில் எந்த வர்க்கத்தின் எந்தக் கோரிக்கையைப் பிரதானப்படுத்துவது, எதுவரை பிரதானப்படுத்துவது, எந்தெந்த வழிகளில் பிரதானப் படுத்துவது என்பன போன்றவற்றில் சுற்றெல்லைக் கருத்தாக்கங்களுக்கு ஒரு குறிப்படத்தக்க பங்கு இருக்கிறது.

இறுதியாக, ஓர் இயத்தின் நடைமுறைப்படுத்தலுக்கான வடிவம் காணத்தக்கது. நடைமுறைப்படுத்தலுக்கான இயக்கம், இயக்கத்தின் வடிவம், இயக்கம் முன்வைக்கும் கோரிக்கைகள், எந்த வர்க்கத்தின் கோரிக்கைகளை



முன்வைக்கின்றதோ அந்த வர்க்கத்தின் இயல்பு, எந்த வர்க்கத்திடம் முன்வைக்கின்றதோ அதன் இயல்பு என இன்னோரன்ன பல அம்சங்களை இதில் குறிப்பிடலாம்.

மேலே சொன்னவை அனைத்தும் இயம் குறித்த வரையறையே. இங்கு இரண்டு விசயங்களைத் தொகுத்துக் கொண்டு மேலே செல்வோம்.

**1.** எந்தவோர் இயத்துக்கும் ஒரு வரையறை உண்டு என்பதை கோட்பாட்டு ரீதியில் ஒப்புக் கொள்கிறோம்.

**2.** ஒரு குறிப்பான கால எல்லை, ஓர் உலகக் கண்ணோட்டம், வர்க்க நிலைப்பாடு, மையம்–சுற்றெல்லைக் கருத்தாக்கங்கள், நடைமுறைப்படுத்தும் வடிவங்கள் ஆகியனவற்றைத் தவிர்த்து ஓர் இயத்தை அடையாளப்படுத்த இயலாது.

ஓர் இயத்துக்கான வரையறை என்பதைக் கோட்பாட்டு ரீதியில் மறுக்கிற சூழலிலும் ஓர் இயத்தின் வரலாற்றுவாத, வர்க்கவாத, சாராம்சவாத நிலைபாடு களை புறக்கணிக்க முயல்கிற சூழலிலும் இதைச் சற்று அழுத்தமாகக் குறிப்பிட வேண்டியுள்ளது. ஓர் இயத்தைப் பற்றிய கூடுதலான மற்றும் அடிப்படையான உண்மைகளைத் தெரிந்து கொள்வதற்கு இந்த முறையியலே பயன்படுகிறது என்பதே என் கருத்து. மாறுபட்ட கருத்தாளர்கள் இதுகுறித்து விவாதிக்கலாம்.

www.tamilarangam.net



தமிழ் பேசும் பகுதிகளில் பெரியாரைப்போல நீண்ட காலமாகவும் தொடர்ந்தும் ((1920–1973) ஏதேனும் ஓர் இயக்கத்தின் தலைமையில் இருந்த தலைவர் எவரும் இல்லை. காங்கிரசு, சுயமரியாதை இயக்கம், நீதிக் கட்சி, திராவிடர் கழகம் என்ற அமைப்புகளில் தலைமையில் இருந்ததோடு பொதுவுடைமை கருத்துப் பரப்புநராகவும் (1934–1935) பொதுவுடைமையரின் அனுதாபியாகவும் (1949–1951) இருந்துள்ளார். இத்தகைய நெடியதும் கலவையானதுமான குணங்களைக் கொண்ட பெரியாரின் உலகக் கண்ணோட்டத்தைக் காணலாம்.

இதுகுறித்த முறையான ஆய்வை தோழர் குணாவின் நூலிலும் *(தமிழர் மெய்யியல் 1980)* கட்டுரையிலும் (பரிமாணம் மே-1981) காணலாம். பெரியாரின் உலகக் கண்ணோட்டம் இறைபொருள் முதலிய பார்வை என்றும், அது இயந்திர வகைப்பட்ட பொருள்முதலியப் பார்வையாக உள்ளதென்றும், சாராம்சத்தில் கருத்து முதல்வாதமாக உள்ளதென்றும் கூறும் குணாவின் அடிப்படை முடிவுகள் ஏற்கத் தக்கவை.

அறிதலின் வளர்நிலைகளை புலனறிவு, பகுத்தறிவு, சமூக நடைமுறை அறிவு எனப் பிரிக்கின்றனர். சமூகத்தோடு நடைமுறை உறவு வைத்துக் கொண்டிருக்கும் பொழுதே இந்த மூன்று கட்டங்களையும் காண இயலும். ஒரு பொருளை



அல்லது நிகழ்வைக் காணும்போது அதன் தனித்தனி அம்சங்களை மட்டுமே கண்டு அவற்றைப் புற உறவுகளில் வைத்து மட்டுமே காண்பதால் அவை குறித்த எண்ணற்ற தோற்றங்கள் உதயமாகின்றன. இவற்றை ஏற்றுக் கொள்தல் புலனறிதல் என்பர். புலன் அறிதலின் மூலம் பெற்ற எண்ணற்ற தோற்றங்களை மனித சமூகம் தன்னிடத்திலுள்ள அறிவுக் கருத்துக்களுடன் இணைக்கிறது. பொருளின்/நிகழ்வின் சாராம்சத்தையும் மொத்தத் தன்மையையும் உள் உறவுகளையும் ஆராய்ந்தும் பொருள்களின் மற்றும் நிகழ்வுகளின் பொதுத் தன்மைகளையும் குறிப்பான தன்மைகளையும் பிரித்தறிந்து கோட்பாடுகளை உருவாக்கத் துணைசெய்வதே பகுத்தறிவு எனப்படும். பகுத்தறிவு மூலம் உருவாக்கிக் கொண்ட கோட்பாடுகளை மீண்டும் சமூக நடைமுறைக்குப் பயன்படுத்தி அவற்றின் சரி/சரியற்ற தன்மையைக் கண்டு மனித சமூகம் நடைமுறை அறிவுக்குச் செல்கிறது.

பெரியாரியத்தின் கருத்துமுதலியப் பார்வையும் வரையறுக்கப்பட்ட இயங்கியல் பார்வையும் அறிதல் போக்கில் எங்கனம் செயல்படுகின்றன எனக் காணவேண்டும். பெரியார் என்றாலே நாத்திகம், பகுத்தறிவு ஆகியன உடனடியாக நம் புலனறிவிற்குப் படுகின்றன. பெரியாரிய நாத்திகத்தையும் பெரியாரிய பகுத்தறிவையும் நாம் காண வேண்டும். பகுத்தறிவு மனிதனுக்கு ஜீவநாடி (விடுதலை–20.6.73); பகுத்தறிவை மனிதன் மட்டுமே பயன்படுத்த முடியும் (சிந்தனை–பக். 8,9) என பெரியார் குறிப்பிடுகின்றார். இருப்பினும் பகுத்தறிவே

www.tamilarangam.net

மனிதர்களிடத்தில் கெட்ட குணங்களை உருவாக்கப் பயன்படுகிறது ; பகுத்தறிவு உள்ள மனிதன் பலவிதத்திலும் தாழ்ந்தவன் என்றும் குறிப்பிட்டுள்ளார். இதுபோன்ற விளக்கங்கள் தத்துவ விளக்கம் (பக்.25) நூலிலும் காணப்படுகின்றது. இங்கு பெரியாரிடத்தில் செயற்படுவது, பொருள்கள்/நிகழ்வுகள் ஆகியவற்றின் பொருண்மை நிலையைச் சிறுமைப்படுத்தி அல்லது அவற்றின் சுற்றெல்லை அம்சங்களை மட்டுமே கணக்கிலெடுத்து, அல்லது பொருண்மை நிலையைக் கணக்கிலெடுக்காமல் வெறும் கருத்துகள் அடிப்படையில் கருத்தாக்கங்களை உருவாக்கும் பகுத்தறிவு ஆகும். இந்த விதத்தில் இது சாராம்சத்தில் கருத்து முதலிய பகுத்தறிவு ஆகும்.இத்தகைய பகுத்தறிவின் மூலமே, ஒரு மனிதனின் பிறவிக்கும் அவனது உடலமைப்புக்கும் ஏற்பவே அவனது குணம் அமைகின்றது என்ற கருத்துக்கும் பெரியார் வருகிறார். (தத்துவ விளக்கம்-பக்.27,28). இங்கு உயிர் மரபியல் (Genetic Aspects) கூறுகளுக்கும், குணத்துக்கும் உள்ள தொடர்பை பெரியார் ஒத்துக்கொள்வதால் பிறவி வழி குண நிர்ணயிப்பைக் குறிப்பிடுகிறார்.

பெரியாரிய நாத்திகத்தைக் காண்போம். அவர் நாத்திகக் கருத்துக்களை பல்வேறு காலகட்டங்களில் உருவாக்கித் தொகுத்துக் கொண்டார். மதத்தை வெறும் கருத்துக்களின் இயக்கமாக மட்டும் காணாமல் அது சமூக நடைமுறையில் விளைவிக்கும் கேடுகளைக் கண்டறிந்த பெரியார் மதத்தை எதிர்த்த போராட்டத்தைத் தொடர்கையில் மதத்தினால் பயன்படும் பொருளியல் சக்திகளை முழுவதும் காணாமல் மதத்தின் பொருண்மையைச் சுருக்கிப் பார்த்து,



தோற்றங்களையும் குறியீடுகளையும் முதன்மைப்படுத்தினார். இங்கு பெயர் உருக்கோட்பாடு எனும் கருத்துமுதல்வாதப் பார்வையே பெரியாரிய நாத்திகத்தின் நடுவமாக உள்ளது என்ற குணாவின் கூற்று சரியே. இதனால் புரோகிதர் எதிர்ப்பு, மதக் குறியீடுகள் எதிர்ப்பு என்ற எல்லைகளுக்குள் இது சுருங்கிவிடுகிறது. மேலும் புரோகிதர் எதிர்ப்பும் பார்ப்பன புரோகிதர் எதிர்ப்பாக மட்டுமே அமைவதால் பார்ப்பனரல்லாதார் ஆத்திகத்தை பெரியாரியம் பகைமையாகவும் கருதுவது இல்லை. பெரியாரின் சகா கைவல்யம் பொன்னுசாமி சுயமரியாதை இயக்கத்துக்கே ஆத்திக விளக்கம் கொடுப்பதற்கு இதுவே காரணம் ஆகும். (சு.ம.இயக்கப் பொன்விழா மலர், பக்.115-117)

இத்தகைய உலோகக் கண்ணோட்டம் கொண்ட பெரியாரியம் எத்தகைய குறிப்பான கால சமூக நிலைமையை விளங்கிக் கொள்ளவும் செயல்படவும் உருவாகிப் பயன்பட்டது /பயன்பட்டுக் கொண்டு வருகிறது எனக் காண வேண்டும். பெரியாரின் சமூக ஈடுபாட்டுக் காலம் '(1920-1973) ஏகாதிபத்தியத்தின் ஆளுகைக்கு உட்பட்டும் அரைநிலவுடைமைச் செல்வாக்குக்கும் உட்பட்டு இருந்த காலம் ஆகும்.

சென்னை மாகாணத்தில் ஏனைய பகுதிகளைவிட தமிழ்பேசும் பகுதிகளில் தொழிலும் வர்த்தகமும் பணப்பயிர் விளைச்சலும் குறிப்பிடத்தக்க அளவு மேம்பட்டிருந்தன. இங்கு முதல் உலகப் போருக்குப் பின் ஏற்பட்ட பல்வேறு பொருளாதார, அரசியல், கலாச்சார நிகழ்வுகளைத் தொகுத்துக் காணலாம்.

www.tamilarangam.net

**1)** தமிழ் பேசும் பகுதிகளின் தொழிலிலும் வர்த்தகத்திலும் பிரிட்டன் மூலதனமும் இந்திய மூலதனமும் இருந்தனவெனினும் இந்திய மூலதனம் மிகமிகக் குறைவு. இந்திய மூலதனத்தையும் வட இந்திய மூலதனம் (பார்சி, பனியா) என்றும், பிரதேச மூலதனம் (செட்டியார், பிராமணர், நாயுடு, பேரி செட்டியார்) எனப் பிரிக்கலாம். இவற்றுள் பிரிட்டன் மூலதனத்துக்கு இந்திய தேசிய அடையாளமும், பார்சி, பனியா மூலதனத்துக்கு பிரதேச அடையாளமும் இல்லை. இவற்றுள் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய அளவுக்கு பிரிட்டன் மூலதனமும் வடஇந்திய பார்சி, பனியா மூலதனமும் பிரதேச செட்டியார், பிராமணர் மூலதனமும் ஒன்றோடொன்று கலந்தே தொழிலில் ஈடுபட்டிருந்தன; தனித்தனியாகவும் இயங்கின. இந்திய மூலதனங்களில் பார்சி மற்றும் பனியா மூலதனம் அதிக திரட்சி கொண்டதாகவும், அடுத்த திரட்சி நிலையில் செட்டியார் மூலதனமும் பிராமணர் மூலதனமும் இருந்தன. அதே நேரத்தில் இரண்டாம் உலகப் போரை ஒட்டியும் பின்னரும் பார்சி, பனியா மூலதனப் பெருக்கம் விரிவடைந்து வங்கித் தொழிலிலும் காப்பீட்டுத் தொழிலிலும் செட்டியார் மூலதனத்தைவிட முன்னேறி நிலையில் உருமாறியது. அதோடு மட்டுமன்றி பார்சி–பனியா மூலதனத்துடன் பிராமண மூலதனம் இணைந்து இயங்குதல் பார்சி–பனியா மூலதனத்துடன் செட்டியார் மூலதனம் இணைந்து இயங்குதலைவிட அதிகமாயிற்று. இத்தகு சூழலில் எல்லாவற்றுக்கும் மேலாதிக்க நிலையில் பிரிட்டன் மூலதனம் தங்கு தடையின்றி இயங்கவும் செட்டியார் மூலதனம் தனக்கு மேல் நிலையில் உள்ள பார்சி–பனியா மூலதனத்துடனும் தனக்கு கீழ்நிலையில் உள்ள பிராமண மூலதன த்துடனும் மோதிக்கொண்டும் ஒன்றுபட்டுக் கொண்டும் இயங்க வேண்டியிருந்தது.



**2)** தமிழ் பேசும் பகுதிகளில் ஜமீன்தாரி முறை (ஒரே பிராமணர் ஜமீன்தாரர் மட்டுமே இருந்தார்) 1930 களில் ஏற்பட்டு சாவதேச நிதித் தேக்கத்தினால் தன் பொருளாதார நியாயத்தை முற்றாக இழந்துபோயிருந்தது. அரசுக்குக் குத்தகை செலுத்த இயலாமல் பல ஜமீன்கள் விலைக்கு விற்கப்பட்டன. இனாம் தாரிமுறையில் (90 சத வீதம் பிராமண நிலவுடமை) நிலங்களை விற்பதற்குரிய அதிகாரத்தை வழங்கியவுடன் பிராமண நிலவுடமையாளர்கள் காலப்போக்கில் தொழில்களை மாற்றிக் கொண்டு அறிவுஜீவித் துறையினராகவும் அதிகாரச் சேவையினராயும் நகர்ப்புறத்துக்கு மாறியிருந்தனர். நிலவுரிமை, குத்தகையாளர் களுக்கு (கள்ளர், மூப்பனார், யாதவர், வன்னியர்) சென்றது. இங்கு ரயத்துவாரி முறையிலான நிலவுடைமையே நான்கில் மூன்று பங்கு. மடங்கள் (வேளாளர், பிராமணர் கட்டுப்பாட்டில் உள்ளவை), கோயில்கள் (முதலில் வேளாளர்–பிராமணர் கூட்டுக் கட்டுப்பாடு, பின்னர் பிராமணரின் தர்ம ரட்சண சபாக் கட்டுப்பாடு, இறுதியில் இந்து அறநிலையச் சட்டத்தின் மூலம் அரசு அதிகாரத்துவக் கட்டுப்பாடு) ஆகியவற்றுக்குச் சொந்தமான நிலவுடைமை மிக அதிகம்.

தமிழ் பேசும் பகுதிகளில் பாலாறு, காவேரி, தாமிரவருணி, வைகை ஆகிய நதிகளின் வளமான பகுதிகளில் பிராமண நிலவுடைமை கணிசமானது. இவர்களுள்ளும் நெல்லையிலும் தஞ்சையிலும் மிக அதிகம். இவர்கள் தமிழ், தெலுங்கு, மராத்தி, கன்னடம் பேசும் பிராமணர்கள். இவர்களுக்கு இணையாக

www.tamilarangam.net

நிலவுடைமை பெற்றிருந்த வேளாளர்கள், இவர்களிடத்தில் குத்தகையாளராகவும் ஓரளவு நிலவுடைமையாளராகவும் இருந்த கள்ளர், மூப்பனார் (தஞ்சை மாவட்டம்), அகமுடையார் (மதுரை மாவட்டம்), வன்னியர் (ஆர்க்காட்டுப் பகுதி), மறவர் (நெல்லை) ஆகிய சாதிகளிலிருந்து அந்தந்தப் பகுதிகளில் குறிப்பிடத்தக்க நிலவுடைமையாளர்கள் உருவாயினர். இவை மிகச் சிறிதளவு சமூக அசைவு ஆகும். பணப் பயிர் விளைச்சல் பகுதிகளில் பேரளவு சமூக அசைவு ஏற்பட்டது. கரும்பு, நிலக்கடலை மஞ்சள், பருத்தி, மிளகாய் ஆகியனவற்றை ஏகாதிபத்தியத்தின் தேவைக்கு விளைவித்த கவுண்டர், நாயுடு (கொங்குப் பகுதி) ரெட்டியார், நாயுடு, மறவர் (தென் மாவட்டங்கள்) வன்னியர் ஆகிய சாதிகளிலிருந்து பேரளவு பணப் புழக்கம் கொண்ட முதலாளிய விவசாயிகள் தோன்றினர். நாடார் (தென்பகுதி), பலிஜா நாயுடு (கொங்கு நாயுடு), பிராமணர் (ஆர்க்காட்டுப் பகுதி, தாமிர வருணிப் பகுதி) ஆகிய சாதிகளிலிருந்து தரகு வணிகர்கள் பெருத்தனர்.

**3)** முதல் உலகப்போர் தொடங்கி 1947 வரையுள்ள புள்ளி விவரங்களைக் கண்டால் உயர்நிலைப் பள்ளிக் கல்வியிலும், கல்லூரிக் கல்வியிலும் பிராமணர்களே குறிப்பிடத்தக்க அளவு இருப்பினும் கல்வி கற்றோரில் பிராமணர் அல்லாதோர் சதவீதம் முன்னேறிக் கொண்டு இருந்தது. இவர்களுள் பலிஜா நாயுடு, வேளாளர், செட்டியார், நாடார், கவுண்டர் என்ற வரிசையில் அமைந்திருந் தனர். இன்னும் பார்த்தால், இந்த சாதிகளில் மற்ற அதிகாரிகள், சிறு அதிகாரிகள்,



வணிகர்கள், நிலவுடைமையாளர்கள் ஆகியோர் குடும்பங்களிலிருந்து வந்தவர் களே பெரிதும் கல்வி அறிவு பெற்றனர். கைவினைச் சாதிகள், சேவை சாதிகள், தாழ்த்தப்பட்ட சாதிகள் ஆகியவற்றைச் சேர்ந்த குடும்பத்தினர் கல்வி அறிவு பெறுதல் மிகமிகக் குறைவாகவே இருந்தது.

**4)** 1860 கள் முதற்கொண்டு இந்தியர்களுக்கு உள்ளூர் நிர்வாகத்தில் பங்கு கிடைத்தது. சென்னை மாகாணத்தைப் பொறுத்து 1860 கள் முதற்கொண்டு விவரங்களைக் காணும்போது நகர சபைகளிலும் மாவட்டக் கழகங்களிலும் பார்ப்பனர் அல்லாதோரே பெரும்பான்மையாக இருந்தனர். பார்ப்பனர்கள் தங்கள் மக்கள்தொகை எண்ணிக்கையோடு ஒப்பிடும்பொழுது அவர்களின் பிரதிநிதித்துவம் கணிசமாக இருந்தது. 1937 வரை சொத்து உடையவர்களுக்கும் வருமானவரி கட்டுபவர்களுக்கும் மட்டுமே வாக்குரிமையும் பிரதிநிதித்துவ உரிமையும் இருந்தன. அதாவது 1937 க்கு முன்னர் 3 சதவீத மக்களே இப்படி அமைந்து இருந்தனர். இந்த 3 சதவீதத்துக்குள்ளும் பார்ப்பனரல்லாதோரே பெரும்பான்மையாக இருந்தனரெனினும், அந்த விகிதாசாரத்துக்கு ஏற்ப இவர்களுக்கு பிரதிநிதித்துவம் அமையவில்லை. தாழ்த்தப்பட்டோர் நியமனப் பதவிகளில் மட்டுமே இருந்தனர். எனவே பிரிட்டன் ஏகாதிபத்தியத்தின் வழிநடத் துதலிலான ஜனநாயகத்தில் (Guided Democracy) கீழ் அமைப்பு களிலிருந்து மாகாண அமைப்புகள் வரை பார்ப்பனர்க்கு ஒரு மேல் நோக்கிய ஆதிக்கமும் பார்ப்பனரல்லாதோர்க்கு அத்தகைய ஆதிக்கமின்மையும் இருந்தது.

www.tamilarangam.net

**5)** இந்த நூற்றாண்டின் முதல் 50 ஆண்டுகளில் அரசு அதிகாரத்துவத்தில் இந்தியருக்கான உயர் பதவிமுதல் அடிநிலைப் பதவிவரையிலான புள்ளி விவரங்களைக் கண்டால் சென்னை மாகாணத்தைப் பொறுத்து பதவிகளின் எல்லா நிலைகளிலும் பார்ப்பனரே எப்போதும் தனித்த பெரும்பான்மையில் இருந்தனர். எனினும் கால வரிசையில் காணும்பொழுது பார்ப்பனர் அல்லாதார் பங்கு எல்லாப் பதவிகளிலும் வளர்ந்துகொண்டே வந்தது. எனவே பார்ப்பனரின் மிகு நிலையும் பார்ப்பனரல்லாதாரின் வளர்நிலையும் இருந்தன.

**6)** ஏகாதிபத்தியத்தின் பொருளாதார மற்றும் நிர்வாக சீர்திருத்தங்களினால் இங்கு பல சாதியினரிடையே புதிய மேல்நிலை வர்க்க உருவாக்கம் நிகழ்ந்து கொண்டிருக்கும் பொழுதே, அதன் உடன் நிகழ்வாகவே அடிநிலை வர்க்க உருவாக்கம் நிகழ்ந்தேறியது. ஏகாதியத்தியத்திற்கும் அதன் மேல் நிலை வர்க்கங்களுக்கும் நெருக்கடிகள் ஏற்படும் பொழுது அவற்றின் சுமைகளைத் தாங்கும் சக்திகளாகவும் பயன்பட்டன. ரயத்வாரி, ஜமீன்தாரி நிலவுடைமை உறவில் கூலி விவசாயிகள் சிறுவிவசாயிகள், குத்தகையாளர் என பல அடுக்குகள் உருவாயின. ஜமீன் நிலங்களில் உள்ள குத்தகையாளர்கள், பொருளாதார தேக்க காலத்தில் மிகவும் துயரத்திற்கு உள்ளாயினர். விவசாய அடிநிலை அடுக்கில் சிறு விவசாயிகளே எண்ணிக்கையில் அதிகமாக இருப்பினும் ஒவ்வொரு பத்தாண்டிற்குப் பிறகு சிறு விவசாயிகள் எண்ணிக்கை குறைந்து விவசாயக் கூலிகள் தொகை அதிகமாகிக் கொண்டே இருந்தது.



மரபுப் பயிர்ப் பகுதியாயினும் பணப்பயிர்ப் பகுதியாயினும் வேளாண்மை ஏகாதிபத்திபத்தியத்தின பொருளாதாரத்தோடு கட்டப்பட்டிருந்ததனால் 20 லட்சம் விவசாயக் கூலிகளின் குடும்பங்களும் 50 லட்சம் சிறுவிவசாயிகள் மற்றும் குத்தகையாளர் குடும்பங்களும் சொல்லொணாத் துயரத்துக்கு உள்ளாகி நின்றன.

விவசாயத்துக்கு அடுத்த நிலையில் மக்கள் பங்கெடுத்த நெசவுத் தொழில், ஏகாதிபத்தியத்தின் கட்டுப்படுத்தப்பட்ட பணப்பயிர் விளைச்சலாலும் இயந்திர மயமாதலாலும் பெரிதும் பாதிக்கப்பட்டது. சென்னை மாகாணத்திலேயே தமிழ்ப் பகுதியே அதிகம் தொழில் மயம் அடைந்ததாகும். ஏகாதிபத்தியத்தினாலும் ஏகாதிபத்தியத்தின் நிதி மூலதனத் துணைகொண்டும் ஏகாதிபத்தியத்தோடு கொண்ட உறவினால் உருவான மூலதனத் திரட்சியோடும் இங்கு தொடங்கப்பட்ட ஆலைகளில் தொழிலாளர் வர்க்கம் தோன்றியது. குறிப்பாக பஞ்சாலையில் 1 லட்சத்துக்கும் அதிகமானோரும் புகைவண்டித் தொழிற்சாலையில் 40 ஆயிரம் பேர்களும் சிமெண்ட், பேப்பர் ஆலை, கரும்பாலை, மோட்டார் ஆலை, சைக்கிள் ஆலை என்பன போன்றவற்றில் 50 ஆயிரம் பேர்களும் கொண்ட ஒரு கணிசமான தொழிலாளர் வர்க்கம் உருவாயிற்று. அதே நேரத்தில் இயந்திரமயமாகாத பல தொழில்களில் தீப்பெட்டி ஆலை, சுருட்டுத் தொழில், தோல் பதனிடல் ஆகியவற்றில் இலட்சக்கணக்கானோர் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். இவற்றின் வணிகத்தை ஏகாதிபத்தியம் கட்டுப்படுத்திக் கொண்டிருந்தது. இப்படி பாதிக்கப்பட்ட நெசவாளர்கள், ஆலைத்

www.tamilarangam.net

தொழிலாளர்கள், இயந்திரமயமாகாத தொழில்களில் ஈடுபடுவோர் ஆகியோர் பெரும்பாலும் பிற்பட்ட சாதிகளையும் தாழ்த்தப்பட்ட சாதிகளையும் சார்ந்தவர் களாகவே இருந்தனர்.

**7)** அன்றைய சமூகம் பல அடுக்குகளாகப் பிரிந்திருந்தது. சாதி ரீதியிலும், மத ரீதியிலும் மக்கள் அடையாளப்படுத்தப்பட்டனர். சென்னை மாகாணத்தில் 89 சதவீதம் இந்துக்கள், 7 சதவீதம் முஸ்லிம்கள், 4 சதவீதம் கிறிஸ்துவர்கள் இருந்தனர். 89 சத வீத இந்துக்களில் 3 சதவீதம் பார்ப்பனர்களும் 19 சதவீதம் முன்னேறிய பார்ப்பனரல்லாதாரும் 50 சதவீதம் பிற்படுத்தப்பட்ட பார்ப்பனர் அல்லாதாரும் 17 சதவீதம் தாழ்த்தப்பட்டோரும் இருந்தனர். உள் கலாச்சார மற்றும் வர்க்க வேறுபாடுகள் பார்ப்பனர்களிடையே இருந்தபொழுதினும், இரண்டு நிலைகளில் பார்ப்பனர்களின் மேலாதிக்கம் நிலைநின்றது. ஒன்று, சாதிய சமூக அமைப்பில் பார்ப்பனரே உச்சத்தில் இருந்தனர்; இரண்டாவது, சமய ரீதியில் இந்து சமயமும் இந்து சமயத்தில் வேதாகம நெறிப்பட்ட வழிமுறையும் அதில் பார்ப்பனரின் உச்ச நிலையும் இருந்தது.

எனவே அன்றைய சமூகத்தில் பார்ப்பனரின் மேலாதிக்கம் இரண்டு வகைகளில் இருந்தது. பார்ப்பனர்களிடமிருந்து உருவான வட்டி முதலாளிகள், ஆலை முதலாளிகள், அரசு அதிகாரிகள் ஆகியோர் பார்ப்பனரல்லாதாரிடம் இருந்து தோன்றிய இத்தகைய சமூகப் பிரிவுகளோடு முரண்பாடும் ஒற்றுமையும்



கொண்டிருந்தனர். இத்தகைய இரண்டு சமூகப் பிரிவுகள் மக்களை ஒடுக்கும் பொழுது இரண்டின் ஒற்றுமையைக் காணலாம். அதே நேரத்தில் அதிகமாக யார் ஒடுக்குவது என்பதில் இரண்டின் முரண்பாட்டையும் காணலாம். இதை இன்னும் நுணுகிக் கண்டால் 19 சதவீதம் முன்னேறிய பார்ப்பனரல்லாத சாதிகளில் தமிழ் பேசும் பகுதிகளில் நாட்டுக் கோட்டைச் செட்டியார், வேளாளர், பலிஜா நாயுடு, கவுண்டர், ரெட்டியார், கள்ளர், நாடார் ஆகிய சாதிகளில் உருவான மேல்தட்டு வர்க்கங்களுக்கும் 3 சதவீதம் பார்ப்பனரில் உருவான மேல்தட்டு வர்க்கங்களுக்கும் இடையிலான முரண்பாடும் ஒற்றுமையும் ஆகும். இது ஒருவித மேலாதிக்கம். இது பொருளாதாரத் தளத்தில் செயல்பட்டது. இரண்டாவது மேலாதிக்கம், சாதியத்திலும் சமயத்திலும் உச்சநிலை வழங்கப்பட்டவர்கள் என்ற விதத்தில் பார்ப்பனர்கள் பார்ப்பனர் அல்லாதாரைவிட சமூக மேலோங்கு நிலையில் பெருமையுற இருந்தனர் என்பதாகும். இது சமூக வாழ்வியல் மேலாதிக்கம் ஆகும்.

இங்குகூட பார்ப்பனர் அல்லாதார் (முன்னேறியோர் 19 + பிற்பட்டோர் 50- 69 சதவீதம்) என்ற மக்கட் பிரிவில் பிற்பட்டோரான 50 சதவீதத்தையும் தாழ்த்தப்பட்டோரான 17 சதவீதத்தையும் தனித்துக் காணவேண்டியுள்ளது. இவர்களே பெரும்பகுதி கூலி விவசாயிகள், சிறு விவசாயிகள், குத்தகையாளர், நெசவாளர்கள், ஆலைத்தொழிலாளர், பீடி சுருட்டுத் தொழில், சுகாதாரப் பணியாளர்கள் என இருந்தனர். அதுமட்டுமின்றி இவர்களிடமிருந்து மேல்நிலை

www.tamilarangam.net

வர்க்க உருவாக்கம் மிகமிகக் குறைவு. இங்கு இன்னொன்றை அழுத்தமாகக் கூறவேண்டும். இந்துக்களில் தாழ்த்தப்பட்டோரை இணைத்து புள்ளி விபரம் குறிப்பிடுதல் ஒரு மோசடி ஆகும். சமூக வாழ்வியல் ரீதியில் சாதி இந்துக்கள் (பார்ப்பனர்கள், பார்ப்பனர் அல்லாதார்கள் 3+69=72 சதவீதம்) தாழ்த்தப் பட்டவர்களை (17 சதவீதம்) முற்றாகவே எவ்வித விதிவிலக்குமின்றி புறந்தள்ளி இருந்தனர். இப்படி தீண்டாமை, தனித்த குடியிருப்பு, தனித்த வாழ்க்கைமுறை, பொது இடங்களைப் பயன்படுத்த மறுப்பு என்பன போன்ற இழிவாக்கங்களின் மூலம் சாதி இந்துக்கள் (72 சதவீதம்) தாழ்த்தப்பட்டோரை (17 சதவீதம்) தொலைதூரப்படுத்தி இருந்தனர். பார்ப்பனர்க்குள்ளும் வேறுபாடு உண்டு; பார்ப்பனரல்லாதாருக்குள்ளும் வேறுபாடு உண்டு. எனினும் சாதி இந்துக்களுக்கும் தாழ்த்தப்பட்டோர்க்கும் இடையில் மட்டுமே தீண்டாமை உண்டு. இது சாதி ரீதியிலும் இந்து சமய ரீதியிலும் ஏற்புடைமை பெற்றிருந்தது. இந்து சமயத்திலிருந்து கிறிஸ்தவ சமயத்துக்கு மாறிய பின்னும் இத்தகைய மனிதத்துவ மறுப்புக்கள் தொடர்ந்தும் இறுக்கமாகவும் நிலவின. மத வழியிலான தீண்டாமையைப் போலவே மூட நம்பிக்கையும் பகுத்தறிவற்ற போக்கும் பெண்ணடிமைத்தனமும் சமூக வாழ்வியற் சிந்தனைப் போக்குகளாகவே இருந்தன.

இத்தகைய குறிப்பான பொருளாதார, அரசியல், கலாச்சார நிகழ்வுகளில் இயங்கிய பெரியார், இவற்றை விளங்கிய/விளக்கிய விதத்தையும்



கண்டறிவதனூடே பெரியாரியத்தின் பயன்பாட்டுத் தனத்தை நாம் அறிந்து கொள்ள இயலும். காங்கிரசில் காணப்பட்ட இந்து சனாதனவாதம், வகுப்புவாரி இட ஒதுக்கீடு எதிர்ப்பு என்பன போன்ற ஜனநாயக விரோத அம்சங்களை எதிர்த்து வெளியேறிய (1925) பெரியார் பல்வேறு தொடர்ச்சி மற்றும் தொடர்பறுந்த நிலைபாடுகளின் வழியாகக் கடந்து வந்தார்.

**1)** பெரியாருக்கும் அரசுக் கட்டமைப்புக்கும் இடையிலான உறவைத் தெரிந்து கொள்வோம். பிரிட்டிஸ் இந்திய அரசுக் கட்டமைப்போடு பெரியார் நல்லுறவு கொண்டிருந்தார். பெரியாரின் தலைமையில் நீதிக் கட்சி இருந்தபொழுது சென்னை ஆளுநர் அதை அரசாங்கம் அமைக்க அழைத்தபொழுது மறுத்த காலங்களிலும் (1939-1946) பெரியார் இத்தகைய நிலைப்பாடு மேற் கொண்டிருந்தார். திராவிட நாடு பிரிவினை கேட்கும்பொழுதும் ஏகாதிபத்திய ஆதிக்கத்திற்கு உட்பட்ட தன்மையதாகவே கேட்டுள்ளார். ஏகாதிபத்தியக் கட்டமைப்பின்கீழ் சென்னை மாகாணத்தில் ஏற்பட்ட அரசாங்கங்களில் ராஜாஜி அரசாங்கத்தைத் தவிர (1937-1939) ஏனையவற்றை ஆதரித்தார். அதேபோன்று இந்திய அரசுக் கட்டமைப்பின்கீழ் இங்கு அமைக்கப்பட்ட காங்கிரசு அரசாங்கம் (1950-1967) தி.மு.க அரசாங்கம் (1967-1973) ஆகியவற்றை ஆதரித்தார். இப்போதும் விதிவிலக்கு ராஜாஜி காங்கிரசு அரசாங்கம் (1952-1954). இதிலும் ராஜாஜியின் பல நடவடிக்கைகளுக்கு ஆதரவு தெரிவித்து 1953 இல் கொணர்ந்த குலக்கல்வித் திட்டத்திற்குப் பின்னரே எதிர்ப்பு நிலைபாடு இருந்தது. இவை

www.tamilarangam.net

எல்லாவற்றையும் செறிவாக்கிக் காணும்பொழுது ஐம்பது ஆண்டுகளில் நான்கே ஆண்டுகள் அரசாங்கத்தை எதிர்த்துள்ளார். ராஜாஜி ஒரு பார்ப்பனர் என்பதோடு கண்டால், **பார்ப்பனர் தலைமையிலான அரசாங்கத்தை பெரியார் எதிர்த்துள்ளார்** எனத் தெரியலாம். பெரியாருக்கும் அரசுக் கட்டமைப்புக்கும் இடையிலான இந்த உறவு குறிப்பிடத்தக்கது. பெரியாரியத்தின் முன்னெல்லையும், பின்னெல்லையும் இந்தக் கட்டமைப்புக்குள்ளே அடங்கியுள்ளது.

**2)** 1925 இல் காங்கிரசை விட்டு வெளியேறிய பின், சுயமரியாதை இயக்கம் என்ற அமைப்பின்கீழ் வருணாச்சிரம எதிர்ப்பு, மூடநம்பிக்கை எதிர்ப்பு, புரோகித எதிர்ப்பு, பெண்ணடிமைத்தன எதிர்ப்பு என்பன போன்ற கருத்தாக்கங்களைப் பிரச்சாரம் செய்துகொண்டு திரட்டப்பட்ட ஒரு கூட்டத்தை நீதிக் கட்சிக்குரிய ஆதரவு சக்தியாக உருமாற்றிக் கொண்டே இருந்தார். சென்னை மாகாணத்தில் உள்ள பார்ப்பனரல்லாத முதலாளிகள், வட்டி முதலாளிகள், நிலவுடைமை யாளர்கள் (குறிப்பாக ஜமீன்தாரர்கள்) ஆகியோர் நலன்களை மையப்படுத்தி படித்த அறிவாளிகளின் வேலைவாய்ப்பு, சட்டமன்ற வாய்ப்பு ஆகியவற்றை முன்னிலைப்படுத்தி இயங்கிய நீதிக் கட்சியின் ஆதரவு சக்தியாக விளங்கினார். இன்னும் குறிப்பாகச் சொன்னால் ஏகாதிபத்தியப் பொரளாதாரக் கட்டமைப்பில் அதைச் சார்ந்திருந்த முதலாளிகள், ஜமீன்தாரர்கள், தரகு வணிகர்கள் (குறிப்பாக நாட்டுக் கோட்டைச் செட்டியார்கள், பலிஜா நாயுடு, கவுண்டர், நாடார், ரெட்டியார், நாயுடு சாதிகளை சார்ந்தவர்கள்) ஆகியோரின் நலன்களை மையப்படுத்தினார்.



இதன் திடப்படுத்திய வெளிப்பாடு 1930 களுக்குப் பின்னரே காணலாம். அப்போது வடஇந்தியா பார்சி, பனியா மூலதனக்குவியல் இங்கு வங்கித் தொழிலிலும் இன்சூரன்ஸ் தொழிலிலும் அதிகமானதோடு இவர்களுடன் பார்ப்பன மூலதனக் கூட்டுத் தொழிலும் அதிகமாகத் தொடங்கின. இக் காலகட்டத்தில் வடவர், பார்ப்பனர் ஆகிய இரண்டு தொடர்களையும் உள்ளடக்கி **ஆரியர்** என்ற கருத்தாக்கம் அழுத்தம் பெறலாயிற்று. இதற்கு முன்னர் பார்ப்பனர் அல்லாதார் என்ற தொடர் இந்த இடத்தில் **திராவிடர்** என்ற கருத்தாக்கம் அழுத்தம் பெறலாயிற்று. 1930 களுக்குப் பின்னர் உருவான சூழலில் இதைக் காண இயலும். தமிழ் பேசும் பகுதிகளில் உள்ள பார்ப்பனரல்லாத தமிழ் மற்றும் தெலுங்கு முதலாளிகளையும் நிலவுடைமையாளர்களையும் அறிவாளிகளையும் குறிக்க திராவிடர் என்பதே அழுத்தம் பெறவேண்டி வந்தது.

இந்தக் கட்டத்தில் ஏகாதிபத்தியத்தின் நேரடி ஆட்சியின் கீழ் திராவிட நாட்டுப் பிரிவினைக் கோரிக்கை என்பது ஏகாதிபத்தியப் பொருளாதாரக் கட்டமைப்போடு தொடர்பு கொண்ட தமிழ்ப் பிரதேச முதலாளிகளின் மூலதனப் பாதுகாப்புக்கும் சந்தை உத்தரவாதத்துக்கும் உரியதாகக் காண இயலும். தமிழ்ப் பிரதேச செட்டியார், நாயுடு, பலிஜா நாயுடு சாதிகளின் முதலாளிகட்கும் பார்சி, பனியா, தமிழ்ப் பிரதேசப் பார்ப்பனர் சாதிகளின் முதலாளிகட்கும் இடையிலான முரண்பாட்டில் இக் கோரிக்கையின் மையம் அடங்கி இருந்ததைக் காணலாம். தமிழ்ப் பிரதேச திராவிடர் முதலாளிகளின் மூலதன விரிவாக்கத்துக்கும் சந்தைப்

www.tamilarangam.net

பெருக்கத்துக்கும் உரிய வகைகள் வேறு வழிகளில் பின்பற்றப்படுமானால் இத்தகைய முரண்பாடு மென்மையடைந்த பின்னர் இந்தியக் கட்டமைப்பின் கீழ் இயங்கும் காலங்களில் இத்தகைய பிரிவினைக் கோரிக்கை மெல்லமெல்ல இல்லாமற் போயிற்று.

பின்னாளில் **தட்சிணப் பிரதேச திட்டத்தை** (இது இந்திய அரசின் கீழுள்ள திராவிட மாகாணம்) பெரியார் எதிர்த்தார். "தமிழ்நாடு தமிழருக்கே!" என்று வைக்கப்பட்ட அரசியல் முழக்கம்கூட காலப்போக்கில் தேய்வடைந்துபோனது. பிரதேசத் தரகுமுதலாளிகளின் சார்பில் இவற்றுக்கான பொருண்மைத் தேவை அற்றுப் போய்விட்டது. இன்னும் குறிப்பாகச் சொன்னால் பிரதேசத் தரகுமுதலாளிகளின் மூலதனத்தோடு -அதாவது திராவிடர் மூலதனத்தோடு- பார்சி, பனியா, பார்ப்பனர் மூலதனம் -அதாவது ஆரியர் மூலதனம்- இணைந்து கூட்டுத் தொழில்கள் 1950 க்குப் பிறகு பெருத்தன என்பதும், பிரதேசத் தரகுமுதலாளிகட்கு இந்தியச் சந்தை கிடைத்தது என்பதும் இங்கு கவனிக்கத் தக்கவை.

நீதிக் கட்சி அரசாங்க ஆதரவு முதற்கொண்டு ஏகாதிபத்தியத்தின் கீழ் திராவிட நாடு, இந்திய அரசுக் கட்டமைப்பின்கீழ் தட்சிணப் பிரதேச எதிர்ப்பு, தனித் தமிழ்நாடு, பின்னர் காங்கிரசு அரசாங்க ஆதரவு வரையிலான பெரியாரின் அரசியல் கோரிக்கைகளில் ஏற்ற இறக்கங்கள், சுய முரண்பாடுகள்,



தொடர்ச்சியின்மை ஆகியவை இருப்பினும் தமிழ்ப் பிரதேசத் திராவிட தரகு முதலாளிகளின் கோரிக்கை அதில் தொடர்ந்து இருந்தது. வடவர், தமிழ்ப் பிரதேச பார்ப்பனர் முதலாளிகளோடு திராவிட முதலாளிகளின் மோதலை வெளிப்படுத்தும் அரசியல் நிகழ்வுப் போக்குகளாக பெரியாரின் நடைமுறை அமைந்திருந்தது. ஆனால் இவர்களுக்கிடையே ஒற்றுமை அம்சமும் இருந்ததனால், அதுவே **வளரும் போக்காக** இருந்ததனால், பெரியார் தன் அரசியல் கோரிக்கைகளை ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மேல் கொண்டுசெல்ல இயலவில்லை. அதாவது **அவரது அரசியல் எல்லைகளை தமிழ்ப் பிரதேச திராவிட தரகு முதலாளியம் வரையறை செய்தது.**

**3)** 1920 நெல்லை காங்கிரசு மாநாட்டிலிருந்து வகுப்புவாரி இட ஒதுக்கீட்டுக்கான கோரிக்கையை பெரியாரிடத்தில் காணலாம். பார்ப்பனர், பார்ப்பனரல்லாதார், தீண்டத் தகாதவர் ஆகிய மூன்று பிரிவினர்க்கும் மக்கள் தொகை அடிப்படையில் சட்டசபைகளிலும் பதவிப் பொறுப்புகளிலும் ஒதுக்கீடு அமையவேண்டுமென பெரியார் வலியுறுத்தி வந்தார். இது ஏகாதிபத்திய அரசுக் கட்டமைப்பின்கீழ் சட்டமன்ற மற்றும் அதிகாரத்துவ பிரதிநிதித்துவமாக இருப்பினும், அவற்றிலுள்ள பாரதூரமான சமனற்ற நிலையை -குறிப்பாக பார்ப்பனரின் மிதமிஞ்சிய மேலாதிக்கத்தை- எதிர்த்த ஜனநாயகப் போக்காகும். பெரியாரிடத்தில் நாம் காணலாகும் தொடர்ச்சியான போக்காகும். இந்திய அரசியல் சட்டத்தில் பிற்பட்ட மக்களுக்கு இட ஒதுக்கீட்டு உரிமைகள் மறுக்கப்பட்ட

www.tamilarangam.net

பொழுது பெரியாரின் போராட்டத்தின் விளைவாகவே முதல் சட்டத் திருத்தம் கொண்டுவரப்பட்டது. இதன் விளைவாக **பெரியாருக்கு பார்ப்பனரல்லாதாருக்கு ஒரு பரந்துபட்ட நடுத்தர வர்க்க அடித்தளம் கிடைத்தது.**

இங்கும் ஓர் அம்சத்தை ஊன்றிக் கவனிக்க வேண்டும். வகுப்புவாரி இட ஒதுக்கீடு உண்மையில் செயலுக்கு வந்த 1927 க்குப் பின் (இதில் பார்ப்பனரல்லாதார்க்கு 5/12 பங்கு) பத்தாண்டுக்குள்ளேயே அதுகுறித்த பரிசீலனை தேவைப்பட்டது. பார்ப்பரல்லாதார்க்குள் முன்னேறிய சாதியினர் மிகப் பெரும் பங்கை (22 சதவீத மக்கள் 27 சதவீதம் பதவிகள்) அடைந்தனர் என்றும், பின்னடைந்த சாதியினர் மிகக் குறைந்த பங்கை (50 சதவீதம் மக்கள் 2 சதவீதம் பதவிகள்) அடைந்தனர் என்றும் 1935 இல் பிற்பட்ட சாதிகள் எழுப்பிய குரலில் சமூக நீதிக்கான தேவை இருந்தது. பெரியாரைப் பொறுத்து "நம்மவர்க்குள்ளேயும் சாதியின் படியே வேண்டுமென்றால் எடுத்துக் கொள்ளட்டும்" எனப் பின்னாளில் (விடுதலை, 9.4.50) சில இடங்களில் குறிப்பிட்டாலும்கூட, பார்ப்பனரல்லாதாரில் துணைப் பிரிவுகள் உருவாக்குவதை அவர் பெரிதும் விரும்பவில்லை. 1947 இல் பார்ப்பனரல்லாத பிற்பட்ட மக்களுக்கென ஒதுக்கீடு வழங்கப்பட்டபொழுது அதை ஆதரித்துள்ளார். 1950 அரசியல் சட்டத்தில் இது மறுக்கப்பட்டபொழுது இதற்காகப் போராடி சட்டத் திருத்தத்துக்கு வகைசெய்தார். இதன்மூலம் **படித்த பிற்பட்ட சாதி இளைஞர்களின் ஆதரவு வளையத்தை நீடித்துப் பெற்றுக் கொண்டே வந்தார்.**



**4)** தமிழர்களில் பெரும்பான்மையாகவும், பிற்பட்ட/தாழ்த்தப்பட்ட சாதிகளில் ஆகப் பெரும்பான்மையாகவும் உள்ள தொழிலாளர்கள், சிறு விவசாயிகள், கூலி விவசாயிகள், நெசவாளர்கள் என இன்னோரன்ன அடிப்படை மக்களுக்கும் பொருளாதார மேலாதிக்க சக்திகள் மற்றும் அரசுக் கட்டமைப்பு ஆகியவற்றுக்கும் இடையிலான முரண்பாட்டில் பெரியாரின் ஈடுபாடு கருதத்தக்கது. ஓரிரு சந்தர்ப்பங்களைத் தவிர அனைத்திலும் தொழிலாளர்கள் பக்கம் நிற்பதாகவே பெரியார் நமக்கு தோற்றமளிக்கிறார். ஆனால் இத்தகைய முரண்பாடுகளுக்கான காரணங்களை முன்வைக்கும் பொழுதும் இவற்றுக்கான சமூக சக்திகளைக் கண்டறியும் பொழுதும் இரண்டாவது மூன்றாவது தளங்களில் செயற்பட்டுக் கொண்டிருப்பனவற்றை முன்னிலைப்படுத்துகிறார்.

1933-35 காலத்தில் வெளிப்படையான பொதுவுடைமைப் பிரச்சாரம் செய்து அதன்பின் சட்ட ரீதியான தடையினால் பின்னடைந்து பிரச்சாரத்தைக் கைவிட்டாலும், பொதுவுடைமைக்கு எதிராக எப்போதும் இறுதிவரை பிரச்சாரம் செய்யவில்லை. இன்னும் சொன்னால் 1949-51 கம்யூனிஸ்ட் கட்சி தடைசெய்யப்பட்டு, கட்சியினர் மீது கடும் தாக்குதல் தொடுக்கும் காலங்களில் கம்யூனிஸ்டுகள் மீதான ஒடுக்குதலைக் கண்டித்தும் கம்யூனிஸ்ட்டுகளின் 'பலாத்கார வழியை' கண்டித்தும் பெரியாரின் பிரச்சாரம் அமைந்தது. இதன்மூலம் தாங்களே உண்மையான பொதுவுடைமைக் கட்சியென்றும்கூட பிரச்சாரம்

www.tamilarangam.net

அமைந்தது. அடிப்படை மக்களின் போராட்டங்களின் பொழுது **அனுதாபம் தோய்ந்த வாயுபசாரம்** இருந்தாலும் இத்தகைய பிரச்சினைகளுக்கெல்லாம் காரணங்கள் சமூக ஜாதி பேத முறையில் இருக்கிறதென்றும் கடவுள், கர்மம் போன்றவற்றின் மீதான நம்பிக்கையில் இருக்கிறதென்றும் பிறவியின் பெயரால் கற்பிக்கப்பட்ட பேதங்களில் இருக்கிறதென்றும் குறிப்பிட்டார்; இவற்றுக்கெல்லாம் ஆதாரமான பார்ப்பன சாஸ்திரங்களில் உள்ளதென்றும் குறிப்பிட்டார்.

பார்ப்பனர்களின் இனாம் நிலவுடைமை ஒழிப்பை (1949) வெகுவாக ஆதரித்தாரெனினும் பார்ப்பனரல்லாத ஜமீன் நிலவுடைமை ஒழிப்பைப் பற்றி மௌனமாக இருந்த பெரியார், ஜமீன் குத்தகை மற்றும் கூலி விவசாயிகளின் கலவரங்களின் பொழுது ஜமீன்தாரர்களையும் வட்டி முதலாளிகளையும் மேடையில் அமர்த்திக்கொண்டு இருதரப்பினரின் சிக்கல்களைப் பேசியுள்ளார். கைத்தறி நெசவாளர்களின் போராட்டத்தின்போது (1949) தமிழ்ப் பிரதேச செட்டியார், நாயுடு நூற்பாலைகளின் நூல் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகி கொள்ளை இலாபம் சம்பாதித்துக் கொண்டிருப்பதைப் புறக்கணித்துவிட்டு, வடநாட்டுத் துணிகளின் இறக்குமதி மட்டுமே காரணம் எனக் கூறி வடநாட்டுத் துணிகளை எரிக்கும் போராட்டத்தில் இறங்கினார். செட்டியார், வடவர் ஆகியோரின் கூட்டுக் கொள்ளை இலாபத்தை எதிர்க்கும் பொதுவுடைமை யாளரின் போராட்டத்தை கடுமையாக எதிர்க்கிறார். இவை எல்லாவற்றின் மீதான அரசு இயந்திரத்தின் தன்மையைப் புறக்கணிக்கிறார்.



இங்கு பெரியார் குறிப்பிடும் ஜாதி பேதம், கடவுள் கர்மம் மீதான நம்பிக்கை, பிறவிப் பேதங்கள், பார்ப்பன சாஸ்திரம் என இவை எல்லாவற்றையும் நாம் காரணிகளாக அங்கீகரிக்கிற அதே நேரத்தில், இவையெல்லாவற்றையும் விட பொருளாதார சுரண்டலை முன்னிலைப்படுத்தாமல் பார்ப்பனர்-வடவர் சுரண்டலை முன்னில்லப்படுத்தி அவற்றோடு பிரதேச முதலாளிகளின் சுரண்டலையும் இணைக்காமல் பெரியார் பிரச்சாரம் செய்தல் கவனிக்கத்தக்கது. அதோடு மட்டுமின்றி இந்த வர்க்கங்களின் சுரண்டல் தன்மையைப் பாதுகாக்கும் அரசு இயந்திரத்தின் தன்மையைப் பெரியார் அம்பலப்படுத்தவில்லை. இவை எல்லாவற்றோடும் பெரியாரின் அனுதாபம் தோய்ந்த வாயுபசாரத்தைக் காணவேண்டும்.

பொதுவுடைமைக் கட்சி வெளிப்படையாக இயங்கி மக்கள் திரள் அமைப்புக் களைக் கட்டத் தொடங்கிய காலத்தில் (1952) பெரியார் கட்டிய திராவிட உழவர், தொழிலாளர் சங்கங்கள் தொழிற்சங்க இயக்கத்தில் புதிய வகைப்பட்ட சித்தாந்தத்தில் அமைக்கப்பட்டன. திராவிட முதலாளிகள், தொழிலாளர்கள், திராவிட மிராசுதாரர்கள், பண்ணையாட்கள் கொண்ட **இன ஒருமை மற்றும் வர்க்க முரண்கொண்ட சங்கங்களை** உருவாக்க முனைந்தார். பெரியாரால் **பங்காளிநிலை** என வர்ணிக்கப்பட்ட இது **வர்க்க சமரச சித்தாந்தம்** ஆகும். பிற்பட்ட/தாழ்த்தப்பட்ட மக்களில் உள்ள பெரும்பான்மையான அடிப்படை மக்களின்பால் அனுதாபம் தோய்ந்த வார்த்தைகளைப் பிரச்சாரம்

www.tamilarangam.net

செய்துகொண்டே அவர்களின் கொடுமைகளுக்கான முதன்மைக் காரணங்களை முன்னிலைப்படுத்தாமலும் காரணஸ்தர்களில் பார்ப்பனரல்லாதாரை முன்னிலைப் படுத்தாமலும் செயலளவில் மூடிமறைத்துவிடுவதற்கு உரிய பரந்துபட்ட செயல் தந்திரம் கொண்ட ஓர் அணுகுமுறை இதனூடே படர்ந்துள்ளது.

**5)** பெரியாரியம் தேசிய இனச் சிக்கலைப் பல்வேறு காலகட்டங்களினூடே கையாண்டது. குடியேற்ற ஆதிக்கக் காலத்தில் ஏகாதிபத்தியத்தின் பாதுகாப்பின் கீழ் திராவிட நாடு கோரியது. இதுகுறித்து நீதிக் கட்சியின் ஆந்திர பிரிவு நேர்மையாக இல்லை. திராவிடநாடு எனும் வரையறை பல தேசிய இனங்களை உள்ளடக்கியதாகவும் இன ரீதியிலான சித்தாந்தத்தை முன்வைப்பதாகவும் வடவர் எதிர்ப்பு நோக்கிலானதாகவும் இருந்தது. அன்றைய சூழலில் ஒரு தேசிய இனப் பிரதேச, மொழி அடிப்படையில் அமைந்திருக்க இயலுமா என்பது ஐயமே. ஆனால் அடுத்த பத்தாண்டுகளில் மொழிவாரி மாநிலங்களை நோக்கி புறநிலை அரசியல் யதார்த்தம் முன்னேறிச் செல்லும்பொழுது பெரியார் அது ''திராவிடக் கலாச்சாரத்துக்கும், திராவிட சமுதாயத்துக்கும் தேய்வு ஏற்பட்டுவிடுமென்று'' கருதினார் (விடுதலை-1.8.48). அதோடு மொழி அடிப்படையில் ஒரு நாடு தனியாகப் பிரிவதற்கு அவர் அப்போது உடன்படவும் இல்லை (விடுதலை-7.1.1953). இக் காலத்தில் (1956) ஜவகர்லால் நேரு விடுத்த தட்சிணப் பிரதேசத் திட்டத்தையும் பெரியார் எதிர்த்தார். இது, அன்றைய சென்னை மாகாணத்தை உள்ளடக்கி திருவிதாங்கூர், கொச்சி, மைசூர், ஐதராபாத்



ஆகியவற்றைக் கொண்ட பெரும் மாநிலமாகும். இது சமஸ்தானப் பகுதிகளையும் உள்ளடக்கிய ஒரு முழுமையான திராவிடம் ஆகும். அதாவது இந்திய அரசுக் கட்டமைப்பின் கீழான திராவிடநாடு. இதில் பார்ப்பனரின் அடிப்படை நலன்கள் அடங்கியிருப்பதாகவும் (விடுதலை-1.3.55), இதில் வடவருக்கும் மலையாளிகளுக்கும் பார்ப்பனருக்கும் முழு அதிகாரம் சென்றுவிடும் என்பதாகவும் (விடுதலை-14.6.56) குறிப்பிட்டு பெரியார் இதை மறுக்கிறபொழுது **அன்றைய முதல்வர் காமராசர் மீதான ஆதரவு நிலைபாடு** என்பதாக மட்டுமே இதைக் காணாமல், தமிழ் பேசும் பகுதிகளில் உள்ள மலையாளர் அல்லாத திராவிடரை மனதிற் கொண்டுள்ளதை வெளிப்படுத்துகிறது. மொழிவாரி மாநிலத்துக்குப் பின்னரும் தனித் தமிழ்நாடு கோரும்பொழுதும் திராவிடர் என்ற பெயரிடலைத் தொடர்ந்து தக்கவைத்துக் கொண்டிருந்தமைக்குக் காரணம், அவர் கூறுவதுபோன்று **பார்ப்பனரைத் தவிர்க்க வேண்டும்** என்பதுமட்டுமல்ல; அது ஒரு பக்கம். இன்னொரு பக்கம், **தமிழ்நாட்டில் உள்ள தமிழர், தெலுங்கர், கன்னடர் ஆகியோரை ஒருங்கிணைக்கும் தொடரும் ஆகும்.** தமிழ்நாடு பிரிவினை கிடைத்தபின் வடவரை விரட்ட வெள்ளையருடன் ஒப்பந்தம் செய்துகொள்ளலாம் (விடுதலை-29.8.56) என்பது வடவரை விரட்டுவது மட்டுமல்ல, வெள்ளையரோடு உறவைப் புதுப்பித்துக் கொள்தலாகும்.

இங்கு மொழிவகைப்பட்ட தேசிய இனக் கருத்தாக்கத்தைவிட **பிரதேச வகைப்பட்ட இனக் கருத்தாக்கமே மேலோங்கியும் ஏகாதிபத்தியத்துக்கு**

www.tamilarangam.net

உட்பட்ட தீர்வும் காணப்படுகின்றன. தேசிய இனச் சிக்கலின் வெளிப்பாட்டு வடிவமான மொழிச் சிக்கலிலும் பெரியார் ஆங்கில ஆதரவு, கட்டாய இந்தி எதிர்ப்பு என்பனவற்றில் உறுதியாக இருந்தாரே தவிர தமிழ் ஆதரவில் உறுதியாக இல்லை. கட்டாய இந்தியை தேசிய இனங்களுக்கு இடையிலான சமத்துவக் குலைப்பாகக் காணாமல் ஆரியர் சதியாகவும் வடவர் சூழ்ச்சியாகவும் மட்டுமே வெளிப்படுத்துகிறார். மேலும் மொழிப் போராட்டங்கள் அனைத்தும் அரசுக் கட்டமைப்பின் மீதான நம்பிக்கையோடே முடித்துவைக்கப்பட்டன. பெரியாரின் **திராவிட இனக் கருத்தாக்கம் தமிழ்த் தேசிய இன உந்துதலுக்குத் தடை.** அதுமட்டுமின்றி அரசுக் கட்டமைப்புக்கு விசுவாசமாய்த் தொடர்ந்து இருந்துகொண்டே அவ்வப்போதைய அரசாங்கங்களுடன் **தொடக்கத்தில் முரண்பாடு இறுதியில் ஐக்கியம்** என்ற செயல் தந்திரத்தோடு கூடிய ஓர் அணுகுமுறை இதில் உள்ளது.

**6)** பெரியாரியத்தின் பார்ப்பனிய எதிர்ப்பு குறிப்பிடத்தக்கது. பார்ப்பனியம் குறித்த பரவலான, அழுத்தமான, மற்றும் தொடர்ச்சியான சமூக உணர்வை ஏற்படுத்தியதில் பெரியாரின் பங்கு ஈடிணையற்றது. சமூக அளவியும் கலாச்சார அளவிலும் எல்லா சாதி மக்களுக்கும் சமத்துவத்தையும் ஜனநாயகத்தையும் மறுக்கிற பார்ப்பனியத்தை பெரியாரியம் அம்பலப்படுத்துகிறது. இங்கும்கூட சிலவற்றைக் கவனிக்க வேண்டும். பார்ப்பனியம் என்ற ஒரு கருத்துருவத்துக்குள் மக்களுக்கு எதிரான அனைத்துக் கருத்துருவங்களையும் பெரியார் இணைக்க



முயல்கிறார். இதன்மூலம் பார்ப்பனியம் மட்டுமே எதிரி எனச் சுருக்கி ஏனைய மக்கள் விரோதக் கருத்துருவங்களை பின்னிலைப்படுத்துகிறார். இதுமட்டுமல்ல பார்ப்பனியத்தின் பொருண்மை இருப்பு பார்ப்பனர்களின் பொருளியல் மேம்பாட்டிலும், இதை உறுதிப்படுத்திய நிலவுடைமைப் பொருளியல் அம்சங்களிலும் உள்ளது. ஆனால் இத்தகைய தொடர் சங்கிலிக் காரணங்களுக்குள்ளும் பொருண்மை அடிப்படைக்குள்ளும் பெரியார் புக விரும்பவில்லை. எனினும் பார்ப்பனியத்தையும் பார்ப்பனர்களின் பொருளியல் மேம்பாட்டையும் தனித்தனித் தளங்களாகக் கண்டு, பார்ப்பனரின் பொருளாதார ஆதிக்கத்தை அம்பலப் படுத்துகிறார்.

பெரியாரியத்தின் இனநீதியிலான சித்தாந்தமே இதன் அடிப்படையெனினும் இதற்குக்கூட ஒரு வரையறை இருந்திருக்கிறது. நீதிக் கட்சிக்கு நெருக்கடி ஏற்பட்டபொழுது நீதிக் கட்சியின் சட்டமன்றப் பிரிவில் பார்ப்பனர்களை இணைத்துக் கொள்ளலாம் என்பதற்கு பெரியார் ''சம்மதமும் வாக்குத் தத்தமும்'' செய்தார் (குடி அரசு-13.10.1929). சுப்பராயனின் முதல்வர் காலத்தில் குளித்தலை மிராசுதாரர் சேதுரத்தின அய்யர் அமைச்சராக இருந்ததை (1928-1930) பெரியார் ஆதரித்துள்ளார். சுயமரியாதை இயக்க மாநாடுகளில் இந்த அய்யர் முன்னிலை வகித்துள்ளார். அரசியல் விசயத்தில் சட்டத்துக்குக் கட்டுப்பட்டு கிளர்ச்சி செய்தும் சமூக விசயத்தில் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் வழங்க ஒப்புக்கொள்ளும் பார்ப்பனர்களை நீதிக் கட்சியில் உறுப்பினர்களாகச் சேர்க்கலாம்

www.tamilarangam.net

(குடியரசு-15.9.1935) என பெரியார் கருதினார். தேர்தல்களில் பார்ப்பனர்களை ஆதரித்துள்ளார் (1934 முதல் 1967 வரை). வாசன் அனந்த ராமகிருஷ்ணன் போன்ற பார்ப்பன முதலாளிகள் அளித்த காணிக்கைகளைப் பெற்றுக் கொண்டார் (வீரமணி அறிக்கை, விடுதலை -3.10.91). இவர்கள் எல்லோரும் பார்ப்பனியத்தில் ஊறிய பார்ப்பன மிராசுதாரர்களும் முதலாளிகளும் அதிகாரிகளும் ஆவர். எனினும் இவர்களோடு தேவைப்படுகின்ற நேரத்தில் கைகோர்த்துச் செயல்படக்கூடிய அளவில் பெரியாரிய சமூக நடைமுறை இருந்தது. இது இனவகைப்பட்ட சித்தாந்தத்துக்கு ஒரு வரையறையை ஏற்படுத்திவிடுகிறது. ஆரியர்-திராவிடர் என்று இன ரீதியில் சமூக நிகழ்வுகளை அணுகினாலும்கூட, தேவைப்படும் நேரங்களில் ஆரியரிலும் திராவிடரிலும் மேல்நிலை வர்க்கங்கள் ஒன்றிணைதலுக்கு உரிய வாய்ப்பை இது ஏற்படுத்திக் கொடுக்கிறது.

**7)** சேரன்மாதேவி குருகுலத் தனியிடச் சிக்கல் பார்ப்பனரல்லாதார்க்குரிய சுயமரியாதையையும் வைக்கம் போராட்டம் தாழ்த்தப்பட்டோர்க்கு சுயமரியாதையையும் வேண்டி நடத்தப்பட்ட ஜனநாயகப் போராட்டங்களாகும். சாதியக் கொடுமைகளையும் பார்ப்பனர் மேலாதிக்கத்தையும் மிகச் சரியாகக் கண்டறிந்த பெரியாரியம் சாதியம், அகமணமுறை போன்ற சமூக நிகழ்வு களினாலும் அரசியல் சட்ட அந்தஸ்து போன்ற அரசியல் நிகழ்வுகளினாலும் கட்டிக் காக்கப்படுவதாகக் கருதுகிறபொழுது சாதியத்தின் பொருண்மை இருப்பின் முதன்மையைக் கருதவில்லை. இதன் விளைவாக சாதிய எதிர்ப்புப்



போராட்டங்களை ஒரு குறிப்பிட்ட கருத்து மட்டத்துக்கு மேல் அதனால் உயர்த்த முடியவில்லை. சாதிய வேறுபாடுகள் மிக்க ஒரு சமூகத்தில் பல்வேறு பொருண்மை நிலைகளில் இருப்புக் கொண்டுள்ள சாதியத்தின் தன்மைகளைக் கணக்கில் எடுப்பதில் ஒரு குறிப்பிட்ட அளவே செல்ல முயன்றதால் **சாதிய ஒழிப்பு** என்ற நிலைபாடு **சாதிகளுக்கு இடையிலான சமத்துவம்** என்பதாகக் குறுகியது. சாதிய சமத்துவம் என்பது சாதிய ஒழிப்புக்கான இடைக்காலத்திய நிகழ்வுப் போக்கு என்பதாக இராமல் அதுவே முழுமையடைந்த ஒன்றாக உருமாறிவிடுகிறது. மேலும் இத்தகைய சாதிய சமத்துவம், **பார்ப்பனரல்லாத சாதிகளின் ஒருங்கிணைந்த பலத் தொகுப்பு** என்ற நிலையில் அதன் சமூகப் பயன்பாட்டுத் தளத்தில் செயல்படுகிறது. பெரியாரின் அகநிலைக் கண்ணோட்டத்தில் சாதிய ஒழிப்பே இருப்பினும்கூட, பெரியாரியத்தின் செயல்பாட்டுப் புறநிலை விளைவாக **பார்ப்பனரல்லாத சாதிய பலத்தொகுப்பின் அடிப்படையிலான சாதிய சமத்துவம்** ஏற்படுதலுக்குக் காரணங்கள் உண்டு. அவை சாதியத்தின் பொருண்மை நிலையைக் காணத் தவறுதலும், சாதிகளுக்குள் ஏற்பட்டுவரும் வர்க்க மாறுதல்களைக் கணக்கிலெடுக்கத் தவறுதலும், இவற்றை அடிப்படைகளாகக் கொண்டு சாதிய சிக்கல்களை அணுக மறுத்தலுமாகும்.

இவற்றோடு மட்டுமல்லாமல், சாதிய சமத்துவம் என்பதுகூட, பார்ப்பனர்க்கும் அல்லாதார்க்கும் இடையில் மட்டுமான நிகழ்வா அன்றி தாழ்த்தப்பட்டோர்

www.tamilarangam.net

உள்ளிட்ட எல்லா சாதிகளுக்கும் இடையிலான நிகழ்வா என்பது பற்றிய சிக்கலாகும். தாழ்தப்பட்டோரோடு தம்மை முற்றாக ஐக்கியப்படுத்திக் கொள்ளாத நிலையில் தாழ்த்தப்பட்டோருக்கான ஜனநாயகத்தையும் சமத்துவத்தையும் கோரி பார்ப்பனரல்லாத சாதிகளிடத்தில் பெரியார் வெகுவாக வழக்குரைத்து நின்ற பொழுதினும்கூட, பார்ப்பனர்க்கும் பார்ப்பனரல்லாதார்க்கும் இடையிலான சாதிய முரண்பாடுகளை அவர் கையாண்ட விதத்துக்கும், பார்ப்பனரல்லாதார்க்கும் தாழ்த்தப்பட்டோர்க்கும் இடையிலான சாதிய முரண்பாடுகளைக் கையாண்ட விதத்துக்கும் வேறுபாடுகள் நிரம்ப இருந்தன. முன்னதைப் பகைமை நிலையில் கருதினார்; பின்னதைப் பகைமையற்றதாகக் கருதினார். பார்ப்பனரை எதிர்க்கும் ஒரு பரந்துபட்ட கூட்டணியில் தாழ்த்தப்பட்டோரை வென்றெடுக்க பெரியாரியம் பயன்பட்டது. இந்த அளவுக்கு தாழ்த்தப்பட்டோரிடையே சமூக சலனங்கள் ஏற்படுத்தப் பயன்பட்டதே தவிர அதற்கு அடுத்து முன்னோக்கிய பாதையை உள்ளடக்கியதாக இல்லை. ஆதி திராவிடப் பண்ணையாள்களுக்கு திராவிட மிராசுதாரர்களின் தலைமையை தக்கவைத்துக் கொண்டேயும் பார்ப்பனரல்லாத ஜமீன்தாரர்களின் கொடூரங்களை எதிர்த்து ஆதி திராவிடக் குடிகளின் பகைக் கொந்தளிப்பைக் கண்டுகொள்ளாமலும் அவர்களிடத்தில் தீண்டாமை ஒழிப்புக்கான பெரியாரின் பிரச்சாரம் களப் பொருத்தமின்றி இருந்தது. **பிராமணாள் கபே** எழுத்துகளை அழிப்பதில் இருந்த நியாயமான முனைப்பு, திராவிட மிராசுகளின் சாணிப்பால் கொடுத்தல், சவுக்கடி அடித்தல் என்பவற்றைத் தடுப்பதிலோ தனிக்குவளை, பொது இடப் பயன்பாடு மறுப்பு என்பவற்றை



எதிர்த்து கிளர்ச்சி செய்தலிலோ (ஏன், தீவிரமாகப் பிரச்சாரம் செய்தலிலோ) பெரியார் நியாயமான முனைப்பைக் காட்ட இயலாதபடி அவரது சமூக வரம்பு குறுக்கிட்டது என்பதைப் பதிவுசெய்தலே நேர்மையாகும். அதுமட்டுமின்றி பெரியார் கட்டிய பல்வேறு அமைப்புகளிலும் அவரது நியமனப் பொறுப்புகளிலும் அவர் பின்னாளில் உருவாக்கிய பிரச்சார நிதி நிறுவனங்களிலும் தாழ்த்தப்பட்டோர்க்கு உரிய மிகக் குறைவான (அல்லது இல்லாத) பங்கோடும் இதை அணுக வேண்டும். சாதிய ஒழிப்பு, தீண்டாமை ஒழிப்பு குறித்துப் பெரியாரியத்தின் எல்லைகளைக் காண மறுப்பது சரியாகாது.

**8)** பெண்கள் விடுதலை பற்றிய பெரியாரின் கருத்துக்கள் மிகவும் குறிப்பிட்டுச் சொல்லத் தகுந்தன. பெரியாரின் சமகாலத்தில் வாழ்ந்த சிந்தனையாளர்கள் பலரைக் காட்டிலும் அவரது பார்வை முன்னோக்கியதாகவும் சமத்துவ நோக்கிலாகவும் அமைந்தது. தமிழ்ச் சமுதாயத்தின் தொன்று தொட்டு உருவாகி திடப்பட்டு இறுகிப்போன பல கருத்துக்களின் மீது பெரியாரின் சரியான தாக்குதல் வலுவாக அமைந்தது. சிறுவயதுப் பெண் திருமணத்தடை (சார்தா மசோதா), தேவதாசி ஒழிப்புச் சட்டம் ஆகிய சட்டங்கள் நிறைவேற்றுதலுக்கு பெரியார் உறுதுணையாக நின்றார். விதவை மறுமணம், கலப்புமணம் ஆகியவற்றை பிரச்சாரம் செய்தார். தனியுடைமையின் மீது பெண்ணடிமை ஆதாரம் கொண்டுள்ளது எனக் குறிப்பிட்டார். இவையெல்லாம் பொதுவாக எந்தவொரு சமூக சீர்திருத்தவாதியும் குறிப்பிடலாம். பெரியாரின் சிந்தனைகள் இந்த

www.tamilarangam.net

வரம்பைக் கடந்து நிற்கின்றன. ஒரு வர்க்கத்தின் ஆணினம் அனுபவிக்கும் உரிமைகளை அந்த வர்க்கத்தின் பெண்ணினம் சமமாக அனுபவிக்க வேண்டும் நிலையையும் கூட பெரியார் சிந்தனைகள் தாண்டுகின்றன. ஆண்-பெண் உறவு நிலைகளில் எல்லா ஆண்களுக்கும் நிகராக எல்லாப் பெண்களும் சமத்துவமாக மதிக்கப்பட வேண்டும் என்பதோடு மட்டுமன்றி உடலியல் சமனற்ற தன்மையை ஒட்டி எழுப்பப்படும் சமூகவியல் சமனற்ற தன்மைகளைக் களையும் நோக்கில் பெரியாரியம் அமைந்துள்ளது.

கற்பு, கற்பத்தடை, ஒருமணம் ஆகியவை குறித்த பெரியாரியக் கருத்துக்கள் அதற்கு முந்தைய கற்பிதப் புனிதங்களைப் போட்டு உடைக்கின்றன. பெண் மீதான கற்பின் ஒரு சார்பு அழுத்தம் கண்டிக்கப்படுவதோடு இருதரப்புக்கும் இடையிலான சமமான/சுயேச்சைக் கற்பு வலியுறுத்தப் படுகிறது. இதைக்கூட பாரதியார், கற்பெனப்படுவதை இருபாலாருக்கும் பொதுவில் வைப்போம் என்று கூறியுள்ளார். இதில் குடும்ப உறவுகளுக்குள் ஆண் பெண் சேர்க்கை குறித்த கருத்தில் ஜனநாயகமும் சமத்துவமும் உள்ளது. இந்த ஜனநாயகத்தையும் சமத்துவத்தையும் மீறி ஆண் சோரம்போகும் பட்சத்தில் பெண் தன் நிர்ப்பந்தக் கற்பையும் அடிமைக் கற்பையும் உதறிவிட்டு விருப்பப்பட்டவருடன் சேர்க்கை கொள்ளலாம் என்பதே பெரியாரியம். இதை ஆணின் அராஜகத்துக்கான பதிலீடு என்பதாகக் காணாமல், குடும்ப சமத்தவ சீர்குலைவுக்கு எதிரான நியாயமான கலகம் எனக் காணலாம்.



கர்ப்பத்தடையை வெறும் பொருளாதாரச் சிக்கன செயலாகவும் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டமாகவும் காணாமல், பெண்கள் விடுதலை அடையவும் சுயேச்சை பெறவும் ஆனதாகவும் பெரியாரியம் காண்கிறது ; பெண்கள் பிள்ளைப் பேறே அடையவேண்டியதில்லை எனவும் காண்கிறது. பிள்ளைப்பேற்றிலும் வளர்ப்பிலும் பெண்களுக்கு உண்டான உடலியல்/சமூகவியல் துன்பங்களைக் குறைத்துக் கொண்டு வரவேண்டிய தேவையை நிறைவேற்றும் போக்கில் துரிதச் செயற்பாடு இன்றியமையாமை. ஆனால் மனிதப் பெருக்கத்துக்கு பெண்ணின் உடலைச் சார்ந்திருக்க வேண்டாத அளவுக்கு அறிவியல் தொழில்நுட்பம் வளரும் காலம்வரை திட்டமிட்டு மனிதப் பெருக்கத்துக்கு இன்றைய முறையின் தொடர்ச்சி என்பது இயற்கையின் தேவை ஆகும். அத்தகு நேரம் வருவதற்கு முன்னரே பெண்டிர் பிள்ளைப்பேறு மறுப்பு என்பது சமூகக் கட்டங்களைக் கணக்கி லெடுக்காமல் தாண்டிக் குதித்தலாகும். ஆனால் அத்தகைய கட்டத்தை நோக்கி நிகழ்காலத்தை இழுத்துச் செல்லவும் அதற்கான கருத்துப் பரப்பலில் ஈடுபடலும் இன்றை தேவைகளாகும். அந்த விதத்தில் பெரியாரியத்தின் பங்களிப்பு மகத்தானது.

இன்னொன்று ஒரு கணவன் சில நியாயமான காரணங்களினால் ஒரு மனைவிக்கும் மேலாக இன்னொரு பெண்ணை மணந்து அதே குடும்ப அமைப்புக்குள் இருப்பதற்கு சாஸ்திரம் மற்றும் சட்ட ஏற்புடைமைகள் இருக்கும்பொழுது இதே நியாயமான காரணங்களினால் இந்த உரிமை

www.tamilarangam.net

பெண்ணுக்கும் குடும்ப அமைப்புக்குள்ளே அளிக்கப்பட வேண்டும் என்று பெரியார் குறிப்பிடுகிறார். குடும்ப அமைப்புக்குள் ஆணுக்கு வழங்கப்பட்டுள்ள பாலுறவு நபர் எண்ணிக்கை விரிவாக்கம் பெண்ணுக்கும் வழங்கப்பட வேண்டும் என்ற பெரியாரியத்தில் சமூக நியாயம் இருப்பதோடு, குடும்ப அமைப்பு பரிபூரண சமத்துவமாக மாறவேண்டும் என்பதற்கான போர்க்குரலும் உள்ளது. முழுமையான ஆண் பெண் சமத்துவ நிலையை நோக்கிய இத்தகைய கருத்துக்களைப் பெரியாரியம் வழங்குவதில் நாம் பெருமைப்படலாம்.

இத்தகைய பொருளாதார, அரசியல், கலாச்சாரத் தளங்களைக் கொண்ட பெரியாரியத்தின் **மையத்தையும் சுற்றெல்லை அம்சங்களையும்** கணக்கிலெடுத்தல் அவசியம். பெரியார் சமூக சீர்திருத்தவாதியாகவும் அரசியல் கிளர்ச்சியாளராகவும் பொருளாதார நிகழ்வுகளில் குறுக்கிடுபவராகவும் இருந்துள்ளார். இவை எல்லாவற்றுக்குள்ளும் தீர்மானகரமான உள்ளார்ந்த அம்சங்கள், இவற்றுக்கு இடையிலான இணைப்புகள், இவற்றில் செயல்படும் விதிகள் ஆகியவற்றைக் கண்டறிந்து பருண்மையோடு இணைத்துப் பார்ப்பதன் மூலம் பெரியாரிய மையத்தைக் கண்டறிய இயலும்.

நிலவுகிற முதலாளிய/நிலவுடைமை அரசுக் கட்டமைப்பை ஒத்துக்கொண்டு அரசாங்கங்களுடன் ஐக்கியத்தை நோக்கிய மோதல்களில் ஈடுபடும்பொழுதும், 1930 க்குப் பின் தமிழ்ப் பிரதேசத்தின் குறிப்பான வளர்ச்சியான திராவிட



முதலாளிகள், நிலப்பிரபுக்கள் ஆகியோரின் நலன்களை உள்ளடக்கி வடவர்/பார்ப்பனர் முதலாளிகளுடனான மோதல்களைக் கருத்திற் கொண்ட அரசியல் குறுக்கீடுகளாயினும், அரசதிகாரத்தில் பார்ப்பன அதிகாரத்துவத்துக்கு நிகராக பார்ப்பனரல்லாதார் அதிகாரத்துவத்துக்குக் குரல்கொடுக்கும் பொழுதும், அடிப்படை மக்கள் தம்மீதான பொருளாதார ஒடுக்குதல்களை எதிர்த்த காலங்களில் வர்க்கச் சுரண்டலை காரணமாக முன்னிலைப்படுத்தாமல் வடவர்-பார்ப்பன முதலாளிகளின் சுரண்டலை எதிர்க்கும் பரந்துபட்ட இடதுசாரி வாயுசாரக் காலங்களிலும், தேசிய இனச் சிக்கலின் ஒரு வெளிப்பாடான மொழிச் சிக்கலைக் கையாளும்பொழுதும், சாதியம் மற்றும் தீண்டாமை ஆகியன பற்றிய வலுவான குறுக்கீடுகளின் பொழுதும் பெரியாரியத்தின் உள்ளார்ந்த இயக்கு விதியாக இனவழிப்பட்ட சித்தாந்தமே அடிப்படையில் செயல்படுகிறதாக இருப்பினும், இதற்குள்ளும் ஒரு வர்க்கக் கண்ணோட்டம் இயங்கிக் கொண்டிருக்கிறது. இத்தகைய உள்ளார்ந்த இயக்குவிதி **எந்த சமூகப் பிரிவின் நலன்களை வெளிப்படுத்துவதற்குப் பயன்படுகின்றது** என்பதே முக்கியமாகும்.

ஒரு சித்தாந்தம் **எத்தகைய மக்கள் திரளை அதிகமாகக் கவர்ந்திழுத்தது என்பதைக் காட்டிலும்** எத்தகைய சமூகப் பிரிவின் நலன்களைப் புற நிலையில் நிறைவுசெய்தற்குப் பயன்படுகின்றது என்பது முதன்மையாகும். பெரியாரியம் பார்ப்பனரல்லாத நகர்ப்புற-கிராமப்புற சாதிகளில் உள்ள படித்த நடுத்தர வர்க்க இளைஞர்களை வெகுவாகக் கவர்ந்திழுத்தது என்பது உண்மையே. இவர்கள்

www.tamilarangam.net

பெரியாரியத்தின் இட ஒதுக்கீட்டில், இடதுசாரிப் பிரச்சாரத்தில், சாதிய எதிர்ப்பில், தேசிய இனச் சிக்கல் போராட்டத்தில், பார்ப்பனிய எதிர்ப்பில் வெகுவாகக் கவர்ந்திழுக்கப்படல் பொருத்தமே. ஆனால் இவர்களைக் காட்டிலும் தமிழ்ப் பிரதேச திராவிட முதலாளிகள் நிலப்பிரபுக்கள் -இவர்களில் குறிப்பாக முதலாளிகள்- ஆகியோரின் நலன்களைப் புறநிலையில் நிறைவுசெய்ய பெரியாரியம் கேடயமும் வாளுமாக இருந்தது. இது மட்டுமல்ல, பெரியாரியத்தின் செயல்பாட்டுத் தளத்தை இந்த வர்க்கங்களின் நலன்களே இறுதியாகத் தீர்மானித்துவிடுகின்றன. மேலும் இனவழிப்பட்ட சித்தாந்தத்தையும் ஓரிரு சமயங்களில் (அல்லது தேவைப்படின்) தாண்டி, பார்ப்பன/வடவர் முதலாளிகளோடு இந்த வர்க்கங்களே உறவு கொள்கின்றன. இந்தவிதத்தில் பெரியாரியத்தின் மையத்தை அடையாளம் காண இயலும். **நிலவுகிற அரசுக் கட்டமைப்பின்கீழ் தமிழ்ப் பிரதேசத்தின் திராவிட முதலாளிகளின் நலன்களுக்காக வடவர்-பார்ப்பனர் முதலாளிகளோடு மோதல் என்பதை அடையாளம் காண இயலும்.** இது மட்டுமே பெரியாரியம் அல்ல. இந்த மையத்தைச் சுற்றிச் சுற்றி பல வளையங்கள் இருக்கின்றன. இந்த வளையங்களைக் கணக்கிலெடுக்காமல் இருக்க இயலாது. இவற்றுக்கும் மையத்துக்கும் இடையில் இயைபும் முரணும் இருப்பதுண்டு.

உதாரணமாக இட ஒதுக்கீடு, இதில் பெரியாரியத்தின் நீண்டகாலமாகத் தொடர்ந்த மற்றும் ஜனநாயக ரீதியான பங்களிப்பை நாம் முற்றாக ஏற்கும்பொழுது இது இந்த மையத்தோடு முரண்படவில்லை எனவும் கூறியாகவேண்டும். இட



ஒதுக்கீடு அரசுக் கட்டமைப்பின் கீழ் உயர்சாதி ஆதிக்கத்தைத் தளர்த்தி அனைத்து சாதிகளின் பங்கை உறுதிசெய்கிறது. முதலாளியத்தின் பொருளியல் நலன்களில் குறுக்கிடுவது இல்லை. பெரியாரிய இட ஒதுக்கீடு, பார்ப்பனரல்லாதார் என்ற பேரினவகையை அல்லது அதன் அப்போதைய வகைப்பாட்டை நியாயமான காரணங்களுக்காகக்கூட மறுபரிசீலனைக்கு உள்ளாக்குவது இல்லை. பெரியாரின் உலோகக் கண்ணோட்டக் கூறான இயக்கமறுப்பியல் அம்சத்தோடு இது வெளிப்படலாகிறது. இப்படி மையத்தை இயைந்த சுற்றெல்லை அம்சங்களைப்போல முரண்கொண்டவையும் உண்டு.

உதாரணமாக பெண்விடுதலைக் கருத்துகள். இவற்றில் சமூகத்தில் வளர்ந்துவரும் முதலாளிய மாற்றங்கட்கு ஏற்பவும் பெண்கள் கல்விப் பெருக்கத்துக்கு ஏற்பவும் சில கருத்துக்கள் உண்டு. விதவை மறுமணம், இளம்வயது பெண்மணத் தடை, தேவதாசி முறை ஒழிப்பு, கலப்பு மணம் ஆகியவை மையத்தின் வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் முரண்பாடானவையாக இல்லை. எனினும் கற்பு, கர்ப்பத்தடை, குடும்ப அமைப்புக்குள் பாலுறவு நபர் எண்ணிக்கை விரிவாக்கத்தில் ஆணுக்கும் பெண்ணுக்கும் சம உரிமை என இவைபோன்றவற்றில் பெரியாரியத்தின் கருத்துக்கள், மையத்தோடு முரண்கொள்ளக்கூடியவை ஆகும்.

இவற்றோடு நடைமுறைப்படுத்தலுக்கான வடிவத்தைக் காண வேண்டும். இது பெரியாரியத்தை நிறைவேற்றும் பகுதி ஆகும். பெரியாரியம் நிலவுகிற சமூக

www.tamilarangam.net

அரசுக் கட்டமைப்பின்கீழ் இயங்குகிறது என்பதன் அடிப்படையில் அதைச் சீர்குலைக்கிற எந்தவொரு நடைமுறையையும் ஏற்கவில்லை. பெரியாரியம் எந்தவொரு காலத்திலும் **மக்களின் எதிர் வன்முறையை ஏற்றுக் கொள்ளவே இல்லை;** சட்ட வரம்பிற்குட்பட்ட கிளர்ச்சி நிலைகளையே மேற்கொள்கிறது. அரசுக் கட்டமைப்புக்கு நெருக்கடி ஏற்படும்பொழுது பெரியார் அதை தன் போராட்டத்தில் பயன்படுத்திக் கொள்ளாமல் போராட்டத்தை நிறுத்திக் கொள்வார். 1938 இல் தொடங்கிய இந்தி எதிர்ப்புப் போராட்டம் இரண்டாம் உலகப்போர் தொடங்கியவுடன் நிறுத்தப்பட்டது. 1948 இந்தி எதிர்ப்புப் போராட்டம் ஹைதராபாத் நிஜாமை அடக்க இந்திய இராணுவம் புகுந்தவுடன் நிறுத்தப்பட்டது. இத்தகைய நிபந்தனையுடனே இது தொடங்கப்பட்டது (விடுதலை-30.10.48). இத்தகைய போராட்ட காலங்களில் பரபரப்பூட்டும் எழுத்துரை, கிளர்ந்தெழ வைக்கும் பேச்சுரை ஆகியற்றுக்கூடாக பல்வேறு போராட்ட வடிவங்களை பெரியாரியம் மேற்கொண்டது. பெயர்ப் பலகையில் எழுத்துக்கள் அழித்தல் (1952 இல் இந்தி எழுத்துக்கள்; 1957,1970 இல் பிராமணாள் என்ற பெயர்), விநாயகர் பொம்மை உடைப்பு (1953), இராமர் படம் எரிப்பு (1956), இராமர் படம் செருப்படி (1971), இராமாயணம் எரிப்பு (1960), தமிழ்நாடு நீங்கிய இந்திய தேசப்பட எரிப்பு (1960), அரசியல் சட்ட எரிப்பு (1957), தேசியக் கொடி கொழுத்தும் திட்டம் (1955), கர்ப்பக் கிரக நுழைவுக் கிளர்ச்சித் திட்டம் (1969) ஆகிய போராட்ட வடிவங்களுக்குள்ள கிளர்ச்சி மதிப்புகள், அதிர்ச்சி மதிப்புகள் கருதத்தக்கன.



## பெரியாரியம்

இந்தி ஆதிக்கம், சமய ஆதிக்கம், இன மேம்பாட்டு ஆதிக்கம், தேசிய இனத்தின் மீதான ஆதிக்கம் ஆகியவற்றின் மீதான பெரியாரியத்தின் எதிர்ப்பு வெளிப்பாட்டு வடிவங்கள் சமூக சலனங்களை ஏற்படுத்தின. எழுத்து, பொம்மை, படம், கொடி, புத்தகம் என்பன போன்றவற்றை கற்பிதப் புனிதங்களாக்கி அவற்றினூடே ஆதிக்கம் கால்கொள்ளும் ஒரு சமூக அமைப்பில் இத்தகைய 'புனிதக் குறியீடுகளை' தூக்கிப் போட்டுடைக்கும் வடிவங்கள் மக்களின் தாழ்நிலையிலான உணர்தலுக்கும் அறிதலுக்கும் ஏற்ப சரியான தொடக்கங்களே. இவை எந்தவொரு பிரச்சினையின் விளிம்பை மட்டுமே தொட்டு நிற்கின்றன. மக்களுக்கு உடனடியாக விளங்கத்தக்க அளவிலும் மக்கள் உடனடியாகக் கிளர்ந்தெழத் தக்க விதத்திலும் பெரியாரியக் கிளர்ச்சி வடிவங்கள் இருப்பினும், அடுத்தடுத்த உயர்நிலை வடிவங்களுக்கான தொடக்கங்களாக இல்லாமல், தொடங்கிய வடிவத்திலேயே தொடர்ந்து நிலவின. பெரியாரியத்தின் வர்க்க வரையறை இவற்றுக்கு வரம்பு கட்டிவிடுகிறது. பெரியார் தொடர்ந்து கிளர்ச்சி யாளராகவும் கலகக்காரராகவும் உயிர்ப்போடு இருந்தாரெனினும், அரச நிறுவனத்தின் /இந்த சமூக பொருளாதாரக் கட்மைப்பின் உள் ஒடுங்கிய தன்மையிலேயே அவ்வாறு இருக்க நேரிட்டது.

**3** ✍

பெரியாரிய நிலைபாடுகள் குறித்த பரிசீலனை தேவை. அவைகுறித்த போதுமான மற்றும் பொருத்தமான முடிவுகளுக்கு வந்தடைதல் தேவை.

www.tamilarangam.net

ஏகாதிபத்திய சார்பு முதலாளிகளுக்கு இடையிலான உறவில் ஆரிய (வடவர், பார்ப்பனர்) முதலாளிகளுக்கும் திராவிட (தமிழ்ப் பிரதே செட்டியார், நாயுடு) முதலாளிகளுக்கும் இடையிலான மோதல்-ஐக்கியம் தன்மைகளில் திராவிட முதலாளிகளின் சார்பிலான மோதல் அம்சத்தை அரசியல் பண்பாட்டு அரங்குகளில் வெளிப்படுத்துவதாக பெரியாரிய மையம் இருந்தது. இது தமிழக மக்களை ஆதிக்கம் செலுத்தும் ஏகாதிபத்தியத்தை ஆதரிப்பதோடு மட்டுமின்றி, நிலவுகிற முதலாளிய சமூக அமைப்பை அடிப்படையில் ஒத்துக்கொள்வதுடன், சார்பு முதலாளிகளுக்கு இடையிலான மோதலில் **திராவிட முதலாளிகளின் நலன்களுக்கான வர்க்கக் கண்ணோட்டத்துக்கு இனவழிப்பட்ட சித்தாந்த நியாயம்** கற்பிக்கிறது. பிற்பட்ட/தாழ்த்தப்பட்ட மக்களில் ஆகப் பெரும்பான்மையினர் மீதான பொருளாதார அழுத்தங்களின் பொழுதும் அவர்களின் சமூகக் கொந்தளிப்புகளின் பொழுதும் வட இந்திய, பார்ப்பன முதலாளிகளை மட்டுமே எதிரிகளாக முன்வைப்பதன் மூலம் திராவிட முதலாளிகளைக் காப்பாற்றுவதற்கும் இது சித்தாந்த நியாயம் கற்பிக்கிறது. இந்த மையம் -முதலாளிய அரசுக் கட்டமைப்பை ஒத்துக்கொள்ளல், ஏகாதிபத்திய ஆதரவு, ஏகாதிபத்திய சார்பு திராவிட முதலாளிகளுக்கான ஆதரவு என்ற பெரியாரின் மையம்- முற்றாக மறுதலிக்கப்பட வேண்டும். தமிழர்களில் பெரும்பான்மையினராக இருக்கும் பார்ப்பனரல்லாதார்/தாழ்த்தப்பட்டோர் அடிப்படை மக்களுக்கு எதிர்காலம் மறுதலிக்கப்படாமல் இருக்க வேண்டுமெனில் இந்த மையக் கருத்தாக்கங்கள் மறுதலிக்கப்பட வேண்டும். பெரியாரிய மையம் **ஓர் எதிர்மறை ஆசான்** என்ற விதத்தில் மறுதலிக்கப்பட வேண்டியதாகும்.

*கோ.கேசவன்* 

ஆனால் பெரியரியம் இத்தோடு தன்னைச் சுருக்கிக் கொள்ளவில்லை. தமிழகச் சூழலில் **வகுப்புவாரி இட ஒதுக்கீடு, தேசிய இனச் சிக்கல், பார்ப்பனியம், சாதியம், தீண்டாமைக் கொடுமை, பெண்விடுதலை, நாத்திகம், பகுத்தறிவு** என்பன போன்ற அரசியல், சமூக வாழ்வியல், அறிவுத்துறை அம்சங்களின்மீது தொடர்ந்து வினையாற்றிக் கொண்டே வந்தது. இவை எல்லாவற்றிலும் பெரியாரியத்துக்கு உரிய வரலாற்று ரீதியிலான முன்வைப்புக்களையும் சாதகக் கூறுகளையும் நாம் முழுமனதாக ஏற்கும் நேரத்தில், **பெரியாரிய நிலைபாட்டிலிருந்தே இவற்றின்மீது நாம் குறுக்கிடல் இயலாது.** அந்த விதத்தில் பெரியாரியத்தின் சுற்றெல்லை வளையங்கள் கடக்கப்படுவதன் மூலம் -வரலாற்று ரீதியிலான நியாயங்களும் வர்க்க ரீதியிலான தேவைகளும் உட்கிரகிக்கப் படுவதன்மூலம்- பெரியாரியத்தின் சாதகக் கூறுகளைக் கண்டடையவும் கையாளவும் முடியும். இந்த விதத்தில் பெரியாரியம் **-ஒரு பகுதி ஆசானாக** உள்ளது. பெரியாரின் உலகக் கண்ணோட்டமும் இனவழிப்பட்ட சித்தாந்தமும் முதலாளிய சிந்தனை வரையறையும் வழங்கியுள்ள தடைகளைக் கடப்பதன் மூலமே மேற்சொன்ன கருத்தாக்கங்களை வரலாற்று ரீதியில் முற்போக்காக எடுத்துச் செல்ல இயலும்.

தேசிய இனச் சிக்கலைத் தொடர்ந்து கனலோடு பெரியார் வைத்துக் கொண்டிருந்தார். ஆனால் ஏகாதிபத்திய நிலவுடைமை எதிர்ப்பின்மை, திராவிட இனக் கருத்தாக்கம், அரசாங்கத்தோடு கொண்ட உறவால் நிலைமாறல் என்பன போன்ற பெரியாரிய நிலைபாடுகள் தேசிய இனச் சிக்கலை சரியாக முன்வைக்கத்

www.tamilarangam.net

தடைகளாக இருந்தன. இந்தித் திணிப்பை தொடர்ந்து எதிர்த்த பெரியாரிய நிலைபாட்டை ஒப்புக் கொள்ளலாமே தவிர ஆங்கில ஆதரவு, தமிழ் ஆதரவில் ஊசலாட்டம் ஆகியனவற்றை ஒப்புக் கொள்ள இயலாது. இந்தித் திணிப்பை எதிர்க்க ஆங்கில ஆதரவைக் கேடயமாக்கும் பெரியாரிய நடைமுறையால், தமிழ் சவலைப் பிள்ளையாகிவிட்டது. இவை **திராவிட இன சார்பு முதலாளியக் கண்ணோட்டத்தில் தமிழ்த் தேசிய இனச் சிக்கலை அணுகியதின் விளைவுகள்.** முரணற்ற ஏகாதிபத்திய/நிலவுடைமை எதிர்ப்பு, தமிழர் தேசிய இனக் கருத்தாக்கம், தமிழ்நாட்டில் உள்ள சிறுபான்மை தேசிய இனங்கள் மீதான சரியான நிலைபாடு, ஒடுக்கப்பட்ட ஆதி தமிழரின் விடுதலையை உள்ளடக்கிய தன்மை என இத்தகைய கண்ணோட்டங்களில் தேசிய இனச் சிக்கல் விரிவடைய வேண்டியுள்ளது.

இதைப் போன்றே பெரியாரியத்தின் பார்ப்பனிய எதிர்ப்பு. தமிழ்ச் சூழலில் பார்ப்பனிய எதிர்ப்பில் தொடர்ந்து இருந்தமைக்கு பெரியாருக்கு நன்றிகூற வேண்டிய தருணத்தில், பெரியாரியம் குறிப்பிடும் பார்ப்பனிய எல்லைகள் **போதுமானவை அல்ல** என்பதைக் குறிப்பிட வேண்டும். இன மேலாண்மை / சாதிய உச்ச நிலைக் கருத்திலும் சாஸ்திர சம்பிரதாயங்களிலும் பார்ப்பன அரசதிகாரப் பங்கிலும் பார்ப்பனியம் இருப்பதாகக் குறிப்பிடும் பெரியாரின் சிந்தனை எல்லையையும் தாண்டி, இவற்றோடு பார்ப்பனரின் முதலாளிய/நிலவுடைமைப் பொருண்மை உச்சத்திலும் இது உள்ளது எனக் கண்டு, இதை அங்கீகரிக்கும் முதலாளிய/நிலவுடைமைப் பொருண்மைச் சூழலிலும் உள்ளது எனவும் காண



வேண்டியுள்ளது. இங்கு பெரியாரின் கருத்துமுதல்வாதச் சிந்தனையும் ஒட்டுமொத்த முதலாளியக் கண்ணோட்டமும் தடைகளாக உள்ளன. திராவிட முதலாளிகள் நலன்களின் அடிப்படையில் பார்ப்பன முதலாளிகளை எதிர்ப்பதற்கு பெரியாரியம் உடன்படுகிறதே யொழிய, முதலாளியத்தை எதிர்ப்பதற்கு அல்ல. இதன் அடிப்படையில் காணும்பொழுது, ‘பார்ப்பனியத்தை எதிர்க்கிறோமே தவிர பார்ப்பனர்களை அல்ல’ என பெரியார் சொன்னதையும், அப்படிச் சொல்லி யிருந்தாலும் பார்ப்பன நிலவுடைமையாளர்கள், முதலாளிகள், அரசியல்வாதிகள் ஆகியோருடன் உடன்பாடு கொள்வதற்கான சலுகையாக பெரியாரிய நிலைபாடு அமைந்துவிடுகிறது. இங்கு பார்ப்பனிய எதிர்ப்பில் பெரியாரியம் போதுமானதாக மட்டுமிராது, பொருந்துவதாகவும் இல்லை. பார்ப்பனியத்தை முழுமையாக எதிர்க்க வேண்டும், அதோடு ‘நாம் எதிர்ப்பது பார்ப்பனர்களை அல்ல’ என்பது பார்ப்பனரில் ஜனநாயக சக்திகளோடும் முற்போக்கு சக்திகளோடும் அரசியல் பொருளாதார சமூக உறவு வைத்துக் கொள்தலாகும்.

இப்படி எல்லாச் சுற்றெல்லைத் தளங்களையும் விமர்சனக் கண்ணோட்டத்தில் கண்டறிவதன் மூலமே பெரியாரியத்தின் சாதக பாதகங்கள் அறியப்பட்டு இன்றைய சமூக நடைமுறைக்குப் பயன்படுத்த இயலும். பெரியாரியத்தின் செயல்பாடுகளைக் குறித்த ஒரு மதிப்பீடு தேவை. எதிர்மறைக் கூறுகள் களையப்பட்டு பகுதிக் கூறுகள் முழுமையாக்கப்படல் என்ற அடிப்படையில் பெரியாரியம் குறித்த விரிவான, மூடநம்பிக்கை அற்ற, சுதந்திரமான ஆய்வு தேவை. அதற்கு இத்தகைய கருத்துரைகள் மீதான தொடர் விவாதம் தேவை.
❑❑

www.tamilarangam.net

# பெரியார் பார்வையில் மொழி

ஒரு மக்கள் தொகுதியின் மீது ஆதிக்கம் செய்ய விழையும் இரண்டு குழுக்கள் மொழி ரீதியில் தங்களை வேறுபடுத்தி அடையாளம்காண முடியுமெனில் அவ்விரு குழுக்களிடையேயான ஆதிக்கப் போராட்டம் நடைபெறும் களங்களில் பிரதானமாய் மொழி அமைவது தவிர்க்க இயலாது. இந்த ஆதிக்கப் போராட்டத்தில் வேற்றுமொழி பேசும் ஆதிக்க சாதிகளை ஓரங்கட்டுவதில் 'மொழி உணர்வு' உள்ளூர் ஆதிக்க சக்திகளுக்குப் பெரிதும் கைகொடுக்கும். இவ்வாறு அரசியலாக்கப்படும் மொழி உணர்வு என்பது கட்டமைக்கப் படுவதுதானே யொழிய இயற்கையான ஒன்றல்ல என்பதைக் கொஞ்சம் சிந்தித்தாலே விளங்கிக் கொள்ள முடியும். தமிழக வரலாற்றை எடுத்துக் கொள்வோமே. கடந்த இரண்டாயிரமாண்டு தமிழக வரலாற்றின் மையச் சரடாக வடமொழி ஆதிக்கத்திற்கெதிராக கட்டமைக்கப்படும் தமிழுணர்வு

*பொ.வேல்சாமி, அ.மார்க்ஸ்*



விளங்குவதைக் காண முடியும். இந்தத் தமிழ்உணர்வு அரசியல் ரீதியாய் கட்டமைக்கப் பட்டதுதானே யொழிய இயற்கையானதல்ல என்பதைப் புரிந்துகொள்ள தொல்காப்பியம் தொடங்கி தமிழிலக்கியங்களையும் தமிழக வரலாற்றையும் மறுவாசிப்புச் செய்ய வேண்டும். இத்தகைய மறுவாசிப்பின்போது நம் கவனத்தில் படும் சில முக்கிய புள்ளிகள் :

அ) விளிம்பிலிருந்த அடிநிலை மக்களின் மொழி **'கொடுந்தமிழாக'** புறக்கணிக்கப்பட்டு அரசுருவாக்க மையங்களின் மொழியே -அதாவது ஆற்றங்கரை ஆதிக்க சக்திகள் பேசிய மொழியே- **'செந்தமிழாய்'** கட்டமைக்கப்பட்டது.

ஆ) இந்தச் 'செந்தமிழ்' ஆதிக்க சக்திகளுக்கும் வடமொழி ஆதிக்க சக்திகளுக்குமிடையேயான உறவு இயங்கியல் 'தன்மையிலானது. அவற்றுக்கு இடையே ஆதிக்கப் போட்டியினடிப்படையில் முரண்களும், கீழேயுள்ள மக்கட் பிரிவை ஆதிக்கம் செய்வதில் ஒருமையும் செயல்பட்டு வந்ததை வரலாறு பூராவும் நாம் காண முடியும். மத்திய காலத்தில் பார்ப்பன-வேளாள ஒருமையாய் வெளிப்பட்ட இது **'ஆரியங் கண்டாய் தமிழும் கண்டாய்'** என முழக்கியது. இந்த ஒருமையின் விளைவாக வடமொழிக் கலாச்சாரக் கூறுகளும் பார்ப்பனீயத்திலிருந்து பெரிதும் வேறுபடாத சைவக் கூறுகளும் செந்தமிழை ஊடுருவிக் கழுவித் தூய்மை செய்ய இயலாத அளவிற்கு கறை சேர்த்தன.

www.tamilarangam.net

**இ)** மத்திய காலத்திற்குப் பின் படிப்படியாய் வளர்ந்த பார்ப்பன வேளாள முரண் காலனியச் சூழலில் (19ம் நூற்றாண்டு) உச்சத்தை அடைந்தது. மொழிக் களத்தில் வடமொழிக் கலப்பற்ற தனித் தமிழ் முழக்கமாய் இது வெளிப்பட்டது. வடமொழிக் கூறுகளைக் களைந்துகொள்ளத் தயாரான தனித்ததமிழ் அரசியல் எள்ளளவும் தன்னில் கலந்துபோயிருந்த சைவக் கூறுகளைக் களைந்து கொள்ளத் தயாராக இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. **'பழந்தமிழர் நாகரீகம் (சைவ) வேளாள நாகரீகமே'** என இது வெளிப்பட்டது.

இந்தச் சிக்கலான சூழலில் இயங்க நேர்ந்தவர் பெரியார். சைவ வடிவில் தமிழில் கலந்துபோனவை பார்ப்பனீயமே என்பதை மிகத் தெளிவாக உணர்ந்துகொண்டு செயல்பட்ட ஒரே நபராக நாம் பெரியாரைச் சொல்ல முடியும். இந்த இரு வேறு ஆதிக்க சக்திகளையும் அடிப்படையில் பார்ப்பனீயமாகவே கண்டுணர்ந்த பெரியார் இரு சாராரையும் எதிர்த்துச் செயல்படும் ஒரு சிக்கலான அரசியற் பாதையைத் தேர்ந்துகொண்டார். இந்த நோக்கத்தை அவர் எவ்வளவு சரியாய்ச் செயல்படுத்தினார், எந்த அளவிற்கு வெற்றிபெற்றார் என்கிற கேள்விகளுக்குள் நுழையாமல் இந்தச் சிக்கலென்பது அவரது மொழிப் பார்வையில் எவ்வாறு வெளிப்பட்டது என்பதை மட்டும் இங்கே பார்ப்போம்.

மற்ற பல்வேறு அம்சங்களில் மையநீரோட்டததிற்கு எதிரான மாற்றுக் கருத்துக்களை அறிவியல் பூர்வமாய் முன்வைத்து நம்மை அசரவைப்பது போலவே பெரியார் மொழி பற்றியும் மிகவும் நவீனமான சிந்தனைகளை சுமார்



நாற்பது ஆண்டுகளுக்கு முன்பே வைத்துள்ளார். அமைப்பியல், மொழியியல் சிந்தனைகளெல்லாம் தமிழ்ச் சூழலில் அறிமுகமேயாகாத காலத்திலேயே மொழி என்பது கலாச்சாரத்தால் கட்டமைக்கப் பட்டதுதானே யொழிய 'இயற்கையானதல்ல' (986, 1000) எனக் கூறினார். மொழிகள் தனித்தனியாகப் பிரிவதும், மொழிக்குள்ளேயே வழக்கு வேறுபாடுகள் ஏற்படுவதும் தட்ப வெட்பச் சூழல், போக்குவரத்தின்மை, பிறமொழிக் கலப்பு ஆகியவற்றின் விளைவுதான் என்றார் (965, 966, 981, 983). காலந்தோறும் மொழி அமைப்பிலும் வரி வடிவத்திலும் சொற்களஞ்சியத்திலும், உச்சரிப்பிலும் மாற்றம் ஏற்படுவது இயல்பு (954, 960). எனவே மொழியில் மாற்றங்கள் செய்யக் கூடாது என்பது மடமை (961) ; கலந்துபோன புதிய சொற்களை இனி விலக்கவும் முடியாது (960).

மொழி என்பது வெறும் கருத்துப் பரிமாற்றச் சாதனம்தான் (965) என்பதை வலியுறுத்திய பெரியார் எனினும் மொழிக் களத்தில் மேற்கொள்ளப்படும அரசியல் செயற்பாடானது அம் மொழி பேசும் மக்களின் உளவியலையும், சுயமரியாதை யையும், பொருளாயதச் சூழலையுமே மாற்றியமைத்துவிடும் வல்லமை உடையது என்பதை முழுமையாக உணர்ந்திருந்தார். 1* (963, 969, 970, 971, 987).

ஒரு மொழி பேசும் மக்கள் மீது இன்னொரு ஆதிக்க மொழியைத் திணிப்பதை மட்டும் மொழிக் களத்திலான அரசியற் செயற்பாடாக அவர் பார்க்கவில்லை. மொழிக்குள் மதமும், பிற கலாச்சாரக் கூறுகளும் ஊடுருவுவதும் இதே அளவிற்கு தீங்கானது என்பதைச் சுட்டிக் காட்டிய பெரியார் இந்த அடிப்படையில் தமிழானது

www.tamilarangam.net

எந்த அளவிற்கு வடமொழிக் கலப்பாலும், இந்து மதத்தாலும், சைவ சமயத்தாலும் கழுவ இயலாத அளவிற்குக் கறைபட்டுக் கிடக்கிறது என்பதைத் தோலுரித்தார். 2*

தமிழைக் காட்டுமிராண்டி காலத்து மொழி எனச் சொன்ன (985) பெரியார் ஆயிரக் கணக்கான ஆண்டுகளாக தமிழ் மொழி, பொருள், எழுத்து என எந்த வகையிலும் முன்னேறவில்லை (988). எனவே நாகரீக காலத்திற்கு அது ஏற்றதல்ல (985) என்றார். 3*

எனவே தமிழில் இரண்டு விதமான சீர்திருத்தங்கள் செய்யப்பட வேண்டும் என்றார்.

**முதலில் சுலபமாய் கற்றுக் கொள்ளத்தக்க வகையில் தமிழில் எழுத்துச் சீர்திருத்தங்கள் செய்யப்பட வேண்டும்.**

உயிர் 10 (ஐ, ஔ நீக்கி),
மெய் 15 (ன்+த=ந, ண்+க=ங, ன்+ச=ஞ),
ஆயுதம்1,
மெய்குறிப்பு1 (க1=க், ங1=ங்) என
மொத்தம் 27 எழுத்துக்களாக
தமிழ் எழுத்துக்களின் எண்ணிக்கையைக் குறுக்கிவிடலாம் (976) 4*



**இரண்டாவது சீர்திருத்தம் மொழியில் கலந்துள்ள மத, சைவக் கூறுகளைக் களைதல். 5***

தனது சமகால பார்ப்பன எதிர்ப்பாளர்களிடமிருந்து பெரியார் வேறுபட்ட மையமான இடம் இது. இந்த வகையில் மறைமலையடிகள் போன்ற இதர தனித்தமிழ்வாதிகளிடமிருந்து வேறுபட்டு நின்றதோடு, திரு வி.க. முதல் மு.வரதராசனார் வரையிலான தமிழ்ப் பண்டிதர்கள் அனைவரையும் கடுமையாய்ச் சாடினார். (1002)

ஆனாலும் தமிழில் கலந்துபோன இந்து மதத்தையும், சைவத்தையும் பிரித்தெடுத்து தமிழை தூய்மை செய்திட முடியும் என அவர் நம்பவில்லை என்பதை ஒட்டுமொத்தமாய் அவரது கருத்துக்களைப் படிக்கும்போது விளங்கிக்கொள்ள முடிகிறது. இதன் விளைவாக அவர் முன்வைத்த தீர்வு நமது ஆழ்ந்த பரிசீலனைக்குரியதாகின்றது. தமிழ்நாட்டில் தமிழ்தான் ஆட்சிமொழியாகவும் போதனை மொழியாகவும் இருக்க வேண்டும் என்பது நியாயம்தான் என்றாலும் இந்தி, தமிழ் இரண்டையும் நீக்கிவிட்டு **ஆங்கிலத்தை நமது ஆட்சிமொழியாகவும் போதனை மொழியாகவும் வைத்துக்கொள்ள வேண்டும் என்றார். 6***

இவ்வாறு ஆங்கிலத்தை தேர்ந்தெடுப்பதற்கு மூன்று காரணங்களை பெரியார் சொல்கிறார் (996).

www.tamilarangam.net

அவை :

அ) ஒருவர் ஆங்கில மொழியைச் சுலபமாகக் கற்றுக் கொள்ள முடியும்.

ஆ) ஆங்கில மொழியை அறிந்தவன் உலகத்தின் எந்தக் கோடிக்கும் சென்று அறிவைப் பெற்றுத் திரம்பிவர இயலும்.

இ) ஆங்கில மொழியானது அறிவைத் தூண்டும் உணர்ச்சியை ஏற்படுத்தி இருக்கிறதே தவிர, அது சுதந்திரமாகச் சிந்திக்கின்ற தன்மைக்கு விலங்கிட்டதாக ஒருபோதும் கிடையாது.

நமது ''சீதோஷ்ண நிலைக்கு தமிழ்தான் ஏற்ற மொழி'' எனச் சொன்ன பெரியாரின் இக் கருத்துக்களை அவர் காலத்திய தனித் தமிழ் அரசியலிலிருந்து பிரித்துப் பார்த்தால் புரிந்து கொள்ள இயலாது. தமிழ் மொழிப்பற்று சமயப்பற்றுப் போல் ஆகிவிட்டது (986) என்ற சூழலில்தான் அவர் ஆங்கிலத்தை முன்மொழிகிறார். இவையனைத்தும் உண்மைதானென்றாலும் மொழி அரசியலின் இன்னொரு பரிணாமத்தை பெரியார் கணக்கிலெடுத்துக் கொள்ளவில்லை என்றே தோன்றுகிறது. 'காலனிய நீக்கம்' (Decolonialisation) என்கிற முழக்கம் உலகெங்கிலும் ஒடுக்கப்பட்ட மக்களால் எழுப்பப்படும் ஒரு காலகட்டத்தில் உள்நாட்டு ஆதிக்கத்திற்கெதிராக வெளிநாட்டு ஆதிக்கத்தை தந்திர அடிப்படையில்கூட ஏற்றுக்கொள்ள முடியுமா என்பது சந்தேகமே. உள்நாட்டு



ஆதிக்கத்தின் வெளிப்பாடு வடமொழிக் கலாச்சாரம் எனில், உலக அளவிலான ஆதிக்கத்தின் வெளிப்பாடு அய்ரோப்பிய/அமெரிக்கக் கலாச்சாரம். தாய்மொழியை விடுத்து ஆங்கிலத்தைக் கற்றுக் கொள்வதென்பதுகூட ஒரு பார்ப்பனனுக்கும் ஒரு பறையருக்கும் ஒரேயளவு சுலபமான நடைமுறை அல்ல.

ஆங்கில மொழியை ஏற்றுக் கொள்வதில் பெரியாரின் கருத்து ராஜாஜியுடன் ஒத்துப்போவதைக் கவனிக்க (988).

உலகின் எந்தக் கோடியிலும் ஆங்கிலத்தின்மூலம் தான் அறிவு சேகரமாகிறது என்பதும் தவறு. இன்று ஒவ்வொரு நாட்டிலும் அவரவர்கள் மொழிகளில்தான் அறிவு சேகரம் நடைபெறுகிறது. ஆங்கில மொழியில் சமத்துவ சனநாயக கருத்துக்கள் கூடுதலாய் உள்ளனவென்றாலும் இனவெறி, பாலாதிக்கம், கிறிஸ்தவ மதம் ஆகியவற்றால் கறைபட்ட மொழிதான் ஆங்கிலம். தமிழைத் தள்ளி ஆங்கிலத்தை ஏற்றல் . என்பது ஒருவகையில் பார்ப்பன ஆதிக்கத்திலிருந்து விடுபட்டு சுயமரியாதை உணர்வுபெற உதவும் என்பதில் அய்யமில்லை. பிரிட்டிஸ் ஆட்சி இந்தியாவில் சில முற்போக்கான மாற்றங்களை விளைவித்துவிட முடியும் என்ற கா.மார்க்ஸ் இன் நம்பிக்கையோடு பெரியாரின் ஆங்கிலம் பற்றிய கருத்துக்களை ஒப்பிட்டுப் பார்க்கலாம். ஆங்கிலம் பற்றிய அவரது பார்வை ஒரு அதிர்ச்சியளிக்கும் எதிர்க் கலாச்சாரச் செயற்பாடாக முன்வைக்கப்பட்டதா என்பதையும் சிந்திக்கலாம். என்றபோதிலும் நமது மான உணர்ச்சிக்குப் பங்கம் விளைவிக்கும்; அடிமைத்தனத்திற்கு வழிவகுக்கும்.

www.tamilarangam.net

எல்லாவற்றையும் தொகுத்துப் பார்க்கும்போது மொழி குறித்த பெரியாரின் பார்வையிலிருந்து இன்றைய அரசியலுக்கான வழிகாட்டல்களாக கீழ்க் கண்டவற்றை நாம் அடைய முடிகிறது.

1) மொழி உணர்வு என்பது இயற்கையானதல்ல; அரசியல் ரீதியாய்க் கட்டமைக்கப்படுவதே என்பதை விளங்கிக் கொள்வதும் பிரச்சாரம் செய்வதும்.

2) இன்று தமிழ் மொழி, தமிழ்க் கலாச்சாரம் என்றெல்லாம் முன்வைக்கப் படுபவை இந்து மதத்தாலும், சைவத்தாலும் கறைபட்டவைகளே. ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்கு அவை பயன்பட வேண்டுமானால் இந்து மதமும் சைவமும் நீக்கப்பட்ட மதம் சாராத, பால்சாராத தமிழ் மொழியையும் தமிழ்ப் பண்பாட்டையும் முன்வைக்க வேண்டும்; நடைமுறையில் பயன்படுத்த வேண்டும்.

3) பெரியார் முன்வைத்த தமிழ் எழுத்துச் சீர்திருத்தங்களுக்காகப் போராடுதல்; காட்டுமிராண்டித் தமிழை நவீனமாக்குதல்.

4) இந்தி மொழி ஆதிக்கத்தையும் இந்துக் கலாச்சாரத் திணிப்பையும் எதிர்த்தல்.

5) தமிழே ஆட்சிமொழி, கல்வி மொழி, தொடர்பு மொழி என்கிற ஒரு மொழிக் கொள்கையை முன்வைத்துப் போராடுதல்.



இந்த அய்ந்து அம்சங்களையும் முன்வைத்துச் செயற்படுதலே பெரியார்வழி நிற்றலாகும். மாறாக முதல் மூன்று அம்சங்களையும் கண்டுகொள்ளாமல் விட்டுவிட்டு கடைசி இரண்டு அம்சங்களை மட்டும் உரத்து முழக்குவதற்கும் பெரியாருக்கும் எவ்வித தொடர்புமில்லை என்பது கருதத்தக்கது. பெரியார்வழி நிற்பவர்களாகச் சொல்லிக் கொள்பவர்கள் பலரும் இதைத்தான் செய்துவருகின்றனர் என்பது சிந்திக்கத்தக்கது.

□□

*குறிப்பு :*

*கட்டுரையிலும் அடிக் குறிப்பிலும் அடைப்புக் குறிக்குள் உள்ள எண்கள் திரு. வே.ஆனைமுத்து தொகுத்த "பெரியார் ஈ.வே.ரா சிந்தனைகள்" - தொகுதி 2 இல் உள்ள பக்க எண்களாகும்.*

*1* "எந்தத் துறையில் நமது நாட்டிற்குள் இந்தி புகுந்தாலும், சமஸ்கிருதத்தினால் தமிழர்களும் தமிழ்நாடும் இன்று என்ன நிலைமைக்கு வந்து தொல்லையும் மடமையும் இழிவும் அனுபவிக்கிறார்களோ சற்றேறக் குறைய அந்த நிலைமைக்குத்தான் கொண்டு போய் விடும் என்பது எனது துணிவு. இந்தி, தமிழ்நாட்டையும் தமிழனையும் வட நாட்டானுக்கு -பார்ப்பனருக்கு - அடிமைப்படுத்துவதுமல்லாமல் வேறு எந்தக் காரியத்திற்கும் பயன்படாது" (987)*

www.tamilarangam.net

2* "தமிழ் மொழியின் வட மொழித் தொடர்பால் நமக்கேற்பட்டுள்ள/ ஏற்படப்போகும் கெடுதிகளைப் பார்ப்போம். நம்மிடையேயுள்ள சாதிப் பிரச்சினையை எடுத்துக் கொள்வோம். 'சாதி' என்ற வடமொழிச் சொல்லைத் தமிழிலிருந்து எடுத்துவிட்டால் அதற்குச் சரியான தமிழ்ச் சொல் ஒன்று கூறுங்களேன்! பண்டிதர்கள் கூறட்டுமே. வார்த்தை இல்லையே!. ஆதலால் நம் மக்களிடையே ஆதியில் சாதிப் பிரிவினை இல்லை என்பதும் இது வடநாட்டுத் தொடர்பால் தான் ஏற்பட்டது என்பதும் தெரிகிறதா இல்லையா? அந்த வார்த்தையே இல்லாவிட்டால் சாதிபேத உணர்ச்சி அற்றுப் போகுமா இல்லையா? கூறுங்களேன்! இதேபோல் திவசம், திதி, கலியாணம், வைகுந்தம், சொர்க்கம், மோட்சம், நரகம்; சாலோக, சாரூப, சாமீப, சாயுச்சிய என்ற இவ் வார்த்தைகள் வடமொழியா தமிழா? இவ் வார்த்தைகளின் தொடர்பால் நம் புத்தி தெளிந்ததா, இருந்த புத்தியும் போனதா? சிந்தித்துப் பாருங்கள்.

தாரா முகூர்த்தம், கன்னிகாதானம் என்ற பேர்கள் வந்த பிறகு தானே நம் பெண்கள் கணவனின் கைப்பொம்மை ஆனார்கள். அதன் பிறகுதானே சிறிது சச்சரவு நேர்ந்து தன் வீட்டுக்கு வந்த தன் மகளைப் பார்த்து, "ஆமாம்மா உன்னை கன்னிகாதானம் செய்தாயிற்றே! உன்னை உன் புருஷனுக்குக் கொடுத்துவிட்டோம்; தானம் செய்துவிட்டோமே! இனி உனக்கு இடம் அவன் இருப்பிடம்தானம்மா" என்று கூறும் தகப்பன்மார் தோன்றினார்கள். கன்னிகாதானம் என்பதற்கு தமிழ் வார்த்தை ஒன்று கண்டுபிடியுங்களேன். திருவள்ளுவர்



"வாழ்க்கைத் துணை" என்றுதானே கூறுகிறார். அதாவது புருஷனும் மனைவியும் சிநேகிதர்கள், நண்பர்கள் என்றுதானே அதற்குப் பொருள். எவ்வளவு கருத்து வேறுபாடு பாருங்கள். 'மோட்சம்' என்பதற்கு தமிழ் வார்த்தை ஏது? மோட்சத்தை நாடி எத்தனை தமிழர் காலத்தையும், கருத்தையும், பொருளையும் வீணாக்குகிறார்கள்? கவனியுங்கள்! மதம் என்பதற்கு தமிழில் மொழி ஏது? மதம் என்ற வார்த்தையால் ஏற்பட்டதுதானே மதவெறி? நெறி, கோள் என்றால் - வெறி ஏது?

'பதிவிரதாத் தன்மை' என்பதற்காவது தமிழில் வார்த்தையுண்டா? 'பதிவிரதம்' என்ற வார்த்தை இருந்தால் - 'சதி விரதம்' அல்லது 'மனைவி விரதம்' என்கின்ற வார்த்தையும் இருக்க வேண்டுமே! இதுவும் வடமொழித் தொடர்பால் ஏற்ற வினைதான். 'ஆத்மா' என்ற வார்த்தைக்கு தமிழில் மொழி ஏது? ஆத்மாவால் எவ்வளவு மூடநம்பிக்கைக் களஞ்சியங்கள் நம் புலவர்கள், அறிஞர்களிடையேயும் புகுந்துவிட்டன? தமிழ்நாட்டு மக்களின் வழக்கங்கள் யாவும் பெரிதும் ஆண், பெண் இருபாலாருக்கும் சமஉரிமை என்ற அடிப்படையின் மீதும், பகுத்தறிவு என்கின்ற அடிப்படையின் மீதும் அமைந்திருக்கக் காண்கிறோம்." (969, 970)

"தமிழும் ஒரு காலத்தில் உயர்ந்த மொழியாகத்தான் இருந்தது. இன்று அது வடமொழிக் கலப்பால் இடது கைபோல் பிற்படுத்தப்பட்டுவிட்டது. இந் நோய்க்கு முக்கிய காரணம், மதச் சார்புடையோரிடம் தமிழ்மொழி சிக்கிக்

www.tamilarangam.net

கொண்டதுதான். தமிழ் சைவ மொழி ஆக்கப்பட்டதால்தான் சைவத்திற்காக வேண்டி வடமொழியும் வடமொழிக் கலைகளும் அதிகமாகத் தமிழ் நாட்டில் புகத் தொடங்கின.''

''மதச் சார்பற்ற ஒருவனுக்கு தமிழில் இலக்கியம் என்பது மிக அரிதாகவே இருக்கிறது. (971) தமிழ். இலக்கணம்கூட மதத்தோடு பொருத்தப்பட்டே இருக்கிறது. உதாரணமாக, 'மக்கள்' தேவர், நரகர் உயர்திணை என்றால் என்ன? நரகர்கள் யார்? தேவர்கள் யார்?. இலக்கணத்திலேயே மதத்தைப் போதிக்கும் சூழ்ச்சிதானே இது.'' (976)

''இனி பள்ளிக்கூடங்களில் தமிழ் இலக்கியங்களுக்குப் புத்தகங்கள் எவை? கம்பராமாயணம், பாரதம், பாகவதம், பெரியபுராணம், தேவாரம், திருவாய்மொழி போன்ற மதத் தத்துவங்களும், ஆரிய மதத் தத்துவம் என்றும் ஒரு தனிப்பட்ட வகுப்பின் உயர்வைப் போதித்து மக்களை மானமற்றவர்களாக்கும் ஆபாசக் களஞ்சியங்களும் அல்லாமல் – வேறு இலக்கியங்கள் மிதந்து காணப்படு கின்றனவா? இன்றைய பண்டிதர்களுக்கு உலக ஞானத்தை விட புராண ஞானங்கள் தானே அதிகமாய் இருக்கின்றன.'' (976 – 977)

**3*** தமிழ் காட்டு மிராண்டி காலத்து மொழி, நாகரீக காலத்திற்கு ''யாதும் ஊரே யாவரும் கேளீர்'' என்ற காலத்திற்கு, ''யாயும் யாயும் யாராயினரோ'' என்ற காலத்திற்குத் தமிழ் பயன்படுமா? (985)



**4*** 'ஆ' வுக்குப் பதிலாக 'ா' வையும் 'எ', 'ஏ' வுக்குப் பதிலாக 'ெ', 'ே' என்ற குறிப்புக்களையும் இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஒ, ஓ ஆகிய எழுத்துக்களுக்குப் புதிய குறிப்புகளை உற்பத்தி செய்து கொண்டு இவற்றையே உயிர் மெய்யாக்க மெய்யோடு சேர்த்துப் படித்தால் போதும் (976). இது தவிர ஆங்கில எழுத்துக்களையே அப்படியே பயன்படுத்தலாம் என்கிற கருத்தையும் பெரியார் கூறியுள்ளார். (988) வடமொழி நீக்கிய நல்ல தமிழில் கலைச் சொல்லாக்கம் செய்யப்பட வேண்டும் (972) என்றும் கூறியுள்ளார்.

**5*** ''தமிழ் முன்னேற்றமடைந்து உலக பாஷை வரிசையில் அதுவும் ஒரு பாஷையாக இருக்க வேண்டுமானால் தமிழையும் மதத்தையும் பிரித்து விட வேண்டும் ; தமிழுக்கும் கடவுளுக்கும் உள்ள சம்பந்தத்தையும் கொஞ்சமாவது தள்ளி வைக்க வேண்டும்.'' (976)

''தமிழிலிருந்து சைவத்தையும் ஆரியத்தையும் போக்கிவிட்டால் நம்மை அறியாமலே நமக்கு பழந்தமிழ் கிடைத்துவிடும்'' (971)

''தமிழைக் கெடுத்தவர்கள், தமிழன் அறிவுக்கு முட்டுக்கட்டை போட்டவர்கள் இந்தத் தமிழ்ப் பண்டிதர்களும் அவர்களின் சைவமும் தான்'' (972)

**6*** ''தமிழ்நாட்டில் இருந்து கொண்டு –தமிழ்நாட்டைப் பற்றி நினைத்துக் கொண்டு– தமிழ்நாட்டுக்கு அரசியலுக்கானாலும், இலக்கியத்துக்கானாலும், போதனைக்கானாலும் ஒரு மொழி வேண்டுமானால் நாம் தேர்ந்தெடுக்க

www.tamilarangam.net

வேண்டியது தமிழ் மொழி என்பதாகத்தான் தோன்றும். அது ஓரளவிற்கு நியாயமாகும்.'' (986)

''என்னைப் பொறுத்த வரையில் இந்த இரண்டு (தமிழ், இந்தி) மொழிகள் பற்றியும் கவலை இல்லை; பிடிவாதமில்லை. இவற்றுள் இந்தி எந்த வகையிலும் நமக்குத் தேவையில்லை என்பதோடு, கண்டிப்பாக நம் நாட்டிற்குள் இந்தியைப் புகவே விடக் கூடாது என்பதுதான் என் கருத்தாகும்'' (987)

''தமிழ் மொழி வேண்டுமானால் ஆரியத்திற்கு முந்தியது என ஒப்புக் கொள்ளலாம். அதுவும் தமிழனுக்கு இன்றளவும் என்ன பலனைக் கொடுத்திருக்கிறது? விஞ்ஞானத்திற்கு சிறிதும் பயன்படத்தக்கதாய் இல்லை. அறிவுக்குத் தக்கபடி பலனளிக்க முடியவில்லை. தமிழ் மொழி ஏற்பட்டுப் பல ஆயிரக்கணக்கான ஆண்டுகள் ஆகியும் அதை தாய் மொழியாகக் கொண்ட தமிழன் இன்னும் இந்த விஞ்ஞானப் பரவல் காலத்திலும் உலகில் எங்கும் இல்லாத அளவுக்கு மூடநம்பிக்கை உடையனவாகவும், மான உணர்ச்சி என்பது 100 க்கு 75 பாகம் இல்லாதவனாகவும் இருந்து வருகின்றான்'' (987)

''தமிழ் வடமொழியை விட, இந்தி மொழியை விடச் சிறந்தது என்பதிலும் பயன்படத் தக்கது என்பதிலும் எனக்கு அய்யமில்லை என்றாலும் நாம் இன்றைய நிலைமையை விட வேகமாக முன்னேற வேண்டுமானால் ஆங்கிலம் தான் சிறந்த சாதனம் என்றும் ஆங்கிலமே அரசியல் மொழியாகவும், போதனா



மொழியாகவும் இருந்தாக வேண்டுமென்றும், ஆங்கிலமே நம் பேச்சு மொழியாவது நலம் பயக்கும் என்றும் தெரிவித்துக் கொள்கின்றேன்.'' (989)

''ஆகையால் தமிழர் தோழர்களே! உங்கள் வீட்டில் மனைவியுடன் குழந்தைகளுடன் வேலைக்காரிகளுடன் ஆங்கிலத்திலேயே பேசுங்கள்; பேசப்பழகுங்கள்; பேசமுயலுங்கள்! தமிழ்ப் பைத்தியத்தை விட்டொழியுங்கள். என்னை வையாதீர்கள்; மனிதனாக வாழ முயலுங்கள்!'' (989)

www.tamilarangam.net

## பெரியாரியம் : கூட்டு விவாத அழைப்பு

பெரியாரியம் குறித்த கூட்டு விவாதமென்பது உணர்ச்சிகரமானதாகவும் பழைய, புதிய சச்சரவுகளுக்கான சந்தர்ப்பமாகவும் மாறிவிடக் கூடிய அபாயமிருக்கிறது. இந்த இதழில் பெரியாரை சாதி ஒழிப்பு, அரசியல் போராளியாக அனுமானிக்கும் கட்டுரையும், பெரியாரியத்திற்கு அத்தகையதொரு வரையறை முயற்சியும் அத்துடன் மரபுவழி மாக்சிய நோக்கிலிருந்து பெரியாரையும் பெரியாரியத்தையும் விமர்சன பூர்வமாக அணுகும் கட்டுரையும் வெளியாகியுள்ளதே கடுமையான கருத்து மாறுபாடுகளை விவாதிக்கும் சந்தர்ப்பமாக இவ்விவாதம் அமையக் கூடியதை எடுத்துக் காட்டுகிறது. எனவே கீழே தொகுக்கப்பட்டுள்ள மையப் புள்ளிகளை ஒட்டியே அனைவரும் கருத்துகளைத் தொகுத்துத் தருவது அவசியம். பெரியாரின் சிந்தனைகள் மற்றும் செயல்பாடுகளிலிருந்து இன்றைய சூழலுக்குத் தேவையான பல அரசியல் வழிகாட்டல்களையும் படிப்பினைகளையும் பெறமுடியும் என்கிற நம்பிக்கையோடு இப் புள்ளிகள் தொகுக்கப்படுகின்றன. இவற்றைத் தவிர வேறு புள்ளிகளை விவாதிக்க விரும்புவர்கள் அதைத் தெளிவுபடுத்திவிட்டுக் கூறுவது தேவை. அனைவருமே கருத்துக்களை எழுதிக் கொண்டு வந்து வாசிப்பது விவாதிக்கவும் பின்னர் தொகுக்கவும் இன்றியமையாத உதவி என்பதைக் கருத்தில் கொள்ளவும். அனைவரது கருத்துக்களும் வாசிக்கப்பட்ட பிறகு ஒவ்வொரு புள்ளியாக விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளலாம்.




***பரிந்துரைக்கப்படும் விவாதப் புள்ளிகள் :***

1 பெரியாரியத்தின் முக்கிய கூறுகளாக எவற்றைக் குறிப்பிடலாம்? *(சாதி ஒழிப்பு, பார்ப்பன எதிர்ப்பு... என்பதுபோல குறிப்புகளாகச் சொன்னால்போதும்)*

2 இவற்றில் எவற்றை இன்றைய சூழலில் உயர்த்திப் பிடித்தல் வேண்டும்? எவற்றை ஏற்றுக் கொள்ளல் இயலாது? எவற்றை இணைத்துக் கொள்ளல் வேண்டும்? *(இவற்றையும் குறிப்புகளாய்ச் சொன்னால் போதும்)*

3 பெரியாரின் பெயரும் பிம்பமும் பெரும் அங்கீகாரமும் மரியாதையும் பெற்றுள்ள அதேநேரத்தில், அவர் தகர்க்க விரும்பிய சாதியப் படிநிலை அமைப்பும், பார்ப்பனீயக் கருத்தியலும், அனைத்தையும் பாதுகாக்கும் ஆற்றலுடன் மதக் குறியீடுகள், கடவுளர்கள் பெருக்கம் போன்றனவும் நின்று நிலவுவதை அவரது இயக்கத்தின் தோல்வியாகக் கருத முடியுமா? அப்படியானால் அதற்கான காரணங்களாக எவற்றைச் சொல்ல முடியும்?

4 அவரது சிந்தனைகளை கோட்பாட்டு ரீதியிலான, சீராகக் கட்டமைக்கப்பட்ட சொல்லாடல்களாக வெளிப்படுத்தாததே இன்று அவர் பெயர் பொத்தாம் பொதுவாகப் பலவற்றிற்குப் பயன்படவும், அவரது

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பெயரையும் படத்தையும் பயன்படுத்திக் கொண்டே அவரது சிந்தனைகளை நீர்த்துப்போன நிலையில் (பல இயக்கங்கள்) உச்சரிப்பதற்கும் காரணங்கள் எனக் கொள்ள முடியுமா? தனது சிந்தனைகளை அவர் கோட்பாட்டுருவாக்கம் செய்யாததற்குப் புறநீதியான காரணங்களாக எவற்றையும் சொல்ல முடியுமா?

5 தனது சிந்தனைகளை முழுவதும் உள்வாங்கிக் கொண்டு தன்னுடைய குரலில் தன்னுடைய தீவிரத்துடன் பிரச்சாரம் செய்யக் கூடிய ஒரு அணியினரை அவரால் ஏன் உருவாக்க இயலாமற் போயிற்று? தேவையிருந்தும் அத்தகைய தலைவர்கள் உருவாகாமல் போனதற்கும் இயக்கம் தொடராமல் போனதற்கும் காரணம் என்ன?

*(இதற்கான பதில் தனிநபர் விமர்சனங்களாக அல்லாமல் சமூகவியல், பொருளியல் அடிப்படையில் அமைய வேண்டுகிறோம்)*

6 மக்கள் திரள் அமைப்புகள், கட்சி அரசியல், ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றுதல் ஆகியவற்றில் அவருக்கு ஈடுபாடின்மை அல்லது அவநம்பிக்கை இருந்தது எனச் சொல்ல முடியுமா?

சாதியம் ஆதிக்கம் செலுத்தும் ஒரு சிவில் சமூகத்தில் பார்ப்பனீய மேலாண்மையைத் தகர்க்கும் நிலைபாடுக்கு முன்னுரிமை கொடுத்துப் பார்க்கும்போது கிராம்சி சொல்வது போல பெரியாரின் செயல்பாடுகளை ஒரு War of Positions எனச் சொல்லலாமா?





7 தமிழில் உயர்கல்வி கற்ற, உலக வளர்ச்சியில் பரிச்சயம் கொண்ட இலக்கியவாதிகள், கலைஞர்கள், அறிவு ஜீவிகள், சிறுபத்திரிகைக் காரர்கள் பெரியாரிடம் போதிய ஈடுபாடு கொள்ளாததும் அவரை விரிவாக விவாதிக்கவும் ஆராயவும் செய்யாதது ஏன்?

தமிழ் அறிவியக்கம் மறைவான பார்ப்பனீயச் சட்டகத்தினுள் முடங்குவது உண்மையென்றால் அதனை மாற்றுவது எப்படி?

8 பெரியாரின் உலகப் பார்வை சாராம்சத்தில் கருத்துமுதல் வாதமாக உள்ள, இயந்திர வகைப்பட்ட பொருள் முதலியம்; அவர் பிரதிநிதித்துவப்படுத்தியது தமிழ்ப் பிரதேசத்திலுள்ள பார்ப்பனரல்லாத (தெலுங்கு, கன்னட, மலையாளர் உள்ளிட்ட) தரகு முதலாளியரைத்தான் என்கிற கருத்துக்களின் மீது உங்கள் பதிவு என்ன?

9 தலித் குரல்கள் முனைப்புப் பெற்று வரும் இன்றைய சூழலில் அம்பேத்கரின் சிந்தனைகளோடு பெரியாரின் சிந்தனைகள் இணைத்து நடைமுறைப் படுத்தும் வாய்ப்பு உள்ளதா?

அதற்கான மையப்புள்ளிகள் எவை எனக் கருதுகிறீர்கள்?

www.tamilarangam.net

**நாள் :**

*02.5.93 காலை 10 மணி முதல் மாலை 7 மணி வரை.*

**இடம் :**

*பழம்பெரும் திராவிட இயக்கத் தோழரும் தமிழ்வழிக் கல்விப் போராளி யுமான திரு. எம்.எஸ்.ராமசாமி அவர்களின் வீரமணி பள்ளி, மதுரை.*

**பங்குபெற்றோர் :**

*தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் 135 பேர்கள் வந்திருந்தார்கள். பெண்கள் 6 பேர். மதிய உணவிற்குப் பிறகு அரங்கில் எண்ணிக்கை குறைந்திருந்தது. முற்றிலும் வேறுபட்ட பல்வேறு நிலைபாடுகளும் மோதும் களமாக விவாதம் அமைந்தது. இன்றைய அரசியல் சூழலுடன் மிகவும் நெருக்கமான உறவுடைய ஒரு தலைப்பாக இருந்ததனால் பலரும் ஆர்வமுடன் பங்கேற்றனர். எனவே வழக்கமாக நிறப்பிரிகை கூட்டுவிவாதங்களில் செய்வதுபோல ஒவ்வொரு கேள்வியையும் எடுத்து தனித்தனியாக விவாதித்து ஒருமித்த கருத்தை உருவாக்க இயலவில்லை. எனினும் முன்வைக்கப்பட்ட கருத்துக்களில் பொதுவாக உடன்படுகிற மையமான கருத்துக்கள் இறுதியாக அனைவர் முன்னிலையிலும் தொகுத்தளிக்கப்பட்டன. எழுதி வாசிக்கப்பட்ட கருத்துக்கள் தவிர பிற உரைகளின் முக்கிய பகுதிகள் இம்முறை ஒலிநாடாவில் பதிவுசெய்யப்பட்டது. கூட்டு விவாதம் தொடர்பான ஒரு சிறு அறிமுகத்தோடு விவாதம் தொடங்கியது. நிறப்பிரிகையின் கருத்துக்களை ராஜன் குறை முன்வைத்தார்.*

## கூட்டுக் கட்டுரை



***நிறப்பிரிகை :***

**1.** பெரியார் பல்வேறு சமயங்களில் பல்வேறு முழக்கங்களையும், குறிக்கோள்களையும் முன்வைத்து பிரச்சாரம், இயக்கம், கிளர்ச்சிகள் ஆகியவற்றை நடத்தியிருந்தாலும் அவை அனைத்திலும் தொடர் சரடாக இருப்பதும், பிரதானமாக வெளிப்படுவதும் சாதி ஒழிப்பு என்பதாகக் காணமுடிகிறது. எனவே பெரியாரியம் என்பது அடிப்படையில் சாதிய ஒழிப்பே எனக் கருதலாம். சாதிப் படிநிலை அமைப்பைத் தகர்க்கக்கூடிய, சாதி சமத்துவத்தை நிறுவக்கூடிய கோரிக்கைகளுக்காகப் போராடுவது என்பதை ஒருபுறமும், சாதியக் கருத்தியலின் மொத்தப் பின்புலத்தையும், சாதியத்தின் சட்டகமான பார்ப்பனீயத்தையும், அவை சார்ந்த குறியீடுகள் புனைவுகள் ஆகியவற்றையும் கடுமையாக எதிர்த்துப் பிரச்சாரம் செய்வது என்பதை மறுபுறமும் சாதி ஒழிப்பிற்கான நடவடிக்கைகளாகப் பெரியாரியம் கொள்கிறது.

**2.** மேற்கண்ட பெரியாரிய அடிப்படைகள் அனைத்தையும் ஏற்றுக்கொள்ளும் நாம் அத்துடன் ஆதிக்கக் களங்களைக் குறித்த நமது புரிதல்களை இணைத்துக் கொண்டு பல முனைகளில் தீவிரப் பிரச்சாரங்களையும் இயக்கங்களையும் செயல்படுத்த வேண்டும்.

www.tamilarangam.net

**3.** பெரியார் அங்கீகாரம் பெற்றுள்ள அதே சமயத்தில் அவர் தகர்க்கவிரும்பிய பலவும் இன்றும் நிலவுவதைப் பெரியாரியத்தின் தோல்வியாகப் பார்க்க முடியாது. கிராம்சியின் வார்த்தைகளில் சொன்னால், ''மரபுவழிப்பட்ட நிலைபாடுகளுக்கு எதிரான தங்களின் புதிய நிலைபாடுகளை வெகுமக்கள் திரள் தக்க வைத்துக் கொள்ளும் என நம்பமுடியாது...''. பெரியாரின் இயக்கத்தை மட்டுமல்ல இதன் இன்றைய தாக்கத்தையும் புரிந்துகொள்ள கிராம்சியின் எழுத்துக்கள் பெரிதும் உதவக்கூடும். பெரியாரைத் தொடர்ந்து பல்வேறு காரணங்களால் மக்களிடையே செல்வாக்குப்பெற்ற அரசியல் இயக்கங்கள் அவருடைய கருத்தியல் போரைத் தொடராமல் சமரச நிலைபாடுகளெடுத்தது இன்றைய தேக்கங்களுக்கு முக்கிய காரணம்.

**4.** அவரது உச்சரிப்புக்களைத் தெரிந்தே புறக்கணித்துவிட்டு அவர் பெயரைப் பயன்படுத்திக் கொள்ளும் சந்தர்ப்பவாத அரசியலுக்கு அவரைப் பொறுப்பாக்க முடியாது. தெளிவாகச் சில கோட்பாட்டு ரீதியான புரிதல்களை உருவாக்கிய அம்பேத்கரின் பெயரையும் இன்று அரசு உட்பட அனைவருமே பயன்படுத்து வதைப் பார்க்கும்போது இந்திய வெகுமக்கள் அரசியலில் கோட்பாட்டுருவாக்கம் எல்லாம் கடலில் கரைத்த பெருங்காயம்தான் எனக் காணலாம். பெரியாரும் அம்பேத்கரும் ஹெட்கவாரின் (ஆர்.எஸ்.எஸ் நிறுவனர்) நண்பர்கள் என்றுகூறி நாளை வரலாறு எழுதப்படலாம். அனேகமாக இக் காரணத்தினாலேயே பெரியாருக்கு சோர்வு ஏற்பட்டிருக்க வேண்டும். அவருடைய பலமும் பலவீனமும் மக்களிடம் நேரடியாக உரையாடுவதை மட்டுமே அவர் விரும்பியதுதான்.



**5.** ''பகுத்தறிவாளர் கழகம், சிந்தனையாளர் கழகம்'' என அறிவார்த்த அணியினரை உருவாக்கும் முயற்சிகள் நடந்திருந்தாலும் பெரியளவில் அவர் பாணியில் அவருடைய தீவிரத்துடன் பிரச்சாரம் செய்யக்கூடிய பலர் உருவாகாததிற்கு காரணங்களைத் தொகுக்க வேண்டும். வெகுஜன அரசியல் முனைப்புகளைப் (Political Aspirations) பேச முனைந்த தேசியவாத கம்யூனிசச் சொல்லாடல்கள் பெரியாரிய உச்சரிப்புக்களை நீக்கியதும், சமரசப்படுத்தியதும் அவர் பாணியிலான செயற்பாடுகள் தொடராததற்கு முக்கிய காரணங்களாகக் காணலாம். அத்தகைய சொல்லாடல்களின் ஈர்ப்பும் கவர்ச்சியும் பெரியாரிய எதிர்க் கலாச்சார நிலைப்பாடுகள் பெறக்கூடிய கவனத்தைவிட பன்மடங்கு அதிகமாக இருந்திருக்கும் என்பதும் அனுமானிக்கக் கூடியதே. அவருடைய தனிப்பட்ட பண்புகளான நம்பிக்கை வரட்சி, அரசியல் பற்றின்மை போன்றவை அவர் தக்க அணியினரை உருவாக்குவதில் தடையாக இருந்தனவா என்பதும் ஆய்வுசெய்யப்பட வேண்டும்.

**6.** கட்சி அரசியல், ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றுதல் ஆகியவற்றில் அவருக்கு ஈடுபாடின்மை அல்லது அவநம்பிக்கை இருந்ததிற்கான தடயங்கள் அவரது பல உச்சரிப்புக்களிலுள்ளன. அவரது செயற்பாடுகளை கிராம்சியின் வார்த்தைகளில் "WAR OF POSITIONS" என்று பார்க்கலாம். அவரது இயக்கத்தை (முன்பே சொன்னதுபோல்) சரியாக விளங்கிக் கொள்ள கிராம்சியின் சிந்தனைகள் பெரிதும் உதவும் என்பதுடன் பெரியாரை முன்வைத்து கிராம்சியைப் புரிந்து

www.tamilarangam.net

கொள்வதும் விடுதலை அரசியலுக்கான புதிய அடிப்படைகளை உருவாக்கு வதும் இன்றைய தேவை.

**7.** தமிழில் உயர்கல்வி கற்ற, உலக வளர்ச்சியில் பரிச்சயம் கொண்ட இலக்கியவாதிகள், கலைஞர்கள், அறிவுஜீவிகள், சிறுபத்திரிகைக்காரர்கள் பெரியாரிடம் போதிய ஈடுபாடு கொள்ளாமலும் அவரை விரிவாக விவாதிக்கவும் ஆராயவும் செய்யாததற்குக் காரணங்களாக ஒருபுறம் தெளிவின்மை, அறியாமை, இயலாமை, உழைப்பின்மை ஆகியவற்றைக் கூறலாமென்றால் மறுபுறம் அக்கறையின்மை, நேர்மையின்மை, கயமை, உயர்சாதித் தன்மை ஆகியவற்றைக் கூறலாம். தமிழில் எழுதும் எழுத்தாளன், சிந்தனையாளன் யாரும் நம்முடைய மரியாதையைப் பெற வேண்டுமென்றால் தனது சாதீயத் தன்னிலையை தகர்த்துக் கொள்வதையும், தீண்டாமை, சாதீயம், பார்ப்பனீயம் ஆகிவற்றிற்கெதிரான சமரசமற்ற நிலைப்பாடுகள் எடுப்பதையும் நாம் முன்நிபந்தனைகளாக வைக்க வேண்டும். இலக்கிய கலைப் பிரதிகளில் செயல்படும் சாதீய முனைப்புக்களை விவாதிக்கக்கூடாது என்று இன்று தமிழ்ச் சிந்தனைச் சூழலில் கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன. இத்தகைய கூற்றுக்கள்மீது கடுமையான கருத்தியல் தாக்குதலைத் தொடுக்க வேண்டும்.

**8.** இந்து சனாதனத் தத்தவங்களிலிருந்து பெறப்பட்ட வெகுஜன உலகப் பார்வைக்கு ஆற்றல்மிகு மாற்றாக பெரியாரிய உலகப் பார்வை வைக்கப்பட்ட விதம் பிரமிப்பிற்குரியது. அவ்விதத்தில் அதை அணுகுவதை விடுத்து இயங்கியல்



பொருள்முதல்வாதம் என நாம் புரிந்துகொண்டிருக்கின்ற நமக்குச் சொல்லப் பட்டிருக்கிற மார்க்சியத்தின் எல்லைக்குள்ளாகவே சர்ச்சைக்குரியனவாக விளங்கிவரும் கருத்தாக்கங்களை நாம் புரிந்து கொண்ட விதத்தில் வீசிப் பார்ப்பது பயனற்றது. எதிர்க் கலாச்சார நிலைபாடுகளைக் கொண்டு பெரியாரிய உலகப் பார்வையை விரிவாக விவாதிக்க வேண்டும். அவர் பிரதிநிதித்துவப் படுத்தியது தரகு முதலாளிகளைத்தான் என்பதுபோன்ற கருத்துக்களும் பழைய பொருளாதாரவாதம் சார்ந்தவைதான். மார்க்சியத்தின் எல்லைக்குள்ளாகவே இன்று இது வெகுவாகத் தகர்க்கப்பட்டுவிட்டது என்று சொல்லலாம். பொருளாதாரவாத அடிப்படையில் பெரியாரை அணுக முயற்சிப்பது பயனற்றது.

வெவ்வேறு வர்க்க நலன்களை வெவ்வேறு அரசியல் கட்சிகள் இன்றைய சூழலில் நேரடியாகப் பிரதிநிதித்துவப் படுத்துகின்றன என்பதுபோன்ற சிந்தனைகள் வெகுஜன அரசியலை நாம் புரிந்துகொள்ளும் ஆற்றலையே அழித்துவிடும். பெரியாரின் பிரதான செயல்பாடாகிய சாதீயம், மதம், பார்ப்பனீயம் ஆகியவற்றிற் கெதிரான கடும் பிரச்சாரத்திற்கும் தரகுமுதலாளிகளின் நலன்களுக்கும் என்ன தொடர்புகள் இருந்திருக்க முடியும் என்பதை நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும்-பெரியார் முதலாளிகளைப் பயன்படுத்திக் கொண்டார் என்பதைத் தவிர. அவரது தனிநாடு கோரிக்கையை மட்டும் எடுத்துக் கொண்டால் கூட அவர் அதை எழுப்புகின்ற காலங்களில் தரகுமுதலாளிய வளர்ச்சிநிலைகளுடன் அதனைப் பொருத்திக் காட்டமுடியுமா என்பது கேள்விக்குரியது.

www.tamilarangam.net

நீதிக் கட்சி, தி.மு.க போன்றவை நடத்திய அரசியலுக்கும் பெரியாரின் இயக்கத்திற்குமுள்ள வேறுபாடுகள் தொகுக்கப்பட வேண்டும்.

**9.** சாதீயக் கருத்தியலை அம்பேத்கரும் பெரியாரும் அணுகிய முறைகளை சரிவரத் தொகுத்துக் கொள்வது, இரண்டிற்குமான இணைவுப் பிரதேசத்தை உருவாக்கிக் கொள்வது என்பன இன்றைய இந்துத்துவ எதிர்ப்புச் செயல்பாடுகளுக்கு பெரிதும் பயன்படும். இந் நோக்கில் இருவரது சிந்தனைகளும் சீரிய முறையில் ஆய்வுசெய்யப்பட வேண்டும். ❑

***கிராமியன் :***

**1.** பெரியாரியம் என்பதை சாதி ஒழிப்பை அடிப்படையாகக் கொண்ட பெண்ணிய விடுதலையை நோக்கிய சிந்தனை என்னும் வரையறையில் ஏற்றால், பார்ப்பன எதிர்ப்பு என்பது அதன் சரியான நடவடிக்கையாகும். ஆனால் பார்ப்பனர், பார்ப்பனீயம் என்னும் அடையாளம் சிக்கலுக்குரிய நிலையில் பயன்படுத்தப் படுகிறது என்றே சொல்லலாம். ஒதுக்குதலும் ஒதுங்குதலுமே பார்ப்பனீயம் எனக் கொண்டால் பிறவியடிப்படையிலான பர்ப்பனீயம் போலவே பெண்ணை பிறவி அடிப்படையில் ஒதுக்கி, தான் ஆண் என ஒதுங்கிக் கொள்கிற எல்லா மத நிறுவனங்களின் ஆதிக்கத் தன்மையை நாம் எந்தச் சொல்லில் அடையாளப் படுத்துவது? பார்ப்பனீயம் என்று வழங்கும் சொல்லில் அதன் கடுமை ஆணைப்



பிரதானப்படுத்துகிறது என்பதாலேயே அதனை மட்டும் பேசுவது ஆணாதிக்கச் சொல்லாடலாகாதா? பெண் விடுதலை, குடும்பச் சிதைவு, கருப்பை மறுத்தல் என்னும் அடிப்படையில் இனவிருத்தி மறுப்பு என்பதே நம் கோட்பாடாக, இனவிருத்தி x இனவிருத்தி மறுப்பு என்னும் சொல்லாடல் களன் என யோசிப்பதே சாதீயம் போன்ற மனித ஒடுக்குதல்களுக்கும் எதிர்ப்பை உள்ளடக்கிய நடவடிக்கையாகும் என்பதே என் கருத்து.

**2.** இன்றைய சூழலில் பெண்விடுதலை, பாலியல் ஒடுக்க எதிர்ப்பு எனும் சொல்லாடலை உயர்த்திப் பிடித்து சாதி ஒழிப்பை நடைமுறையாக்கலாம். பார்ப்பன எதிர்ப்பு எனும் பழைய உள்ளடக்கத்தைப் பேசுவது வேளாள எதிர்ப்பை மறந்ததுபோல மீண்டும் பார்ப்பன வேளாள எதிர்ப்பை மட்டுமே பிரதானப் படுத்தாமல் பெண் விடுதலை பிரதானப்படுத்தப்பட வேண்டும். அது குடும்பச் சிதைவை உள்ளடக்கியதாக இருந்தால் மட்டுமே சாதீய ஒழிப்பைச் செயல்முறையாக்கும்.

**3.** சிந்தனை மறுக்கப்படும்போதே சிந்தனையாளர் பற்றிய பிம்பம் உருவாகிறது. பெரியார் வழிபடு தெய்வமாக உயர்த்தப்பட்டமைக்கு அவரது சிந்தனை உள்வாங்கப்படாமை முக்கிய காரணமெனலாம். மனிதாபிமானம் போன்ற நிலப்பிரபுத்துவக் கருத்தியல் மேலாண்மை தமிழ்க் கலாச்சாரத்திலும், கல்வி, மருத்துவம் வாயிலாக செயற்பட்ட மேற்கத்திய கலாச்சாரத்திலும் நிலவியதால்

www.tamilarangam.net

அதனடிப்படையில் பெரியாரின் சிந்தனையைப் புரிந்து கொண்டவர்கள் தேசியம், நாத்திகம், பார்ப்பன எதிர்ப்பு, சாதி ஒழிப்பு போன்றவற்றின் வழி ஒருங்கிணைந்தவர்கள் பெரியாரியத்தின் கருத்துக் குவியத்தைத் தொடர்பற்ற சீர்திருத்தங்களாகவே கண்டனர். குறியீடு, புனைவு, தொன்மம் போன்றவற்றில் பெரியாருக்கிருந்த தெளிவு அவருடனுறைந்த வேறு எவருக்கும் இல்லை என்றே சொல்லலாம். (முட்டாள்கள் மட்டுமே என்னிடமிருந்தால் போதும் என்கிற அவரது தொண்டர் வரையறையை நினைவுபடுத்திப் பார்க்கலாம்.) பொதுப்புத்தி (Commen Sense) என்கிற கிராம்சியக் கருத்தாக்கம் இங்கே சுட்டப்படுகிறது – தொகுப்பாளர்) பிற்போக்கான நிலையிலிருக்கும்போது ஜனநாயகம் அறிவுக் குவியத்தை நீர்த்துப் போகவே செய்யும். அண்ணாத்துரையின் ஜனநாயகமே அவரது பிரதான சிறப்பு –அரசியல் மேம்பாடு– பெரியாரின் எதிர்ப்பு. பெரியார் இவர்களது பொதுப் புத்தியைக் கிண்டல் செய்து 'கண்ணீர்த் துளிகள்' எனப் பெயரிட்டது குறிப்பிடத்தக்கது.

**4.** சிந்தனைகள் கோட்பாடுகளாகக் கட்டமைக்கப் பட்டாலும் அறிவுச் சேகரத்தில் சமூகத்தில் நிலவும் கருத்தியல்வழி அதனைப் புரிந்து கொள்வது என்பது இருந்தாலும், மாக்சியம் கோட்பாடாக்கப் பட்டிருந்தும் நீர்த்துப் போனது போலவே பெரியாரியத்திற்கும் ஏற்பட்டிருக்க வாய்ப்புண்டு. பொதுப் புத்தி மிகுந்த பிற்போக்கானதான நிலையில் கோட்பாட்டுருவாக்கம் அவரை தனித்துச் செயல்பட முடியாத நிலையை உருவாக்கிவிடும் என்ற அச்சமும் கோட்பாட்டு



உருவாக்கம் ஆகாமைக்குக் காரணமாக இருக்கலாம். செயல்பாட்டுக்குத் தடை நேரும் என்றபோது அவர் தீவிரத்தைத் தணித்துக் கொண்டமைக்கு பொதுவுடைமைப் பிரச்சாரத்தை அவர் கைவிட்டதையும் இதனோடு ஒப்பிட்டுப் பார்க்கலாம்.

**5.** பெரியார் தன் சிந்தனைகளை எழுதி வெளியிட்டாலும் சிறுகுழு அளவிலான விவாதத்துக்கு இடமளித்திருந்தாரா என்பது தெரியவில்லை. அப்படி இடமளித்திருந்தாரே யானாலும் வயது, அரசியல், பிம்பம் போன்ற அவரது தடைகள் உண்மையான விவாதத்திற்கு வழிசெய்யாமல் தடுத்திருக்க வாய்ப்புண்டு. தலைமை என்பது பெரியாருக்குள் கருத்தியலாக இருந்தது என்பதை அவரது 'தொண்டு', 'சமூகத் தொண்டாகக் கருதிச் செயல்படுகிறேன்' என்பது போன்ற சொல்லாடல்களில் காணலாம்.

**6.** தானும் தன் இயக்கமும் எதிர்க் கலாச்சார செயல்பாடுகளைக் கொண்டியங்குவதால், மக்கள் திரள் அமைப்புக்கள் கட்டிச் செயல்பட முடியாது என்பதால், அழுத்தக் குழுவாக இருந்து அரசு எந்திரத்தைப் பகைத்துக் கொள்ளாமலேயே சிவில் சமூகத்தில் பார்ப்பனீய மேலாண்மையைத் தகர்க்கும் நிலையெடுத்திருந்தார். பிரிந்துபோன தி.மு.க வினர் திரும்பியபோது கூட பார்ப்பனீயக் கருத்தியல் மேலாண்மைத் தகர்ப்பை முன்வைத்தே அரசுடன் இணைந்து செயற்பட்டார் எனலாம். ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றுதல் குறித்து

www.tamilarangam.net

அவருக்கு அவநம்பிக்கை ஏதுமில்லை எனலாம். பார்ப்பனீயக் கருத்தியல் மேலாண்மை செலுத்தும் சமூகத்தில் அரசதிகாரம் என்பது பார்ப்பனீயத்துடன் கருத்தியல் சமரசம் செய்துகொள்ளாமல் முடியாது என்தாலேயே திராவிடர் கழகம் சமுதாய இயக்கம் எனவும், ஆனாலும் அரசு மூலமும் சட்ட மூலமும் பல காரியங்களைச் செய்து பார்ப்பனீய மேலாண்மையில் தகர்ப்பு ஏற்படுத்த முடியும் எனவும் நம்பினார் - ‘‘பூணூல் போட்டால் ஆறு மாதம் தண்டனை என்று அறிவிக்க முடியுமா ? ’’

**7.** தமிழில் உயர்கல்வி கற்றவர்கள் -சைவ, வைணவ மொழிப் பண்டிதர்கள் ஒருபுறம் ; மொழி வழிபாடு நிகழ்த்திய கலாச்சார, கல்வி நிறுவனப் பேராசிரியர்கள் மறுபுறம். தமிழ் அறிவுச் சேகரம் ஏதுமில்லை. நாத்திகம்கூட பெர்ட்ரன்ட்ரஸ்ஸல் இங்கர்சால் பெயர் குறித்துப் பேசினாலே மேற்கத்தியப் பெருமை என்னும் மேலைக் கலாச்சாரப் பெரியவர்கள் இன்னொரு பக்கம். பார்ப்பனீயத்தைத் தாக்குவதால் உலக இலக்கியங்களுக்குள் ஒளிந்து கண்ணை மூடிக்கொண்ட பார்ப்பனீய இலக்கியவாதிகள், சிறுபத்திரிகைகள் போன்றவை பல தளங்களிலும் உன்னத கலைகளைத் தேடியலைந்ததால் கொச்சையாக, பாமரத்தனமாகப் பேசிச் செயல்பட்ட பெரியாரை திரும்பிப் பார்க்காதது மட்டுமில்லை, இப்பொழுதும்கூட வாய்திறக்க முடிவதில்லை. அவருடைய Crudity (கச்சாத்தனம்) கலைக் கடவுள் வழிபாட்டையும் தூக்கிக் குப்பைக் கூடையில் போட்டது.



**8.** சாராம்சத்தில் கருத்துமுதல்வாதம் என்பதில் பொருளேயில்லை. பொருள்முதல்வாதமா கருத்துமுதல்வாதமா என்ற ஒற்றை நுனியைப் பிடித்துக் கொண்டு ஊஞ்சலாடுவதில் பொருளில்லை. யதார்த்தம் பிரதிபலிப்பு அல்ல என்பதும் பகுதிப்பட்ட புலனறிவு பட்டறிவால் சோதிக்கப்பட்டாலும் நிலைத்த உண்மை ஆகாது என்னும் அறிவுத் தோற்றவியலை ஏற்காமல் இயந்திரவகைப்பட்ட பொருள் முதலியம் எனப் பெயரிட்டு ஒதுக்குவதில் பொருள் இல்லை. தமிழ்ப் பிரதேசத்திலுள்ள பார்ப்பனரல்லாத தெலுங்கு, கன்னடர், மலையாளர் உள்ளிட்ட தரகுமுதலாளியரைத்தான் அவர் பிரதிநிதித்துவப் படுத்தினார் என்றால் அவர் கருத்தியலில் அது எந்தப் பகுதி என்பதை விளக்க வேண்டும். வடவர் x தென்னவர் ; ஆரியர் x திராவிடர் ; தமிழ் x இந்தி போன்ற நிலைகளையெல்லாம் நிலவிய சூழலுக்கு ஏற்பவே பயன்படுத்தி யிருக்கிறார்.

நீதிக் கட்சி உருவாக்கத்தில் அத்தகைய தன்மை இருந்ததாகக் கொண்டாலும் சுயமரியாதை இயக்கம் / திராவிடர் கழகம் சிந்தனை செயல்பாடுகளில் அத்தகைய போக்குகளைச் சுட்டமுடியுமா எனப் பார்த்தல் வேண்டும். மாறாக அவரது பொதுவுடைமைப் பிரச்சாரம், பார்ப்பன எதிர்ப்புடன் கூடிய கடவுள் மறுப்பு போன்றவற்றைக் கண்டு அவர் செயல்பாட்டிலிருந்து விலகியவர்களே அதிகம். தமிழ் மொழி குறித்த அவர் கருத்தெல்லாம் இத்தகைய முடிவுக்கு நாம் வருவதை அனுமதிக்காது.

www.tamilarangam.net

**9.** அம்பேத்கரும் பெரியாரும் சாதி ஒழிப்பு நிலையில் நின்றாலும் இந்தியா, பெண்விடுதலை போன்ற நிலைகளில் எதிரும் புதிருமானவர்கள் என்றே சொல்லலாம். அம்பேத்கர் ஆணாதிக்கவாதி எனுமளவுக்கு கருத்துக்களை வெளியிட்டார். பெண்ணிய நோக்கில் சாதி ஒழிப்பு எனப் பேசும்போது அம்பேதர்கர்-பெரியார் சிந்தனைகளை இணைத்து நடைமுறைப்படுத்துவது என்கிற சாத்தியத்தை எப்படிச் சிந்திப்பது எனப் புரியவில்லை. பார்ப்பன எதிர்ப்பு நிலையில் இருவருடைய் புரிதல்களையும் சேர்த்துப் பேசலாம்.

***தமிழவன் :***

*(நேரில் வரவில்லை. கட்டுரை வாசிக்கப்பட்டது.)*

பெரியாரின் கருத்துக்களை பரணரின் கருத்துக்கள், திருவள்ளுவரின் கருத்துக்கள், வால்டேரின் கருத்துக்கள் இத்தியாதிகள்போல எடுத்து இன்று விவாதிப்பது இயலாது. கோ.கேசவன் தெளிவாகவும் கவனமாகவும் ஓரளவு அமைப்பியல் பரிபாஷையைத் தொட்டும் (மைய சாராம்சம், சுற்றெல்லை) எழுதிய கட்டுரை பழைய பாணி 'கருத்துத் தேடும் சிந்தனை'. அதாவது 'பரணரின் கருத்துக்கள்' போல. பெரியாரின் கருத்துக்களை அவரே கருதுவதுபோல நாடகமாகவும் (நிறப்பிரிகை-6, பக்கம்-37) நிறப்பிரிகையின் பக்கங்கள் கருதுவது போல (*தமிழவன் எதைச் சுட்டுகிறார் எனப் புரியவில்லை -தொகுப்பாளர்*) முரண்பாடுள்ளவையாகவும் பார்க்கும்போது அவற்றில் மையசாராம்சம் தேடுவது



வியர்த்தம். மையசாராம்சத் தேடல் ஒரு சாராம்சவாதியின் செயல். சமீபத்தில் சுந்தரராமசாமி எழுதிய ஒரு நாவல் முன்னுரையிலும் இந்த சாராம்ச வலியுறுத்தல் உள்ளது. சாராம்சவாதம் என்பது எப்படி கருத்துமுதல்வாதத்தின் குழந்தை என்பது வேறொரு சந்தர்ப்பத்தில்.

எனவே சாராம்சவாதிகளின் கருப்புக் கண்ணாடி அணிந்து பெரியாரின் கருத்துக் களத்தில் துப்பறியக் கிளம்புவதை விடுத்து பெரியாரின் செயல், சூழல், பேசப்பட்ட கருத்து, பேசப்படாத கருத்து, பேசப்பட்ட கூட்டத்தினரின் அடையாளங்கள், பெரியாரின் போராட்ட வடிவத்தில் பயன்படுத்தப்பட்ட அடையாளங்கள் என்று ஒரு ஒட்டுமொத்த Performance Methodology (நிகழ்த்துதல் ஆய்வுமுறை) ஒன்றை உருவமைத்து அவரை அனுக வேண்டும். இதுபற்றி ஓரளவு என் சமீபத்திய *'தமிழ்க் கவிதையும் மொழிதல் கோட்பாடும்'* இல் விளக்கியுள்ளேன். எனவே அனுபவம் மூலம், புலன் மூலம், உலகை/உண்மையை அறிவதுதான் ஒருவன் செய்ய வேண்டியது என்ற பெரியாரின் சிந்தனைத் தோற்ற காலத்திய அனுபவ முதல்வாதம் (Empiricism) இன்று உதவாது. அதிக வளமான அமைப்பியல் பின்அமைப்பியல் போன்றவற்றைத் தொடர்ந்து இன்று வந்துள்ள நிகழ்த்துதல் கோட்பாடு -மொழிதல் கோட்பாடு இவை எல்லாம் அனுபவ முதல்வாத அழுகல்களைத் தோலுரித்துக் காட்டக்கூடியனவாகும். இது அனுகல் முறையில் எவ்வளவு உஷாராக நாம் இருக்க வேண்டும் என்பதற்காக.

www.tamilarangam.net

இரண்டாவது விஷயத்துக்கு வருகிறேன். தி.க மற்றும் தி.மு.க உச்சக் கட்டத்தில் இருந்த காலத்திலேயே திரு. க.நா.சு கடவுளைப் பற்றி ஒரு கவிதையில் சொல்கிறார். பெரியாரின் கடவுள் கொள்கையையும் க.நா.சு என்ற மாடர்னிச பிதாமகரின் கடவுள் கொள்கையையும் ஒப்பிடுவது மிகவும் முக்கியமான சில சிந்தனைகளை ஏற்படுத்துகின்றன.

''மனிதனுக்கு கலை எதுவும் திருப்தி தராது. மேலே மேலே என்கிற ஏக்கத்தைத்தான் தரும். கலையின் பிறப்பு இந்த அடிப்படையில் ஏற்படுவது. கடவுளே இன்னமும் உயிர்வைத்துக் கொண்டிருப்பது இந்த அடிப்படையில்தான் சாத்தியம்.'' -இதுதான் க.நா.சு வின் கடவுள் கோட்பாடு. கலையையும் கடவுளையும் முடிச்சுப் போடுகிறார். இப்படியெல்லாம் பெரியார் யோசிக்க மாட்டார். 'மேலே மேலே என்கின்ற ஏக்கம்' என்றெல்லாம் க.நா.சு பேசுகையில் பெரியார் 'மேலே மேலே வெங்காயம்' என்று கூறிவிடுவார். பெரியாரின் கருத்து மீதான விமர்சனம் இந்த 'எளிமை ஆசை' மீதும் அமைய வேண்டும். அதேபோல் பெரியாரும், ஷ்தானோவும், தமிழக கம்யூனிஸ்டுகளும், இவர்களின் வாரிசுகளும் கலையை வெறுக்கிறார்கள். இதன் அடிப்படை புரியாதவரை பெரியாரின் சிந்தனை ஒரு பெரிய அறிவியக்கத்தைத் தமிழகத்தில் தோற்றுவிப்பதற்கு தவறியதை சரியாகப் புரிய முடியாது. மணிக்கொடியின் கலை இலக்கியப் பார்வையும் அதன் வழிப்பட்ட புதுமைப்பித்தனின் ஆளுமையும், மௌனி, 'எழுத்து' பத்திரிகை போன்றனவும் எப்படி பெரியாரின் கருத்தாளுமைக்குள் வராமல்



போய்விட்டன? இதுபோல் பெரியார் சிந்தனை பற்றிய விவாதக் குறிப்புகளை மிகுந்த சிரமத்தோடு செய்துள்ள நிறப்பிரிகையும் பெரியாரையும் தமிழகத்தின் அன்றைய தமிழக கலை இலக்கியத்தையும் இணைத்து ஓரிடத்தில் கூடப் பார்க்காதது இவர்களின் குதிரைப்பட்டைப் பார்வை பெரியார் வழியில் வந்தது என்று விளக்கத்தானோ? உடனே கலை இலக்கியம் சமூகத்தை மாற்றுமா? ஆட்சியைப் பெற்றுத் தருமா? என மிக எளிமையாளர்கள் கேட்பார்கள்.

மீண்டும் கடவுள் பற்றிப் பார்ப்போம். ''கடவுளே இன்னும் உயிர்வைத்துக் கொண்டிருப்பது....' என க.நா.சு கூறுவது க.நா.சு வையும் பெரியாரையும் மிக அருகில் கொண்டுவருகின்றன. எனவே பெரியாரை கட்சிக்கோ, இயக்கத்துக்கோ பயன்படுத்துகிறவர்கள், க.நா.சு வை அந்த இயக்கத்தின் நிகழ்த்துதல் Space இல் (வெளியில்) இணைக்க முடியுமா என்று யோசிக்க வேண்டும். முன்கூட்டிய 'நம்பிக்கைகளை' விடவே மாட்டோம் எனப் பிடிவாதமாய் இருப்பவர்களுக்கு இது கேலிக்கூத்தாகப் படும். அல்லது தமிழகச் சரித்திரத்தில் கலை இலக்கியம் சிந்தனை என்ற ஆழ் கலாச்சார விசாரிப்பு மரபு வேர்பிடிக்காததுக்கு பெரியாரின் சிந்தனைக்குள் காரணங்கள் உண்டா என்று பார்க்க வேண்டும். இந்த கலாச்சார மறுப்பு 'காண்பதே உண்மை' என்ற 19ம் நூற்றாண்டின் பிரிட்டிஷ் சிந்தனை மரபிலிருந்து பெரியாருக்கு வந்தது எனச் சொல்லலாமா? அல்லது படிப்பறிவற்றவர்கள் என பெரியார் கேலியாகக் கருதிய மக்கள் திரளை அவரது நாடகத்தின் பார்வையாளராய்க் கொண்டால் அவரது நாடகம் பார்வையாளரால்

www.tamilarangam.net

எழுதப்பட்டபோது இந்தக் கலைஇலக்கியக் கொலை நடந்ததா? (நிகழ்த்துதலின் முக்கிய இலக்கணம் நாடகத்தைப் பார்வையாளர்கள் எழுதுகிறார்கள் என்பது). இதன் தொடர்ச்சிதான் திராவிடப் பாரம்பரியம் சார்ந்தவர்களால் தமிழ் கலை இலக்கியம் அழிந்த வரலாறும். இந்த அழிவுக்கும் பெரியாரன்றி யார் காரணம்? அல்லது திராவிட பாரம்பரியம் செய்த கலை இலக்கிய அழிப்பு வரலாற்று விபத்தா?

இன்னும் திருப்தியுறாமல் நமட்டுச் சிரிப்புச் சிரிக்கும் நண்பர்கள் 'கலை இலக்கியம் என்ன அப்படிப் பெரிசு' என்றுதான் கேட்பார்கள். அரசியல்தானே முக்கியம், கலை இலக்கியம் அதன் அக்குளுக்குள் அடங்காதா சார்? என தங்களை அமைப்பியல்வாதிகள் என்று கருதும் சிலரும் கேட்கிறார்கள். இவர்களுக்கு பார்த் பதில் சொல்கிறார், ''அதிகாரத்தின் பிடியிலிருந்து வெளியில்வர விரும்பினால் நம்மை மூடியிருக்கும் மொழியை நாம் ஏமாற்றக் கற்க வேண்டும். இதுதான் மொழியின் மீதான நித்தியப் புரட்சி. இப்படி மொழியை நித்தியத்துக்கும் ஏமாற்றும் துறைதான் இலக்கியம். மேலும் பார்த் கூறுகிறார், ''இலக்கியத்தின் முதுகை வளைத்து அதனைத் தத்துவமாகவோ, விஞ்ஞானமாகவோ, வேறொன்றாகவோ சுருக்கிவிட முடியாது.'' இப்போது இப்படிச் சொல்லலாம். சிந்தனையின் (பகுத்தறிவின்) முக்கியமான அடிப்படை சிந்திக்கும் ஆற்றலின் சுய உணர்தல். பெரியார் இந்த சுய உணர்தலற்ற சிந்தனையாளனா? அல்லது அவரது சீடர்கள் சிந்தனையின் (மொழியின்) வரம்புகளை நித்தியமாய் உடைத்தெறியும் (அதாவது சுய உணர்தலையும்) பண்பு



அற்றவர்களா? பெண்களைப் பற்றி இவ்வளவு அசாத்தியமான அற்புதமான விசயங்களைக் கூறும் பெரியாரைப் போய் மொழி வரம்புக்கு (சிந்தனையின் சுய கட்டுப்பாட்டுக்கு) கட்டுப்பட்டவர் என்று எப்படிக் கூறுவது? ஆனால் ஒன்று. மொழியின் இயங்குதலை உடைத்து பெருவெளிப் பரப்பலைச் செய்யும் இலக்கியத்தைப் பெரியார் மறுத்தது தமிழகச் சரித்திரத்தில் திராவிடப் பாரம்பரியத்துக்கு கெட்ட பெயரை வழங்கியிருப்பது மறுக்க முடியாது.

மூன்றாவது விஷயம். தமிழக இந்திய சாதிகளின் எதிர்மறைக் குணாம்சத்தைப் புரிந்த பெரியார் அதற்கு சில Positive (நல்ல) குணாம்சங்கள் உள்ளதைப் புரிந்தாரா? அதாவது எல்லோரும் ஏன் சாதியை ஒழிக்க வேண்டும் எனக் கூறிக்கொண்டே காப்பாற்றிக் கொண்டிருக்கிறார்கள்? சாதிகளுக்கு ஒரு சமூகச் செயல்பாடு உண்டு. நகரங்களில் வாழவரும் கிராமத்து இளைஞர்கள் நாற்பது வயது ஆனவுடன் அந்த ஊரின் சாதிச் சங்கத்துக்குப் போய் உறுப்பினர் ஆவதை எப்படி விளங்கிக் கொள்வது? பெரியார் இந்தப் பண்பைப் புரிந்திருந்தால் தன் தந்திரோபாயத்தை மாற்றியிருக்கலாம். முக்கியமாக பிராமணர் சாதிக்குள் ஒரு பிராமணர் எதிர்ப்பு இயக்கத்தை பெரியார் உருவாக்கி அச் சாதிக்கு வெளியிலுள்ள இயக்கத்தோடு இணைத்திருப்பார். இன்று பிராமணர்கள் தங்களுக்குள் ஒரு தற்காப்பு நிலை எடுத்து பாரதீய ஜனதாவுக்கான அடித்தளமாய் மாறாமல் இருந்திருக்கலாம். பாரதி, வ.ரா போல் ஆயிரக்கணக்கான பிராமண புரட்சிக்காரர்கள் தமிழகத்துக்குக் கிடைத்திருக்கலாம்.

www.tamilarangam.net

மனசில் பட்டவற்றைக் கூறியுள்ளேன். வேண்டுமென்றே பெரியாரின் எதிர்மறைகள் மீது கவனம் செலுத்தி எழுதுகிறேன். நிறைகள் பற்றித் தான் பேச எல்லா இடத்திலும் நிறையப் பேர் இருக்கிறார்களே.

❑

**ஞானி :**

**1.** முதலில் சில மேற்கோள்கள்.

கோவையில் பெரியார் பேசியது,

*''நமது இயக்கம் சீர்திருத்த இயக்கமல்ல. அழிவு வேலை இயக்கம். இன்றைய நிலையில் சமத்துவத் தன்மைக்கு மத சம்மந்தமாக, கடவுள் சம்மந்தமாக, பொருளாதார அரசியல் சம்மந்தமாக அனுகூலமானவை இல்லை. ஆகவே, எப்படி சீர்திருத்தம் செய்வீர்கள்? இவைகளில் செய்யும் சீர்திருத்தம் இவை இன்னும் நெடுங்காலத்திற்கு நிலைத்து இருக்கத்தான் பயன்படுமே தவிர மாறுதலை உண்டாக்க முடியாது. வேகமாய் போவதற்கு இடையூறாய் கடவுளும் மதமும், அரசாங்கமும் குறுக்கே போடப்படுகின்றன. இவற்றை ஒழிக்க வேண்டும். நாம் பொதுநலச் சேவைகாரர்கள் அல்ல. புரட்சிக்காரர்கள். நமக்கு சீர்திருத்தக்காரர்களும் பொதுநலச் சேவைக்காரர்களும் பெரிய விரோதிகள். தலைகீழாய்க் கவிழ்ப்பதுதான் புரட்சி. இது குற்றமானால் இதை ஒவ்வொருவரும் குஷாலாகச் செய்யவேண்டியதுதான்.''* -(ஆனைமுத்து தொகுப்பு பக்.509 - 512)



கட்சிக்குள் நடைபெற்ற கடுமையான விவாதம் ஒன்றின்போது பெரியார் கூறியது :

*''பொருளாதாரத் துறையிலும் அரசியல் துறையிலும் வேலை செய்யாமல் சமூக முற்போக்கு எப்படி ஏற்படும்? ஒரு சமூகத்துக்கு பொருளாதாரமும் அரசியலும் அவசியமல்லவா? இந்த இரண்டையும் விட்டுவிட்டுச் செய்யும் முற்போக்கிற்காக நமது சுயமரியாதை இயக்கம் தேவையில்லை. சும்மா அலங்காரமாக, வேடிக்கையாக புராண முட்டாள்தனத்தையும், பார்ப்பன சூழ்ச்சியையும் பேசிக் காலங்கழிப்பது மாத்திரமே சுயமரியாதை இயக்கம் என்றால் அது அழிந்துபோவதே மேலான காரியம் என்று சொல்வேன்.''*

-(ஏ.எஸ்.கே - 'இவர்தான் பெரியார்' , பக்.11).

குடியரசு இதழில் வந்த அறிக்கை (31.3.95) :

*''சுயமரியாதை இயக்கம் சட்டமறுப்பு இயக்கமல்ல. சர்க்காரோடு ஒத்துழையாமை இயக்கமல்ல. சட்டத்தையும் சமாதானத்தையும் மதிக்காத இயக்கம் அல்ல. சுயமரியாதை இயக்க வேலைத்திட்டம் சட்ட வரம்பிற்குட்பட்டே நடக்கும்.''* -(ஆனைமுத்து நூல்)

**2.** இந்த மேற்கோள்களிலிருந்து பெரியாரின் இறுதி இலக்கு சமதர்மத்தை நோக்கிய புரட்சிகரமான மாற்றம். இந்த மாற்றத்திற்குக் குறுக்கே நிற்பவை சாதி, மதம். இவற்றோடு பார்ப்பனீயம், அரசு, பொருளாதாரம் -அதாவது முதலாளியம். நிலவுடைமை முறையையும் சேர்த்துக் கொள்ளலாம். அரசுத்

www.tamilarangam.net

தடை வந்தவுடன் பெரியார் தன் சுயமரியாதை இயக்கத்தை சட்டவரம்பிற்கு உட்பட்டதாக மாற்றிக் கொள்கிறார். தனது இயக்கத்தைச் சீர்திருத்தவாத இயக்கமாக மாற்றிக் கொள்கிறார். இது பெரியாரின் குறுகிய எல்லை. விரிந்த எல்லை சமதர்மம். அவ்வப்போது குறுகிய எல்லையிலிருந்து விடுபட்டு சட்டத்தையும் அரசையும் மீறிச் செயல்படுபவராகவும் பெரியார் இருந்தார்.

சமதர்மக் கொள்கையை ஏற்றுக் கொண்டவர்கள் தொடக்கத்தில் பெரியாரின்மீது அமர்ந்து சவாரி செய்ய விரும்பினார்கள். அரசுத் தடை வந்தவுடன் காங்கிரசுக்குள் நுழைந்து 'சோசலிசக் கட்சி' என்ற பெயரில் தங்கினார்கள். இன்னொரு கட்டத்தில் நேருவின் சோசலிசத்தை ஏற்றார்கள். புரட்சிப் பாதையைக் கைவிட்டார்கள். இன்று இறுதியாகப் பார்க்கும்பொழுது சோவியத் யூனியனிலும் சரி, இந்தியாவிலும் சரி, மாக்சியம் என்பது பெருமளவில் முதலாளியக் கூறுகளை உள்வாங்கிக்கொண்ட கோட்பாடாகவே இருக்கிறது. பொருளாதாரவாதம், தொழிற்சங்கவாதம், அரசியல் அதிகாரவாதம் ஆகியவை இவ்வாறு மாக்சியத்தை நம் சூழலில் முடக்கியவை. மார்க்சியர் செய்யவேண்டிய முதன்மையான செயல்பாடு சமதர்மம் நோக்கிய சமூக மாற்றம். வர்க்கப் போராட்டம், புரட்சிக்கான கட்சியமைப்பு முதலிய கருத்துருவங்கள் செயல்பாடுகள் மூலமே இந்த சமூகமாற்றம் சாத்தியம். இதற்கான துணைச் சக்தி பெரியாரியக்கம். ஆகவே, மார்க்சியர் தோற்ற இடத்தில் பெரியார் வெற்றிபெறுவார் என்று எதிர்பார்க்க வேண்டியதில்லை.



ஆனால் பெரியார் செய்துகொண்ட சுயவிமர்சனத்தின்படி பெரியாரியத்தை அர்த்தப்படுத்தும்போது, அவர் தீவிரப்படுத்திய சாதி மத எதிர்ப்பு, பார்ப்பனீய எதிர்ப்பு ஆகிய முனைகளை முற்றான தனிநிலைகளாகக் கொள்வது பெரியாரியத்தைக் குறைக்கும். மாறாக சமதர்மம் என்ற இலக்கிலிருந்து சாதி, மத, பார்ப்பனீய எதிர்ப்பு என்ற முனைகளை வேறுபடுத்திவிடக்கூடாது. இந்த முனைகளில் மட்டும் பெரியாரியத்தை முடக்கினால் அப்புறம் வீரமணி தலைமையிலான பெரியாரியக்கம் போல, பெரியாரியம் முதலாளிய அரசு அதிகார எல்லைக்குள் சுழல்வதாகச் சுருங்கிவிடும். இப்படிச் சுருக்குவதன் மூலம் பெரியாரியத்தை மார்க்சியத்திற்கு எதிரான போக்காக மாற்றியிருக்கிறார்கள். முதலில் சமூக மாற்றம், பின்னர் பொருளியல் மாற்றம் என்று இவர்கள் தத்துவம் வகுக்கிறார்கள். இப்படி விளக்குவதன் மூலம் சாதி, மதம், பார்ப்பனீயம் ஆகியவற்றை சமூக மாற்றத்திற்குத் தடையான மூலச் சக்திகளென உருப்பெருக்கிக் காட்ட முடியும். இந்தியச் சமூகமே சாதியச் சமூகம் என்ற வரையறை இதற்குப் பெரிதும் பயன்படும். மாக்சியர்கூட இன்று இந்த வரையறைக்குள் சரிந்துள்ளனர். இதனால் மாக்சியம் தனக்குள் சுருங்கிப் போயுள்ளது. இதற்கு மாறாக சமதர்மம் பற்றிய பெரியாரின் உறுதியான கருத்துக்கள் என்ற ஆதாரத்தில் பெரியாரியத்தை மறுஉருவாக்கம் செய்வது நம் காலத்தின் கடமை. சமதர்மம்தான் முற்றான கோட்பாடு. இடையில் சாதி, மதம், பார்ப்பனீயம், அரசு, அதிகாரம், முதலாளியம் இவற்றோடு ஏகாதிபத்தியம் ஆகியவற்றையும் சேர்த்துச் சொல்ல வேண்டும்.

www.tamilarangam.net

**3.** பெரியாரின் கோட்பாடு அதாவது பெரியாரியம் என்பது சுயமரியாதை அல்லது தன்மானம்தான். இதுதான் பெரியாரின் தத்துவம். இதற்கு பெரியார் தந்த விளக்கங்கள் மிக விரிவானவை. ஒரு பெண்ணுக்கு எது சுயமரியாதை? தொழிலாளிக்கு எது சுயமரியாதை? திராவிடனுக்கு, தமிழனுக்கு எது சுயமரியாதை? இப்படியெல்லாம் நிறையக் கேள்விகள் எழுப்புகிறார். சாதி, மதம், இனம், மொழி, தேசம், தேசியம் என்று எதற்கும் மனிதன் அடிமைப்படக்கூடாது. மனிதனுக்குத் தன்மானம் வேண்டும். தேசபக்தி மூடத்தனம் என்றெல்லாம் பேசுகிறார். (பார்க்க மேற்கோள் நிறப்பிரிகை –6, பக்.39). சுயமரியாதையின் விரிவு உலக சகோதரத்துவம் என்கிறார். சகோதரத்துவம் என்பது இங்கு சமதர்மம்தான். பகுத்தறிவு என்பதை பெரியாரின் தத்துவம் எனச் சொல்வது பொருந்தாது. பகுத்தறிவு என்பது பகுத்தாய்தல் –ஒரு ஆய்வுமுறை மட்டுமே. காரணம், காரியம், எதார்த்தம், தோற்றம், மாயை, மனிதன், விலங்கு என்று இந்த ஆய்வு செயற்படும். சிலசமயம் மனிதனை விட விலங்கு மேலெனச் சொல்லும். கை, கால் என்ற உறுப்புக்கள்தான் உன்னை மனிதன் இல்லையெனச் சொல்லும். தாவும் தடுமாறும் இவ் ஆய்வுமுறை விடாப்பிடியாக நிறுவுவது சுயமரியாதை ஒன்றைத்தான். பகுத்தறிவு பெரியாரின் மெய்காண் முறை – அறிதல் கொள்கை – மட்டுமே. சுயமரியாதையாக இருக்க வேண்டும் என்றால் சமதர்மியாக இருக்க வேண்டும் என்பது பெரியாரின் அடிப்படையான கருத்து. அரசதிகாரம், முதலாளியம் என்கிற வரையறைக்குள் மாக்சியர் இயங்கிய தைப் போலத்தான் பெரியாரும் இயங்கினார். இந்த வரையறைகளை ஒப்புக்



கொள்பவன் தன்மானம்/சுயமரியாதை இருப்பவனாக எடுத்துக்கொள்ள முடியாது.

**4.** இன்றைய நிலையில் மையப்படுத்தப்பட வேண்டியவை : இன்று சந்தைப் பொருளாதாரம், தாராள மயமாக்கல், உலகச் சந்தையோடு இந்தியாவை இணைத்தல் இப்படியெல்லாம் செயல்படுவது முதலாளியம். இதற்கு ஒத்த முறையில் செயற்படுவது அரசதிகாரம். இவை இரண்டும் ஏகாதிபத்திய நலன்களை உள்ளடக்கிச் செயல்படுகின்றன. இதற்காகவே இராணுப் பெருக்கம், அரசதிகாரத்தை நவீனப்படுத்துதல், நவீன அறிவியல் தொழில்நுட்ப இறக்குமதி, பசுமைப் புரட்சி இப்படி இன்று செயற்பாடுகள் அதிகரிக்கின்றன. தேசிய இன விடுதலைக் குரல்கள் அழிக்கப்படுகின்றன. மைய அரசு வலிமையாக நவீனமாக இருக்க வேண்டும்; எதிர்ப்பியக்கங்களை ஒடுக்க வேண்டும்; மாநிலங்களை மொழிவாரி அடிப்படையில்லாமல் வேறு அடிப்படைகளில் பிரிக்க வேண்டும்; பஞ்சாயத்துவரை மைய அரசு தலையிட வேண்டும்... –முதலாளியம்தான் குறிக்கோள். இதன்மூலம் ஆதிக்கம் பெறுவது ஏகாதிபத்தியம். இந்திய ஒருமை, வலுவான மைய அரசு என்ற அடிப்படையில்தான் இந்துத்துவம் எழுந்திருக்கிறது. இது தமிழனின் தன்னுரிமையை, வரலாற்றை, மொழியை அழிக்கும். பகுத்தறிவு இயக்கத்தை அழிக்கும். இது இன்றைய சூழல்.

இந்துத்துவம் முஸ்லீம்களை ஒடுக்குவதற்கு மட்டுமல்ல முஸ்லீம்களில் தொடங்கி தொழிலாளர், உழவர், பிற்படுத்தப்பட்டவர், தாழ்த்தப்பட்டவர், பெண்கள்

www.tamilarangam.net

ஆகிய அனைவரையும் ஒடுக்கத்தான். அரசியலையும் பொருளியலையும் மறைக்க இங்கு மதவாதம் பேசப்படுகிறது. அரசாதிக்கத்தை முதலாளியத்தை நிறுவுவதற்கான கருத்தியல்களில் ஒன்று பார்ப்பனீயம். இதற்கு உயர்சாதிகள் ஒத்துழைக்கும். பிற்பட்டவர்களின் கோரிக்கைகளை அரசதிகாரம் உள்வாங்கிக் கொள்வதன்மூலம் அவர்களைத் தன் கட்டமைப்புக்குள் கொண்டுவரலாம். முதலாளியத்தை ஒழித்து மக்கள் நலன்களுக்கு ஒத்த முறையில் தொழிற்துறை, வேளாண்மையை உருவமைத்து இருக்க முடியுமானால் சாதி மதங்களின் ஆதிக்கம் குறைந்திருக்கும்.

இதற்கு மாறாக முதலாளியம் உச்ச அளவில் சுரண்டலை அதிகரித்துள்ள நிலையில், அரசதிகாரம் உச்ச அளவில் ஒடுக்குதலை திணித்திருக்கிற நிலையில், மக்களின் வேதனைகள் அதிகரிக்கின்றன. அறிவு தடுமாறுகிறது. ஆகவே கோவில்களையும் புதிய புதிய கடவுள்களையும், தலைவர்களையும் மக்கள் தேடிச் சென்று காலில் விழுந்து வழிபாடு செய்கின்றனர். நவீன முதலாளிய வளர்ச்சிக்கு நவீன தொழில்நுட்ப அறிவு தேவைப்படுகிறது. இவ் இடங்களில் பார்ப்பனர் இடம்பெறுகின்றனர். சுரண்டலும் ஒடுக்குமுறையும் தொடர்ந்து அதிகரித்துக் கொண்டிருக்கும் சூழலில்தான் பார்ப்பனீயம், சாதி, மதம் என்ற பிரச்சினைகளைப் பார்க்க வேண்டும். இவை மூன்றையும் முற்றான தனி நிலைகளெனப் பிரித்துப் பார்ப்பதன் மூலம் நம் சிந்தனையாளர்கள் மீண்டும் பார்ப்பனீயம் என்று சிலர் சொல்கின்ற இந்தச் சூழல் வட்டத்திற்குள்தான்



இயங்குகின்றனர். பெரியாரியத்தை இப்படிக் குறைகூறக்கூடாது. அரசின் அடக்குமுறைக்கு ஒத்து, சீர்திருத்த இயக்கமாகத் தன்னை மாற்றிக்கொண்ட பெரியாரியத்தை இப்பொழுதேனும் தனக்கு இட்டுக்கொண்ட முன்னைய தளைகளிலிருந்து விடுவிக்க வேண்டும். பெரியாரின் புகழ்பாடி, பெரியாரை சாதி எதிர்ப்பு, மத எதிர்ப்பு, பார்ப்பன எதிர்ப்பு ஆகியவற்றுக்குள் முடக்குவதன் மூலம் பெரியாரின் ஆற்றலை இன்றைய சூழலை மாற்றுவதற்கேற்ற முறையில் பயன்படுத்த முடியாது.

❑

***உஞ்சை ராசன் :***

**1, 2.** பெரியார் என்றவுடன் நிழலாடும் கருத்துக்கள், செயலாக்கங்கள் ஆகியவற்றில் குறிப்பாக சிலவற்றைக் கூறவேண்டுமானால் பகுத்தறிவிலிருந்து வெளிப்பட்ட தீண்டாமை எதிர்ப்பு, சாதி எதிர்ப்பு, பார்ப்பன பார்ப்பனீய எதிர்ப்பு, இந்துமத/கடவுள் மறுப்பு, பெண்ணுரிமை, மொழி, தேசிய இனம் குறித்தவைகளைக் கூறலாம். இவைகளிலும் அவர் பிரதானமாய் மேற்கொண்ட செயல் தீண்டாமை ஒழிப்புமேயாகும் என்பதே ராசன் குறை தொகுப்பிலிருந்து (நிறப்பிரிகை-6) நமக்குக் கிடைக்கும் செய்தி. இத்தகைய ஒடுக்குமுறைகளுக்கு தீர்வு காணப் புகும்போதுதான் இத்தகைய ஒடுக்குமுறையை வலியத் திணித்து நிலைப்படுத்திய பார்ப்பனீயக் கருத்தியலையும் இது தனக்கு ஆதரவாக வரித்துக் கொண்ட இந்து மதத்தையும் இவ் இரண்டின் மூலம் சுரண்டும் பார்ப்பனர்களையும்

www.tamilarangam.net

துணைபோகும் பிற சாதியினரையும் எதிர்க்கிறார். தந்திரமும் சூழ்ச்சியும் மிக்க பார்ப்பனர்கள் கடவுள் பக்தியின் மூலம் தங்களை நிலைநிறுத்திக் கொண்டதனால் கடவுள் நம்பிக்கையை மறுதலிக்கிறார் பெரியார். பெரியாரிடம் பொதுவாக வெளிப்பட்ட இந்து மத, பார்ப்பனீய, கடவுள் எதிர்ப்பு ஆகியவற்றை மட்டுமே தமிழ் மக்களுக்குக் காட்டிய அவரது வாரிசுகள் எதை அழிப்பதற்காக இவற்றை முன்வைத்தாரோ அந்த தீண்டாமை, சாதி ஒழிப்பு, பெண் அடிமை எதிர்ப்பு ஆகியவற்றைப் பின்னுக்குத் தள்ளினர். இப் போக்குகள் பெரியாரிடமே தோன்றிவிட்டன. இதனால்தான் அம்பேத்கர், பூலே போன்றோர் ஏற்படுத்திய நம்பிக்கையைவிட பெரியாரால் ஏற்படுத்த முடியவில்லை. தீண்டாமை, சாதி, பெண்ணடிமை எதிர்ப்பை அவரே சொன்னதுபோல அரை நிமிடம்கூட தாமதியாமல் செயல்படுத்தினால் பெரியாரியம் இன்றைய சமூகப் பிரச்சினைகளுக்கு தீர்வாய் முடியும்.

**3, 4.** அவரது இயக்கத்திற்கு ஏற்பட்டிருப்பது தோல்விதான் என அறுதியிடும்போது அது பார்ப்பனீயத்தின் வெற்றி என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். மக்களை நேரடியாகப் பாதிக்கும் அடக்குமுறைகளை எதிர்கொள்ளாமல் (எடு. : தீண்டாமை, சாதி, பெண்ணடிமை எதிர்ப்பு) அருவமாய் அமைந்த கடவுள் எதிர்ப்பு, புராண எதிர்ப்பு போன்றவற்றிற்கு முன்னுரிமை கொடுத்ததால் மக்கள் தங்கள் பிரச்சினைகளுக்கு தொடர்பில்லாததாய் இதனை அணுகி வெறும் பார்வையாளர்களாக மாறினர். பெரியார் கலாச்சாரத் தளத்தில்



பணியாற்றினார். இது அரசியல் வடிவம் பெறும்போது அதில் அவர் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளாததால் அரசியலுக்கு மாறியவர்கள் தாங்கள் புரிந்துகொண்ட வகையில் அல்லது தங்களது நலனுக்கேற்ற வகையில் பெரியாரைப் பயன்படுத்திக் கொண்டனர். அரசியலதிகாரம் மூலமே அனைத்து விடயங்களிலும் தலையிடலாம் என்பதை பெரியார் புரிந்து கொள்ளவில்லையா, இல்லை புரிந்தும் விட்டுவிட்டாரா என்கிற சந்தேகம் எழுகிறது.

**5,6** தமிழ் அறிவு ஜீவிகளில் பெரும்பான்மையோர் பார்ப்பனர்களாக, மேல்சாதியினராக இருந்தனர். நாலாம் சாதியினரான பெரியாரது கொள்கைகளை இவர்கள் உயர்த்திப் பிடிக்காததிற்குக் காரணமே சாதிதான். இந்தியக் கட்டமைப்பின் உயர்ந்த பண்புகளாய் இவர்கள் கருதிய தீண்டாமை, சாதி, பெண்ணடிமை, கடவுள் ஆகியவற்றிற்கு எதிராக இருக்கும்போது இதனைச் செய்வாகளா? இன்று பார்ப்பனீயமும் இந்து மதமும் பெரும்பான்மையை விழுங்கும் சிறுபான்மைத் தந்திரத்துடன் செயல்படுகின்றனர். இதனால் அடிநிலையிலுள்ள தலித் மக்களும் பிற்படுத்தப்பட்ட மக்களும் எஞ்சிய வாழ்க்கையையும் பறிகொடுக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இந்தப் பின்னணியில் அம்பேத்கர் சிந்தனை முக்கியமாகிறது. இதனைப் பெரியார் சிந்தனையுடன் இணைப்பது மிக அவசியமானது. இந்தச் சிந்தனை இணைப்பு என்பது புறநிலையில் தலித்களும் பிற்படுத்தப்பட்டவர்களும் ஒன்றிணைவதற்கு இட்டுச் செல்லும். இது ‘மண்ணின் மைந்தர்களின்’ ஆட்சி அமைய வழிவகுக்கும்.

www.tamilarangam.net

அப்படிப்பட்ட ஆட்சியதிகாரத்தால் மட்டுமே அம்பேத்கரும் பெரியாரும் காண விரும்பிய தீண்டாமையற்ற, சாதியற்ற, சுரண்டலற்ற சமூகம் அமையும்.

எனவே இன்றைய சூழலில் பார்ப்பனீய எதிர்ப்பை மையப்படுத்திச் செயல்பட வேண்டும். தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட மக்களிடையேயுள்ள ஒற்றுமையைச் சாதகமாக்கும் அதேவேளை முரண்பாட்டையும் களைய வேண்டும். முரண்பாடு தீண்டாமை வடிவத்தில் இருக்கிறது. தீண்டாமையை விட்டொழிப்பதானது பார்ப்பனர்களை வீழ்த்துவதாக மாறும். இம் மாற்றமே நாம் அடையப்போகும் அரசியல் சமூக பொருளாதார மாற்றமாக அமையும். அமையப்போகும் பொன்னுலகிற்கு தீண்டாமையை மட்டுமே பலியாக்குவோம். ❑

**கு.தருமலிங்கம்** (ம.க.இ, புதுக்கோட்டை) :

பெரியார் தீண்டாமையை எதிர்த்தார் என இங்கே சிலர் சொன்னார்கள். வைக்கம் போராட்டம் உதாரணமாகச் சொல்லப்படுகிறது. ஆனால் அது தன்னெழுச்சியாக நடைபெற்ற ஒன்று. ஏனெனில் தொடர்ந்து சாதிக் கொடுமைக்கு எதிராக பெரியார் எதையும் செய்யவில்லை. காரணம் என்ன? இந்துமத ஆதிக்க நிலப்பிரபுக்களும் முதலாளிகளும் அவரை தம்வயம் இழுத்துக் கொண்டார்களா? புத்த மதத்திற்கு ஆன கதி பெரியாருக்கும் ஏற்பட்டதா? எடைக்கு எடை தங்கம் கொடுத்து அவரை இழுத்துவிட்டார்களா? கீழ்வெண்மணிக் கொடுமை பற்றி அவர் ஏதும் அறிக்கை விட்டாரா?



இங்கே தீண்டாமை கொஞ்சம் ஒழிந்திருக்கிறது என்றால் பொருளாதார மாற்றங்கள் குறிப்பாக சிறு முதலாளித்துவம் வளர்ந்திருப்பதுதான் அதற்குக் காரணம். 'தாழ்த்தப்பட்டவர் சைக்கிளில் போகக்கூடாது' என ஊர்க் கட்டுப்பாடு. ஆனால் தாழ்த்தப்பட்டவரை சைக்கிளில் போக அழைக்கிறார் சைக்கிள் கடை வைத்திருக்கும் உயர்சாதி சிறு முதலாளி. பஸ் முதலிய நவீன மாற்றங்களும் தீண்டாமை ஒழிப்பிற்குக் காரணமாகியுள்ளன. பிரபல தி.க தலைவர் திருவாரூர் தங்கராசு வீட்டில் பள்ளு பறையர்கள் கையைக் கட்டிக் கொண்டு வெளியே நின்றிருந்ததை 1950 களில் நானே நேரில் பார்த்திருக்கிறேன். பிராமணர்களோடு சூத்திரர்களுக்கு சமத்துவம் வேண்டுமென்றுதான் திராவிட இயக்கம் போராடியது. பஞ்சமர்களுக்காக பெரியார் இயங்கியதில்லை. கடவுள் மறுப்பு என்கிற விசயத்தில்கூட பிள்ளையார் சிலையைச் செய்துதான் உடைக்கச் சொன்னாரே யொழிய கோயில்களிலுள்ள சிலைகளை உடைக்கச் சொல்லவில்லை. ஏழைகள் இருக்கும் வரை சாமியை ஒழித்துவிட முடியாது. எனவே நாத்திகப் பிரச்சாரத்தில் பெரியாருக்குத் தோல்விதான். அரசியலதிகாரப் பிரச்சினையிலும் பெரியாருக்குக் குழப்பம்தான். ஆனால் அம்பேத்கர் அரசியலதிகாரத்தைக் கைப்பற்ற வேண்டும் என்பதில் தெளிவாக இருந்தார். ❑

www.tamilarangam.net

*எம்.எஸ்.ராமசாமி :*

பெரியார் தீண்டாமை ஒழிப்பிற்கு நிறையச் செய்திருக்கிறார். வைக்கம் போராட்டம் அதற்காகத்தான். கலப்புத் திருமணம், மறுமணம், சீர்திருத்தத் திருமணம் செய்யவேண்டுமென்றார். இதெல்லாம் சாதி ஒழியத்தானே! *"மக்களில் ஒரு பிரிவினர் தீண்டக்கூடாது, பார்க்கக்கூடாது, தெருவில் நடக்கக்கூடாது என்கிற கொள்கையோடு இருக்கும் ஒரு மதத்தை இன்னும் உலகத்தில் வைத்துக் கொண்டிருப்பதானது அந்த மத மக்களுக்கு மாத்திரமல்லாமல் உலக மக்களுக்கே அவமானம் என்றுதான் சொல்வேன். அதோடு அந்த மதத்தை ஏற்படுத்தியதாகச் சொல்லப்படும் தெய்வத்திற்கும் தெய்வீகத்திற்கும் மிக மிக இழிவு."* என்றும் சொன்னார். இதைவிட என்ன சொல்லணும்? 'குலத்ருமக் கல்வி' என்று ராஜாஜி சொன்னார். 'எடடா கத்தியை' என்றார் பெரியார். இதைவிட என்ன சொல்லணும்? ராஜாஜி ராஜினாமாச் செய்துவிட்டுப் போனார்.

"மக்களுடைய அறிவையும் திறமையையும் தைரியத்தையும் வளர்க்கக்கூடிய சிறந்த கதைகளையெல்லாம் தமிழில் எழுதி பரவச் செய்வதன் மூலம் மக்களுடைய அறிவையும் தமிழ் மொழியையும் செம்மை செய்வதே தமிழ் வளர்ச்சி" என்று சொன்னார். யார் வளர்த்தோம்? ஏழைகளுக்கும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் யார் பின்னால் போனால் நன்மை கிடைக்குமோ அவர்கள் பின்னால் போனார். ஜஸ்டிக் கட்சிக்கு அப்படித்தான் போனார். இந்த அடிப்படையில் சங்கராச்சாரியைக்கூடப் போய்ப் பார்த்து ஓட்டுப் போடச் சொன்னார்..



தனக்குப் பிறகு இயக்கத்தையும் சொத்துக்களையும் காப்பாற்ற வேண்டுமென்று ராஜாஜியிடம் யோசனை கேட்டார். அவர் யோசனைப்படி மணியம்மையைப் பதிவுசெய்துகொண்டார். விண்ணப்ப மனுவில் ஒரு விபரத்தைப் பூர்த்திசெய்ய மறுத்துவிட்டார். படிவம் 'விடுதலை' அலுவலகத்துக்குத் திருப்பி அனுப்பப் படடது. அரசு என்பவர் கடிதத்தைப் பிரித்துப் படித்துவிட்டு அண்ணாத்துரையிடம் சொன்னார். அண்ணா கட்சியை உடைத்தார். பெரியாரின் சக்தியெல்லாம் போனது. ஆட்சிக்குப்போவது அவசியம் என அண்ணா சொல்கிறாரே என நான் பெரியாரிடம் கேட்டேன். ஆட்சிக்குப் போனால் பிறகு ஆட்சியில் இருப்பதே நோக்கமாய்ப் போய்விடும் என்று சொன்னார். எம்.ஜி.ஆர் விசயம் அப்படித்தான் ஆனது. அண்ணா சட்டசபையில் நீடித்திருந்தால் எல்லாம் செய்திருப்பார். சுயமரியாதைத் திருமணத்தைச் சட்டமாக்கினார். 'சத்யமேவ ஜயதே' யை 'வாய்மையே வெல்லும்' என ஆக்கினார். 'தமிழ்நாடு' என மாற்றினார். 5 ஆண்டுக்குள் தமிழ்வழிக் கல்வி என்றார். அதற்குள் செத்துப்போனார். பின்வந்தவர்கள் செய்யவில்லை. 'தமிழ்நாடு தமிழருக்கே' என்றார் பெரியார். 'இந்தி ஒழிக' என்றார். 'படித்தவன் படிக்காதவனைச் சுரண்டிச் சாப்பிடுகிறான்' என்று சொன்னார். ❑

*அ.மார்க்ஸ் :*

தமிழே வேண்டாம், ஆங்கிலம்தான் ஆட்சிமொழி, வீட்டுமொழி கல்வி மொழியாக இருக்க வேண்டும் என்றெல்லாம் பெரியார் சொல்லியிருக்கிறாரே?

www.tamilarangam.net

*எம்.எஸ்.ராமசாமி :*

அதெல்லாமில்லே. அப்படியெல்லாம் சொல்லலே. "மொழி உணர்ச்சி இருக்க வேண்டும். சமுதாய உணர்ச்சி இருக்க வேண்டுமானாலும் மொழி உணர்ச்சி வேண்டும். மொழி உணர்ச்சி இல்லாதவர்களுக்கு நாட்டு உணர்ச்சியோ நாட்டு நினைவோ எப்படி வரும்?" என்றுதான் பெரியார் சொல்லியிருக்கிறார். கிராமப் புறங்களில் கல்வி நிலைமை மோசம். அஞ்சு வகுப்புக்கு ஒரு வாத்தியார்தான் இருக்கிறான். இதைப் பற்றியெல்லாம் யார் பேசுகிறார்கள்? பெரியார் பற்றிப் பேசும் நீங்கள் யாராவது கடவுள் ஒழிப்புப் பிரச்சாரம் செய்திருக்கிறீர்களா? தங்கள் பெயர் வருவதற்கு ஒரு பத்திரிகை வேண்டும் என ஆளுக்கொரு பத்திரிகை நடத்துகிறீர்கள். பெரியார் கொள்கை பரப்ப யாரும் எதுவும் செய்வதில்லை. ❑

*தி.சு.நடராசன் :*

தருமலிங்கத்தின் கருத்தோடு நான் உடன்படுகிறேன். கடந்த 5 ஆண்டுகளான பார்ப்பன எதிர்ப்பு ideology (கருத்தியல்) வளர்ந்துகொண்டிருக்கிறது. இது ஒரு நல்ல விசயம்தான். ஆனால் அந்த ideology பெரியார் பக்கமோ அல்லது வேறு இப்படி தவறான திசையில் போய்விடக்கூடாது. பெரியார் தலித்களுக்காகப் பாடுபடவில்லை என்பதுதான் உண்மை. கீழ்வெண்மணியில் 44 பேர் கொல்லப்பட்டபோது பெரியார் உயிரோடுதான் இருந்தார். ஆனால் ஒன்றும்



அறிக்கை விட்டதாகத் தெரியவில்லை. இம்மானுவேல் கொலை செய்யப்பட்ட போதும் அவர் என்ன கருத்துக் கொண்டிருக்கிறார் என்பது தெரியவில்லை. இன்றைக்கு பிராமண எதிர்ப்பு என்பது தலித் விடுதலையோடு இணைந்துதான் இருக்க முடியும். பொத்தாம் பொதுவாக பிராமண எதிர்ப்பு என்று பொரியார் மாதிரி இன்று பேச முடியாது. இருபது வருடங்களுக்கு முன் வேண்டுமானால் அது சரியாக இருந்திருக்கலாம். இன்றைக்கு பெரியாரின் அணுகுமுறை குறிப்பாகத் தாழ்த்தப்பட்டவர் பக்கம் நின்று செய்வது என்கிற விசயத்தில் நிச்சயமாய் இன்று relevant ஆக -பொருத்தமாக- இருக்க முடியாது. பெரியாருடைய symbol ஐத் தேடிப் போகிற மாதிரி இருக்கிறது. ஆனால் வெறும் symbol (குறி) மாத்திரம் இன்று பயனில்லை. symbol ஐத் தாண்டிப் போகணும். ஒண்ணும் கையில் அகப்படாதவனுக்கு ஏதோ ஒன்று கிடைத்தது போல பெரியார் கிடைத்துவிட்டதாய்ப் பார்க்க முடியாது; பார்க்கக்கூடாது. ❑

***நடராஜன்*** *(இலக்கிய வெளிவட்டம்) :*

பெரியாரியம் இன்றைய சமூகத்துக்கு எந்தளவு கணிசமான பங்கை ஆக்கப் பாதையில் வகிக்கிறது என்கிற நோக்கத்தில்தான் இன்று இந்த விவாதம் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அந்த வகையில் திரு.தருமலிங்கம் ஒரு நியாயமான கேள்வியை எழுப்பினார். அதற்கு பெரியவர் எம்.எஸ்.ஆர் சொன்ன பதில் அவ்வளவு சரியாகப் படவில்லை. இன்றைய சமூகப் பிரச்சினைகள்

www.tamilarangam.net

எல்லாவற்றிற்கும் பெரியாரியம் என்பது தீர்வாக முடியுமா? சாதி ஒழிப்பு அல்லது மூடத்தன எதிர்ப்பு என்பது எல்லாம் முதலாளித்துவச் சிந்தனையாளர்களே பல்வேறு காலகட்டங்களில் முன்வைத்த ஒன்றுதான். பிரெஞ்சுப் புரட்சியில் இதைவிட முற்போக்கான கருத்துக்களெல்லாம் பேசப்பட்டன. ஆனால் நடைமுறையில் என்ன நடந்தது? சுதந்திரம், சமத்துவம் போன்ற கருத்துக்களை யெல்லாம் வைத்து அரசியலதிகாரத்தைக் கைப்பற்றி யார் யாரை அடிமைப்படுத்தினார்கள் என்பதெல்லாம் வரலாற்றில் உங்களுக்குத் தெரியும்.

சாதி ஒழிப்பு, தீண்டாமை ஒழிப்பு என்பதெல்லாம் சிறந்த கருத்துக்களாக இருந்தாலும் அதைப் பெரியார் பேசினார் என்பதாலேயே பெரியார் பெரிய பங்களிப்புச் செய்துவிட்டார் எனச் சொல்லமுடியாது. நம்மைப் பாதிக்கக்கூடிய எத்தனையோ பொருளாதாரப் பிரச்சினைகள் உள்ளன. அரசியல் பொருளாதார ஆதிக்க சக்திகள் தமக்குக் கீழேயுள்ள ஒடுக்கப்பட்டவர்களை எத்தனையோ கொடுமைகட்கு உள்ளாக்கி வருகின்றன. அதற்கெல்லாம் பெரியாரியம் என்ன தீர்வை முன்வைக்கிறது? இந்தவகையில்தான் பெரியாரியம், சாதி தீண்டாமை ஒழிப்பு என்பது மட்டும் சமூகப் பிரச்சினைகள் எல்லாவற்றிற்கும் தீர்வாகிவிட முடியாது என்கிறேன். பெரியாரோடு எல்லாம் முடிந்துவிட்டது என்பதுபோல எம்.எஸ்.ஆர் சொன்னார். பெரியார் என்ன சொன்னாரோ அவற்றை அவருக்குப் பின்னுள்ள அவரது இயக்கத்தவர்கள் மற்றும் அவர் பெயரால் நடைபெறும் பல்வேறு இயக்கப் போக்குகள் கடைப்பிடிக்கவில்லை என்பதும் தெரிகிறது.



***சுந்தர்*** (மதுரை) :

பெரியாரியம் குறித்த நிறப்பிரிகை கட்டுரைகளை இங்கே வந்திருக்கிற பலரும் படிக்காததாலேயே விவாதம் ஒரே தளத்தில் சுழன்றுகொண்டிருக்கிறது. ராஜன் குறை கட்டுரை பெரியாரது சிந்தனைகளில் இதுவரை அடையாளம் காணாத சிலவற்றை முன்னிலைப்படுத்தியுள்ளதைப் பார்க்கலாம். ஞானி, கிராமியன், ராஜன் குறை ஆகியோரது பேச்சுக்களைக் கூர்ந்து கவனித்தால் இரண்டு மூன்று விசயங்கள் புதிதாய் முன்னிலைப்படுத்தப் பட்டிருப்பதைக் காணலாம். ஒன்று சொல்லாடல் களம், வெகுஜனச் சொல்லாடல், கிராம்சியின் War of Positions போன்ற கருத்தாக்கங்கள் அதிகம் பயன்படுத்தப்பட்டுள்ளன. இதுவரை இவைகளெல்லாம் பெரியார் ஆய்வில் பயன்படுத்தப் பட்டதில்லை.

ஏதோ நவீனமான விசயங்களை பெரியாரில் இயந்திர கதியில் பொருத்திப் பார்க்கிறோமா, இல்லை பெரியாரில் இதற்கெல்லாம் இடமிருக்கிறதா என்று யோசித்துப் பார்த்தால் இருக்கிறது என்றுதான் தோன்றுகிறது. அதில் ஒரு விசயத்தில் மட்டும் கவனத்தைக் குவித்து நான் முடித்துக் கொள்ளலாம் என்று பார்க்கிறேன். முக்கியமாக சாதியும் பாலினமும் சந்திக்கும் இடம் இங்கே முதன்முதலில் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. கிராமியன் கட்டுரை இதில் அதிக கவனத்தைச் செலுத்தியிருக்கிறது. சாதிய அதிகாரம் என்பது எவ்வாறு உற்பத்தியாகிறது? ஒரு கூட்டத்தை நாம் சாதிய அதிகாரத்தின்

www.tamilarangam.net

உருவமாகப் பார்க்கிறோம். இவர்கள் பார்ப்பனர்கள். இவர்கள் நிலவுடைமைப் பிற்பட்ட சாதிகள் -இப்படி. அல்லது சாதீய அதிகாரத்தை ஒரு கருத்தியலாகப் பார்க்கிறோம். ஆனால் சாதீய அதிகாரம் என்பது ஒரு கூட்டத்திலோ அல்லது ஒரு கருத்திலோ நிரந்தரமாக நிலைபெற்றுவிட்ட விசயமல்ல. அது கணந்தோறும் தொடர்ந்து நமது பேச்சுக்களில், செயல்களில் வெவ்வேறு நிலைகளில் வெவ்வேறு இடங்களில் உற்பத்தியாகிக் கொண்டிருக்கிறது. நம்மை மாதிரியானவர்கள் உள்ளடங்கிய அரங்குகளிலும்கூட இது உற்பத்தியாகிறது. சாதியும் பாலினமும் சந்திக்கும் புள்ளியில் தான் இந்த உற்பத்தியை நாம் தேட வேண்டும்.

இந்த வகையில் பெரியார் குடும்பத்தை ஒரு Problematic (பிரச்சினைப்பாடு) ஆக எடுத்துக் கொள்வது முக்கியமானது. வம்சத் தொடர்ச்சி, வம்சாவளி என்கிற கருத்தை அவர் மறுக்கிறார். பெண்கள் கருத்தடை, கருமறுப்பு தொடர்பாக ரொம்ப காலத்துக்கு முன்பாகவே 'பெண் ஏன் அடிமையானாள்' இல் முன்வைத்துள்ள கருத்துக்கள் முக்கியமானவை. எதையெல்லாம் Granted (இயற்கையானது) என மாக்சிய மற்றும் திராவிட இயக்கங்களிலுள்ள முற்போக்காளர்கள் பேச்சுக்கிடமில்லை எனக் கருதி வருகிறார்களோ அதையெல்லாம் பெரியார் Problematic ஆக்கியிருக்கிறார். வம்சத்தினுடைய தொடர்ச்சி என்பதெல்லாம் இயற்கை சார்ந்த விசயமல்ல, சமூகத்தால் உருவாக்கப்பட்டவை, இவற்றில் நாம் குறுக்கிட முடியும் என்கிறார். அறுபது எழுபதுகளில் மேனாடுகளில் பெண் விடுதலை இயக்கங்கள் முன்வைத்த மாதிரியான முற்போக்கான சிந்தனைகளை அவர் முன்வைக்கிறார்.



மனித இருப்பே செயற்கையானது என்கிறபோது இந்தமாதிரி விசயங்களை கடவுளின் செயல் என்பதாகவோ, இயற்கையின் விளைவு என்பதாகவோ கருதாமல் இவைகளில் மனித சமூகம் குறுக்கிட முடியும் என்கிறார். வம்சாவளி என்பது சாதீய அதிகாரத்தை உற்பத்தி செய்கிற விசயத்தைத்தான் 'தேவர் மகனும்' சொல்கிறது. கலப்புத் திருமணம், கருத்தரிப்பில் குறுக்கிடுதல் ஆகியவற்றின் மூலமாக சாதியும் பாலியலும் சந்திக்கும் புள்ளியில் தாக்குதல் தொடுப்பது என்பதை பெரியார் சுட்டிக் காட்டியுள்ளார். கல்பனா கண்ணபிரான் போன்றவர்கள் எழுதிய 'Caste and Gender' பற்றிய கட்டுரை தவிர வேறு யாரும் இந்த நோக்கில் பேசியதில்லை என்றே நினைக்கிறேன்.

இந்த இரண்டும் சந்திக்கும் புள்ளியில் அடிப்பதன் மூலமாக இந்த இரண்டும் சார்ந்த அதிகாரங்களையும் ஒரே சமயத்தில் காலி பண்ணுவது பற்றிய சிந்தனையை ராஜன் குறை, கிராமியன் கட்டுரைகள் முன்வைக்கின்றன. *(மானிட வாழ்க்கைக்கு அர்த்தமில்லை, இலட்சியமில்லை என்கிற கருத்தைக் கூறும் பெரியாரின் மேற்கோள்களை -நிறப்பிரிகை 6, பக்கம் 46 இலிருந்து- வாசித்துக் காட்டுகிறார்).* பெரியாரது சிந்தனைகளுக்குப் பின்னணியாக எத்தகைய மேற்கத்தைய தத்துவப் பார்வைகள் இருந்தனவென தெரியவில்லை. ஆனால் மேற்கத்தைய 'பாசிட்டிவிச' சிந்தனையின் தாக்கம் என்று சொல்லக்கூடிய அவரது மூடநம்பிக்கை எதிர்ப்பு என்கிற கூறை மட்டும் மாக்சியர்களும் திராவிட இயக்கத்தினரும் எடுத்துக் கொள்வதென்பது அவர்களின் பலவீனத்தையே காட்டுகிறது. ❑

www.tamilarangam.net

***ஞானி :***

இனவிருத்தியை மறுப்பதனால் ஆணாதிக்கத்திலிருந்து விடுபட முடியும். அதனால் உடனடியாக சாதி ஆதிக்கத்திலிருந்து விடுபட முடியும் என்றா நீங்கள் சொல்கிறீர்கள் ?

❑

***சுந்தர் :***

அப்படி ஒன்றும் Package ஆக ஒரு தீர்வை வழங்குவதல்ல நான் சொல்வது. ஆனால் இந்த விசயத்தைப் புரிந்து கொண்டோமானால் நம் காலத்திற்கேற்றாற்போல் வேறு சில தீர்வுகளையும்கூட யோசிக்க முடியும். ஆணாதிக்கத்திற்கும் சாதி அதிகாரத்திற்குமிடையில் ஒரு ஒருமை இருக்கிறது என்பதுதான். உதாரணமாக கல்பனாவின் கட்டுரையில் மேல்சாதிக்கும் கீழ்சாதிக்கும் உள்ள உறவு ஆணுக்கும் பெண்ணுக்கும் உள்ள உறவை பல வகைகளில் ஒத்திருக்கிறது என்பது சுட்டிக் காட்டப்படுகிறது. தங்கள் பெண்களைக் காப்பாற்றிக் கொள்ள முடியாத கீழ்சாதியினரை 'பெட்டைச்சாதி' என்கிறான். அந்த சாதியே ஆண்மையில்லாத சாதி. ஆக ஆண்மை/பெண்மை என்பதும் சாதி ஆதிக்கம் என்பதும் வெவ்வேறு உலகமல்ல. இரண்டு அதிகாரங்களும் குடும்பம் என்கிற ஒரே புள்ளியில் உற்பத்தியாகிறது. பெரியார்தான் இதைச் சுட்டிக் காட்டியவர்.

❑



***அ.மார்க்ஸ் :***

இந்தப் புரிதலின் அடிப்படையில் பெரியாரின் செயற்பாடுகள் எந்தவகையில் தனித்துவம் மிக்கதாக இருந்தன என ஏதாவது சொல்ல முடியுமா சுந்தர் ?

❑

***சுந்தர் :***

இல்லை. அதுபற்றி நான் ஒன்றும் உடனடியாகச் சொல்வதற்கில்லை.

❑

***ஞானி :***

சொந்த வாழ்க்கையில் குடும்பப் பற்று அதிகம் இல்லாமலிருந்திருக்கிறார். பிறந்த குழந்தையைக்கூட சென்று பார்க்கவில்லை. பெண் விடுதலை விசயத்தில் தன்னைப் பற்றிச் சுயவிமர்சனமாய்ச் சொல்லியிருக்கிறார்.

❑

***டி.என். கோபாலன்*** *(தலித் தோழமை மையம்)* :

பெரியார் பல விசயங்களைச் சொல்லியிருக்கலாம்; எழுதியிருக்கலாம். ஒரு தத்துவவாதி சொல்வதை செயல்படுத்த வேண்டும் என எதிர்பார்க்க முடியாது. மார்க்ஸ் தத்துவம்-நடைமுறை பற்றிச் சொன்ன விசயங்களுக்குள் நான் போகலை. அ.மார்க்ஸ் சுந்தரை ஒரு கேள்வி கேட்டார். தான் சொன்னவற்றை அவர் நடைமுறைப்படுத்தினார் என்று சொல்லமுடியுமா? இந்தக் கேள்விக்கு நாம் யாருமே பதில் சொல்ல முடியாது. ஒரு சிந்தனையாளராக

www.tamilarangam.net

அவர் சொன்னது இருக்கட்டும். ஒரு சமுதாய செயல் வீரராக அதனைச் செயல்படுத்த அவர் என்ன செய்தார்? அவர் பங்களிப்பு என்ன? நான் அறிந்தவரை பெரியார் முன்னிலைப்படுத்தியது பார்ப்பன எதிர்ப்புதான், சாதி ஒழிப்பு கூட அப்புறம்தான். பிராமண அதிகாரத்தை வேரோடு அறுத்ததில் அவருக்கு ஒரு பங்களிப்பு இருக்கிறது. மற்றபடி தலித்கள் பெரியார் இயக்கத்திலிருந்து விலகியே இருந்தனர். தி.மு.க. ஆட்சியில்தான் தமிழ்நாட்டில் பிற்படுத்தப்பட்டவர்கள் வலிமையான நிலைகளை அடைந்திருக்கின்றனர். தலித்களின் ஓட்டுகள் எம்.ஜி.ஆருக்குப் பிறகுதான் திராவிட இயக்கத்திற்கு வந்திருக்கிறது. ஏன் தி.க, தி.மு.கவுக்கு போகவில்லை? கடவுளை நம்புபவன் காட்டுமிராண்டி என்றெல்லாம் சொன்னாரில்லையா? சொன்னதற்கு மேல் கடவுள் மறுப்புக்காக என்ன செய்தார்கள்? அவருக்கு பின்னால் வந்தவர்கள் என்ன செய்தார்கள்? திராவிட இயக்கத்திலேயே கடவுள் நம்பிக்கை அதிகமானது. திராவிட இயக்க ஆட்சியில் தலித்கள் மீது பிற்படுத்தப்பட்டோர் தாக்குதல்கள் நடந்தபோது அவர் என்ன நிலைபாடு மேற்கொண்டார்? நிறப்பிரிகை-6இல் 38ம் பக்கத்திலுள்ள பெரியார் மேற்கோளைப் பாருங்கள். பார்ப்பன உயர்சாதி ஆதிக்கத்தை ஒழித்தாலே பொதுவுடைமை ஏற்பட்டுவிடும் என்கிறார். பெரியார் எங்கு விட்டாரோ அங்கிருந்து நாம் தொடங்க வேண்டும். பெரியாரிடமே இதற்கான கூறுகள் உள்ளன. ஆனால் அதற்கு பெரியாரை அணுகும்போது எந்த Illusion இல்லாமல் அணுக வேண்டும். பெரியாரைச் சுற்றி Myth (புனைவு) களை உருவாக்கி விடக்கூடாது. அப்படிச் செய்தால் நமக்கு Credibility போய்விடும். ❑

**......... டி.என்.கோபாலன்**



***ராஜன் குறை :***

பெரியார் என்ன செய்தார்? அவரது அரசியல் என்ன? என்றுதானே கேட்டீர்கள். கடுமையான நேரடிப் பிரச்சாரம் என்பதுதான் அவரது அரசியல். அதை அவர் மிகக் கடுமையாக தொடர்ந்து அறுபது எழுபது ஆண்டுகள் மிக விரிவாக தமிழ்நாடு முழுவதும் சுற்றுப்பயணம் செய்து மேற்கொண்டார். எழுதுகிறது யார் வேண்டுமானாலும் எழுதலாம். சிறு பத்திரிகைக்காரர்களெல்லாம் எந்தெந்த மூலையிலோ உட்கார்ந்து என்னென்னவோ எழுதுறாங்க. பெரியார் செய்தது அப்படியல்ல. அவருக்கு திட்டவட்டமான அரசியல் நடைமுறை இருந்தது. அது மக்களிடம் நேரடியாகச் சென்று அவர்களது மரபுவழிப்பட்ட நம்பிக்கைகள் மீது, கருத்தியல் மீது தாக்குதல் தொடுப்பது; மாற்றியமைப்பது. அந்த நடைமுறையைப் பற்றித்தான் நாம் இன்று விவாதிக்க வேண்டியிருக்கிறது. ❑

***சுந்தர் :***

கோபாலன்! முடிக்கும்போது நம்ம Credibility நம்பகத்தன்மை போயிடும் என்கிறீர்களே. அதில் 'நம்ம' என்பது யார்? 'நம்பகத்தன்மை' ன்னா என்னா? நகர்ப்புறத்திலே வெவ்வேற ஆட்களா இருக்கிறோம். நமக்குன்னு பொதுவா எதுவும் Credibility இருக்கான்னல்லாம் தெரியல. ❑

***கோபாலன் :***

'நம்ம' ன்னா இதைப்பற்றிப் பேசுபவர்கள்.

www.tamilarangam.net

தமிழ்நாட்டு தலித் தலைவர்கள்தான் அதிகம். ஒப்பந்தம் முடிந்த மறுமாதமே 'அரிஜன்' இதழை ஆரம்பிக்கிறார் காந்தி. 'மகாத்மா', 'அரிஜன்' என்கிற இரு மதம்சார்ந்த கருத்தாக்கங்கள் தமிழ்நாட்டு தலித் மக்களை ரொம்ப மயக்குகிறது. பூனா ஒப்பந்தம் இல்லாவிட்டால் தமிழ்நாட்டு தலித் மக்களின் எழுச்சி இன்னும் ஒரு இருபது முப்பது ஆண்டுகளுக்கு முன்பாக இருந்திருக்கும். இதை counter பண்ணுகிற அளவுக்கு பெரியாரிடம் அன்று நிறுவன பலம் இல்லை. ஒப்பந்தத்தில் கையெழுத்துப் போடாதேன்னு வெளியேயிருந்து அம்பேத்கருக்குச் சொன்ன ஒரே ஆள் பெரியார்தான். 'காந்தி கண்டன கீதம்' ன்னு அப்பவே பெரியார் இயக்கம் ஒரு பாட்டுப் புத்தகம் போடுகிறது. 'அரிஜன்' என்கிற பெயரை எதிர்க்கிறாங்க. ஆக பூனா ஒப்பந்தத்தால் தலித் மக்களுக்கு ஏற்பட்ட காங்கிரஸ் மயக்கம் 67வரை நீடித்தது. இன்னொரு விசயம், பெரியார் எப்போதுமே பிராமணிய த்தை 'அதிகாரத்தை நோக்கிய நகர்வாகவே' பார்த்தார். எனவே பிராமணியத்தை வேறுப்பது என்பதை அதிகாரத்தைப் பிடுங்குவது என்பதாக பெரியார் பார்த்தார். ❑

***எம்.எஸ்.ராமசாமி :***

தாழ்த்தப்பட்டவருக்கு இட ஒதுக்கீடே பெரியாரால்தான் வந்தது. ❑

***கண்ணன்*** *(மதுரை படிப்பு வட்டம்)* **:**

'தலித்' என்பதை வர்க்கமாக அடையாளப்படுத்தினால் Subaltorn Class (அடித்தட்டு வர்க்கம்) எனலாம். பெரியார் காலத்தில் நிலவுடைமை



வர்க்கம் என்பது சைவ-வேளாளர்தான். நிலமற்ற பெரும்பான்மையினர் என்பது தலித்கள்தான். கோயில்களில் அதிகாரத்தை எல்லாம் மையப்படுத்தியவர்கள் கோயில் நிலத்திலும் மற்ற இடங்களிலுமிருந்த நிலமற்ற மக்களுக்கு நிலம் கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கையை வைக்கவில்லை என்பதை 'வாஷ் புருக்' சுட்டிக் காட்டுகிறார். இது ஒரு முக்கியமான பிரச்சினை. வெறும் பொருளாதாரப் பிரச்சினை என ஒதுக்க முடியாது. ❑

***பாண்டியன்*** *(இந்திய மக்கள் முன்னணி)* **:**

பெரியாரைக் காப்பாற்றியாகணும்கிற அக்கறையோ அடிச்சு விரட்டணும்கிற நோக்கமோ எனக்குக் கிடையாது. No sentiments with Periyar. 1908 இலிருந்து 1920 வரை அவர் ஒவ்வொரு காங்கிரஸ் மாநாட்டிற்கும் இடஒதுக்கீட்டுத் தீர்மானத்தை எடுத்துக்கொண்டு போவதும் அது தோற்கடிக்கப்படுவதும், இது கடவுளுக்கு எதிராக இருக்கு... மதத்துக்கு எதிராக இருக்கு... எனச் சொல்லப்படும் காரணங்களை எல்லாம் அவர் மறுதலித்துப் போவதிலும் ஒரு dialectical process இருக்கிறது. எது மனித இருத்தலுக்குத் தடையாக இருக்கிறதோ அதைத் தொடர்ந்து மறுத்தல் என்பது அவரது போக்காக இருந்தது. அதுக்குப் பின்னாடி என்னால் பார்க்க முடியவில்லை.

என்ன காரணம்னு சொன்னா, யாரை எதிர்க்க வேண்டும் என்பதில் கவனமாக இருந்த அளவிற்கு யாரைத் தக்க வைக்க வேண்டும் என்பதில் கவனமில்லை.

www.tamilarangam.net

பார்ப்பன எதிர்ப்பில் கவனமிருந்தது. அன்றைக்கு பிற்பட்டவர்கள்தான் வந்தார்கள் ; தலித்கள் வரவில்லை என்றார் கல்பாக்கம் தோழர். அப்படியானால் அம்பேத்கர் எப்படி வந்தார்? காலச் சூழலை மறந்துவிட்டுப் பேசக்கூடாது. வெண்மணி பற்றிப் பெரியார் பேசவில்லை என்றார்கள். அந்த விசயத்தில் பெரியாரை நான் மதிக்கிறேன். இந்தக் கம்யூனிஸ்டுகளைக் காட்டிலும் பெரியார் வெண்மணியைச் சரியாகக் க்ணித்தார். அது ஒரு கூலிப் போராட்டம். வெறுமனே ஒரு வர்க்கப் போராட்டம். அதில் தலையிட வேண்டாம் என அவர் நினைத் திருக்கலாம். கொல்லப்பட்ட கூலிக்காரர்கள் தலித்களாக இருந்ததால் தலித் இயக்ககாரர்களுக்கு வசதியாய்ப் போய்ட்டு -தலித்களை கொன்னுட்டான்னு சொல்றதுக்கு.

'இனிவரும் உலகம்' கட்டுரையில் பெண் விடுதலை பற்றியெல்லாம் நிறையச் சொல்கிறார். ரொம்ப ஆழமாக உள்ளே போகிறார், மனித இருப்பு என்பதையெல்லாம் தாண்டி. ஆனால் சமூகத்தை மறந்துவிடுகிறார். 'நீ மட்டும் விடுதலை பெற்றால் போதும்' என்று பெண்ணைப் பார்த்துச் சொல்கிறார். 'கருப் பாதையைச் சாத்திக்கொள்' என்கிறார். ஆனால் பெயருக்குப் பின்னால் சாதிப் பெயர் போடக்கூடாது என கட்சியில் தீர்மானம் இயற்றிய பெரியார், கருத்தடை செய்துகொண்டால்தான் கட்சியில் சேரலாம் என்று சொல்லவில்லை. அதை யாரும் மறந்துவிடக்கூடாது. மன்னிச்சுக்குங்க, என்னா? சுந்தர்ரு.....புரியுதா? குறைந்த பட்சம் மாநாட்டுத் தீர்மானங்கள்கூடப் போடவில்லை. பிரச்சாரமும் நடைமுறையில் அதிகம் இல்லை. கருத்தடை செய்துகொள்ளுங்கள்,



ஆண்களோடு தாராளமாக உறவு வைத்துக் கொள்ளுங்கள் என்று சொல்ல வில்லை. அவரது இயக்கத்தைச் சேர்ந்தவர்களும் சொல்லவில்லை. பெண் விடுதலை பற்றி பெரியார் இப்படிச் சொன்னார் என பெருமை பேசுகிற யாரும் நடைமுறையில் இதனை ஏற்றுக்கொள்வதில்லை. அவுங்க ஒத்துக் கொள்ளாததை நீங்க ஏங்க போட்டு உயிரை வாங்கிறீங்கன்னு எனக்குப்புரியல்லே.

பெரியாருடையதெல்லாம் நல்ல நோக்கங்கள்தான். ஆனால் நடைமுறைக்கு ஒவ்வாதது. அவரை கொச்சைப் பொருள்முதல்வாதி என்றெல்லாம் முத்திரை குத்துவதல்ல நமது நோக்கம். அவரிடமிருந்து கொள்ளுவது எது? தள்ளுவது எது? என்று பார்க்க வேண்டும். மராட்டியத்திலும் பார்ப்பன எதிர்ப்பு இயக்கம் இருந்தது. தாழ்த்தப்பட்ட மக்களை அடித்தளமாகக் கொண்டு அது இருந்தது. தமிழ்நாட்டு பார்ப்பன எதிர்ப்பு இயக்கம் யாரை அடித்தளமாகக் கொள்வது என்பதில் கவனமற்று இருந்தனர். தலித் இயக்கத்தின் நாயகனாக பெரியார் தன்னை மாற்றிக் கொள்ளவில்லை என்பது வருத்தப்படக் கூடிய செயல்தானேயொழிய, அவர்மீது குற்றம் சாட்டும் செயலில்லை. நான் சார்ந்திருக்கும் இயக்கத்தின் கருத்துப்படி இரண்டாயிரத்தின் இறுதிப் பத்தாண்டுகள் என்பது தலித்கள் விசயத்தில் ஏதோவொரு வகையில் கணக்குத் தீர்ப்பதாகவே இருக்கும். மராட்டியத்தில் தலித் இலக்கியம் உருவானதுபோல இங்கே சிலர் முயற்சிக்கிறார்கள்.ஆனால் அது செயற்கையாகத்தான் இருக்கிறது. கோபாலன் சொன்னமாதிரி -நீங்கள் உடனே பார்ப்பான்னு சொல்லுவீங்க-

www.tamilarangam.net

இன்னைக்கிக்கூட தலித்கள் காங்கிரசுடைய ஓட்டுவங்கியாகத்தான் இருக்கிறார்கள். ஏன்னா ஏகாதிபத்திய எதிர்ப்பு என்பதற்கு காங்கிரசுதான் வடிவு கொடுத்தது. ❑

***கண்ணன் :***

அதல்ல, நிலச்சீர்திருத்தமெல்லாம் காங்கிரஸ் ஆட்சியில்தான் நடந்தது. ❑

***பாண்டியன் :***

ஆமா. அதுமாதிரி பல விசயங்கள். திராவிட இயக்கங்களின் ஆட்சியிலே இடைநிலைச் சாதிகள்தான் வலுவடைஞ்சிது. எனக்குக்கூட அந்தக் கிழவன்மேல கொஞ்சம் செல்லக் கோவம். தஞ்சாவூர் மாவட்டத்திலே நிலமெல்லாம் பார்ப்பானிடம்தான் இருந்தது. ஆனால் தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்டவரைப் பார்த்து, ''போய் அந்த நிலத்தையெல்லாம் பிடுங்கு'' எனச் சொன்னாரா? மேல்சாதி என்பது மட்டுமல்ல சமூக அந்தஸ்து ; கிராமப் புறங்களில் சொத்து இருப்பதும் சமூக அந்தஸ்துதான். நாடார்கள் மத்தியில் ஏற்பட்ட சமூக மாற்றத்தை நாம் அறிவோம். ஆனால் இன்றைக்கும் பசும்பொன் மாவட்டத்தில் சாணார்கள் தலித்களைப் போலத்தான்.

மற்ற மாநிலங்கள்ல உள்ளதுபோல இல்லாமல் தமிழகத்தில் பெயருக்குப் பின்னால் சாதி தொங்கிக் கொண்டிருப்பதை ஒழித்த பெருமை திராவிட இயக்கத்துடையதுதான். ஆனால் அவர்கள்தான் கிராமப்புறத்தில் தலித் மக்கள்



வெட்டிக் கொல்லப்படுவதற்குக் காரணமாக இருந்தவர்கள். சிறீரங்கம் கோயில் கருவறைப் போராட்டம் பற்றி எல்லாரும் பேசுகிறோம். ஆனால் ஒவ்வொரு கிராமத்திலும் கோயில்களில் தலித்கள் உள்ளே நுழையாமல் தடுப்பது யார்? அதையெல்லாம் விட்டுவிட்டு சௌகரியமாக சிறீரங்கம் கோயில், மீனாட்சி கோயில் என்று நாம் பேசிக்கொண்டிருக்கிறோம். தலித் பிரச்சினையில் எதிரி பார்ப்பனர்கள் மட்டுமல்ல, மற்ற பிற சாதியினரும்தான் என்பதையெல்லாம் மறந்துவிட்டு 'சொல்லாடல்' பண்ணிக் கொண்டிருக்கக்கூடாது. ❑

***மதியம் இரண்டு மணிக்கு முடிந்த காலை விவாதம் உணவு இடைவேளைக்குப் பின் மீண்டும் மாலை மூன்று மணிக்குத் தொடங்கியது.***

www.tamilarangam.net

வழக்கமான நமது கூட்டுவிவாதங்களைப் போலவே இன்றும் முற்பகல் விவாதமானது பலரும் தங்களின் கருத்துக்களை விரிவாக முன்வைக்கும் களமாக அமைந்ததென்றாலும், விவாதப் புள்ளிகளில் பொதுக் கருத்துக்களைத் தேடும் முயற்சியை எஞ்சியுள்ள கொஞ்ச நேரத்தில் நாம் செய்தாக வேண்டியிருக்கிறது. அந்தவகையில் காலை விவாதங்களின் அடிப்படையில் நாம் சில விசயங்களைத் தொகுத்துக் கொள்ளலாம். ரசியா மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் ஏற்பட்ட மாற்றங்களுக்குப்பின் உலகெங்கிலும் மதவாதமும் பாசிசமும் உயிர்த்துள்ளன. இஸ்லாமிய எதிர்ப்பு என்கிற அடிப்படையில் மேலை ஏகாதிபத்தியங்கள் இணைகின்றன. கிறிஸ்தவ மதவாத சக்திகளின் ஆதிக்கத்தில் கருத்தடை உரிமை மறுப்புச் சட்டங்களெல்லாம் நாடுகள் தோறும் நிறைவேற்றப்படுகின்றன.

ஆசியாவில் இஸ்லாத்திற்கு எதிரான சக்தி என்ற வகையில் இங்கே வளர்ந்துவரும் இந்து பாசிசத்தை அமெரிக்காவும் மேலைநாடுகளும் ஆதரிக்கின்றன. மசூதி இடிப்பிற்குப் பின்பு பாரதீய ஜனதா தலைவர் சிக்கந்தர் பக்திற்கு அமெரிக்கா பெரிய வரவேற்பளித்தது. இப்படி ஏகாதிபத்தியத்தின் ஆசியோடு புத்துயிர்ப்புப் பெறும் இந்து பாசிசம் வலிமையாகவும் வேகமாகவும் வளர்ந்து வருகிறது. பார்ப்பனீயத்தை, வருணாச்சிரமத்தை நிலைநாட்டுவதுதான் இந்துத்துவத்தின் நோக்கம் என்பதில் அய்யமில்லை. இந்தியாவின் வேறெந்த மாநிலத்தைக் காட்டிலும் தமிழகத்தில் இந்துத்துவம் புத்துயிர்ப்பு பலவீனமாக இருப்பதற்கு பெரியார் மற்றும் திராவிட இயக்கங்களின் பங்களிப்பை நாம்



குறைத்து மதிப்பிட்டுவிட முடியாது. எனினும் வருணாச்சிரம சக்திகள் தமிழகத்தைக் குறிவைத்துச் செயற்படத் தொடங்கியுள்ளன. இத்தகைய உலகளாவிய பின்னணியில்தான் பெரியாரின் முக்கியத்துவத்தை, இன்றைய சூழலில் அவரது பொருத்தப்பாட்டை நாம் யோசிக்கிறோம்.

இந்தியச் சமூகங்களின் பிரத்தியேகத் தன்மைகள் குறித்து எல்லோரும் அறிவோம். உலகெங்கிலும் முகிழ்த்த ஜனநாயக உணர்வென்பது இந்தியாவில் வேர் பிடிக்காததற்கான காரணங்களை காலனிய ஆட்சியில் மட்டும் நாம் தேடிக்கொண்டிருக்க முடியாது. இதர காலனிய நாடுகளில் வளர்ந்துள்ள அளவிற்குக்கூட ஜனநாயக உணர்வுகள் இங்கே வளரவில்லை. பார்ப்பனீய மதமும் சாதீயக் கட்டுமானமும் இதில் முக்கிய பங்கு வகிக்கிறது. சாதியப் படிநிலைகளில் ஒவ்வொருவரும் ஒரு குறிப்பிட்ட சாதியராக உணர்கின்ற மனநிலைதான் உள்ளதேயொழிய ஒரு குடிமகனாக உணரும் தன்னிலை இங்கே கட்டமைக்கப் படுவதில்லை. இத்தகைய தன்னிலை உருவாக்கத்தில் இந்துக் குடும்பம், இந்துச் சட்டங்கள், இந்துக் கோயில்கள் சார்ந்த மரபுகள், இவற்றினடியாக வளர்த்தெடுக்கப்பட்ட கருத்தியல்கள் ஆகியவை முக்கிய பங்கு வகிக்கின்றன. இந்தக் கருத்தியல் செயற்படும் களமாக இந்துக் குடும்பம், இந்து மதம், இந்தியக் கல்வி, ஒழுக்க மதிப்பீடுகள், தொடர்புச் சாதனங்கள் முதலியவை செயற்படுகின்றன. இந்தக் கூறுகளைத்தான் நாம் சிவில் சமூகம் என்கிறோம்.

www.tamilarangam.net

ஆதிக்க சக்திகளின் மேலாண்மையை ஆகப் பெரும்பான்மையான மக்கள் கேள்வி முறையின்றி அதிக எதிர்ப்பின்றி ஏற்றுக் கொள்ளும் மனநிலையை இச் சிவில் சமூகம் உருவாக்குகின்றது. இத்தகைய ஆளும் வர்க்கக் கருத்தியலை பொதுவான கருத்தியலாக எல்லோரும் ஏற்றுக்கொள்ளும் தன்மையைத்தான் மேலாண்மை செயல்படுதல் என்கிறோம். ஏகாதிபத்தியம் உள்ளிட்ட புதிய புதிய ஆதிக்க சக்திகள் தங்களின் மேலாண்மையை உருவாக்குவதற்கு பழைய சிவில் சமூகம் எந்தப் பெரிய தடைகளையும் உருவாக்காததால் சிறிய மாற்றங்களோடு அதனை அப்படியே தக்க வைத்துக் கொள்வதில் கவனம் செலுத்துகின்றன.

இரண்டாம் உலகப் போருக்கு முன்பு அதிவேகமாக வளர்ச்சியடைந்துவந்த சமூக ஜனநாயகக் கட்சிகள், பாட்டாளி வர்க்கச் சித்தாந்தம் ஆகியவற்றை யெல்லாம் ஒரே கணத்தில் நொறுக்கித் தூளாக்கி பாசிசம் தலையெடுத்த போதுதான் கிராம்சி போன்ற மாக்சியர்கள் மேலாண்மை, சிவில் சமூகம் போன்ற கருத்தாக்கங்களை யெல்லாம் சிந்திக்கத் தொடங்கினர். கொடும் பொருளாதாரச் சுரண்டலுக்கெதிராக ஆட்சி அதிகாரத்தை நோக்கி மக்களைத் திரளவைக்கக் கூட இந்த மேலாண்மையில் ஒரு கிழிவை -Rupture- ஏற்படுத்த வேண்டிய அவசியம் பற்றிப் பேசினார்கள். ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றிய பின்னரும்கூட பழைய சிவில் சமூகங்களில் உரிய மாற்றங்களைச் செய்து தகர்க்காமல், மேலாண்மையில் கிழிசலை ஏற்படுத்தாமல், என்னதான் பொருளாதார மாற்றங்களைச் செய்தாலும் மக்களுக்கு விடிவு ஏற்படப் போவதில்லை





என்பதற்குப் புரட்சிக்குப் பிந்திய சமூகங்கள் சான்றாகிப்போன இன்றைய சூழலில் மீண்டும் கிராம்சி போன்றோரின் சிந்தனைகள் முக்கியம் பெறுகின்றன.

ஏகாதிபத்தியத்திற்கும் உள்ளூர் ஆதிக்க சக்திகளுக்கும், இந்தியாவில் பார்ப்பன உயர்சாதி ஆதிக்கங்களுக்கும் (உள்ளூர் முதலாளிகளாகவும் இவர்களே உள்ளனர்) உகந்த பழைய மேலாண்மையைத் தகர்க்காமல், பழைய சிவில் சமூகத்தில் கலகங்களை மேற்கொள்ளாமல், பொருளாதார மாற்றங்களையும் ஆட்சி அதிகாரத்தையும் நோக்கிய நேரடியான வர்க்கப் போராட்டங்களை – கிராம்சி இதனை War of Movements என்பார்- நோக்கி மக்களை ஈர்ப்பது சாத்தியமில்லை. இதனை உலக வரலாறு மட்டுமல்ல, இந்திய வரலாறும் நிரூபித்துவிட்டது. இந்தச் சூழலில் நாம் மேலாண்மையில் சிதைவை ஏற்படுத்தக்கூடிய War of Positions ஐ முதலில் மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. இதனை மேற்கொள்ளாமல் War of Movements இல் இறங்கினால் தோல்வியில்தான் முடியும். இந்த வகையில்தான் நாம் கிராம்சி, பெரியார் போன்றோரைக் கவனிக்க வேண்டியிருக்கிறது.

War of Positions எனும்போது -மேலாண்மையில் கிழிவை ஏற்படுத்துதல் எனும்போது- இதனை நாம் எப்படியெல்லாம் மேற்கொள்ள வேண்டியிருக்கிறது? இது கால, இட சூழலுக்குத் தகுந்தாற்போல் வேறுபடும். பொதுவாகச் சொல்வதானால் சிவில் சமூகத்தில் கலகம் செய்தல் என்கிறோம்.

www.tamilarangam.net

பல்வேறு நுண் களங்களில் அதிகாரத்திற்கெதிராகப் போராடுதல்; கல்வி பாலாதிக்கம் போன்ற இதுவரை புறக்கணிக்கப்பட்ட துறைகளில் கவனம் செலுத்துதல்; இந்தியாவைப் பொறுத்த மட்டில் பார்ப்பனீயம், இந்து மதம், சாதீயம் தொடர்பான கருத்தியல்களில் சிதைவை ஏற்படுத்துதல்; நிறுவனங்களின்மீது தாக்குதல் தொடுத்தல்..... என்பன.

மேலாண்மைக் கருத்தியல் என்பது பல்வேறு குறியீடுகள், பிம்பங்கள், புனைவுகள் மூலம் செயற்படுகின்றன. நேற்று ஒரு கள ஆய்வுக்காக சிறீரங்கம் கோயிலுக்குப் போயிருந்தோம். பெண்களை ஏன் அர்ச்சகராக்கக் கூடாது என்றால் 'தீட்டு/மாத விலக்கு' என்கிற பதில் சர்வசாதாரணமாய் -பெண்கள், பார்ப்பனரல்லாதார் உள்ளிட்டு- எல்லோரிடமிருந்தும் வருகிறது. கருவறைக்குள் நுழைந்தால் என்ன என்றால், ''தாயின் கருவறைக்குள் நீ திருப்பி நுழைவாயா?'' என்று திருப்பிக் கேட்கிறார்கள். கருத்தியல் களத்தில் இந்த ஆணாதிக்க, பார்ப்பன மேலாண்மையைத் தகர்க்காமல் அரசியல், பொருளாதாரக் களத்தில் தகர்ப்பதற்காக எவ்வாறு மக்களைத் திரட்ட முடியும்? தீட்டு, தாய்மை, கருவறை போன்ற குறியீடுகள், பிம்பங்கள் இவற்றை நொறுக்காமல் கருத்தியலில் சிதைவை எவ்வாறு ஏற்படுத்த முடியும்? இப்படி பிம்பங்கள், குறியீடுகளில் தாக்குதல் தொடுத்த வகையிலும் பெரியார் கவனம் பெறுகிறார். மரபுவழிப்பட்ட கருத்தியலுக்கெதிரான தொடர்ந்த பிரச்சாரம் என்பது அவரது அரசியல் திட்டமாக இருந்தது என்கிறார் ராஜன் குறை.

## அ.மார்க்ஸ்



அப்படியானால் பெரியாரை அப்படியே சரி என்கிறோமா? அரை நூற்றாண்டிற்கு முன்னால் பெரியார் மேற்கொண்ட செயல்பாடுகளை அப்படியே மாற்றங்களின்றி தொடர்வதுதான் இன்றைய பணி என்கிறோமா? இந்தியாவுக்கான மாக்சியம்தான் பெரியாரியம் என்கிறோமா? மாக்சியம் உட்பட எந்தத் தத்துவமும் முற்றுமுழுதான எல்லா இடங்கள், எல்லாக் காலங்களுக்குமான மனித விடுதலைக்கான தத்துவமாக முடியாது என்பதை சமீபகால நிகழ்வுகள் உறுதிசெய்துவிட்டன. மரபுவழிப்பட்ட பொதுவுடைமைக் கட்சிகள் உட்பட மார்க்சியத்தில் இட்டு நிரப்ப வேண்டிய இடைவெளிகள் பற்றி ஆய்வுகள் செய்ய இன்று மாநாடுகள் கூட்டிக் கொண்டிருக்கின்றன. சுற்றுச் சூழல், பெண்ணியம் என பல்வேறு கூடுதல் அம்சங்களை இணைப்பது குறித்து விவாதங்கள் நடைபெறுகின்றன. அதேபோலத்தான் பெரியாரியத்தில் இன்று நாம் எடுத்துக் கொள்ள வேண்டிய அம்சங்கள் என்னென்ன? இட்டு நிரப்ப வேண்டிய இடைவெளிகள் என்னென்ன? என்பது குறித்து ஆய்வு செய்யத்தான் நாம் இன்று கூடியுள்ளோம்.

அந்தவகையில் இந்து பார்ப்பனீய மேலாண்மைக்கு எதிராக தொடர்ந்த கருத்தியல் பிரச்சாரம், ஆதிக்கக் குறியீடுகளைச் சிதைத்தல், சாதி ஒழிப்பை மையச் சுடராகக் கொண்டு இயங்குதல் போன்ற அம்சங்களில் பெரியாரின் பொருத்தப்பாட்டை இன்றைய காலை விவாதம் சுட்டிக்காட்டியுள்ளது. பெரியாரியம் என்பதை வெறுமனே மூடத்தன எதிர்ப்பு, பார்ப்பன எதிர்ப்பு என்று சுருக்கிவிடாமல் ஆணாதிக்க எதிர்ப்பிற்கும் சாதி ஒழிப்புக்குமுள்ள இணைப்புப்

www.tamilarangam.net

புள்ளியை கவனிக்க வேண்டிய அவசியத்தை கிராமியன், சுந்தர் ஆகியோர் வலியுறுத்தியுள்ளனர். மரபுவழிப்பட்ட திராவிட இயக்கத்தினர் கண்டுகொள்ள மறுக்கும் முக்கிய புள்ளி இது.

சாதீயத் தன்னிலையை உருவாக்குவதில் பாலாதிக்க நிறுவனமாகிய குடும்பம் முக்கிய பங்கு வகிக்கிறது. குடும்பம் என்கிற நிறுவனத்திற்குள்தான் ஒரு குழந்தை தன்னை ஆணாக/பெண்ணாக, பார்ப்பானாக/பறையனாக/ தேவனாக/ நாடானாக அடையாளம் காண்கிறது. பின்பு இத் தன்னிலை நமது கல்வி முறை, தொடர்புச் சாதனங்கள் என சிவில் சமூகத்தின் பல்வேறு நிறுவனங்களால் வலுவூட்டப்படுகிறது. ''கருத்தறிப்பு உரிமையை கையிலெடுத்துக் கொள்ளுங்கள்; சமூக விருத்தி பற்றி உங்களுக்கென்ன கவலை?'' என பெரியார் பெண்களை நோக்கிக் கேட்டதை நடைமுறைக்கு ஒவ்வாதது, உணர்ச்சி வயப்பட்டு சொன்னது என நீங்கள் புறக்கணிக்க முடியாது. இதிலுள்ள நியாயத்தை ஆணாதிக்க நோக்கில் நின்று விளங்கிக் கொள்ள முடியாது.

தேவதாசி முறையை ஒழிக்க வேண்டுமென இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் குரல் எழுப்பியபோது, ''இந்தியக் கலாச்சாரத்தின் ஓரங்கமான கோயிற் கலைகளைக் காப்பவர்கள் தேவதாசிகள். தேவதாசி முறையை ஒழித்தால் இந்தியக் கலாச்சாரம் அழியும். அதோடு இப்போது கோயிலுக்குத் தேவதாசிகள் வேண்டாம் என்பீர்கள்; அப்புறம் அர்ச்சனை செய்ய பிராமணர் வேண்டாம் என்பீர்கள்'' என்று சத்திய மூர்த்தி ஐயர் இதனை எதிர்த்தார். அய்யர்



சொன்னது சரியா தப்பா என்பது இருக்கட்டும். உண்மையென்றாலும் கூட இந்தியக் கலாச்சாரம் அழிவது பற்றி தேவதாசிகள் ஏன் கவலைப்பட வேண்டும்? ஊர் நாறுமே என தலையில் மலம் சுமப்பவன் ஏன் கவலைப்பட வேண்டும்? சமூகம் விருத்தியாகாதே என பெண்கள் ஏன் கவலைப்பட வேண்டும்?

பெரியாரில் இட்டு நிரப்பப்பட வேண்டிய இரு முக்கிய இடைவெளிகள் மீதும் காலை விவாதம் கவனத்தைக் குவித்துள்ளது. ஒடுக்கப்பட்டவர்களின் சார்பாக நின்று உள்ளூர் ஆதிக்க சக்திகளை எதிர்க்கும் நோக்கில் பெரியார், அம்பேத்கர் போன்றோர் ஏகாதிபத்திய எதிர்ப்புக்கு முன்னுரிமை அளிக்காத நிலை எடுத்ததை நாம் அறிவோம். இன்றைய இந்துவத்திற்கும் ஏகாதிபத்தியத்திற்கும் உள்ள உறவை ஏற்கனவே சுட்டிக்காட்டியுள்ளோம். எனவே எமது War Of Positions செயற்பாடுகளில் பின்னணியில் நிற்கும் ஏகாதிபத்தியத்தை நாம் மறந்துவிட முடியாது. ஞானி இதனைச் சுட்டிக்காட்டினார். அதே போல இந்துத்துவத்தை எதிர்ப்பது என்பதன் அடிப்படை தாழ்த்தப்பட்டோர் பிற்படுத்தப்பட்டோர் ஒற்றுமைதான். இந்த ஒற்றுமைக்குத் தடையாக இருப்பது தீண்டாமைக் கொடுமை. இந்த ஒற்றுமைக்கு முன் நிபந்தனையாக இருப்பது தீண்டாமை ஒழிப்பு. எனவே தீண்டாமை ஒழிப்பை நிறைவேற்றுவதன் மூலமே பார்ப்பனிய எதிர்ப்பிற்கு அடித்தளமிட முடியும். இந்தவகையில் தீண்டாமை ஒழிப்பை முன்னிலைப்படுத்த வேண்டிய அவசியத்தை தருமலிங்கம் போன்றோர் சுட்டிக்காட்டினர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வெண்மணி பற்றியும் இம்மானுவல் கொலை பற்றியும் பெரியார் என்ன சொன்னார்? என்று இங்கே கேட்கப்பட்டது. வெண்மணி பற்றி தெரியவில்லை. இம்மானுவல் கொலை மற்றும் சாதிக் கலவரங்களுக்குப் பின் முத்துராமலிங்கத் தேவர் கைது செய்யப்பட்டதை ஆதரித்த ஒரே தமிழகத் தலைவர் பெரியார்தான். தேவர் கைதுக்குப் பின்புதான் சாதிக்கலவரம் ஓய்ந்தது. தி.மு.க. உட்பட அனைவரும் தேவர் கைதைக் கண்டித்தபோது பெரியார் அதனை ஆதரித்தார்.

கடைசியாக,

பெரியாரின் நாத்திக பிரச்சாரத்தையும் மீறி கோயில் பெருக்கம், கடவுள் வணக்கம் அதிகமாயிருக்கிறது. இதனைச் செவ்வியல் மாக்சியத்தின் மூலம்தான் விளக்க முடியும். மதம் மக்களின் அபினி ; ஒடுக்கப்பட்ட மக்களின் ஆறுதல் பெருமூச்சு. ஏகாதிபத்தியம், புதிய பொருளாதாரக் கொள்கைகள் என தனிமனிதன் மேலும் மேலும் எதார்த்த வாழ்க்கையிலிருந்து அந்நியமாகிப் போகிறான். எல்லாம் அர்த்தம் இழந்து போகின்றன. இந்தச் சூழலில் மதம் அவனுக்கு ஆறுதல் அளிக்கிறது. சாதி அவனுக்கு ஒரு அடையாளத்தைத் தருகிறது. ஆனால் இந்த ஆறுதல் பொய்யான ஆறுதல். இன்றைய பாசிச வெளிப்பாட்டில் ரொம்ப ஆபத்தான ஆறுதலும் கூட. அதிலும் சாதிய அடையாளம் –அதிலும் உயர்சாதி அடையாளம்– எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்று. க.நா.சு வின் சீடர் தமிழவன் போல இதனை நல்ல குணாம்சமாகப் பார்க்க முடியாது.



க.நா.சு, மௌனி பாணியிலான 'நவீன' இலக்கியம் நசிந்து போனதற்கு காரணமாகவும் தமிழவன், பெரியாரையும் திராவிட இயக்கத்தையும் சுட்டிக்காட்டுகிறார். இலக்கியச் சூழலில் நவ பார்ப்பனியத்தின் வெளிப்பாடாக வந்திருக்கும் 'இந்திய டுடே' இலக்கிய மலரில் விசத்தைக் கக்கி இருக்கும் வெங்கட்சாமி நாதனின் எதிரொலி தான் இது. மௌனி, க.நா.சு பாணியிலான இலக்கியச் செயற்பாடுகள் என்பன பார்ப்பனிய மேலாண்மையை இலக்கியக் களத்தில் உற்பத்தி செய்தவைதான். இவை அருகிப் போனதற்கு பெரியாரியம் காரணம் என்றால் நாம் அதை வரவேற்க வேண்டும் என்றுதான் தோன்றுகிறது.

சிறு பத்திரிகைகள் பெரும்பாலான விசயங்களில் ஆதிக்கக் கருத்தியலையே பிரதிபலித்தன. சிறு பத்திரிகைகளின் -elitism- மேட்டிமைத்தனம் என்பது இவற்றில் ஆதிக்கம் செலுத்திய உயர்சாதியினரின் வெளிப்பாடுதான். திராவிட இயக்கங்களின் இலக்கியச் செயற்பாடு என்பன ஓரளவு பார்ப்பனிய விலக்கம் உடையதாகவும், ஜனநாயகப்படுத்தக் கூடியதாகவும் அமைந்தன. மேடைப்பேச்சு, நாடகங்கள், சினிமா, தினத்தந்தி, புதுக்கவிதைகள் வானம்பாடி இயக்கம் என பல வடிவங்களில் வெளிப்பட்டன. சுமார் 40 ஆண்டுகளுக்கு முன்பு தமிழகத்தில் பரவலாக வாசிக்கப்பட்ட மு.வ. போன்றோரின் எழுத்துக்களும் கூட திராவிட இயக்கப் பின்னணியின் வெளிப்பாடுதான். அறுபது எழுபதுகளில் கொடிகட்டிப் பறந்த தமிழ்ச் சிறு பத்திரிகைகள் பிறமொழி நடவடிக்கைகள் பற்றி எவை எவையோ பற்றியெல்லாம் அறிமுகம் செய்தன. ஆனால் அதே சமயத்தில்

www.tamilarangam.net

மராட்டியில் பெரும் இயக்கமாக இருந்த தலித் இலக்கியச் செயற்பாடுகள் பற்றி ஏதும் குறிப்பிட்டதில்லை.

வெறும் பார்ப்பன எதிர்ப்பு என்றில்லாமல் வெள்ளாள ஆதிக்கம், பிற்படுத்தப்பட்ட சாதிகளின் ஆதிக்கம் ஆகியவை பற்றியும் கவனம் குவிக்க வேண்டும் என தொடர்ந்து நிறப்பிரிகை வற்புறுத்தி வருவதை நீங்கள் அறிவீர்கள். ஆனால் இந்த பார்ப்பனரல்லாதவர்களின் ஆதிக்க எதிர்ப்பு என்பது பார்ப்பன ஆதரவுக்கான கவசமாக மாறிவிடக் கூடாது. தமிழவன் போன்றோரின் செயற்பாடுகள் அப்படித்தான் அமைகின்றன. இதுவரை தீண்டாமை, தலித் பிரச்சினைகள் பற்றியெல்லாம் கவலைப்படாத பலருக்கு பெரியாரை எதிர்ப்பதற்காக இன்று திடீரென இந்தப் பிரச்சினைகள் மீது அக்கறை வந்திருப்பதை நாம் கவனிக்க வேண்டும். இது மிக முக்கியம்.

பெரியாரிய இயக்கம் போன்ற எதிர்க் கலாச்சார இயக்கங்கள் பற்றி ஒன்றைச் சொல்ல வேண்டியிருக்கிறது. பரந்த அளவிலான மக்கள் ஆதரவு என்பது உடனடி அரசியல் அதிகாரத்தை நோக்கிய இயக்கங்களுக்குக் கிடைப்பது போல, எதிர்க் கலாச்சார இயக்கங்களுக்கும் நுண்களத்தில் அதிகாரத்தை எதிர்க்கும் இயக்கங்களுக்கும் இருக்க முடியாது. மக்கள் கல்வி இயக்கத்தில் கூட எங்களுக்கு இந்த அனுபவம் இருக்கிறது..

❑



## பெரியாரியம்

***வேல்சாமி :***

பெரியாரை மதிப்பிடும்போது நாம் சில விசயங்களைக் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். கிட்டதட்ட 50 வயதில்தான் (1927) அவர் தீவிர அரசியலுக்கு வருகிறார். அதற்குப் பின் அவர் தீவிரமாக இயங்கிய காலத்தை 1927 முதல் 1947 வரை, 1947 முதல் 1967 வரை, 1967 க்குப் பின் அவர் இறக்கும் வரை எனப் பிரித்துக் கொள்ளலாம். முதல் கட்டத்தில் ஏகாதிபத்தியத்திடமிருந்து ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றும் நோக்கத்தோடு காங்கிரசும் மற்ற இயக்கங்களும் சமூகப் பிரச்சினைகளை அணுகுகின்றன. அதிலொன்றுதான் ஆலய நுழைவு, தீண்டாமை ஒழிப்பு முதலியன. சொல்கிறவற்றைச் செயல்படுத்துகிற தலைமையாக காங்கிரசின் பார்ப்பனத் தலைமை இல்லை என இதிலிருந்து விலகுகிறார். முதற்கட்டத்தில் பெரியாருக்குப் பின்னால் இருந்தவர்கள் இளைஞர்கள்.

இரண்டாவது கட்டத்தில் இந்த இளைஞர்களை அண்ணா வென்றெடுத்துவிடுகிறார். பெரியார் வேலைசெய்த சூழல் ரொம்ப சிக்கலானது. மொழி, சைவம், மதம் பற்றியெல்லாம் அவர் பேசும்போது அவருக்கு பார்ப்பனரல்லாதாரிடமிருந்து நிறைய எதிர்ப்புகள் வருகின்றன. சைவமும் பார்ப்பனீயமும் பெரிய அளவில் வேறுபட்டதல்ல என்பதை அவர் தொட்டுக் காட்டியபோது கடும் எதிர்ப்புகள் வருகின்றன.

www.tamilarangam.net

மூன்றாவது கட்டத்தில் இவருக்குப் பின்னால் வந்தவர்களே (அண்ணா போன்றவர்களே) இவரது கருத்துக்களைப் புறக்கணித்துச் செல்லும் சூழல் - 'ஒன்றே குலம் ஒருவனே தெய்வம்', 'தமிழ் மேன்மை பேசுதல்' என்பதுபோல. இந்த மூன்று கட்டங்களிலும் பெரியார் என்ற ஒரே நபர் மூன்று வெவ்வேறு மக்கள்திரள் மத்தியில் வேலைசெய்ய வேண்டியிருந்தது. இந்த மூன்று கட்டங்களிலும் அவரது மையமான கருத்துக்களில் மாற்றமில்லை. தொடர்ச்சி இருந்தது. ❑

*சூசை மாணிக்கம் :*

பெரியாரின் சாதி ஒழிப்பு, பார்ப்பன எதிர்ப்பு, இந்தி எதிர்ப்பு, தமிழ் வெறி எதிர்ப்பு என்பதை ஒரு முக்கிய அரசியல் குறுக்கீடாகப் பார்க்கிறேன். அரசியலதிகாரத்தை நோக்கிய ஒரு மாற்று அணிச் சேர்க்கை -கிராம்சியின் வார்த்தைகளில் சொல்வதானால் ஒரு மாற்று Historical Block- உருவாக்குவதற்கான முயற்சியாக நான் பார்க்கிறேன். மாற்றுக் கருத்தியல் மேலாண்மையை உருவாக்கும் முயற்சிதான். வடநாட்டில் ஜோதிபாபூலே, அம்பேத்கர் தென்னாட்டில் பெரியார், நாராயணகுரு போன்றோர் பார்ப்பன எதிர்ப்பை முன்வைத்தனர். மராட்டியத்தில் பார்ப்பன எதிர்ப்பு என்கிற அணிச் சேர்க்கையின் தலைமையில் தலித்கள் இருந்தாலும் தமிழ்நாட்டில் பிற்படுத்தப்பட்டவர்களிடமே அந்தத் தலைமை இருந்தது. பெண்ணடிமை, பார்ப்பன எதிர்ப்பு என ஏதேனும் ஒரு கூறை மட்டும் எடுத்துக் கொள்ளாமல் எல்லாவற்றையும் இணைத்து



முழுமையாகப் பார்ப்பதே பிரச்சினையை முழுமையாக விளங்கிக்கொள்ள உதவும். இப்படி பிரச்சினையை பகுதியாகப் பார்த்ததால்தான் சில சமயங்களில் ஆங்கிலேயருடன் உறவு என்கிற நிலையையும்கூட எடுக்க நேர்ந்திருக்கிறது. வெவ்வேறு வர்க்கங்கள், சாதிகள் ஆகியவற்றை உள்ளடக்கி ஒரு சரியான வரலாற்று அணியை உருவாக்கி பெரியாரியத்தை நாம் முன்னெடுத்துச் செல்லவேண்டும். ❑

*ராஜன்குறை :*

எதிர்க் கலாச்சாரமாய் பெரியாரின் செயற்பாடுகளைப் புரிந்துகொள்வது அவசியம். ஆனா இங்கே எதிர்க் கலாச்சாரம் என்றாலே ஒரு அச்சம், பீதி, எதிர்ப்பு. "என்னடா எதிர்க் கலாச்சாரம் பேசுறே?" என்பாங்க.

கலாச்சாரமும் அதிகாரமும் பிரிக்க முடியாத ஒன்று. அதிகாரத்தை நிலைநிறுத்துவது, தன்னிலைகளைக் கட்டமைப்பது என்பதில் கலாச்சாரத்தின் பங்கு மிக முக்கியம். இன்று பெண்ணிலைவாதிகளெல்லாம் 'Personal is Political' என்கிறார்கள். என்மீது தாக்கப்படும் அதிகாரம்தான் அரசியல். இத்தகைய சிந்தனைகளையும் வர்க்க அரசியல் பற்றிய நமது புரிதல்களையும் இணைத்து Comprehensive ஆக ஒரு புரிதலை உருவாக்க வேண்டிய நிர்ப்பந்தம் நமக்கு இன்று இருக்கிறது. அந்தவகையில்தான் பெரியாரின் எதிர்க் கலாச்சாரச் செயற்பாடுகளின் முக்கியத்துவம்.

www.tamilarangam.net

உலகில் வேறெங்கும் எதிர்க் கலாச்சாரம் பேசுவதைக் காட்டிலும் இந்தியாவில் பேசுவது கஸ்டம். ஏன்னா இங்கே கலாச்சாரம்கிறது சாதீயக் கலாச்சாரம். உள்ளே வாய்யான்னு சொன்னாலும் இல்லை வரமாட்டேன் சாமி என மறுக்கிற தாழ்த்தப்பட்ட தன்னிலைகளை உருவாக்குகிற கலாச்சாரம். இதையெல்லாம் எந்தப் பொருளாதார வாதத்தை வைத்துப் புரிந்து கொள்வது? கலாச்சாரத்தோட இருக்கிற அரசியலைப் புரிந்துகொண்டால்தான் இதைப் புரிந்து கொள்வதும், எதிர்க் கலாச்சாரத்தின் முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்வதும் இயலும். கலாச்சாரத்தின் அரசியலில் சாதி, அதைவிட முக்கியமா ஆணாதிக்கம் இரண்டையும் பேசியாகணும். இதையெல்லாம் நாம் பேசுகிறோம்ன்னா ஒரு Intellectual Concern லே பேசுகிறோம். நீ என்ன ஆண் பெண்ணியம் பேசுவது, நீ என்ன உயர்சாதி தலித் பற்றிப் பேசுவது? என்றெல்லாம் கேட்கிறாங்க. இந்த உலகத்தில் மனிதனாய்ப் பிறந்த கவலையின் விளைவுதான் இதையெல்லாம் பேசுறது. அந்த வகையில் எதிர்க் கலாச்சாரச் செயல்பாடாக பெரியாரை விவாதிக்க வேண்யதுதான் நம்ம கடமை.

ஆனா Macro Politics லே தேசியப் பிரச்சினையிலே இப்படிப் பண்ணினார், சமதர்ம விசயத்திலே பின்னாடி போனார் என்றெல்லாம் பேசப்பட்டுவிட்டதால் அதைப் பற்றியும் கொஞ்சம் பேசிட்டு இந்த எதிர்க் கலாச்சார விசயத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து விவாதிக்கணும். எதிர்க் கலாச்சாரம் பற்றி ரொம்ப Comprehensive ஆன, மிக அழகான ஒரு



வரையறையை அவர் (நிறப்பிரிகை-6, பக்கம்-34) கொடுத்திருக்கிறார். எதிர்க் கலாச்சாரம் பேசுகிறவர்கள் ஒழுங்குமுறையாக -Systematic ஆக- பேசிக்கொண்டிருக்க முடியாது. கிராமியன் சுட்டிக்காட்டிய மாதிரி உண்டுங்கிற இடத்தில் இல்லையென்றும், இல்லைங்கிற இடத்தில் உண்டுன்னும் பேசித்தான் ஆகணும். பெரியார் தினசரி தலையங்கம் எழுதியவர்; கூட்டங்களில் பேசியவர். எல்லாத்தையும் படிக்கணும்; ஒரு கூட்டுச் செயல்பாடாகப் படிக்கணும்.

இன்று ஆணாதிக்கத்தை எதிர்க்காமல், Patriarchal Family யை (தந்தை வழிக் குடும்பத்தை) எதிர்க்காமல், எந்த அரசியலையும் பேச முடியாது. ''அப்படின்னா என்ன மாற்று வச்சிருக்கிறே? ''. இப்படியெல்லாம் கேள்வி கேட்பதில் பயன் இல்லை. வரலாறு பூரா பாருங்க. அதிகாரம் செயல்பட்ட அம்சங்களையெல்லாம் (Units) பாருங்க. அப்புறம் ஏன் தந்தைவழிக் குடும்பத்தைப் பற்றிப் பேசுறோம்னு புரியும்; ஆணாதிக்கத்தை ஏன் எதிர்க்கிறோம்னு புரியும். கருத்தடை பண்ணிக்கணும்னு நிபந்தனை விதித்தாரா என்றெல்லாம் விசயத்தை எளிமைப்படுத்திவிட முடியாது.

ஜெயில்லே இருக்கும்போது வகுப்புவாரி ஒதுக்கீட்டை ஒத்துக் கொண்டால் காங்கிரசில் சேர்ந்துவிடுகிறதென்று நிபந்தனை விதிக்கிறார். எதையாவது செய்து ஒரு காரியத்தை நிறைவேற்றுவது, மற்ற சமயங்களில் பிரச்சாரம் செய்வது என்றெல்லாம் தொடர்ந்து அவரது செயல்பாடுகள் பலதரப்பட்டதாய்,

www.tamilarangam.net

குழப்பமானதாய் இருந்தது. இதையெல்லாம் முழுமையாய்ப் புரிந்து கொள்ளாத தால்தான் ஒவ்வொருவர் ஒவ்வொருமாதிரி பெரியாரைப் புரிஞ்சிருக்கோம். ராமர் சிலையை செருப்பால் அடிச்சதெல்லாம் Demolition of Symbols. எவ்வளவு பெரிய எதிர்க் கலாச்சார நடவடிக்கை! எதிர்க் கலாச்சாரம் பேசாமல் எந்த அரசியல் விடுதலையையும் நாம் சாதிக்க முடியாது. மாக்சியத்தில் என்ன பிரச்சினைங்கிறதை யெல்லாம் நாம இன்னைக்கி வெளிப்படையாய் பேசியாகணும். இன்னைக்குள்ள சூழலைக் கணக்கிலெடுத்துக் கொண்டு ஒவ்வொரு பிரச்சினையிலும் அடியாழத்துக்குத்தான் போகணும். அப்பத்தான் அதிகாரத்தின் வேர்களைத் தொடமுடியும். எதிர்த்து நிற்கிற ஆற்றலைப் பெறமுடியும்.

❑

***அருண்சிவா :***

நிறப்பிரிகையில் தொடர்ந்து பல கூட்டு விவாதங்கள் நடைபெற்றுள்ளன. கூட்டாக பல முடிவுகள் வந்தடையப்பட்டுள்ளன. எல்லாத்தையும் அப்படி அப்படியே விட்டுவிட்டு அடுத்தடுத்து போய்ட்டு இருக்காம ஒட்டுமொத்தமாய் தொகுத்துக் கொள்ள வேண்டும். உதாரணமாக சாதியம், பெண்ணியம் கூட்டு விவாதங்களில் வந்தடைந்த முடிவுகளை விட்டுவிட்டுப் பெரியார் பற்றிப் பேச முடியாது. பெண்ணியம் விவாதங்களில் ஆண் பெண் சேர்க்கைக்கு எதிராக ஓரினச் சேர்க்கை பற்றிப் பேசியுள்ளேன். குழந்தை உற்பத்தி பற்றிக் கவலைப்பட



வேண்டியதில்லை என்று சொன்னேன். பலரும் அதனைக் கண்டித்தார்கள். அப்போது நான் பெரியாரைப் படிக்கலை. கருத்தடைங்கிற கட்டுரையிலே தெளிவாகச் சொல்லியிருக்கிறார், "கருத்தடை செய்துகொள்வதால்தான் பெண்ணுக்கு விடுதலை. இதனால் ஜீவனோற்பத்தி கெட்டுவிடுமே என்ற கவலை உங்களுக்கு வேண்டாம். இதுவரை ஜீவனோற்பத்தி பண்ணி என்ன சாதித்துவிட்டோம்?" என்கிறார். அப்புறம் குறியீடுகளை அழித்தல், (Cultural Disturbances) நிலவுகிற கலாச்சாரத்தில் கலகம் விளைவித்தல் என்பது போன்ற எதிர்க் கலாச்சார அம்சங்களை பெரியாரியத்தில் நாம் எடுத்து வளர்த்துச் செல்ல வேண்டும்.

'கல்யாணம்'கிற ஒப்பந்தத்தை அவர் மதிக்காதது தெரிகிறது. எல்லாரும் எல்லாருடனும் free ஆக இருந்துக்கலாம் என்பதுபோல அவர் சொன்னாலும் Body, Sexuality (உடல், பால்மை) பற்றியெல்லாம் அவருக்கு ஆழமாகத் தெரிந்திருந்ததாகத் தெரியலே. ஆனால் அவர் சென்றவரைக்கும் கூட நாம் விவாதத்தை நடத்தவில்லை. நடத்தியிருந்தால் இன்றைக்கு அடுத்த கட்டம் போயிருக்கலாம். Gay Culture பற்றி விவாதித்திருக்கலாம்.

நேற்றைய கருவறை நுழைவுப் போராட்டத்தை எடுத்துக் கொள்வோம். கோயில், கருவறை, பிராமணன் இந்தச் சமூகத்தில் ஓர் அர்த்தம் இருக்கிறது. இப்ப நாம என்ன போராடுகிறோம். "எனக்கும் அதற்குள் ஒரு இடம், எனக்கும்

www.tamilarangam.net

அந்த அர்த்தம் கிடைக்க வேண்டும்'' என்று போராடுகிறோம். இது ஒரு விதம். இன்னொன்று அந்த அர்த்தத்தையே மொத்தமாய்ச் சிதைப்பது. கோயிலுக்குப் போவது புண்ணியம் என்கிற அர்த்தத்தையே -Frame Work இனையே-சிதைத்து, கோயிலுக்குப் போவது பாவம் என நிறுவிவிட்டால் பிறகு பிராமணனது இடத்தைப் பற்றியே நமக்குக் கவலையில்லை.

கடைசியாக, எப்படி பொலீஸ் என்பது ஒரு அரசியல் நிறுவனமோ அதேபோல Hetro Sexuality யும் ஒரு அரசியல் நிறுவனம்தான் என்பது இன்று நிருபணமாகிவிட்டது. ஒரு திருடனை பொலீஸ் கையாள்வதைப்போல ஒரு ஓரினப் புணர்ச்சியாளனையும் நடத்த முடியும். எனவே இதை ஒரு அரசியல் நிறுவனமாய் ஏற்றுக் கொண்டால்தான் மாற்று பற்றிப் பேச முடியும். ஆண்மை அழிந்தால்தான் பெண்மைக்கு விடுதலை என்கிறார் பெரியார். பெரியாரிடம் செயல்படும் இந்த ஆண்மை, பெண்மை போன்ற முரண் எதிர்வுகளைப் பற்றியெல்லாம் நாம் பேசியாகணும். ஸ்ட்ரக்சுரலிசம் பேசுகிற யாரும் இதையெல்லாம் பேசியதில்லை.

நான் முதலில் ஒரு ஆண். அப்புறம்தான் மற்ற எல்லாம். அதிலிருந்துதான் எல்லா அதிகாரமும் பிறக்கிறது. எனவே என்னை ஆணாக/பெண்ணாக உணராமலிருக்கச் செய்வது எப்படி என்பதிலிருந்துதான் விடுதலைக்கான எல்லாச் செயல்பாடுகளும் தொடங்குகிறது. இதற்கு பெரியார் எந்தளவுக்கு உதவுவார் என்பதுதான் இன்றைய கேள்வி. ❑



***ரவிக்குமார் :***

கருவறை நுழைவுப் போராட்டம் என்பது வரையறையில் இடம் கேட்கிற மாதிரி இருக்கா, இல்லை வரையறையை உடைக்கிற மாதிரி இருக்கா? கருவறைக்குள் பிராமணன் மட்டும் இருக்கும் வரைக்கும்தான் வரையறை வேலைசெய்கிறது. ஒரு பறையனோ இல்லை வேறு சாதியானோ நுழையும்போது அந்த வரையறையே உடைந்துவிடுகிறது. எனவே பெரியார் பாணியிலான நுழைவுப் போராட்டங்கள் என்பன Frame Work இனை உடைக்கிற போராட்டங்கள்தான். ❑

***கிராமியன் :***

ஒரு பார்ப்பனரல்லாதவர் உள்ளே போகிறது என்கிறவரை அது வரையறையில் இடம் கேட்கிற வேலைதான். பெண்களும் உள்ளே போகணும்கிற போதுதான் அது வரையறையை உடைப்பதாக அமையும். ❑

***ரவிக்குமார் :***

தலித்துக்கு இந்து மதத்திலேயே இடம் இல்லைங்கிற போது தலித்கள் நுழைவது என்பதே உடைப்பதுதான். பெண்கள் நுழைந்தால் போதும் என்றால், மருவத்தூரில் பெண்களே பூசை செய்கிறார்கள் -அதை எப்படிப் பார்ப்பது? ❑

***கிராமியன் :***

சங்கராச்சாரியும் மருவத்தூராரும் சந்தித்துப் பேசியதில் இதுவும் ஒரு விசயம் என்று சொல்லப்படுகிறது. ❑

www.tamilarangam.net

*ரவிக்குமார் :*

அதை இப்படிப் பார்க்கலாம். தலித்கள், பெண்கள் இருவரும்கூட Frame Work இல் உள்வாங்கப்படலாம் -நிலவுகிற Frame Work அழிக்கப்படுகிறதா என்பதுதான். அழிக்கப்படுகிறது. ஆனால் அவன் புதிய Frame Work இனை உருவாக்குவான். நாம் அதை மீண்டும் அழிக்க வேண்டும். இப்படித்தான். அதனாலே நுழைவுப் போராட்டங்களை வெறுமனே இடம் கேட்பதாக சுருக்கிப் பார்க்க வேண்டியதில்லை. ❑

*ராஜன் :*

ம.க.இ.க. ஏற்கனவே தேர்தல் புறக்கணிப்புப் பிரச்சாரம் செய்தபோது மேற்கொண்டதைக் காட்டிலும் கடுமையான அடக்குமுறைகளை மேற்கொண்டு முளையிலேயே கிள்ளிவிட அரசாங்கம் மேற்கொண்ட முயற்சிகளை ஒப்பிட்டுப் பார்த்தால் இந்த நுழைவுப் போராட்டங்களை Frame Work இல் இடம் கேட்கும் முயற்சியாக அரசு கருதவில்லை என்பது விளங்கும். ❑

*பொதியவெற்பன் :*

கருவறை நுழைவுப் போராட்டத்தை பெரியார் ஒரு இன இழிவு எதிர்ப்புப் போராட்டமாகப் பார்த்தார். ''பறையன் உள்ளே போனால் பார்ப்பான் வெளியே வந்துவிடுவான்''னு சொன்னார். ❑



*கல்யாணி :*

கருத்துப் பிரச்சாரத்திற்கு முதன்மை கொடுத்து செயற்பட்டதுங்கிறது பெரியாரிடத்தில் நாம் எடுத்துக் கொள்ள வேண்டிய முக்கியமான விசயம். குறிப்பாக இட ஒதுக்கீடு, பார்ப்பன எதிர்ப்பு போன்ற விசயங்களில் பார்ப்பன சங்கம்கூட தமிழ்நாட்டுலே இட ஒதுக்கீட்டை எதிர்த்து வெளிப்படையா ஒரு தீர்மானம் இயற்ற முடியலே. அதேபோல மூடநம்பிக்கை எதிர்ப்பு. அவர் பிரச்சாரத்தால எல்லாரும் பகுத்தறிவாளரா மாறாம இருந்திருக்கலாம். ஆனா ஒரு இந்துமத வெறியனாகவோ முஸ்லீம் மத வெறியனாகவோ மாறாமல் தடுத்தது என்பது அவரது பிரச்சாரத்திற்குக் கிடைத்த ஒரு வெற்றிதான்.

தலித் விசயத்துலே அவர்மேல பல விமர்சனங்கள் வைக்கப்பட்டது. அதை அப்பிடிப் பார்க்க வேண்டியதில்லைன்னு நினைக்கிறேன். அவர் தலித்தா இல்லையாங்கிற விசயத்தை அங்கீகரித்து நாம இதைப் பார்க்கணும். தீண்டாமையை மற்றவர்கள் பேசினாலும் ஒரு தலித் உணர்வதுபோல உணரமுடியாது. எனவே அவர்கள் அந்தப் பிரச்சினையை எடுக்கும்போது மற்றவர்கள் ஆதரவாக வரவேண்டும். பெரியாரும்கூட நிச்சயமாய் அப்படி ஆதரவாக இருந்திருப்பார். இன்றும்கூட தீண்டாமைப் பிரச்சினையை எடுக்கும்போது பெரியார் இயக்கத்தவர்கள் ஆதரவாக வருவதுதான் அனுபவபூர்வமான உண்மை.

www.tamilarangam.net

தவிர்க்க வேண்டிய விசயம்னு வரும்போது.... ஜனநாயக மறுப்பு என்பது அவரிடம் தொடர்ந்து இருந்து வந்தது. கட்சி உடைவதற்கு அதுவும் ஒரு காரணம். அப்புறம் அரசியல்னாலே மோசம், சாக்கடை அப்பிடீன்னு சொன்னதை நாம அங்கீகரிக்க முடியாது. நாம ஒரு மாற்றை வச்சாகணும். நான் கேட்ட ஒரு கூட்டத்திலேகூட முனிசிபாலிட்டியையெல்லாம் அரசு நிர்வாகமாக மாற்றணும்; தேர்தல் அரசியல்னு வந்தால் உருப்படாதுன்னார். இது எங்கே கொண்டுபோய் விடுதுன்னா, யார் வேண்டுமானாலும் ஆட்சிக்கு வந்துட்டுப் போகட்டும், நாம ஆதரிச்சு எதையாவது சாதிக்க முடியுமான்னு பார்ப்போம் என்கிற நிலைப்பாட்டை மேற்கொள்ள வைத்து ஒட்டுமொத்தமாக அரசு எதிர்ப்பு என்பதை மழுங்கடித்துவிடுகிறது.

மாற்றுக் கலாச்சாரம் எல்லாமே அரசு எதிர்ப்புன்னு பார்த்திட முடியுமா? திராவிட இயக்கங்களெல்லாமே தேசிய இனப் பிரச்சினை போன்ற விசயங்களில் அரசை எதிர்க்க வேண்டிய நேரங்களிலெல்லாம் சமரசமாகிப் போனதற்கு இது எவ்வளவு காரணமாகியிருந்திருக்கிறது? சமீபத்தில்கூட ஜெயலலிதா கிட்ட அஞ்சு லட்சம் வாங்கியபோது இது ஈரோட்டுப் பாரம்பரியம் தான்னு வீரமணியால நியாயம் கற்பிக்க முடிந்ததை நாம் மறந்துவிடக்கூடாது. அதனால்தான் தடாவை எதிர்த்து அவர்கள் முன்னுக்கு வரல்லே. முதநாள்வரை பாப்பாத்தி, அது இதென்னல்லாம் சொல்லிட்டு ஆட்சிக்கு வந்ததும் ஆதரிப்பது என்பதை கட்சி அணிகளும் அங்கீகரித்து விடுவதையும் நாம் பார்க்கிறோம். கேசவன் இந்த விசயத்தைக் கொண்டு வந்திருக்கிறார். ❑



## பெரியாரியம்

*ஞானி :*

அரசு, முதலாளியம், ஏகாதிபத்தியம் ஆகியவற்றை கட்சிமூலம் எதிர்க்கும் Macro Politics (பேருரு அரசியல்) தோற்றுப் போய்விட்டது என்பதுபோல அ.மார்க்ஸ் முதலானோர் பேசுகிறார்கள். ஆனால் இதை ஒதுக்கிவிட முடியாது. பெரியார் அம்பேத்கரில் தொடங்கி பல நுண் அரசியல் செயல்பாடுகள் பற்றி இவர்கள் பேசுவார்கள். சாதி எதிர்ப்பு, மத எதிர்ப்பு, பெண் விடுதலை, சுற்றுச் சூழல், மாற்றுக் கலாச்சாரம் என்பவை அவற்றில் சில. இவை தன்னளவில் முழுமையாக இருக்கலாம்; அல்லது ஒன்றிரண்டு இணைந்து கொள்ளலாம். இவற்றை தனிமுதல் அரசியலாக நடத்துவது என்பது எனக்குப் பிடிபடவில்லை.

என்னை நான் ஒரு மரபுவழி மாக்சியன் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஒருசிலர் என்னை மாக்சிசத்தை மதவாதத்துடன் குழப்புகிறேன் என பழி சொல்கிறார்கள். எனக்கு எழும் கேள்வி ஒன்று - இந்தப் பேருரு அரசியலுக்கும் நுண் அரசியலுக்கும் தொடர்பே இல்லையா? சாதி, மதம், பார்ப்பனீயம் இவையெல்லாம் இன்றைய முதலாளியச் சூழலில் வைத்துப் புரிந்து கொள்ள வேண்டியவைகளாக மாறி இருக்கின்றன. இதேபோல நுண் அரசியல் எதையும் பேருரு அரசியலிலிருந்து பிரித்துப் பார்க்க முடியாது. பேருரு அரசியலை ஒதுக்கி வைத்துவிட்டு நுண் அரசியலை நடத்த முடியுமா? மாக்சியத்திற்கு மரியாதை குறைந்த சூழலில் அதற்குள் போகாமல் நுண் அரசியல் பேசலாம் என நினைக்கிறார்களா?

www.tamilarangam.net

பெரியாரை முழுமையாகப் புரிந்து கொள்ள வேண்டுமானால் சாதி/மத/பார்ப்பன எதிர்ப்பாக அதைச் சுருக்கிவிட வேண்டாம். இவையெல்லாம் இரண்டாயிரம் மூவாயிரம் வருடங்களாக ஒரே வடிவத்தில் இல்லை; இன்று பெரிதும் மாற்றமடைந்துள்ளன. இவற்றை நமது காலத்தில் வைத்துச் செயல்படுத்த வேண்டுமானால் இவற்றை முதலாளியம், ஏகாதிபத்தியம், அரசு எதிர்ப்பு ஆகியவற்றோடு சம்பந்தப்படுத்த வேண்டும். சமதர்மம் என்பதை மையப்படுத்தி அரவது கோட்பாடுகளையெல்லாம் அதை நோக்கிக் குவிக்க வேண்டும். மாற்றுக் கலாச்சாரத்தையெல்லாம் முழுமையாக எதிர்க்க வேண்டாம். அதனையும் இதற்குள் கொண்டுவந்துவிடலாம். பழைய மாக்சியவாதிக்கு நுண் அரசியலைப் புரிந்து கொள்வது கஷ்டமாக இருக்கலாம். இன்றைய மாக்சியவாதிக்கு பெண்ணியத்தைப் புரிந்தகொள்வது கஷ்டமில்லை. மாக்சியப் பார்வை ரொம்ப வளமானது. பெரியாரையும் அம்பேத்கரையும் எதிர்நிலையாகப் பார்க்க வேண்டியதில்லை.

இப்படிக்கூடப் பார்க்கிறேன். இந்தப் பெண்ணியம் மாதிரி நுண் அரசிய[illegible] கொஞ்சக் காலத்திற்கு தனிமுதல் அரசியலாக நடத்துவதுகூடத் தேவைதான். பேருரு அரசியலுடன் எப்படி இணைப்பது என்பது தெளிவாகவில்லையானால் தனியாக நடத்துவதில் தவறில்லை. ❑

## கல்யாணி, ஞானி

107

***அ.மார்க்ஸ் :***

நுண் அரசியலை தனிமுதல் இயக்கமாக நடத்துவது குறித்த ஞானி அவர்களின் எச்சரிக்கையோடு நான் முழுமையாக உடன்படுகிறேன். ஏனெனில் இன்று அப்படிச் சில போக்குகள் உள்ளன. சுற்றுச் சூழல் பற்றிப் பேசுவார்கள் ; அம்பேத்கர் நூற்றாண்டு பற்றியும் சாதிக் கொடுமைகள் பற்றியும் கண்டு கொள்ள மாட்டார்கள். சுற்றுச் சூழல் -ஏகாதிபத்திய எதிர்ப்பு -அறிவியல் எதிர்ப்பு - காலனிய ஆட்சிக்கு முந்திய இந்தியப் பொற்காலம் -இந்துத்துவ மேன்மை என்பதாக ஒரு போக்கு இருக்கிறது. தரம்பால், அஷிஷ்நந்தி, ஜி.எஸ்ஆர், கிருஷ்ணன் போன்றோர் இதற்கு உதாரணங்கள். அண்மையில் பாரதீய ஜனதாவின் கோவிந்தாச்சார்யா எழுதிய கட்டுரையொன்றில் தரம்பாலையும் நந்தியையும் ஆதாரம் காட்டி எழுதியுள்ளதை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். பதினெட்டாம் நூற்றாண்டில் நூறுவகை அரிசி இருந்தது என்பார்கள் ; ஆனால் 90 சதம் மக்கள் கூழைத்தானே குடித்தார்கள் என்று கேட்டால் பதில் வராது.

அதே சமயத்தில் ஏகாதிபத்திய எதிர்ப்பு, சுற்றுச் சூழல், சாதி எதிர்ப்பு போன்றவற்றை இணைப்பதில் கெயில் ஓம்வேத் போன்றோரை உதாரணமாகச் சொல்லலாம். ஞானி இவர்களோடு தொடர்பு வைத்துக்கொள்ள வேண்டும். நிறப்பிரிகை நுண் அரசியலை மட்டும் பேசுவதாக ஞானி சொன்னார். தீவிரமான பேருரு அரசியலில் நேரடியாக ஈடுபடுபவர்கள் என தினமலர் எங்களைக் குற்றம் சாட்டுகிறது. சோசலிசக் கட்டுமானம், ஏகாதிபத்தியம் போன்றவை குறித்த

www.tamilarangam.net

தொடர்ச்சியான அக்கறை காட்டிவருவது நிறப்பிரிகை. வளைகுடாப் போரில் ஏகாதிபத்தியத்தின் செயல்பாடு குறித்து மிக விரிவான கட்டுரை எழுதியுள்ளோம். தகவல் தொடர்பை மையமாய் வைத்து ஏகாதிபத்தியம் பற்றி எழுதியுள்ளோம். உலகப் பொருளாதார அமைப்பின் பின்னணியில் புதிய பொருளாதாரக் கொள்கை பற்றி விரிவாக கட்டுரை ஒன்று அடுத்த இதழில் வருகிறது. ஏகாதிபத்திய எதிர்ப்பு என்ற பின்னணியில் பெரியாரைப் பார்ப்பது என்கிற வகையில் பெரியாரின் மொழிக் கொள்கை பற்றிய நிறப்பிரிகை-6 இல் வெளிவந்துள்ள கட்டுரையையும் சுட்டிக் காட்ட விரும்புகிறோம்.

மாக்சியம் காலாவதியாகிவிட்டதாகவும் நிறப்பிரிகை கருதவில்லை. இது குறித்த விரிவான ஆய்வுகளை தமிழ்ச் சூழலில் நடத்தியவர்களும் நிறப்பிரிகை சார்ந்த தோழர்கள்தான். ''மாக்சியம் தோற்கவில்லை'' என வாதிட்டவர்களும் நாங்கள்தான். அறியப்பட்ட மாக்சியத்திற்குக் கிடைத்த அடிகளின் வெளிச்சத்தில் ஆழமாக ஆராயும்போதுதான் ஆளும் வர்க்கம் என்கிற உள்ளடக்கத்தை மட்டும் மாற்றி சிவில் சமூகத்தின் பல்வேறு வடிவங்களையும் அப்படியே வைத்திருந்ததின் விளைவுதான் இன்றைய தோல்விகள் என்கிற முடிவுக்கு வந்தோம். அந்த வகையில்தான் ஏகாதிபத்திய/முதலாளிய/அரசதிகார எதிர்ப்பு என்பதை வாயளவில் உச்சரித்துக் கொண்டு சிவில் சமூகத்தையும் மரபுக் கருத்தியலையும் வலுவூட்டும் வேலையைச் செய்வது அபத்தம் என்கிற அடிப்படையில் இதுவரை புறக்கணிக்கப்பட்ட நுண் களங்களில் அதிகார எதிர்ப்பு, சிவில் சமூக நிறுவனங்களின்மீது தாக்குதல் ஆகியவற்றின்பால் கவனம் ஈர்க்கிறோம்.



## பெரியாரியம்

பேருரு அரசியல் முக்கியம் என்று சொல்லிக் கொள்ளும் யாருடைய செயல்பாட்டைக் காட்டிலும் பேருருக் களத்தில் எங்களின் செயல்பாடுகள் குறைந்தவையல்ல என்பது எல்லோருக்கும் தெரியும். மாறாக பேருரு அரசியல், ஏகாதிபத்திய எதிர்ப்பு என்கிற போர்வையில் மதத்துக்கு -குறிப்பாக இந்து மதத்துக்கு-வக்காலத்து வாங்கக்கூடாது என்கிற எச்சரிக்கை நமக்குத் தேவை.

கிழக்கு ஐரோப்பாவில் இன்று பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. சௌசெஸ்கு போன்ற கொடுங்கோலர்கள் தூக்கி எறியப்பட்டுள்ளனர். இந்த எதிர்ப்பு இயக்கங்கள் பற்றிய விரிவான ஆய்வு நம் யாரிடமும் இல்லை. நானறிந்தவரை இவற்றில் பல 'சோசலிச' ஆட்சியின்கீழ் நுண் அரசியல் இயக்கங்களாக இருந்தவைதான் -குறிப்பாக பசுமை இயக்கங்கள் போன்றவை களாக. எல்லா அம்சங்களிலும் இவை சரியானவை என நான் சொல்லவில்லை. ஆனால் நுண் களங்களில் செயல்பட்டுக் கொண்டிருந்த இந்த எதிர்ப்புகள் வாய்ப்பு வரும்போது வெடித்து அரசுகளைத் தூக்கி எறிந்துள்ளன. ருமேனியா வில் சௌசெஸ்கு வீழ்ந்த பிறகு ஆட்சியதிகாரத்தை வைத்துக் கொள்வோமா, வேண்டாமா என்கிற பெரிய விவாதமே கவிழ்ப்பை நடத்தியவர்கள் மத்தியில் நிகழ்ந்தது நினைவிருக்கலாம். இவை குறித்தெல்லாம் விரிவான ஆய்வுகள் நமக்குத் தேவை. சுருக்கமாய்ச் சொல்வதானால் நாங்கள் கூறுவ தெல்லாம் இதுதான் : தனி முதலான நுண் அரசியல் இயக்கங்களை நடத்துவது எங்கள் நோக்கமல்ல. அதேசமயத்தில் சிவில்சமூக நிறுவனங்கள், மரபுக் கருத்தியல் ஆகியவற்றோடு சமரசம் செய்துகொண்டு பேருருஅரசியல் பேசமுடியாது. ❑

www.tamilarangam.net

***கோ.கேசவன் :***

இங்கே பேசப்பட்ட கருத்துக்களில் தோழர் ஞானி பேசியவற்றில் எனக்கு பேரளவு உடன்பாடு உண்டு. 'புத்திசம்', 'ஜெய்னிசம்' என்பதுபோல இந்த 'பெரியாரிசம்' என்கிற தொடரே நமக்குள் இருக்கிற சமய வழிப்பட்ட கலாச்சாரத்தின் ஒரு தாக்கம்தான். பெரியார் பற்றிய மதிப்பீடுகளை கம்யூனிஸ்ட் கட்சிகளில் செய்திருக்கிறார்கள். பெரியாரியப் பாரம்பரியத்திலேயே ஆனைமுத்து, குணா போன்றவர்கள் செய்துள்ளனர். தமிழ்நாட்டில் பெரியாருக்கு உள்ள அளவிற்கு வேறு எந்தத் தலைவருக்கும் இவ்வளவு சிறந்த Documentation - ஆவணப் பதிவுகள் - கிடையாது. இருந்தாலும் பெரியாருடைய தேர்ந்தெடுக்கப்பட்ட படைப்புக்கள்தான் தொகுக்கப்பட்டனவே ஒழிய மார்க்ஸ், ஏங்கெல்ஸ், லெனின் ஆகியோருக்கு உள்ளதுபோல Collected Works கலை வரிசைப்படி தொகுத்தால், பெரியார் பற்றிய இன்றைய நமது மதிப்பீடுகளைக்கூட மாற்றிக் கொள்ள வசதியாக இருக்கும்.

1973 இல் குணாவின் கட்டுரை வந்தது. சிறந்த வழிகாட்டல் கட்டுரை. இன்றும் அதற்கு மறுப்பு வந்ததில்லை. மறுப்பு வரவேண்டும். சர்வதேச அளவில் ஏற்பட்டுள்ள பல மாற்றங்கள் பெரியார் பற்றிய மறுமதிப்பீட்டை அரசியல் ரீதியில் தேவையாக்கியிருக்கிறது. பெரியார் பற்றிய மதிப்பீட்டில் இரண்டு போக்குகள் உள்ளன. அ.மார்க்ஸ் சொன்னதுபோல பெரியாரியத்தில் இடைவெளிகள் உள்ளன.



இப்படிச் சொல்லிக்கொண்டே முழுமுற்றாக அங்கீகரிக்கும் போக்கும் உள்ளது. குணாவிடம்கூட இந்தப் போக்கை நாம் காண முடியும். கருணா மனோகரன்கூட தனிப்பட்ட பேச்சில் பல விமர்சனங்களை வைத்தாலும் முற்றாக அங்கீகரிக்கும் போக்கே அவரிடமும் உள்ளது. மற்றொரு போக்கு இடைவெளிகளை விவாதத்திற்கு முன்வைப்பது; சாதக அம்சங்களைத் தொகுத்துக் கொள்வது. ❑

***அ.மார்க்ஸ் :***

உங்கள் கட்டுரையில் பெரியாரை 'எதிர்மறை ஆசான்' என்று குறிப்பிட்டுள்ளீர்கள். அப்படியானால் சாதக அம்சமே இல்லை என்பதாகப் பொருள்படுகிறது. கொஞ்சம் விளக்கினால் உதவியாயிருக்கும். ❑

***கேசவன் :***

சொல்கிறேன். ஞானி குறிப்பிட்டதுபோல பெரியாரிடம் தொடர்ந்து ஒரு அரசாதரவுப் போக்கு உள்ளது. அவரது அரசியல் வாழ்க்கையில் 1937-1939, 1952-1954 காலகட்டங்களிலிருந்த ராஜாஜி அரசுகளைத் தவிர மற்ற எல்லா தமிழக அரசுகளையும் ஆதரித்துள்ளார். போராட்டங்கள் நடத்தியிருந்தாலும்கூட அவை அய்க்கியத்தை நோக்கிய போராட்டங்களாகவும் அரசின்மீது நம்பிக்கை ஏற்படுத்தக்கூடிய போராட்டங்களாகவுமே இருந்துள்ளன. அடுத்து பெரியாரிடம் தொடர்ச்சியாக ஏகாதிபத்திய ஆதரவு இருந்துவந்திருக்கிறது. இதில் பெரியாருக்கும் அம்பேத்கருக்கும் நுண்ணிய வேறுபாடுகள் உள்ளன. யூரிலோவ்

www.tamilarangam.net

என்கிற ரசியர் எழுதியுள்ள 'இந்தியாவில் தாழ்த்தப்பட்ட சாதிகள்' என்ற நூலில் அம்பேத்கரின் ஏகாதிபத்திய எதிர்ப்பு பற்றிய குறிப்பு உள்ளது. பெரியாரைப் பொறுத்த மட்டில் அப்படி இல்லை. பெரியார் பற்றிய 'Myth' தேவையில்லை. வரலாற்றுக்கு நேர்மையாக நாம் இருப்போம். பெரியாரிடம் நான் கற்றுக்கொள்ள எதுவுமில்லை. மாறாக எதிர்க்கப்பட வேண்டியவராகவே உள்ளார். அதனால்தான் எதிர்மறை ஆசான் என்றேன்.

கம்யூனிசம் வேண்டுமென்றெல்லாம் அவர் சொல்லியிருந்தாலும்கூட அவரது சிந்தனைகள், செயல்கள் எல்லாவற்றையும் வரம்புக்குட்படுத்தியது எது என்று பார்த்தால் அது இந்த முதலாளியச் சிந்தனைதான். இதுதான் என்னைப் பொறுத்தமட்டில் பெரியாரியத்தின் மையம். பல தளங்கள் இருந்தாலும் மையம் இதுதான். இந்த மையத்தை நான் எதிர்த்தாக வேண்டும். அதுதான் சரியான விமர்சனப் பார்வை. எஸ்.வி.ராஜதுரையும் வ.கீதாவும்கூட பெரியாரியத்தைக் கடக்கவேண்டும் என்கிறார்கள். அது சரிதான். ஆனால் அவர்களும்கூட எழுதும் போது, பெரியாரின் சாதகமான அம்சங்களை மட்டுமே முன்வைக்கிறார்கள். எந்த அம்சத்தில் ஊன்றி நின்றுகொண்டு எந்த அம்சத்தைக் கடக்க வேண்டும் என்பதை தெளிவாகச் சொல்ல வேண்டும். ஆய்வு செய்ய வேண்டும். என்னைப் போன்றவர்களைவிட நல்ல நூலக நேர வசதியெல்லாம் உடையவர்கள் அவர்கள். அரசாங்கத்திடம் 5 இலட்சம் வாங்கியதை கோட்பாட்டு ரீதியில் நியாயப்படுத்த முடிகிறது பெரியாரியத்தில். இதையெல்லாம் ஏற்றுக் கொள்ள முடியாது என்பதால்தான் அவரை எதிர்மறை ஆசான் என்கிறேன்.

## 110 பெரியாரியம்

சிறீரங்கம் கருவறைப் போராட்டம் பற்றிச் சொன்னார்கள். அது Frame Work க்கு -வரைவுச் சட்டகத்திற்கு- உட்பட்ட போராட்டம்தான். அதை மீறிய போராட்டம் தேவை. அப்படிச் செய்தால்தான் சட்டகத்தை உடைக்க முடியும். சட்ட மீறல் செய்ய முயன்றார்கள் ; கைதானார்கள். தாண்டிக் குதித்தும் சிலர் உள்ளே நுழைய முயன்றார்கள். சட்ட மீறல் தேவை.

ஒரு நீண்டகால நோக்கில் மற்றவர்களையும் கோயிலுக்குள் அனுமதிக்கவும் அர்ச்சகராக்கவும் பார்ப்பனீயம் தயாராக இருக்கிறது. தாழ்த்தப்பட்டவர்கள் கோயிலுக்குள் நுழையலாம் என்பது சட்டமானதுகூட ஒரு பார்ப்பனர் முதலமைச்சராக இருந்தபோதுதான். நாம் சொல்வதைப்போல பார்ப்பனர்கள் எதிரிகள் என்றிருந்தால் சட்டமாகியிருக்காது. பார்ப்பனர்கள் ஒருவிதமான நெகிழ்ச்சித் தன்மையோடு தங்களது ஆதிக்கத்தைக் கட்டமைத்துக் கொள்கிறார்கள். வேதாகமக் கல்லூரியில் இட ஒதுக்கீடும் பின்னர் அவர்களுக்கு வேலையும் தருவேன் என்கிறார் ஜெயலலிதா. திருப்பராய்துறை ராமகிருஷ்ண மடத்தில் ஆண்டுக்கு நான்கு முறை வேதாகம வழிபாட்டு முறைப் பயிற்சி பா.ஜ.க, ஆர். எஸ். எஸ். சார்பில் நடைபெறுகிறது. எல்லாச் சாதிகளுக்கும் அங்கே வேதாகமப் பயிற்சி கொடுக்கப்படுகிறது. ஜெயலலிதா அதை நிறுவனப்படுத்துகிறார். 1938 இல் கோயிலை திறந்துவிட்ட மாதிரி ஒரு 1998 இல் கருவறையையும் கூட திறந்து விடலாம்.

www.tamilarangam.net

பார்ப்பனியத்தின் பொருளியல் வேர்களை நாம் கண்டறிய வேண்டும். அன்று அது நிலவுடைமையிலிருந்தது. இன்று முதலாளியத்தில் இருக்கிறது. இன்று தமிழ்நாட்டின் பொருளியல் நிலையை எடுத்துக் கொண்டால் மேலே இருப்பது இரண்டே இரண்டு சாதிகள் தான் –ஒன்று பார்ப்பனர், அடுத்தது செட்டியார். பார்ப்பனியத்தின் வேர்கள் அரசதிகாரத்திலும், முதலாளியத்திலும் உள்ளன. இதனை உடைக்க சட்டகத்தை மீறிய போராட்டங்கள் வேண்டும். பெரியார் தொடர்ந்து பிரச்சாரம், கிளர்ச்சி மதிப்பீடுகளுக்கு முக்கியத்துவம் அளித்தார். பிரச்சினையை கடைசிவரை கொண்டு போனதேயில்லை. பெரியாரது கிளர்ச்சி வடிவம் சாதாரணமானவர்களைக் கூட ஈர்ப்பதாகவும், புனிதங்களாக ஏற்றுக் கொண்டுள்ள குறிகளை உடைப்பதாகவும், அதிர்ச்சி மதிப்பீடு தரக் கூடியதாகவும் இருக்கும். அந்தவகையில் 'நீ சாமி கும்பிடுறியா, நான் கும்பிடமாட்டேன்' என்கிற எதிர்க் கலாச்சார நடவடிக்கைகளை நாம் பெரியாரிடத்திலிருந்து எடுத்துக் கொள்ளலாம். அதைத் தாண்டி சமத்துவக் குறிக்கோளை பெரியாரிய நடைமுறை ஈட்டித் தருமா என்றால் அது முடியாது. எனவே பெரியார் ஒரு பகுதி ஆசானாக மட்டுமே இருக்கமுடியும். யாருடைய முகமும் கோணும் என்றில்லாமல் பெரியாரை விமர்சனம் செய்து இட்டு நிரப்ப வேண்டிய இடைவெளிகளை நிரப்பி அவரைக் கடக்க வேண்டும். அப்படிக் கடக்கும்போது தான் பெரியார் பயன்படுவார். கூட்டு விவாதத்தின் முடிவு இப்படி இருந்தால்தான் அது பயன்படும்.

❑



***பரமசிவன் :***

1993 இலேயே கருவறை நுழைவுப் போராட்டத்தின் வரைவுச் சட்டகத்தை உடைக்க முடியவில்லை. ஆனாலும் அதை வரவேற்கிறீர்கள். ஆனால் 1923, 28, 37 களில் போராட்டங்கள் நடத்திய பெரியாரிடம் இத்தகைய வரம்புகள் இருந்தது இயற்கை தானே? அதை அங்கீகரிக்க மறுக்கிறீர்களே? இதற்கொரு அளவுகோல் அதற்கொரு அளவுகோலா?

❑

***கேசவன் :***

பெரியாருக்கு வரம்புகள் இருந்தது உண்மைதான். பெரியாரியத்திலிருந்து என்ன கற்றுக் கொள்கிறது என்பதுதான் இங்கே முக்கியம்.

❑

***அ.மார்க்ஸ் :***

கேசவன் அவர்களோடு எங்களுக்கும் கருத்துமாறுபாடுகள் இருந்தபோதிலும் தொடர்ந்து திராவிட இயக்கங்கள், பெரியார் குறித்து ஆய்வுகள் செய்து வருபவர் என்கிற முறையிலும் ஒரு மாற்றுப் பார்வையை Juxtaposed ஆக வெளியிடுவது பயனளிக்கும் என்ற வகையிலும் அவரிடம் கட்டுரை கேட்டோம். பெரியார் மையம் போன்ற வேறு பலரிடமும் கூட கேட்டோம். கேசவன் அதை ஏற்று கட்டுரை தந்தார். அதற்கு முதலில் நன்றி. தன்னுடைய பேச்சில் பெரியாரியம் என்பது 'புத்திசம்' என்பது போல நமக்குள் இருக்கும் மத உணர்வின் வெளிப்பாடு என்று குறிப்பிட்டார். அதிகாரம் செயல்படும் களங்களில் மொழியும்

www.tamilarangam.net

ஒன்று என்கிற வகையில் சொற்தேர்வில் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டிய அவசியத்தை கேசவன் சுட்டிக்காட்டியதை நான் முழுமையாக ஏற்றுக் கொள்கிறேன்.

ஆனால் இந்த எச்சரிக்கை மாக்சியம் என்கிற சொல்லுக்கும் பொருந்தும் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. பேராசிரியர் பரமசிவன் கேட்டது போல அதற்கொரு நியாயம், இதற்கொரு நியாயம் கூடாது. கேசவன் தனது கட்டுரையில் (நிறப்பிரிகை-6, பக்.14) வரையறையை மறுக்கிற, வரலாற்றுவாத, வர்க்கவாத, சாராம்சவாத நிலைப்பாடுகளைப் புறக்கணிக்கிற சூழலும் தமிழில் நிலவுவதாகக் குறிப்பிடுகிறார். அவர் எங்களைத்தான் குறிப்பிடுகிறார் என்பது இங்கே வந்துள்ள பலருக்கும் தெரியும். இந்தச் குற்றச்சாட்டு எந்தளவிற்கு நியாயம் என்கிற கேள்விக்குள் இங்கே புகவேண்டாம். வரையறையை மறுப்பது குற்றம் எனச் சொல்லும் அவர் பின்னர் அத்தகைய வரையறையை உருவாக்கும் முயற்சியை மதக் கலாச்சாரத்தின் வெளிப்பாடு எனச் சொல்வதிலும் ஒரு பெரிய முரண் இருப்பதாகத் தெரிகிறது. இதுகுறித்து கேசவனும் தோழர்களும் சிந்திக்க வேண்டும்.

சாராம்சம், மையம் என்ற இரண்டையும் குழப்பிக் கொள்ளும் ஒரு முறையியல் பிழையும் அவரது கட்டுரையிலுள்ளது. அதை வேறோர் சந்தர்ப்பத்திற்கு ஒதுக்கி வைத்துவிட்டு விவாதப் புள்ளிக்கு வருவோம். எதிர்மறை ஆசான் என்ற கூற்றுக்கும் இட்டு நிரப்ப வேண்டிய இடைவெளிகளை நிரப்பிக் கடத்தல் என்ற கூற்றுக்கும் இடையே முரண்கள் உள்ளன. இடைவெளிகளை நிரப்புதல்



என்பது நிரப்பிப் பயன்படுத்துவதற்கா, இல்லை கடந்து செல்வதற்கா என்பதையும் நாம் யோசிக்க வேண்டும்.

சட்டகங்களை (Frame work) தாண்டுதல், சட்டத்தை மீறுதல் என்பதையும் குழப்பிக் கொள்ளக் கூடாது. போராட்ட வடிவம் என்பது இயக்க வலிமையோடு தொடர்புடைய விசயமும் கூட. சிறிய இயக்கங்கள் பல தீவிரமான நடவடிக்கைகளில் பரந்துபட்டவர்களை இறக்கிவிட்டுப் பின்னடைவுக்குள்ளான உதாரணங்கள் நாம் அறிந்தவை. ஆனால் வலிமையாக இருந்த காலத்திலும் பெரியாரது போராட்டங்கள் வலுவாக அரசு எதிர்ப்புத் தன்மையுடன் இருந்ததில்லை என்பது சரியான விமர்சனம்தான். ஆனால் ராமன் சிலையை செருப்பால் அடித்தல், தேசப்படத்தை எரித்தல், கருவறை நுழைவு என்பதெல்லாம் குறியீடுகளை உடைப்பது என்பதோடு அரசுக்கு நெருக்கடி கொடுக்கக் கூடிய ஒன்று என்பதையும் மறந்துவிடக் கூடாது. தேசியக் கொடியை எரிப்பது என்பதெல்லாம் ஒரு அரசாங்கத்தைப் பொறுத்த மட்டில் ரொம்பவும் சிக்கலான விசயம். தடுத்துவிட முயற்சிப்பார்கள். திடீரென நடந்துவிட்டால் மறைக்க முயற்சிப்பார்கள்.

இறுதியாக : பார்ப்பனீயம் தன்னை நெகிழ்த்திக் கொள்கிறது ; திருப்பராய்த் துறையில் தாழ்ந்த சாதியினருக்கும் வேதாகமப் பயிற்சி அளிக்கப்படுகிறது ; 1998 வாக்கில் கருவறைக்குள்ளேயே கூட பார்ப்பனீயம் நம்மை அனுமதித்து விடலாம் என்று கேசவன் குறிப்பிட்டார். மார்க்சிஸ்ட் கட்சி, ஆர்.எஸ்.எஸ்

www.tamilarangam.net

போன்றவை முன்வைக்கும் வாதம்தான் இது. இரண்டு நாள் முன்னதாக சிறீரங்கம் நகர ஆர்.எஸ்.எஸ் தலைவரை கள ஆய்வுக்காகப் பேட்டி கண்ட போது, திருப்பராய்த்துறையில் தாழ்ந்த சாதியினருக்கு அர்ச்சகப் பயிற்சி அளிப்பதை அவரும் சொன்னார். உண்மை என்னவென்றால் தமிழ்நாட்டின் கிராமக் கோயில்கள் பலவற்றில் கீழ்சாதியினர் பூசாரிகளாக உள்ளனர். அங்கே எல்லாம் வேதாகமப்பூசை முறைகள் கிடையாது. பார்ப்பனீய ஒதுக்கமும் கிடையாது. அத்தகைய கோயில்களையும் பார்ப்பனீய நெறிமுறைக்குள் கொண்டு வருவதற்கும் வேதாகம வழிமுறைக்குள் இழுப்பதற்கும் செய்யப்படும் பார்ப்பனீய மயமாக்கல் முயற்சிதான் இதுவேயொழிய பார்ப்பனீயம் நெகிழ்வதற்கான அடையாளமாய் இதைப் பார்த்தால் ஏமாந்து போவோம். பார்ப்பனர்கள் எள்ளவும் இதற்குத் தயாராக இல்லை என்பதைத்தான் எங்கள் கள ஆய்வும் வெளிப்படுத்தியது. 1998 இல் ஒருவேளை கருவறைக்குள் நுழைவது சட்டமாக்கப்பட்டால் அது நமது போராட்டங்களின் விளைபொருளாக த்தான் இருக்குமேயொழிய பார்ப்பனீயம் விரும்பிச் செய்ததாக இருக்காது.

❑

*காளிமுத்து* (மதுக்கூர்) :

சாதி இழிவுகளைப் போக்க எந்த தீவிரப் போராட்டத்தையும் பெரியாரியம் நடத்தவில்லை. எப்போதாவது நடந்த போராட்டங்களும் தீண்டாமையின் இழிவு களிலிருந்து தொடங்கவில்லை. பார்ப்பன ஆதிக்கத்தை ஒழிக்க வந்தவர்கள் இந்து மேலாதிக்க சாதிகளின் அருவடிகளாய் மாறிப்போய் சீரழிந்தார்கள். எந்த

 

ஒரு கருப்புச் சட்டைக்காரனும் தீண்டத்தகாதவர்களை இழிவாக்கக் கருதினான். பார்ப்பன எதிர்ப்பில் பறையனாக மாற வேண்டும். அப்போதுதான் பெரியாரியம் வெல்லும். மார்க்சியத்துடனும் அம்பேத்கரியத்துடனும் இணைந்து பெரியாரியம் வர்க்கப் போராட்டமாக மாறினால் அன்றி வெற்றிபெறப் போவதில்லை.

❑

*ராஜன்குறை :*

பெரியாரை விரிவாக மட்டுமல்ல ஆழமாகவும் படிக்க வேண்டும். பூணூல் போடுவதை தடுக்க வேண்டாமா? என்று கேட்டுவிட்டு பார்ப்பான், பறையன் என்று இருந்தால் ஆறுமாதம் கடுங்காவல் தண்டனை வேண்டும் என்கிறார். வாயால்தானே சொல்கிறார், தூக்குத் தண்டனை, ஆயுள் தண்டனை என்று சொல்லக்கூடாதா? ஆறுமாதம் என்றது ரொம்பவும் மலைப்பா இருக்கு. ஏன் அப்படி ஒரு token ஆக ஒரு தண்டனையைச் சொல்றார்? முழுக்க முழுக்க வித்தியாசமான அவரது அரசியல் நோக்குகளை ஆராயக்கூடிய சாத்தியக்கூறுகள் உள்ளன. கேசவன் என்னென்ன காரணங்களுக்காக அவரை எதிர்மறை ஆசான், பகுதி ஆசான் என்கிறாரோ அதே காரணங்களுக்காக அவரை நேர்மறை ஆசானாகப் படித்துப் பார்க்கணும். அதுவும் ஒரு முயற்சிதான். உலகப் புரட்சிகள் எத்தனை நடந்திருக்கு. 93 இல் என்ன நடந்தது என்றெல்லாம் யோசித்தால் நாற்பதாண்டு கால அபத்த நாடகங்களை யோசித்தால் நிறைய விசயங்கள் நமக்குப் புரியும். பெரியாரை ஆசான்னு சொல்றதுகூட ஏதோ அவர் செய்ததை அப்படியே செய்யணும்கிறதுக்கு அல்ல. இன்னைக்கு முற்றிலும்

www.tamilarangam.net

வேறுபட்ட வகையிலே கூட செய்யவேண்டி இருக்கலாம். ஆனால் ஒரு முழு மதிப்பீடு என்கிற வகையில் அவரை ஆழமாகவும் அகலமாகவும் படிக்கணும்.

❑

***தி.சு.நடராசன் :***

பெரியாருடைய மையம் என்ன என்று யோசிப்பதைக் காட்டிலும் இன்றைய சமூக பொருளாதார சூழலில் உங்களுடைய, நம்முடைய அரசியல் நிலைப்பாடு என்னன்னு தீர்மானம் பண்ணிக் கொண்டு, அவருடைய பொருத்தப்பாடு, இன்றைய Relevance என்னன்னு யோசிக்கணும்.

❑

***ரவிக்குமார் :***

ரசியா மற்றும் கிழக்கு ஐரோப்பிய நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து தலைமை, கட்சி பற்றியெல்லாம் நிறைய விமர்சனங்கள் வந்துட்ருக்க விசயம் எல்லோருக்கும் தெரியும். தலைவர் தன்னைப் பற்றிய பிம்பத்தை கட்டியமைக்காமப் பாத்துக்கிறதுக்கு முக்கியமா தலைவருக்கும் அவர் யாருடன் உரையாடுகிறாரோ அந்த மக்களுக்கும் இடையிலான உரையாடலுக்குப் பயன்படுத்தப்படும் மொழி எத்தகையதுங்கிறது முக்கியமானது. அந்தவகையில் பெரியார் பயன்படுத்தும் மொழியில் இந்த சுய எள்ளல்ங்கிறது தொடர்ச்சியா இருக்கு. குறிப்பாக தலைவர்களது இரங்கற் செய்திகளில், அப்புறம் பேசுகிற இடங்களில் எல்லாம் நான் சொல்றதை அப்படியே நம்ப வேண்டான்னு சொல்றது. தன்னுடைய ஒரு பெரிய இயக்கமா மாறக்கூடாது என்கிறதுக்கு உள்ளுக்குள்ளேயே ஏதோ



ஒரு lever ஐ வச்சிருந்தாரா? மணியம்மையைத் திருமணம் செய்யறப்போ இத்தனை ஆண்டுகளா பொதுவாழ்க்கையில் நம்புறது மாதிரி ஒருத்தரு கூட இல்லைங்கிறார். பெரிய தொண்டர் பட்டாளத்தை உருவாக்கித் தன்னை தலைவராக்கிக் கொள்வதில் அவருக்கு ஆர்வமில்லையா? பனகல் அரசர் இறக்கும்போது வீட்டிலே அப்பா இறந்தா அடுத்து ஒரு அப்பா வந்து குடும்பத்தை நடத்துவார்னு நாம் எதிர்பார்க்கிறதில்லே, ஆனால் தலைவர் இறந்தா மட்டும் அடுத்து ஒரு தலைவர் வந்து கட்சியை நடத்தம்னு சொல்றோம். பனகல் அரசர் செத்ததை ஒரு நல்ல தருணமாப் பயன்படுத்திக்கிட்டு அடுத்து நாம் ஒவ்வொருத்தரும் ஆக வேண்டியதைச் செய்யணும் என்கிறாரு. தலைமை வழிபாட்டை உடைக்கிற ஒரு சில கூறுகள் பெரியாரிடம் உள்ளதைக் கவனிக்கலாம்.

❑

***விஜி :***

பெரியாரியத்தில் முக்கியமான கூறு பெண்விடுதலை பற்றி அவர் சொன்னதுதான். தீண்டாமை ஒழிப்புடன் இதை இணைத்துச் செயல்படுத்துவது தான் இன்று நமது கடமை. கருப்பாதையை சாத்திக்கோன்னு பெரியார் சொன்னார். அரசாங்கம் அதை வேறோர் அர்த்தத்தில் அதிகாரம் செயல்படுத்துகிற வழியா பயன்படுத்துது. உழைக்கும் பெண்கள் நிறையப் பிள்ளைகளைப் பெற்றுக் கொள்கிறார்கள். நாம் செய்ய வேண்டியது கருத்தறிப்பை நிர்ணயிப்பது உனது உரிமைங்கிற உணர்வை பெண்கள் மத்தியில் தீவிரமாய்

www.tamilarangam.net

பிரச்சாரம் செய்வதுதான். ஒதுக்கி வைக்கப்பட்ட இரு பெரும் பிரிவினராகிய பெண்களும் தாழ்த்தப்பட்டவர்களும் இணைவது என்பதன் மூலம்தான் இன்று பார்ப்பனீயத்தை எதிர்க்க முடியும். பெரியாரியத்தையும் அம்பேத்கரியத்தையும் இணைப்பதுங்கிறது இதுதான். பெண்களுடைய பிரச்சினையைப் பெண்கள்தான் பேச வேண்டும் என்று இன்று சிலர் சொல்கிறார்கள் எப்படித் தாழ்த்தப்பட்டவர்கள் மட்டும் பேசினால் போதாதோ அதேபோல பெண்களும் அவர்களைப் போல ஒதுக்கப்படுகிற சக்திகளோடு இணைஞ்சு நிற்கணும். இதற்கான செயல் திட்டங்கள் நாம் யோசிக்கணும். ❑

*கிராமியன் :*

நடைமுறை அரசியலுக்காகத்தான் நாம் பழைய வரலாறைப் பேசுகிறோம் என்றால் எதிர்க் கலாச்சாரத்தை வழிமுறையாகக் கொண்டு பெண்விடுதலையை நோக்கிய சாதி ஒழிப்பை தமிழக அரசியலில் பயன்படுத்துவதாக இருந்தால் பெரியாரை அந்த நோக்கிலே படிப்பது தான் சரி. மற்றவையெல்லாம் நாங்கள் எத்தகைய தன்னிலைகளாகக் கட்டமைக்கப் பட்டிருக்கிறோமோ அதை தொடர்ந்து தக்கவைத்துக் கொண்டு தேங்கிக் கிடப்பதற்கான வழிதான். பெரியாரை பெண்விடுதலை நோக்கிய சாதி ஒழிப்பு அரசியல்வாதி, அவர் கருத்தியல் தளத்திலே செயல்பட்டார் என்பதை எடுத்துக் கொண்டு மாக்சியத்தை வளப்படுத்த முயற்சித்தால் மட்டுமே அது விடுதலையை நோக்கிய உண்மையான நகர்வாக இருக்க முடியும்.

## ரவிக்குமார், விஜி, வேல்சாமி



*ரவிக்குமார் :*

தமிழவன் எழுப்பிய பிரச்சினையை யாரும் விரிவாய்ப் பேசலை. க.நா.சு வுடன் பெரியாரை ஒப்பிட்டது, இலக்கியத்தைப் புறக்கணிச்சாங்கங்கிற குற்றச்சாட்டை அவர் பெரியார்மீது மட்டுமல்லாமல் நம் எல்லோர்மீதும் சுமத்தியது.... எது இலக்கியம், எது இலக்கியமில்லேங்கிற போராட்டம் தொடர்ந்து நடந்துகிட்டிருக்கு. தமிழவன் எது இலக்கியம், யாரையெல்லாம் இலக்கியவாதியின்னு சொல்றாங்கிறதையெல்லாம் பார்த்தோமானால்.... அவர் முன்னிலைப்படுத்தக்கூடிய ஆட்களுக்கு ஆபத்து வந்துட்டுங்கிறதுதான் அவர் வைக்கிற குற்றச்சாட்டு. மௌனி, க.நா.சு இதுமாதிரி ஆட்களுக்கு. கார்ல் மார்க்சிடம் இருக்கக்கூடிய இசை பற்றிய ஆர்வம், கவிதை பற்றிய ஆர்வம் இதையெல்லாம் இவர்கள் வியந்து போற்றுவார்கள். என்னை 'ஸ்தானோஸ்' ன்னு சொன்னாலும்சரி. இதுமாதிரிக் கூறுகள் மார்க்சிடமிருந்த ஹெகலியத் தாக்கத்தின் விளைவுகள். இது என்ன மாதிரி Meta Physical சிந்தனை களை அவரிடத்தில் ஏற்படுத்தியது என்றெல்லாம் பார்க்கணும். மாக்சியத்திலுள்ள இடைவெளிகள் பற்றிப் பேசும்போது இலக்கியம் பற்றிய அதனுடைய பார்வையும் ஒன்று. அந்தவகையில் மார்க்சிடமிருந்த சில தவறுகளுக்கு பெரியார் இடமில்லாமல் செய்திருந்தார் என்றுதான் சொல்ல வேண்டியிருக்கு. ❑

*வேல்சாமி :*

நிறப்பிரிகை பெரியார் கட்டுரைகளைப் படிச்சிட்டு தஞ்சையிலுள்ள ஒரு பெரியார் தொண்டர் சொன்னார், "இன்றைக்கு பிரச்சார பலம் பார்ப்பனர்களிடம்

www.tamilarangam.net

பெரியளவில் இருக்கு. இந்தச் சூழலில் பெரியார் நடுத்தர சாதிகளுக்காகத்தான் நின்னார், தாழ்த்தப்பட்டவர்களுக்காக இல்லை என்பதெல்லாம் உண்மையாக இருந்தாலுங்கூட நேர்மையான ஆய்வு என்கிற பெயரில் அதையெல்லாம் முன்னிலைப்படுத்தினால் பார்ப்பான் அதை ஊதிப் பெரிதாக்கி தன் நோக்கத்துக்குப் பயன்படுத்திவிடுவான். இன்னைக்கு சார்பு ஆய்வுதான் தேவை'' ன்னு சொன்னார். அவர் சொன்னது நியாயம் போலவும் இருக்கு, தப்பு போலவும் இருக்கு. நாம யோசிக்கணும். 'சூத்திரன்' ங்கிற இழிவை பெரியார் போக்கினார். 'தீண்டத்தகாதவன்' ங்கிற இழிவு இன்னமும் இருக்கு. அதை இல்லாமல் செய்வதற்கான நடைமுறைதான் பெரியார் வழியைத் தொடர்வது. ❑

***அ.மார்க்ஸ் :***

பெரியார் பிற்படுத்தப்பட்டவர் நலனைத்தான் கருதினார் என்பதற்கு ஆதாரமாக அவர் தீண்டப்படாதவர்கள் மத்தியில் பேசும்போது அவர்களை 'நீங்கள்' என விளித்து தன்னை அவர்களிடமிருந்து விலக்கிக் கொண்டதைச் சுட்டிக் காட்டுவதில் ஒரு சிக்கல் இருக்கிறது. இதுகுறித்து ஒரு சரியான புரிதலை அடைய கல்யாணியின் பேச்சில் வந்த ஒரு குறிப்பு பயன்படும். பெரியார் பிறப்பால் பிற்படுத்தப்பட்ட வகுப்பொன்றைச் சேர்ந்தவர் என்கிற பிரக்ஞையோடு நாம் அவரை அணுகவேண்டியிருக்கிறது. தாழ்த்தப்பட்ட மக்களோடு பணிபுரியக்கூடிய பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த ஒருவன் என்கிற வகையில் நான் எதிர்கொள்ளும் சிக்கலொன்றை உங்களோடு பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன்.



மன்னை கல்லூரியில் தாழ்த்தப்பட்ட மாணவர்களோடு விடுதிப் போராட்டத்தில் பங்குபெற்றபோது அவர்களில் ஒருவனாக உணர்வதில் எனக்குச் சிக்கலில்லாமல் இருந்தது. 'நாம்' என்கிற சொல்லில் எல்லோரும் ஒன்றாய் உணர்ந்திருக்கிறோம். ஆனால் இன்று தலித் பண்பாட்டுப் பேரவை போன்ற அமைப்புகளில் பணிபுரியும் ஒரு பிரச்சினை தாழ்த்தப்பட்டவர்கள் அல்லாதவர்களை இணைத்துக் கொள்வதா இல்லையா என்பதுபற்றி அங்கே விவாதம் நடக்கிறது. தாழ்த்தப்பட்டவரல்லாதவரை அமைப்புக்குள் அனுமதிக்கும்போது அவர்களுக்கு ஏற்கனவே இருக்கக்கூடிய செல்வாக்கு, மரியாதை ஆகியவற்றின் அடிப்படையில் மற்றவர்கள் பின்தள்ளப் படக்கூடிய அபாயம் குறித்த நியாயமான அச்சம் இருக்கிறது. இது சமயத்தில் நேரடியாகவும் வெளிப்பட்டுவிடுகிறது. இந்தச் சூழலில் ஒரு தாழ்த்தப்பட்டவரல்லாதவர், தாழ்த்தப்பட்டவர்கள் மத்தியில் உரையாடும்போது 'நாங்கள்', 'நாம்' என விளித்தால் அது தந்திரமான உள்நோக்கம் கொண்ட நடவடிக்கையாக இருக்கக்கூடிய வாய்ப்பு அல்லது அத்தகைய வாய்ப்புப் பற்றிய அய்யம் ஆகியவை ஒரு பிரச்சினையாகி விடுகின்றன. சமீபத்தில் பாண்டிச்சேரி தலித் கலைவிழா ஒன்றில் பேசும்போது முதலில் 'நாம்' என விளித்து பின்னர் 'நீங்கள்' என்று சொல்லி எனது பேச்சில் ஒரு தடுமாற்றம் இருந்ததை யாரேனும் கவனித்திருக்கலாம். பெரியாரை மதிப்பிடும்போது சொற்களின் நேரடியான அகராதி அர்த்தங்கள் என்பதை எல்லாம் தாண்டி இத்தகைய சமூகப் பொருளாதார தரவுகளையும் நாம் கணக்கிலெடுத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. ❑

www.tamilarangam.net

## தொகுப்புரைகள்

**1. சுந்தர் :**

வழக்கமான நிறப்பிரிகை விவாதங்களிலிருந்து இது சற்று வேறுபட்டுள்ளதை தொடர்ந்து வருபவர்கள் உணரலாம். ஒருவர் பேசியதற்கு இன்னொருவர் பேச்ச துணை சேர்ப்பதாக இல்லாமல் ஒவ்வொன்றும் தனித்தனி உரைகளாக அமைந்துள்ளன. ஒருவேளை பெரியாரின் சிந்தனைகள், செயல்பாடுகள்ங்கிற ஒரு ஆழமையமிட்ட விசயத்தை எடுத்துக் கொண்டதால் பங்குபெறும் ஒவ்வொருவரும் உடனடியான விசுவாசம் அல்லது எதிர்ப்பு என்கிற நிலைகளை மேற்கொள்ள வேண்டிய அவசியம் வந்துவிட்டதோ?

இன்றைய விவாதத்தில் முன்வைக்கப்பட்ட முக்கிய நிலைபாடுகள் என்று பார்த்தோமானால் முதலில், பெரியாரை இன்று பேசுவதற்கான அவசியம் என்ன என்பது பற்றி நிறப்பிரிகை சார்பாக வைக்கப்பட்டவற்றையும் அதனையொட்டி ராஜன் குறை, கிராமியன் ஆகியோரது பெரியாரை ஒரு எதிர்க் கலாச்சார நடைமுறையாகப் பார்க்கும் நிலைபாட்டைச் சொல்லலாம். இரண்டாவதாக,



டி.என்.கோபாலன், கோ.கேசவன் ஆகியோர் முன்வைத்த மரபுவழிப்பட்ட மாக்சிய நிலைப்பாடு. பெரியாரை பெருமளவுக்கு நிராகரிக்கும் தொனி. பெரியார் பிற்படுத்தப்பட்டவர்களுக்குச் சாதகமாக இருந்தார் ; பொருளாதாரப் பிரச்சினை களை எடுக்கவில்லை ; அரசு வரம்புகளுக்குட்பட்டே செயல்பட்டார் என்கிற முக்கியத்துவமிக்க விமர்சனங்கள். மூன்றாவதாக, ஞானி : சாதி, பெண்ணியம் போன்ற விசயங்களைப் பேசும்போது அவற்றைத் தனியாகப் பார்க்காமல் ஏகாதிபத்தியம், முதலாளியம் ஆகியவற்றோடு தொடர்புபடுத்திப் பார்ப்பது, பேருரு அரசியலோடு இணைப்பது, பெரியாரது சமதர்மப் பார்வைக்கு முக்கியத்துவமளிப்பது என்பவற்றை அவர் தனித்துவமான நிலைபாடாக வைத்தார்.

அப்புறம் பேராசிரியர் பரமசிவன் வரலாற்று ரீதியாய் பார்ப்பனீயம் எப்படி மாறி வந்துள்ளது, இன்று தலித் குரல் ஓங்கி நிற்கும்போது அது என்னவாக மாறும் என்பது முக்கியம். அதிகாரத்தை நோக்கிய நகர்வாக பார்ப்பனியத்தை அவர் குறிப்பிட்டார். அதிகாரத்தை நோக்கிய நகர்வு, சாதி எதிர்ப்பு, சாதி பாலியல் ஆகியவற்றிற்கிடையேயான ஒருங்கிணைவு என்கிற அடிப்படையில் பார்ப்பனீயத்தையே புதியதாக வரையறுப்பது என்கிறபோது ரொம்ப இயல்பாகவே இவையெல்லாம் தனித்தனியாக இல்லாமல் பல புள்ளிகளும் குறுக்கும் நெடுக்குமாகச் சந்திப்பது சாத்தியமாகிறது. சூசை மாணிக்கம் சொன்னதுபோல ஒரு புதிய வரலாற்று அணி உருவாக வாய்ப்பளிக்கிறது. சுற்றுச் சூழல்

www.tamilarangam.net

பேசுகிறவர்கள், பெண்ணியம் பேசுகிறவர்கள், தலித் விடுதலையை முன்னெடுப்பவர்கள், திராவிட இயக்கத்தில் புதிய நிலைப்பாடுகளை முன்னெடுப்பவர்கள், நக்சல்பாரி இயக்கத்தினர் என பலரும் சந்திக்கும் களமாக 'எண்பதுகளில் அரசியலும் பொருளாதாரமும்' ஆய்வரங்கம் அமைந்தது. இன்றைக்கு அது அடுத்த கட்டத்திற்கு நகர்ந்திருந்தால் ரொம்ப நன்றாக இருந்திருக்கும். பெரியாரின் ஒவ்வொரு கூறையும் மேலும் ஆழமாய் விவாதிக்கும்போது நாம் அதைச் செய்ய முடியும். ❑

*2. ஞானி :*

பெரியாரின் மையமான விசயம் சுயமரியாதை. சுயமரியாதை பற்றி அவர் என்னவெல்லாம் சொன்னார்னு தொகுத்தால் சுயமரியாதையைச் சமதர்மம்னுதான் அர்த்தப்படுத்த முடியும். ஒரு மாதிரியான கற்பனாவாத சோசலிசம். இதில் அவரது சாதி எதிர்ப்பு, பார்ப்பன எதிர்ப்பு, பெண்விடுதலை, மாற்றுக் கலாச்சாரச் செயல்பாடுகள் எல்லாவற்றையும் இதில் இணைக்க முடியும். ஆக பெரியாரின் தத்துவம் இந்த சுயமரியாதைதான். என்னுடைய இலக்கு சமூக மாற்றம்தான், புரட்சிதான், இதற்குக் குறைந்து ஏதுமில்லைங்கிறார். ஆனா இடையில் சாதி, பார்ப்பனீயம், அரசதிகாரம் எல்லாத்தையும் கொண்டுவந்து வழிமறிக்கிறார்கள் என்கிறார். எனவே சாதி, மத, பார்ப்பனீய, முதலாளிய, அரசதிகார எதிர்ப்பு



எல்லாம் பெரியாரியம்தான். பின்னால் பிரச்சினைகளை எதிர்கொள்ளும்போது அவர் அரசு எதிர்ப்பில் பின்வாங்கினாலும்கூட அவரது எழுத்துக்களை எல்லாம் கூர்ந்து பார்த்தால் நிறைய இடங்களில் இந்த அரச எதிர்ப்பு உள்ளதை இனம்காணலாம். ஆனால் அப்படி அவர் செயல்படலை. கடைசிவரை கொண்டு போகலை. அரசதிகாரத்தையும் முதலாளியத்தையும் பெரியார் ஏற்றுக் கொண்டார் என கேசவன் வைப்பது கடுமையான விமர்சனம். இதை நான் ஒத்துக் கொள்கிறேன்.

ஆனால் சோவியத் யூனியனில் செயல்படுத்தப்பட்ட மாக்சியமும் இப்படிப் பட்டதுதான். அரசதிகாரத்தை ஏற்றுக் கொண்டது, முதலாளியத்தை உள்வாங்கிக் கொண்டது. இந்தியாவிலும் குறிப்பாக மையநீரோட்டக் கட்சிகளின் மாக்சியமும் இப்படிப்பட்டதுதான். மிக முக்கியமான கோட்பாடாகிய மாக்சியமே இப்படி என்றால் பெரியாரை எங்கே போய்க் குற்றவாளி என்பது! ஆக பெரியாரது சாதி, மத, பார்ப்பனீய எதிர்ப்புகளையெல்லாம் சமதர்மத்திற்குள் கொண்டுவந்தால் நமது காலத்திற்கான வழிமுறை கிடைக்கும். பெரியாரை எதிர்மறையாகப் பார்க்கும் அவசியம் கிடையாது. பெரும் பகுதி உண்மையும் கிடையாது. விமர்சனங்கள் செய்யலாம். ஆனால் எதிர்நிலையில் நின்று விமர்சனம் செய்ய வேண்டியதில்லை. ஏகாதிபத்திய எதிர்ப்பு பெரியாரில் குறைவாக இருந்தாலும்கூட அதற்கும் பெரியாருக்குள் ஆதாரம் இருக்கும். பெரியாரின் பார்வை அகன்ற பார்வை. அதில் ராஜன் குறைக்கும் மேற்கோள்கள் கிடைக்கும்; கேசவனுக்கும் கிடைக்கும். சரியானவற்றைத் தேர்வு செய்து இணைப்பது நமது பணி.

www.tamilarangam.net

*அ.மார்க்ஸ் :*

வழக்கமான நிறப்பிரிகை விவாதங்களைப் போலன்றி பெரியாரியம் விவாதத்தில் பொது முடிவுகள் எதையும் அடைய முடியாமல் போய்விடுவோமோ என்ற அச்சம் எங்களுக்கு இருந்தது. அப்படிப்பட்ட ஒரு சூழல் நேருமாயின் கூட்டுக் குரல் என்று ஓர் ஒற்றைக் குரலை உருவாக்கும் முயற்சியை விட்டுவிட்டு Open ஆக விட்டுவிடுவது என்று முடிவு செய்திருந்தோம். ஆனால் விவாதப் புள்ளிகளாக இனங்கண்டிருந்த ஒன்பது புள்ளிகளில் ஒன்றிரண்டைத் தவிர மற்றவற்றில் நம்மால் சில பொது முடிவுகளுக்கு வந்தடைய முடிந்திருக்கிறது. அந்தவகையில் நிறப்பிரிகை-6 இல் தொகுக்கப்பட்ட விவாதப் புள்ளிகளை மனங்கொண்டு இன்றைய விவாதத்தில் வந்தடைந்த சில ஒருமித்த சிந்தனைகளை தொகுத்தளிக்கிறேன். அதற்குமுன் இங்கே வந்திருப்பவர்களின் பொதுவான அரசியல் நிலைப்பாடு என்ன என்று தி.சு.நடராசன் கேட்டார். பலதரப்பட்ட அரசியல் போக்குடையவர்களும் இங்கே வந்துள்ளனர். வந்துள்ள அனைவரின் பொதுவான அரசியல் கரிசனங்கள் என்று சொல்வதானால் ஏகாதிபத்தியம் மற்றும் அதன் உள்ளூர் முகவர்கள், இந்துத்துவ சக்திகள் ஆகியவற்றை எதிர்த்தல் எனலாம்.



பெரியாரிடம் எடுத்துக் கொள்ள எதுவுமில்லை என்றொலித்த ஒரேயொரு குரலைத் தவிர மற்றபடி அனைவரும் இன்றைய சூழலில் பெரியாரின் பொருத்தப்பாட்டை ஏற்றுக் கொண்டுள்ளது முக்கியமான விசயம். பெரியாரியத்தின் மையமான விசயங்களை இனங்கண்டு கொள்வதற்கு அடிப்படையாக பெரியாரியத்தின் உண்மையான இலக்கு சமதர்மம்தான் என்கிற ஞானியின் கருத்தை நாம் வைத்துக் கொள்ளலாம். இந்த இறுதி இலக்கிற்குத் தடையாக மக்கள் மத்தியில் நிலவும் மரபுவழிப்பட்ட கருத்தியல், இந்தக் கருத்தியலைக் கட்டமைக்கும் சாதி, மதம், பாலாதிக்கம் போன்ற சிவில் சமூக நிறுவனங்கள், இந்த நிறுவனங்களைக் கட்டிக் காக்கும் அரசதிகாரம் மற்றும் முதலாளியப் பொருளாதாரம், இப் பொருளாதாரம் பதிக்கப்பட்டுள்ள உலகப் பொருளாதாரக் கட்டமைப்பு ஆகியவற்றைச் சொல்லலாம். இவை அனைத்தையும் நாம் எதிர்த்துத் தகர்த்தெறியவும் இவற்றிலிருந்து துண்டித்துக் கொள்ளவும் வேண்டியிருக்கிறது. இதற்கு முதற்கட்டமாக பாதிக்கப்பட்ட மக்கள் திரளில் மேலாண்மை செலுத்தும் மரபுக் கருத்தியலை தகர்த்தெறிய வேண்டியிருக்கிறது. பெரியாரது நடைமுறை என்பது இந்தப் பணிக்கு முன்னுரிமை கொடுக்கும் எதிர்க் கலாச்சாரச் செயற்பாடாக இருந்தது. பெரியாரின் அடையாளங்களாகக் கருதப்படும் பார்ப்பன எதிர்ப்பு, சாதி எதிர்ப்பு, மூட நம்பிக்கை எதிர்ப்பு, இன இழிவு எதிர்ப்பு ஆகியவற்றிற்கு அப்பால் சாதி அதிகாரம், பால் அதிகாரம் ஆகியவை சந்திக்கும் புள்ளியையும் அதற்கு எதிரான தாக்குதலையும் பெரியாரியத்தின் வாயிலாகச் சுட்டிக் காட்டியது என்பதை இன்றைய விவாதத்தின் முக்கிய பங்களிப்பாகக் கருதலாம்.

www.tamilarangam.net

உலகெங்கிலும் சமீபத்தில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் இந்தியாவிற்குள் கட்டமைக்கப்படும் இந்துப் பாசிசம் ஆகியவற்றின் பின்னணியில் பெரியாரியம் தகர்க்க முனையும் கட்டமைப்புக்கள் எத்தகைய வலிவுடன் அரசதிகாரத்தாலும், உலகப் பொருளாதாரக் கட்டமைப்பாலும் காப்பாற்றப்படும் என்பது சிந்திக்கத்தக்கது. இந்தவகையில் பெரியாரியத்தின் பலவீனமான புள்ளிகளாக பலரும் சுட்டிக்காட்டிய அரசாதரவுப் போக்கு, ஏகாதிபத்திய எதிர்ப்பில் கவனமின்மை ஆகியவற்றைப் புறந்தள்ள வேண்டிய இடைவெளிகளாக நாம் கருதலாம். உலகப் பொருளாதார அமைப்பின் ஆசியோடு இன்று கட்டமைக்கப்படும் இந்துத்துவத்தை எதிர்த்து நிற்க பார்ப்பனீயத்தை தனிமைப்படுத்துவதும் தாழ்த்தப்பட்ட சக்திகள் ஒன்றிணைவதும் இன்றைய தேவை. இந்துமத எதிர்ப்பு, பார்ப்பனீய எதிர்ப்பு என்கிற அம்சத்தில் பெரியாரியமும், அம்பேத்கரியமும் குவிவதை நாம் கருதவேண்டும். அந்தவகையில் தீண்டாமை ஒழிப்பிற்கு முன்னுரிமை கொடுப்பது என்பதை பெரியாரில் நிரப்ப வேண்டிய இடைவெளிகளில் முக்கியமானதாய் இன்றைய விவாதம் முன்வைத்துள்ளது. உலகப் பொருளாதார அமைப்பு, அரசு/சிவில் சமூக நிறுவன அதிகாரம், இந்துத்துவம் ஆகியவற்றிற் கெதிரான Macro அரசியலுடன் நுண்களங்களில் அதிகாரத்திற்கெதிரான செயல்பாடுகள், பாலாதிக்க எதிர்ப்பு உள்ளிட்ட எதிர்க் கலாச்சார நடவடிக்கைகள் ஆகியவற்றை இணைத்தாகவேண்டிய அவசியத்தை வலியுறுத்திய வகையில் இன்றைய விவாதம் முக்கியத்துவம் பெறுகிறது.



கடைசியாக ஒன்று : பெரியாரியம் குறித்த ஆழமான, விரிவான ஆய்வுகளின் முக்கியத்துவம் குறித்து ராஜன் குறை, கேசவன் ஆகியோர் வலியுறுத்தினர். தேவையான ஆவணப் பதிவுகள் உள்ளதையும் சுட்டிக்காட்டினர். சுமார் அறுபது ஆண்டு காலம் மிகத் தீவிரமாக அன்றாட அரசியலில் மக்கள் மத்தியில் நின்று செயல்பட்ட ஒருவரின் செயல்பாட்டை மதிப்பிடும்போது கிடைக்கக்கூடிய நிறுவனம் சார்ந்த ஆவணப் பதிவுகளை நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டியது அவசியம்தான் என்றாலும் இந்த ஆவணக் காப்பகங்களுக்குள் மட்டுமே முடங்கி நாம் ஆய்வுகளைச் செய்துவிட முடியாது. சமூக நீதிப் பிரச்சினைகளாக அனுகவேண்டியவற்றை சட்ட ஒழுங்குப் பிரச்சினையாக அரசு ஆவணங்களில் அனுகப்பட்டிருக்கும். இயக்கப் பத்திரிகைகள், பெரியாரிய நிறுவனத் தொகுப்புகள் ஆகியவற்றில் விருப்பபூர்வமான தேர்வுகள் செயல்பட்டிருக்கும். எனவே பெரியாரை முழுமையாகப் புரிந்து கொள்ள வேண்டுமானால் இவற்றையும் தாண்டி அன்றைய அரசியல், சம்மந்தமிருக்காது என நாம் கருதக்கூடிய பிற செயல்பாடுகள், பிற பதிவுகள், அவருக்கு எதிரான எதிர்ச் செயல்பாடுகள், இந்த எதிர்ச் செயல்பாடுகள் அவரைப் பாதித்த விதங்கள், சாதாரண மக்கள் அன்று இவைகுறித்த தங்கள் நினைவுகள், புனைவுகள், கடிதங்கள், பழமொழிகள் போன்றவற்றின் வாயிலாக என்ன பதிவு செய்திருக்கிறார்கள் என்பதையெல்லாம் கவனிக்க வேண்டும். அந்தவகையில் நாம் நினைப்பதைக் காட்டிலும் கடினமான ஆனால் அவசியமான பணி இது. காந்திபற்றி வெளிவந்திருக்கும் சில 'சபால்டரன்' ஆய்வுகள் இதற்கொரு முன்னோடியாக அமையலாம். ❑

www.tamilarangam.net

தொகுப்பு : அ.மார்க்ஸ்
ரவிக்குமார்
பொ.வேல்சாமி

□□□

**விவாதம் முடியும்போது இரவு மணி 7.00**

**திருப்பித் திருப்பிச் சொல்லிய சில வரிகளைத் தவிர பிற கூடியவரையில் பேசியவரின் வார்த்தைகளிலேயே முழுமையாக இம்முறை தொகுக்கப்பட்டுள்ளன.**

www.tamilarangam.net

# எமது வெளியீடுகள்

| | | |
|---|---|---|
| மாற்றுகளைத் தேடி | - நிறப்பிரிகைத் தொகுப்பு | 35. 00 |
| தேசியம் ஒரு கற்பிதம் | ,, | 35.00 |
| அரசு குடும்பம் பெண்ணிம் | ,, | 30.00 |
| உரையாடல் தொடர்கிறது | | 30. 00 |
| தலித் அரசியல்-அறிக்கையும் விவாதமும் | | 15.00 |
| உடைபடும் மௌனங்கள் | - அ. மார்க்ஸ் | 30. 00 |
| மார்க்சீயத்தின் பெயரால் | ,, | 25. 00 |
| இந்து சட்டத்தொகுப்பு யதார்த்தமும் மாயையும் | | 20. 00 |
| தமிழகத்தில் பண்பாட்டு நெருக்கடி | - ஞானி | 40. 00 |
| தாழ்த்தப்பட்டோர் காந்தியிடம் ஏன் எச்சரிக்கையாக இருக்கவேண்டும் | | 10. 00 |
| மாவோவிடம் கற்போம் | | 20. 00 |
| புலம்பெயர்ந்த தமிழர் நல மாநாட்டு மலர் | | 40. 00 |
| டானியலின் குறுநாவல்கள் | | 35. 00 |
| பனியில் மொழி எழுதி | - சோலைக்கிளி | 30. 00 |
| செட்டை கழற்றிய நாங்கள் | - ரவி | 20. 00 |
| எட்டு கதைகள் | - ராஜேந்திர சோழன் | 20. 00 |

www.tamilarangam.net

www.tamilarangam.net

தமிழ்ச் சூழலில் செயற்பட்ட எதிர்க்கலாச் சார சிந்தனையாளர் பெரியார். தேசியம், மொழிப்பற்று, ஒழுக்கம் முதலியனவெல்லாம் வெறும் கற்பிதங்களே என்பன போன்ற நவீனக் கருத்துக்களையும் பெண்ணியம் தொடர்பான புரட்சிகரமான சிந்தனைகளையும் முன் மொழிந்தவர். சூத்திரர்கள், தாழ்த்தப்பட்டவர்கள், பெண்கள் என தமிழகத்தின் ஒடுக்கப் பட்ட பிரிவினரின் அடிமைத் தன்னிலைகளைத் தகர்க்கும் நோக்கில் சிந்தனைத் தளத்திலும் செயற்தளத்திலும் பணியாற்றியவர் அவர். வெறுமனே இடஒதுக்கீட்டுப் போராளியாகவும் மேலோட்டமான பார்ப்பன எதிர்ப்பாளராகவும் மட்டுமே ஆதரிப்பவர்களாலும், எதிர்ப்பாளர்களாலும் அவர் சித்தரிக்கப்பட்டுக் கொண்டிருந்த சூழலில் கலாச்சாரத்தின் சகல கூறுகளிலும் புரையோடியிருக்கும் பார்ப்பனீயக் கூறுகளைக் களைய முற்பட்ட எதிர்க் கலாச்சாரவாதியாக அவரை முன்னிலைப்படுத்திய பணியை நிறப்பிரிகை செய்து வந்துள்ளமைக்குச் சான்றாக விளங்குகிறது இத்தொகுப்பு.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்